# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 ஆவணி 04 ஞாயிற்றுக்கிழமை (21.08.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 268




09

பார்வைக் கலை உணர்ந்து செயற்படுவார்களா?



18

வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்கள் இலங்கையிலும் சரியான தருணம் இது



வென்றது ஆஸி. 25

## வடக்கு, கிழக்கில் வெற்றிவாகை சூடிய தமிழர் பிரதிநிதிகள் பதவியேற்பு



### நல்லூரில் நேற்று சிறப்புற நடந்தது

யாழ்ப்பாணம், ஓக.21

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ளூராட்சி சபைகளுக்குத் தெரிவான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களின் சத்தியப்பிரமாண வைபவம் நேற்று யாழ்ப்பாணத்தில் பெரும் எடுப்பில் நடைபெற்றது.

யாழ்ப்பாணம் நல்லூர் இளங் கலைஞர் மண்டபத்தில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் நடைபெற்ற இந்த வைபவத்தில்

பக் 31

# அரசுடன் பேசவேண்டும் என்பதற்காக அர்த்தமற்ற பேச்சில் ஈடுபட முடியாது

### சம்பந்தன் உதயனுக்குப் பேட்டி

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 21

ஆறுமாத காலமாக அரசுடன் நடத்திய பேச்சு மூலம் எதுவும் நடக்கவில்லை. இதனைத் தொடர முடியாது. நாங்கள் இது பற்றி அரச தரப்பினருக்குச் சொல்லியிருந்தோம். பேச்சைத் தொடர வேண்டும் என்பதற்காக அர்த்தமற்ற பேச்சில் நீண்ட காலம் ஈடுபட முடியாது. அப்படிச் செய்வதன் மூலம், தமிழர் பிரச்சினைக்கு நியாயமான ஒரு தீர்வைக் காண்பதற்கு அரசு ஆக்கபூர்வமான வகையில் பேச்சுக்களில் ஈடுபடுகின்றது என்று உலகம் கருதுவதற்கு நாம் இடமளிக்க முடியாது.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன். உள்ளூராட்சித் தேர்தலில் வெற்றி பெற்ற கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கான பதவியேற்பு நிகழ்வில் கலந்துகொள்வதற்காக யாழ்ப்பாணம் வந்திருந்த சம்பந்தன் நேற்றிரவு உதயனுக்குச் சிறப்புப் பேட்டியளித்தார்.

பக் 03



### மீன்பிடிக்கு மீண்டும் குடாநாட்டில் 'பாஸ்'?

வண்ணை, ஓக.21

யாழ்.குடநாட்டில் மீன் பிடித் தொழிலில் ஈடுபட அனுமதி (பாஸ்) பெறும் முறை மீண்டும் நடைமுறைக்கு வரலாம் என்று மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

குடாக்கடல் நீரேரியில் கடற்றொழிலில் ஈடுபடுபவர்களை மூன்று தனிப் புகைப்படங்களை ஒப்படைக்குமாறு படையினர் அறிவுறுத்தி இருப்பதாகவும் மீனவர்கள் கூறுகின்றனர். கடந்த 19 ஆம் திகதி முதல் குருநகர், கடற்றொழில் அபிவிருத்திச் சங்கப் பணிமனை

பக் 31

இன்று நடைபெறும் ஐந்தாம் ஆண்டுப் புலமைப்பரிசில் பரீட்சையில் எமது சின்னஞ்சிறு மாணவச் செல்வங்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று சித்தி பெற 'உதயன்' மனமார வாழ்த்துகின்றான்.

## புலிகள் தொடர்ந்தும் ஆயுதக் கொள்வனவு

விடுதலைப் புலிகள் அமைப்பின் வெளிநாட்டில் உள்ள உறுப்பினர்கள் தொடர்ந்தும் ஆயுதக் கொள்வனவில் ஈடுபடுகிறார்கள் என்று அமெரிக்கா அறிவித்துள்ளது. புலம்பெயர் தமிழர்கள் இதற்கான நிதி உதவிகளைத் தொடர்கிறார்கள் என்றும் அது குற்றஞ் சாட்டி உள்ளது.

'தீவிரவாதம் தொடர்பான 2010 அறிக்கை' அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தினால் வியாழக்கிழமை வெளியிடப்பட்டது. கடந்த ஆண்டில் இலங்கையினுள் புலிகளின் செயற்பாடு எதுவும் காணப்படாதபோதும் புலிகளுக்கு நிதி வளத்தைக் கொடுத்து வந்த அதன் வெளிநாட்டு வலையமைப்பு செயல்

பக் 31

இளமையின் இரகசியம்

9

பக்கம் III,ஐ பாருங்கள்

## புதிய உறுப்பினர்கள் மக்கள் பணியாற்ற அரச தரப்பினர் ஒத்துழைப்பது அவசியம்

### ஆளுநரும் அதிகாரப் போக்கைக் கைவிட வேண்டும் என்றார் சுரேஷ்

யாழ்ப்பாணம், ஓக. 21

உள்ளூராட்சி சபைகளுக்குத் தெரிவாகியுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மக்கள் பிரதிநிதிகள் சுதந்திரமாக மக்கள் பணியை முன்னெடுக்க அரசு, ஆளுநர் மற்றும் அமைச்சர்கள் ஒத்துழைக்க வேண்டும்.

இவ்வாறு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் கோரியுள்ளார்.

நேற்று நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் இடம்பெற்ற உள்ளூராட்சி உறுப்பினர்களின் சத்தியப்பிரமாண நிகழ்வில் உரை நிகழ்த்தும் போதே அவர் இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

பிரதேசசபை, நகரசபைச் செயலாளர்கள் ஆளுநர் சொல்வதைக் கேட்க வேண்டும் என்றும் சபைத் தலைவர்கள், உபதலைவர்களின் சொல்லைக் கேட்கக்

பக் 31


நவீன் செரமிக்
Naveen Ceramic
#212, பலாலி வீதி, யாழ்ப்பாணம் #5, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்
021 222 0033 / 021 222 0044 021 222 4777 / 021 222 4888
Metro Engineering




இந்திய பயணச் சீட்டுக்களுக்கு விஷேட சலுகை...
0773629799
0777380557
AIR MARK Travels & Tours
IATA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உதயன்
தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




அனைத்து மாவட்டங்களிலும் தெளிவான வானிலை நிலவுவதற்கான சாத்தியம் உள்ளது.

## யாழ் நகரில் இன்று அமைதி ஊர்வலம்

யாழ்ப்பாணம், ஒக.21

யாழ்ப்பாணம் இராசாவின் தோட்டம் பகுதியிலுள்ள 'பெப்பேல்' தேவாலயத்தினால் இன்று முற்பகல் 11.30 மணிக்கு அமைதி ஊர்வலம் ஒன்று நடத்தப்படவுள்ளது என்று அறிவிக்கப்படுகிறது.

'யேசுவின் ரத்தம்' என்ற தொனிப்பொருளில் இந்த ஊர்வலம் இடம்பெறவுள்ளது. தேவாலயத்திலிருந்து ஆரம்பித்து யாழ். நகர மத்திய பஸ் நிலையத்தை அடைந்து மீண்டும் தேவாலயம் நோக்கி இந்த ஊர்வலம் செல்லும் என்று தேவாலயத்தினர் அறிவித்துள்ளனர். (ஒ-15)

## அரச உயர் அதிகாரிகளுக்கு பயிற்சிநெறி

யாழ்ப்பாணம், ஒக. 21

ஜனாதிபதி செயலகத்தின் கீழ் இயங்கும் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில் நுட்ப முகவராண்மையின் ஈ - சிறிலங்கா (e - Srilanka) பயிற்சிநெறி நாளை திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

யாழ். மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்கள், உதவி அரச அதிபர்களுக்கான இந்தப் பயிற்சிநெறி யாழ். நகரில் கஸ்தூரியார் வீதியிலுள்ள கேற்வே நிறுவனத்தில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-15)

## கிளிநொச்சியில் பிரதேச சபையின் உறுப்பினர் பதவியேற்பு

கிளிநொச்சி, ஒக.21

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள கரைச்சிப் பிரதேச சபை உறுப்பினர்களது பதவியேற்பு விழா நாளை திங்கட்கிழமை மு.ப.10 மணிக்கு பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தலைமையில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.(ஒ-15-426)

# ராணுவத்தினருக்கு ஊருக்குள் வேலையில்லை அவர்கள் வருவதை நாங்கள் விரும்பவில்லை

### கல்முனை ஏ.எஸ்.பி. கூறுகிறார்

மட்டக்களப்பு, ஒக. 21

சிவில் சேவைக்கு இராணுவத்தினரின் பங்களிப்பு அவசியமில்லை. அவர்கள் அதில் தலையிடத் தேவையில்லை. இராணுவத்தினர் ஊருக்குள் வருவதை நாங்கள் விரும்பவுமில்லை.

- இவ்வாறு கல்முனை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் மெண்டிஸ் தெரிவித்தார்.

மர்ம மனிதன் பிரச்சினை தொடர்பாக துறைநீலாவணைப் பிரதேச மக்களுடன் கல்முனை பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கலந்துரையாடலின்போது பிரதேச மக்களால் இராணுவத்தினருக்கு எதிராக பல்வேறு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன.

மர்ம மனிதன் தோன்றும் போது அல்லது அவனைப் பிடிக்கும் போது சொல்லி வைத்தாற் போல் இராணுவத்தினர் வருகின்றனர். இதன் மர்மம் என்ன? வேறு சில இடங்களில் இராணுவத்தினரே மர்ம மனிதனை பாதுகாப்பவர்களாக இருக்கின்றனர். அவர்களில் எமக்கு நம்பிக்கையில்லையென்று தெரிவித்தனர்.

இதற்குப் பதிலளித்து உரையாற்றிய மெண்டிஸ்;

இராணுவத்தினர் ஊருக்குள் வந்தமைக்கு உங்களில் சிலர் தான் காரணம். இனிமேல் இராணுவத்தினர் வராமல் பார்த்துக் கொள்கின்றோம். சிவில் நடவடிக்கைக்கு அவர்கள் பாத்திரமானவர்கள் அல்லர் - என்றார். (ஒ-15)



வலி.மேற்கு பிரதேச சபையின் புதிய உறுப்பினர்கள் நேற்று பதவியேற்றுக்கொண்டனர். சபையின் புதிய தவிசாளர் நாகரஞ்சனி ஐங்கரன் தலைமையில் உறுப்பினர்கள் ஊர்வலமாக பிரதேச சபை அலுவலகத்தை வந்தடைந்தனர். இந்த நிகழ்வில் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களும் பிரமுகர்களும் கலந்துகொண்டனர். (ஒ)

## நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

யாழ்ப்பாணம், ஒக. 21

அபிவிருத்திக்கான சமூக அமைப்புக்களின் வலையமைப்பின் ஏற்பாட்டில் நல்லூர் ஆலய திருவிழாவை முன்னிட்டு ஆன்மிக சொற்பொழிவுகளை நடத்தி வருகின்றன.

நல்லூரில் அமைந்துள்ள 63 நாயன்மார் மண்டபத்தில் தினமும் 6.30 மணிக்கு இடம்பெறும் ஆன்மிக சொற்பொழிவில் இன்று ஞாயிற்றுக்கிழமை 'எங்கே தேடுகிறாய்' எனும் தலைப்பில் ஓய்வுபெற்ற நீதிபதி மு. திருநாவுக்கரசு சொற்பொழிவு நிகழ்த்துவார். (ம-311)

* * *

யாழ்ப்பாணம், ஒக.21

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர் திருவிழாவை முன்னிட்டு நடத்தும் சமய சொற்பொழிவுகளும் கலை நிகழ்வுகளும் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3மணிக்கு நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

இதில் ஸ்ரீ ஸ்ரீரவிசங்கர் குருஜியின் பிரதம சீடர்களில் ஒருவரான அலெக்ஸ்ஜி சிறப்பு சொற்பொழிவையும், அனலைதீவு மனோன்மணி அம்பாள் அறநெறிப் பாடசாலை, தெல்லிப்பழை தோதரை அம்பாள் அறநெறிப்பாடசாலை, நீர்வேலி காமாட்சியம்பாள் அறநெறிப் பாடசாலை ஆகியன பங்குபற்றும் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (ம-313)

* * *

யாழ்.சின்மயா மிஷன் நல்லூர் திருவிழாவை முன்னிட்டு நடத்தும் ஆன்மிகச் சொற்பொழிவில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6.30 மணிக்கு நல்லூர் நடராஜா பரமேஸ்வரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் பிரமச்சாரி ஜாக்கிரத் சைத்தன்ய "விஞ்ஞானமும் ஆலய வழிபாடும்" எனும் தலைப்பில் சொற் பொழிவை நிகழ்த்தவுள்ளார். (ம-313)

* * *

யாழ்ப்பாணம், ஒக.21.

நல்லூர் இளங்கலைஞர் மன்றம் தெல்லிப்பழை துர்க்கா தேவி ஆலயத்தின் அனுசரணையுடன் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6.30 மணிக்கு துர்க்கா தேவி மணிமண்டபத்தில் எஸ்.கோபிதாஸ், கே. குகபரன், வி.ரமணா, எஸ்.சிவிசிவா ஆகியோர் பங்குபற்றும் தெய்வீக இசையரங்கை நடத்தவுள்ளது. (ம-313)

## பிரான்ஸுக்கான தூதுவர் தயான் நாட்டின் பிரிவினைக்கு ஆதரவு

### ஜாதிக ஹெல உறுமய குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக. 21

பிரான்ஸுக்கான இலங்கைத் தூதுவர் தயான் ஜயதிலக பிரிவினைக்கு ஆதரவாகச் செயற்படுவதாக அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் ஜாதிக ஹெல உறுமயவின் உத்தியோகப்பற்றற்ற பேச்சாளர் மலிந்த செனவிரத்ன குற்றம் சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக 'சிறிலங்கா' கார்டியனில் அவர் எழுதியுள்ள கட்டுரையில் தூதுவர் ஜயதிலக இந்தியாவுக்குச் சார்பாக இயங்குவதாக அடையாளம் காணப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தயான் ஜயதிலகவின் புத்திஜீவி துரோகத்தனத்தை ஏற்றுக் கொள்வதற்கு நாடு தயாராக இருக்கவில்லை எனவும் மலிந்த செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

ஜாதிக ஹெல உறுமயவின் ஆதரவாளர்கள் தயான் ஜயதிலகவுக்கு எதிராகக் கையெழுத்து வேட்டையிலும் இறங்கியுள்ளனர்.

தயான் ஜயதிலக ஆரம்பத்தில் ஓர் இடதுசாரி சிந்தனையில் இருந்தவர் என்ற போதும் பின்னர் ஒரு பேரினவாத சிந்தனை சார்ந்தே தன்னை மாற்றிக் கொண்டவர்.

எனினும் அவ்வப் போது 13 ஆவது திருத்தச்சட்டத்தை ஆதரித்தும் பிராந்திய வல்லரசான இந்தியாவைப் பகைத்துக் கொள்வதால் இலங்கைக்கு ஏற்படக் கூடிய இழப்புக்கள் குறித்தும்

எழுதி வருவதாலேயே ஜாதிக ஹெல உறுமய அவரை எதிர்த்து வருவதாக நம்பப்படுகிறது. (த)

## மத்தியஸ்தர் சபை அமர்வு ஒத்திவைப்பு

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் இன்று நடைபெறவிருந்த சாவகச்சேரி பிரதேச மத்தியஸ்தர் சபை அமர்வு 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை காரணமாக நடைபெறாது எனவும் இன்று திகதியிடப்பட்ட பிணக்குகள் அனைத்தும் எதிர்வரும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் என்று சாவகச்சேரி பிரதேச மத்தியஸ்தர் தவிசாளர் ப.நடராசா அறிவித்துள்ளார். (ஒ-207)

# நிகழ்வுகள்

### புற்று நோயாளருக்கு உதவிகள்

கைதடி, ஒக.21

கைதடி மக்கள் நலன் பேணும் நட்புறவுக் கழகம் நெதர்லாந்து வாழ் கைதடி உறவுகளின் உதவியுடன் புற்றுநோயாளருக்கான உதவு தொகை வழங்கும் நிகழ்வு ஒன்றை இன்று ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணிக்கு கைதடி தெற்கு சனசமூக நிலைய கேட்போர் கூடத்தில் நடத்தவுள்ளது.

கழகத்தலைவர் ப.செல்லத்துரை தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் மேற்படி புற்று நோயாளர்கள் கொடுப்பனவைப் பெறவுள்ளனர். (ம-288)

### பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஒக.21

யாழ்.மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்க சமாசத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் இன்று ஞாயிற்றுக் கிழமை மு.ப 10 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ம-313)

### பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஒக.21

வவுனியா மணிவாசகர் சபை நடத்தும் சிவபுராண மனனப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு வைரவபுளியங்குளம் ஆதி விநாயகர் ஆலய கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

[illegible] தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக் கழகத்தின் வவுனியா வளாக ஆங்கில மொழித் துறைத் தலைவர் கலாநிதி க.ஸ்ரீகணேசன் கலந்துகொள்வார்.

இந்த நிகழ்வில் சிறப்புச் சொற்பொழிவை வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலய ஆசிரியர்கள் ஐ.கதிர்காமசேகரன் நிகழ்த்துவார். (ம-313)

### நெற் செய்கையாளர் கூட்டம் நாளை

யாழ்ப்பாணம், ஒக.21

தென்மராட்சி தெற்கு கால போக நெற்செய்கையாளர்களுக்கான கூட்டம் நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு தனங்கிளப்புச் சந்தியில் கைதடி கமலநல சேவை நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் தலைமையில் நடைபெறும்.

இந்தக் கூட்டத்தில் முக்கியமான விடயங்கள் ஆராயப்படவிருப்பதால் அனைத்து நெற்செய்கையாளர்களையும் கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சி உறுப்பினர் சத்தியப்பிரமாண நிகழ்வின் பதிவுகள்...



# அரசுடன் பேச வேண்டும் என்பதற்காக அர்த்தமற்ற பேச்சில் ஈடுபடமுடியாது

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரா. சம்பந்தனுடனான பேட்டியின் விவரம் வருமாறு:

கூட்டமைப்பின் கோரிக்கைகளுக்கு அரசு பதிலளிக்காத நிலையில் உங்கள் அடுத்த அரசியல் நகர்வு என்ன?

அடுத்த கட்டப் பேச்சைத் தொடருவதற்கு முன்பாக நாங்கள் முன்வைத்த 3 விடயங்களுக்குப் - அவை நிபந்தனைகள் அல்ல - பதிலாக தன்னுடைய நிலைப்பாட்டை அரசு முன்வைக்க வேண்டும் என்று தெரிவித்திருந்தோம். சுருக்கமாகச் சொல்வதானால் நாங்கள் இந்தப் பேச்சு மூலம் ஒன்றையும் அடையவில்லை. அதற்காக நாங்கள் அரசுடன் பேச மாட்டோம் என்று சொல்வில்லை. அரசியல் தீர்வை காண்பதற்கு நாங்கள் பேசத் தயங்கவில்லை. அதற்கு உண்மையில் இரு பகுதியும் இதயசுத்தியுடன் உண்மையாகப் பேச வேண்டும். நாங்கள் மட்டும் பேசிப் பயன் இல்லை. இருபகுதியும் ஆக்கபூர்வமாகப் பேசவேண்டும்.

இப்போதைக்கு நாங்கள் நிலைமைகளை அவதானித்துக் கொண்டிருக்கின்றோம். எடுக்க வேண்டிய முடிவுகளை எடுக்க வேண்டிய நேரத்தில் சரியாக எடுப்போம்.

எங்களது தீர்வு தொடர்பான நிலைப்பாட்டடில் மூன்று விடயங்களை முன்வைத்திருந்தோம். ஒன்று ஆட்சிக் கட்டமைப்பு, சட்ட அதிகாரம், நிர்வாக அதிகாரம். மத்திய அரசுக்கும் அதிகார பகிர்வு அலகுக்கும் இடையில் கருமங்கள், கடமைகள் எவை என்ற பிரிப்பு, நிதி மற்றும் வரி வசூலிப்பு.ஆகிய மூன்று விடயங்களைத் தெளிவுபடுத்துமாறு கேட்டிருந்தோம். அவை தொடர்பான அரசின் நிலைப்பாட்டை அறியாமல் பேச்சைத் தொடர்வதில் அர்த்தமில்லை.

நீங்கள் முன்வைத்த விடயங்களுக்குப் பதிலளிக்காத போதும், இந்த இருவார காலப்பகுதியில் அரச தரப்பினர் உங்களுடன் தொடர்பு கொண்டார்களா?

உத்தியோகபூர்வமான முறையில் எதுவும் பேசவில்லை. உத்தியோகப்பற்ற முறையில் சில விடயங்களை கலந்துரையாடினர். அதைப் பற்றி இப்போது பேச விரும்பவில்லை.

அப்படியானால் கூட்டமைப்பு அடுத்து என்ன செய்யப் போகிறது?

அடுத்த கட்டம் பற்றி பேசுவதற்கு இன்னும் காலம் வரவில்லை. இரு வார காலத்துக்குள் பதிலளிக்குமாறு நாங்கள் கேட்டிருந்தோம். சமீபத்தில் நடந்த பேச்சுக்கள் ஒரு மாதத்துக்கு இரண்டு என்ற அடிப்படையில் நடைபெற்றன. ஆரம்பத்தில் ஒரு மாதத்துக்கு ஒரு பேச்சு இடம்பெற்றது. பேச்சை இழுத்தடிக்க விரும்பாததால் பின்னர் மாதத்துக்கு இரண்டாக அதனை அதிகரித்தோம். அந்த அடிப்படையிலேயே இரண்டு வாரங்களுக்குள் பதிலளிக்குமாறு நாங்கள் கேட்டிருந்தோம்.

இரண்டு வாரம் என்பதை நிபந்தனையாகக் குறிப்பிடப்படவில்லை. அரச தரப்பினர் நாடாளுமன்றத் தெரிவுக் குழு சம்பந்தமான பிரேரணை அச்சிட்டுவிட்டதாகக் கேள்விப்பட்டுள்ளேன். ஆனால் அதனை அவர்கள் இன்னும் நாடாளுமன்றத்துக்குக் கொண்டுவரவில்லை. அது எப்போது சமர்ப்பிக்கப்படும் என்றும் தெரியவில்லை. இதனை வைத்து அரசு பேச்சை இன்னும் முறித்துக் கொள்ளவில்லை என்று எடுத்துக் கொள்ளலாம் போன்றும் தோன்றுகிறது.

நீங்கள் அரசு பேசுகிறோம் என்று கூறுகிறீர்கள். ஆனால் கடைசிப் பேச்சின் பின்னர் அரசு விடுத்த அறிக்கையில், சுதந்திரக் கட்சியே உங்களுடன் பேசுவதாகத் திட்டவட்டமாகத் தெரிவித்திருந்தது. அப்படி இருக்கையில் அரசுடனான பேச்சு என்று இதனை எப்படிச் சொல்ல முடியும்?

நாங்கள் பேச்சை ஆரம்பித்தது அரசுடன்தான். ஜனாதிபதி தான் எங்களுடன் பேசும் அரச குழுவை நியமித்திருந்தார். அரசில் பிரதானமான கட்சி ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி. ஜனாதிபதியும் அந்தக் கட்சியைச் சேர்ந்தவர். பிரதமரும் அந்தக் கட்சியைச் சேர்ந்தவர்தான். அவர்களுடைய கூட்டுக் கட்சிகள் எண்ணிக்கையில் அதிகம். இருப்பினும் நாங்கள் இதுவரை காலமும் அரசுடன் தான் பேசினோம்.

இறுதிக் கட்டத்தில்தான் அவர்கள் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பேசியது என்று சொன்னார்கள். அவர்களுக்கு நாங்கள் வழங்கிய இரண்டு வாரகாலத்துக்குள் அரசில் அங்கம் வகிக்கின்ற சகல கட்சிகளுடனும் பேசி அது பற்றி அறிவிக்க முடியாது என்று சொல்வதற்காக பேச்சு சுதந்திரக் கட்சிக்கும் கூட்டமைப்புக்கும் இடையில் நடந்ததாக அவர்கள் காட்ட முற்பட்டிருக்கலாம். ஆனால் அவர்கள் அரசில் உள்ள ஏனைய கட்சிகளுடன் ஏற்கனவே பேசிக்கொண்டிருப்பதாக எம்மிடம் கூறியிருந்தார்கள். எங்களுடைய நடவடிக்கை எதிர்காலத்தில் எவ்வாறு அமையும் என்று கூறுவதற்கான காலம் இன்னும் கனியவில்லை.

கூட்டமைப்புக்கு பதிலளிக்காத நிலையில் நாடாளுமன்றத் தெரிவுக் குழு பற்றியே அரசு அக்கறையுடன் பேசுகிறது. அப்படி ஒரு நிலை வந்தால் கூட்டமைப்பு தெரிவுக் குழுவில் அங்கம் வகிக்குமா?

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அங்கீகரிக்கின்றதுக்கான வாய்ப்புக்கள் இருப்பதா இல்லையா என்ற முடிவை இப்போது சொல்ல முடியாது. தெரிவுக்குழு என்ன அடிப்படையில் இயங்கப்போகின்றது, அதில் என்னென்ன அம்சங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன என்பவற்றைக் கூர்ந்து கவனிக்க வேண்டி இருக்கிறது. இது தொடர்பில் நிறைய விடயங்கள் சிந்திக்க வேண்டியுள்ளது.

அதேவேளை, பயனற்ற ஒரு அணுகு முறையில் நாங்கள் பங்குபற்றுவதிலும் எதுவும் நடக்கப் போவதுமில்லை.

பேச்சு தடங்கலுக்குள் சிக்கிக் கொண்டுள்ள நிலையில் இந்தியாவின் நிலைப்பாடு என்ன?

இந்தியா ஒன்றும் தெரிவிக்கவில்லை. இந்தியாவினால்தான் பேச்சு ஆரம்பிக்கப்பட்டது. எம்மைப் பொறுத்த வரையில் கடந்த 5 மாத காலமாக எதுவும் இடம்பெறவில்லை. எனவே இதனைத் தொடர முடியாது என்பதை அவர்களுக்குச் சொல்லியிருந்தோம். அவர்கள் அரசுடனும் பல முறை பேசி இருக்கிறார்கள். எம்முடனும் பேசி இருக்கிறார்கள். தொடர்ந்தும் பேசி வருகிறார்கள்.

எல்லாத் தமிழ்க் கட்சிகளையும் சுதர்சன நாச்சியப்பன் புதுடில்லிக்கு அழைத்துள்ளாரே இதன் நோக்கம் என்ன?

மனித உரிமைகளுக்கான நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமையம் ஏற்பாடு செய்த கலந்துரையாடலுக்கு அழைத்திருக்கின்றார்கள். நாச்சியப்பன் என்னையும் தொடர்பு கொண்டு பேசினார். ஆனால் நான் அதில் கலந்து கொள்ளவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கின்ற கட்சித் தலைவர்கள் புதுடில்லி செல்கின்றார்கள், அத்துடன் வேறு கட்சித் தலைவர்களும் செல்கின்றனர்.

தமிழ்க் கட்சிகளின் ஒட்டுமொத்தமான நிலைப்பாட்டை இந்தியா அறிவதற்காகவே இந்தக் கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதேசமயம் தமிழகத்தில் இப்போது நிலைமைகளில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

இந்திய மார்சிஸ்ட் கட்சி அண்மையில் சென்னையில் ஒரு பெரிய மாநாடு நடத்தி இருந்தது. பாரதீய ஜனதாக் கட்சி அடுத்த மாதம் அத்தகைய ஒரு மாநாட்டை நடத்த உள்ளது. எனவே இந்தியாவைப் பொறுத்த வரையில் ஆளும் கட்சிக்கு அப்பால் ஏனைய கட்சிகளும் எமது விடயத்தில் அக்கறை செலுத்துகின்றன.

தமிழக சட்ட சபையிலும் எமக்கு ஆதரவான தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. தமிழகத்தில் உள்ள பல தலைவர்கள் தொடர்ந்து எமக்காகக் குரல் கொடுத்து வருகிறார்கள்.

அப்படிப்பட்ட நிலையில் தமிழக முதல்வர் ஜெயலலிதாவைச் சந்தித்துப் பேசும் ஏற்பாடுகள், முன்முயற்சிகள் ஏதும் எடுக்கப்பட்டிருக்கின்றனவா?

தமிழக முதல்வரை சந்திக்க வேண்டிய தேவை இருக்கின்றது. அவரை நாங்கள் சந்திப்போம். அவர் சட்டசபையில் பல தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளார். இலங்கை தமிழர் பிரச்சினை தீரும் வரையில் தமிழ்நாட்டு அரசின் நடவடிக்கை தொடரும் என்று தெரிவித்திருக்கின்றார். ஆகவே நாம் அவருடன் சந்திப்பொன்றை மேற்கொள்ளவுள்ளோம். அதற்கான முயற்சிகள் எடுக்கப்படும்.

கோத்தபாய ராஜபக்ஷ அண்மையில் 'ஹெட்லைன்ஸ் ருடே' தொலைக்காட்சிக்கு வழங்கிய பேட்டியில், புலிகளை ஒழித்து விட்டதால் தமிழர்களுக்கு இனிமேல் உரிமைகளை வழங்கவேண்டியதில்ல என்று கூறி இருக்கிறாரே அது பற்றி உங்கள் கருத்து என்ன?

இந்த மாதம் 4ஆம் நாள் அரசுடனான பேச்சுக்கு அடுத்த திகதி குறிப்பதற்கு முன்பாக சில விடயங்களை அரசு தெளிவுபடுத்த வேண்டும் என்ற முடிவை நாங்கள் எடுத்த பொழுது, கோத்தபாயவின் பேட்டி பற்றி எமக்குத் தெரிந்தே இருந்தது.

அரசாங்கத்தின் தற்போதைய போக்கை பார்த்தால் அரசில் கோத்தபாயவின் குரல் ஓங்குவதைப் போலவே தெரிகின்றது.

(உ-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணமகன் தேவை

யாழ்.இந்து - சைவம் கௌரவ குடும்பம் 1982 ஆம் ஆண்டு கேட்டை, 40 பாவம், 7 இல் செவ்வாய் உடைய அழகிய B.Sc (Agr.Eng), M.Sc. பட்டம் பெற்ற வங்கியாளருமாகிய பெண்ணுக்கு தகுதியான நல்ல உத்தியோகம் உடைய மணமகன் தேவை

தொடர்புகளுக்கு: 0773655947


## பக்தித் திரு உலா இறுவட்டு வெளியீடு

வேலணை, சரவணையைச் சேர்ந்த பா.சிவபாலனின் கவிதைகளைக் கொண்ட ஒலி, ஒளி "பக்தி திரு உலா" இறுவட்டு நல்லை ஆதீன கலா மண்டபத்தில் வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சின் அனுசரணையுடன் கடந்த வெள்ளிக்கிழமை வெளியிட்டு வைக்கப்பட்டது.

வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சின் பணிப்பாளர் எஸ். ஸ்ரீதேவி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக தமிழ்த் துறைப் பேராசிரியர் க.சிவச்சந்திரன் பக்தி திரு உலா இறுவட்டை வெளியிட்டு வைத்தார். முதற் பிரதியை யாழ். பல்கலைக்கழகப் புவியியற்றுறைப் பேராசிரியர் கா.குகபாலன் பெற்றுக்கொண்டார். இரண்டாவது பிரதியை யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையின் அதிபர் திருமதி. க. பொன்னம்பலம் பெற்றுக் கொண்டார். வெளியீட்டுரையை யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறைத் தலைவர் மா.வேதநாதன் நிகழ்த்தினார்.

(ம-51)


## மரண அறிவித்தல்

### திருமதி கந்தசாமி பாய்க்கியம் (இராசாத்தி)



கொடிகாமம், நாவற்காடு வரணியைப் பிறப்பிடமாகவும் 127, ஆறுமுகம் வீதி, வட்டக்கச்சியை வசிப்பிடமாகவும் இந்தியா தமிழ் நாட்டை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி கந்தசாமி பாய்க்கியம் (இராசாத்தி) கடந்த 19.08.2011 வெள்ளிக்கிழமை காலை காலமாகி விட்டார்.

அன்னார் கணபதிப்பிள்ளை கந்தசாமியின் மனைவியும் கலைச்செல்வன் (பிரான்ஸ்), கலைரஜ்சன் (இந்தியா), கலைச்செல்வி (வட்டக்கச்சி), கலைவாணி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயும் கலைமதி, லலிதா, முகுந்தன் (வட்டக்கச்சி), ஞானக்கண்ணன் ஆகியோரின் மாமியும் அனுசியா, சுகிர்தன், மிதுசன், விந்தனா, வைஷ்ணவி, பிரவினா, கஜானன், இனியா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதி நிகழ்வு (24.08.2011) புதன் கிழமை இந்தியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கணவர், மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(சி/3215)

## இனி இல்லை நெஞ்சுவலி!!!





இருதய நோயாளிகள் நெஞ்சுவலி இன்றி எதிர்காலத்தில் சுகமாக வாழலாம். எமது ஆயுர்வேத மூலிகை மருந்து இரத்தவோட்டத்தை சீர்படுத்தும் பக்கவிளைவுகள் இல்லை. சுகமான எதிர்காலம் உறுதியானது.

எமது ஏனைய சிகிச்சைகள்
* புற்றுநோய் கவனிப்பு
* ஈரல் பிரச்சினைகள்
* மூட்டு, முதுகுவலி
* புரொஸ்டிரேட் பிரச்சினை
* ஒற்றைத்தலைவலி
* மன அழுத்தம்
* இருமல் & சளி
* படுக்கைப்புண்
* நீரிழிவுப்புண்
* விஷ வைரஸ் பாதிப்பு



டெங்கு ஆபத்தானது

அறிகுறிகள்

பசியின்மை, ஓங்காளிப்பு தசை எலும்புகளில் கடுரமான வலி

டெங்கு மற்றும் சிக்குன்னியா, வைரஸ் காய்ச்சல்களுக்கு எம்மிடம் சிறந்த ஆயுர்வேத மருந்துகள் இருக்கின்றன

FAIR PHARMA (PVT) LTD
(ஆயுர்வேத மருந்துவம்)
Sponsored by
Level 5 / East Tower / 1C, World Trade Centre, Colombo 01.
0094 115 517 897, 5 551 879, 5 558 442.
Fax: 5 517 756
Website: www.ayurveda.lk
fairpharmasrilanka@yahoo.com

யாழ்ப்பாணம் விநியோகஸ்தர்கள்
ரி.ராஜவேல் மதுரஜன் மெடிக்கல்
கொடிகாமம் வீதி நெல்லியடி
077 4656428

Hotline: 0777 555 600 / 0777 708 310 / 0777 708 330

BOI APPROVED & ISO 9001 : 2008 QMS CERTIFIED COMPANY

இலவச ஆலோசனைகளுக்கு

தினசரி வைத்திய சேவைக்கு உலக வர்த்தக வலயம்

வெளிஇடங்களில் மாதாந்த சேவை - ஜூன்

திகதி & இடங்கள்

21 ஓகஸ்ட் - [illegible]
22 ஓகஸ்ட் - அளுத்கம
22 ஓகஸ்ட் - பருத்தித்துறை
23 ஓகஸ்ட் - யாழ்ப்பாணம்
24 ஓகஸ்ட் - மாத்தறை
25 ஓகஸ்ட் - வத்தளை
25 ஓகஸ்ட் - வீரவில
26 ஓகஸ்ட் - வெல்லம்பிட்டிய
27 ஓகஸ்ட் - பலப்பிட்டிய
27 ஓகஸ்ட் - கண்டி
02 செப்ரெம்பர் - பதுளை
03 செப்ரெம்பர் - பண்டாரகம
03 செப்ரெம்பர் - தீகொல்ல
05 செப்ரெம்பர் - அவிசாவளை
06 செப்ரெம்பர் - இரத்தினபுரி
07 செப்ரெம்பர் - எம்பிலிப்பிட்டிய
09 செப்ரெம்பர் - தொட்டகொட

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை ஜும்மா பள்ளி வாசல் ஒழுங்கையில் மின்சார நிலைய வீதிக்கு அண்மையாக பழைய கடைக் கட்டடங்களுடன் 1¼ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 0775040252, 0777587535

## வீடு வாடகைக்கு

சாவகச்சேரி கனகன்புளியடிச் சந்திக்கு அருகில் 3 Bed Rooms வீடு சகல வசதிகளுடன் வாடகைக்கு உண்டு நிறுவனங்கள் அல்லது N.G.O.

தொடர்பு: 0773258984

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம், இல.5, உடையார் லேன், பழம் வீதி, கந்தர்மடத்தில் 3 பரப்பில் இரு வீடுகள் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 0112561742

## காணி விற்பனைக்கு

சுண்டுக்குளியில் Fletchers Lane 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. இன்று முற்பகல் 10.30 மணிக்கு பின் தொடர்பு கொள்ளவும்

தொடர்பு: 0777856920

## காணி விற்பனை

யாழ்.கொட்டடியில் ஆஸ்பத்திரி வீதிக்கும் சிவன் பண்ணை வீதிக்கும் அருகில் (சந்தி) அமைந் துள்ள 3 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0778089646

## காணி விற்பனை

உடனடி விற்பனைக்கு மானிப்பாய் கட்டுடை வீதியில் எழுமுள்ளி Main Road இல் 4 பரப்புக் காணி கிணற்றுப் பங்குடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0728383751

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நாரந்தனை, செருக்கன் சந்தியில் 2 கடையும், வீடும், காணியும் சேர்த்து மொத்தம் 28 பரப்பு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 0725266382/0754835523

## Spoken English & Grammar

(வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும்)
By:Mr.B.Ruban (A/L Eng.Teacher &BBA)
More Details:0779785749

## இதயபூர்வ அஞ்சலிகள்



முகாமையாளர்
சுந்தரலிங்கம் பாலகாந்தன்
அவர்களின் அன்புத் தாய்
திருமதி
சுந்தரலிங்கம் இராசலக்சுமி
அவர்கள்
காலமானதையிட்டு
அன்னாரின் பிரிவால்
துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது
ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர்கள்,
செலான் வங்கி.

(சி/3210) (38)

## வேலை

Italy, Canada, U.K. Australia போன்ற நாடுகளுக்கு Work வீசாக்கள் நம்பிக்கையுடனும் உத்தரவாதத்துடனும் உடனடியாக ஒழுங்கு செய்து தரப்படும்.

தொடர்புகளுக்கு- 0772484403, 0112363880

Brand new Toyota corolla x Hid Limited - NZE-141( Axio unregisterd )
Year 2011/7 , Mileage : 42km ,1500cc ,Automatic
Peal white ,Auction grade : s



Options : P/S,A/C,P/W,ABS, 2 Air BAGS, ANTY - LOCKING BRAKE SYSTEM
Permit Holder க்கு வாகனம் தருவித்து தரப்படும்
077 2389584

## விற்பனைக்குண்டு

நல்ல நிலையிலுள்ள கணினிகள், போட்டோ பிரதி இயந்திரம், கண்ணாடிப் பொருத்துகள், அலுவலக தளபாடங்கள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 0770711162, 0778953861


## சேவை நலன் பாராட்டு

நேற்றைய உதயனில் பக்கம் 4 இல் பிரசுரமான பொன்னையா தெய்வேந்திரன் என்பவரது சேவை நலன் பாராட்டில் வாழ்த்துபவர்கள் தபால் அதிபர், உத்தியோகத்தர், உபதபால் அதிபர், அஞ்சலர்கள், பணியாளர்கள் எனத் திருத்தி வாசிக்கவும்.


## கண்ணீர் அஞ்சலி



யா/ஊர்காவற்றுறை றோ.க.தமிழ் ஆண்கள் பாடசாலையின் ஆசிரியை
செல்வி மார்க்கண்டு சர்மினி
அவர்களின் அன்புத் தாய்
அமரர் மார்க்கண்டு ஜெயதேவி
20.08.2011 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.
அவரது பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

## மரண அறிவித்தல்

### கிருஷ்ணபிள்ளை பேரின்பமூர்த்தி



நாரந்தனையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கிருஷ்ணபிள்ளை பேரின்பமூர்த்தி (இன்பம்) 19.08.2011 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கிருஷ்ணபிள்ளை மற்றும் மனோன்மணி தம்பதியரின் அன்பு மகனும் சந்திரா, மேனகா, மலர்விழி, மதிகுமார் காலஞ்சென்றவர்களான உதயகுமார், ஜெயக்குமார் ஆகியோரின் அன்புச் சகோதரரும் அங்கநாதன், ஜெயபாலன் யோகரஞ்சிதம் ஆகியோரின் மைத்துனரும் வைஷ்ணவி, தியானா ஆகியோரின் மாமனும் மகிஷாவின் பெரியப்பாவும் சிவசுப்பிரமணியம்- கமலா தம்பதியரின் மருமகனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (22.08.2011) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகள் நாரந்தனை இந்து மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாரந்தனை வடக்கு,
ஊர்காவற்றுறை.

(7107)

தகவல்:
குடும்பத்தினர்.

## வேலை வாய்ப்பு

எலற்றிக் வெல்டர், வேலை பழகுநர் ஆகியோர் தேவை.

தொடர்பு: 0773760594

## வீடு விற்பனைக்கு

மாவடிச் சந்தி, வட்டு தெற்கு, வட்டுக் கோட்டையில் 5 பரப்புடன் கூடிய வீடு உடனடி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0771040881, 0779218633


## தவறிவிட்டது

நாகேஸ்வராணந்தன் கலைவேணி என்பவருடைய தேசிய அடையாள அட்டை (878070933V) இலங்கை வங்கிப் புத்தகம்-2, பேரம்பலம் விமலா தேவி என்பவருடைய தே.அ.அட்டை (586470608V), தொலைபேசி என்பன கோப்பாய் சந்திக்கும் அச்சுவேலிக்கும் இடையில் தவறிவிட் டன. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைக் கவும்.

க.பேரம்பலம், நீர்வேலி வடக்கு. T.P: 0214911496
(தகுந்த சன்மானம் வழங்கப்படும்)


## காணி விற்பனைக்கு

கோண்டாவிலில் 2 பரப்பு மற்றும் 5 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0770391295

கிளிநொச்சியில் நவீன மருத்துவ ஆலோசனை நிலையம்

# CENTRAL CLINIC

## சென்றல் கிளினிக்

கிளிநொச்சி பொது மருத்துவமனைக்கு அருகில்

நிபுணத்துவ மருத்துவ ஆலோசனை சேவை, சத்திரசிகிச்சை, பொது மருத்துவ, மகப்பேற்று, பெண்ணோயியல், குழந்தை மருத்துவ நிபுணர்கள்.

தினமும் மருத்துவ சேவை.

ECG
Nebulizer
Ultrasound

24.08.2011 முதல்

டேடன்ஸ் ஆய்வு கூடத்துடனிணைந்த ஆய்வு கூட சேவை.(Durdans Laboratory) குருதி, சலம், உடற்கூற்றியல் ஆய்வு சேவை. மருந்துச்சாலை (Pharmacy) வெகுவிரைவில்

சென்றல் கிளினிக்
கிளிநொச்சி பொது மருத்துவமனைக்கு அருகில்
இல.256, ஆனந்தபுரம், கிளிநொச்சி.
தொலைபேசி/ தொலைநகல்- 0212285588, 0779361570
www.centralclinic.webs.com
email:vanniclinic@gmail.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# வன்னி மக்களை மேலும் சோதிக்கும் பாதகமான புவியியல் பாதகங்கள்

வன்னி இறுதிப் போரின் போது, பல தடவைகள் உயிர் போய்த் திரும்பிய நிலையில், பல ஆபத்துகள், அனர்த்தங்களில் இருந்து தப்பி -

இப்படியும் ஒரு வாழ்க்கையா என்று முட்கம்பி வேலிகளுக்குள் மிருகங்களிலும் கேவலமாக அடைப்புகளுக்குள் கிடந்து, மனித நேயம் மறக்கப்பட்டு, உடலாலும் உள்ளத்தாலும் நொய்ந்து போன இலட்சக் கணக்கான தமிழ் மக்கள் -

பூவும், பிஞ்சும், காயுமாக - மிகப் பெரும்பாலும் அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் போன்ற சர்வதேச அமைப்புகளின் தாராண்மையால் மனிதர்கள் என்று மீள முகம் காட்டிய வன்னி மக்கள் -

தமது சொந்த மண்ணுக்குத் திரும்பிய பல்லாயிரக் கணக்கான தமிழர்கள் -

கடவுள் விடை கொடுத்தாலும் பூசாரி இடைமறிக்கும் நிலை போன்று நாளாந்த வாழ்க்கையில் முந்திய நிலைக்குத் திரும்புவதற்கு இன்னும் முன்னூறு மாதங்களுக்கும் கூடுதலாகவும் காத்திருக்க நேரிடுமோ என்று ஏங்கும் நிலையைப் பல வகைகளாலும், வழிகளாலும் எதிர்கொள்ளும் சூழலில் உள்ளனர்.

வன்னி மண்ணின் ஒவ்வொரு பிரதேசத்திலும், கிராமத்திலும், குறிச்சியிலும் புதிது புதிதாக பல வகைகளைச் சார்ந்த சோதனைகள் மற்றும் கெடுபிடிகளால் - அந்தப் பகுதி மக்கள் பலப்பல கஷ்டங்களை எதிர்கொள்ள நேரிடுகிறது. மனிதர்களால் மட்டுமன்றி இயற்கையாலும் எதிர்கொள்ளும் துர்ப்பாக்கியம் இப்போது ஊதிப் பெருத்து வருகிறது.

அவற்றில் மக்களின் ஜீவாதாரத்தையே கேள்விக் குறியாக்கும் தண்ணீர்ப்பிரச்சினை பல பிரதேசங்களை பல வடிவங்களில் பாதித்து வருகிறது.

கிளிநொச்சி மாவட்டத்தின் வன்னேரிக்குளம் தண்ணீர் இன்னும் ஒரு சில ஆண்டுகளில் உவராகிவிடும் என்பதற்கான ஏதுநிலை உண்டாகி வருவதாகச் சுட்டிக் காட்டப்படுகிறது. அதனால், அரை நூற்றாண்டாக (குறிப்பாக சொல்வதானால் 58 வருடங்களுக்கு முன்னதாக) வன்னேரிக்குளத்தின் நன்னீரை நம்பி குடியேறிய மக்களின் இன்றைய சந்ததியினர் மனம் வேகும் நிலை உருவாகி உள்ளது.

வன்னேரிக்குளம் கிராமம் இன்னும் சில ஆண்டுகளில் உவராக மாறிவிடுமென்ற செய்தி, அந்தக் கிராம மக்களை அதிர்ச்சியில் உறைய வைத்துள்ளது. இத்தகைய ஆபத்தான நிலை உண்டு என்பது இப்போது தான் தெரிய வந்துள்ளது. யானை வரும் பின்னே மணி ஓசை வரும் முன்னே என்பது போல, மருதோடை, நெடும்பிட்டி, நெத்தலி மோட்டை, தனிப்பனையடி, நாலாவெளி, மூன்றுமோட்டைவெளி, வெத்திலைமோட்டை ஆகிய பகுதிகளில் ஏற்கனவே தண்ணீர் மட்டுமன்றிக் கிராமங்களே உவர்மண் பிரதேசங்களாக மாறிவிட்டன.

இப்போது வேகமாக உவராகும் கிராமமாக குஞ்சுக்குளம் பகுதி அமைகின்றது. இந்தக் கிராமத்தைப் பூர்வீகமாகக் கொண்ட பல குடும்பங்கள் குடி தண்ணீர்ப் பிரச்சினை காரணமாக இடம்பெயர்ந்து வேறு இடங்களுக்குச் செல்கின்றனர்.

அருகே உள்ள பூநகரியின் பெரும்பகுதி, ஏற்கனவே உவர்ப்பூமியாக மாறியுள்ள நிலையில் வன்னேரிக்குளமும் அதே ஆபத்தை எதிர்கொண்டுள்ளது. இந்தக் கிராமத்தில் வாழும் சுமார் 500 குடும்பங்களைச் சேர்ந்த இரண்டாயிரம் பேரின் எதிர்காலம் கேள்விக் குறியாக மாறியுள்ளது.

வன்னேரிக்குளம் உவராக மாறிவிட்டால் இதற்கு அருகேயுள்ள ஆனைவிழுந்தான் கிராமமும் உவர் நீரால் பாதிப்புறும். அதிலும் வன்னேரிக்குளம் பகுதியில் வசிக்கும் மக்களுக்குச் சம எண்ணிக்கையினரே வாழ்கின்றனர் என்பது உத்தேசம்.

வன்னேரிக்குளம் முற்றாக உவரால் விழுங்கப்படுமாயின் அடுத்ததாகப் பாதிக்கப்படப் போவது ஸ்கந்தபுரம் கிராமமே.

வன்னேரிக்குளமும், அதனைச் சூழவுள்ள கிராமங்களும் உவராகுவதால் உண்டாகக் கூடிய பாதிப்புகளையும் அதனால் அங்கு வாழும் மக்கள் எதிர்கொள்ள உள்ள வாழ்வியல் கஷ்டங்களையும் வெறும் எழுத்துக்களால் சொல்லி முடித்துவிட இயலாது.

பட்ட காலிலே படும் கெட்ட குடியே கெடும் என்பதற்கு உதாரணமாக, போரினால் பாதிக்கப்பட்டு தமது முந்தைய வசதி நிறைந்த வாழ்க்கையை இழந்து தவிக்கும் வன்னி மக்களை, இயற்கையும் புவியியல் சார் அமைப்பியலும் (Geological) தனது காலில் போட்டு மிதிக்கிறது. ஐம்பது வருடங்களுக்கு மேலாகக் காடு திருந்தி களனி பெருக்கி சீரும் சிறப்புடனும் வாழ்ந்த ஒரு மக்கள் கூட்டத்தை, போரின் உதைப்புப் போதாது என்று இயற்கையும் - நீர்வளமும் - காலில் போட்டு நசுக்க முற்பட்டுள்ளது.

இயற்கையின் இந்தச் சவாலை எதிர்கொள்வதற்கு அவர்களுக்கு உதவிடப் போவோர் யார்? உரிய முறைப் பிரகாரம் மாற்றுவசதி செய்வது அரசினுடையதே. ஆனால் அது இப்போது செயற்படும் கபளீகரப் போக்கில், இத்தகையனவற்றுக்கு முன்னுரிமை வழங்கிச் செயற்படுவதற்குத் தானாக முன்வரும் என்று எதிர்பார்க்கும் வாய்ப்பு, அறவே இல்லை. இப்பிராந்தியத்தின் அரச உயர் அதிகாரிகளே அதற்குத் தூண்டுதல் கொடுக்கவேண்டும். அனேகமாக, தமது சுயநலன்களுக்காகவே உழைக்கும் அவர்கள், மக்கள் அவர்களைக் கடைக் கண்ணாலேனும் பார்க்க வேண்டிய வேளை இது. தமது இரத்தத்தின் இரத்தங்கள் என்ற உணர்வு தானும் பிறக்காதா அவர்களுக்கு?

# இன்று தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை

இன்று தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை நடைபெறவுள்ளது. இந்தப் பரீட்சைக்கு நாடெங்கிலும் இருந்து 3 இலட்சத்து 21 ஆயிரத்து 427 மாணவர்கள் தோற்றவுள்ளதாக பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

சிங்கள மொழிமூலம் 2 இலட்சத்து 41 ஆயிரத்து 610 பேரும், தமிழ்மொழி மூலம் 79 ஆயிரத்து 817 மாணவர்களும் தோற்றவுள்ளனர்.

இதற்கென 3721 பரீட்சை நிலையங்களும் 506 இணைப்பு நிலையங்களும் 33 ஒருங்கிணைப்பு நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

இன்று காலை 9மணிக்குப் பரீட்சை ஆரம்பமாகும்.

யாழ்.குடாநாட்டு மாணவர்களுக்கான வினாத்தாள்கள் கடந்த வெள்ளிக்கிழமை மாலை வாகனம் மூலம் யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரப்பட்டுள்ளதாக யாழ்.கல்வி வலய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் காலை 8மணிக்கு பரீட்சை மண்டபத்துக்கு சமுகம் கொடுக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(த-26)

**புலமைப்பரிசிலில் சித்திபெற்றாலும் பெறாவிட்டாலும்**

# இடைநிலைப் பாடசாலைகளில் இணைவதற்கு சகல மாணவர்களுக்கும் வாய்ப்பளிக்கப்படும்

கொழும்பு, ஓக. 21

புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெறும் அல்லது சித்திபெறாத சகல மாணவர்களும் மாகாணத்தில் அருகில் இருக்கும் இடைநிலைப் பாடசாலையில் சேர்ந்து கற்பதற்கு வாய்ப்புப் பெற்றுக் கொடுக்கப்படும் என்று கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன கூறியுள்ளார்.

ஊவா மாகாணத்தில் கட்டி முடிக்கப்பட்ட முதலாவது இடைநிலைப் பாடசாலையான பதுளை ஹத்தத்தாவ வித்தியாலயத்தை கடந்த வாரம் மாணவர்களின் உரிமையில் கையளிக்கும் நிகழ்ச்சியின்போது கல்வி அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மாற்றம் ஏற்படுத்துவது நடைமுறையில் சாத்தியமாவதற்கு அர்ப்பணிப்புடன் செயல்படுவது அவசியமானது என்பதனால், அந்த அர்ப்பணிப்பை வேறு எந்த அரசும் செய்யாத விதத்தில் மஹிந்த ராஜபக்ஷ அரசு செய்து வருகின்றது. அதற்கு ஒத்துழைப்பு வழங்கக் கூடிய ஆற்றல் நிறைந்த கற்பித் தல்-கற்றல் செயற்பாடுகளுக்கு துடிப்புடன் பங்களிப்புச் செய்யத் தகைமை பெற்ற ஆசிரியப் பெருமக்கள் எங்களிடம் இருக்கிறார்கள் என்று அமைச்சர் குறிப்பிட்டார்.

ஆயிரம் இடைநிலைப் பாடசாலைகளை வளர்ச்சிப்படுத்தும் வேலைத்திட்டத்தின் கீழ், சகல பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் ஒரு பிரிவுக்கு ஓர் இடைநிலைப் பாட சாலை என்ற அடிப்படையில் பாடசாலைகள் வளர்ச்சிப்படுத்தப்படுவதுடன் அந்த பாடசாலைகளில் பிரதான ஐந்து துறைகளில் விசேடமான சுமை சுமத்தப்படவிருக்கின்றது.

ஆறாம் தரம் முதல் தகவல் தொழில்நுட்பம், ஆங்கிலம் மற்றும் பிறநாட்டு மொழிகளைப் பயிற்றுவித்தல், அறிவியல் மற்றும் கணிதம், விளையாட்டு மற்றும் அழகியற் கல்வி போன்ற பாடத்துறைகளுக்கான சகல வசதிகளும் நகரப் பாடசாலைகளுக்குச் சமமான முறையில் இந்தப் பாடசாலைகளுக்கு வழங்கப்படுவது மட்டுமன்றி இவை அனைத்தையும் கொண்டு உணர்வுபூர்வமான மனம் நிறைந்த மாணவர்களை உருவாக்குவதற்கான விசேட கவனமும் செலுத்தப்படும் என்றும் அமைச்சர் மேலும் கூறினார்.

இந்த நிகழ்ச்சியில் ஊவா மாகாண அமைச்சர் அனுர விதானகமகே மற்றும் மாகாண கல்விச் செயலாளர் உட்பட பெருந்திரளானோர் கலந்துகொண்டனர். (த-38)

# சமாதான நீதிவான்களுக்கான தேசிய மாநாடு விரைவில்

கொழும்பு, ஓக. 21

சமாதான நீதிவான்களுக்கான தேசிய மாநாட்டை நடத்துவதற்கு நீதியமைச்சு ஆயத்தங்களை மேற்கொண்டுள்ளது.

இதன் முதற் கட்டமாக மாவட்ட மட்டத்தில் கருத்தரங்குகளை ஒழுங்கு செய்வதற்கும், அதனைத் தொடர்ந்து தேசிய மாநாட்டை நடத்துவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அமைச்சு அறிவித்துள்ளது.

மேலும் சமாதான நீதிவான்கள் தொடர்பான தகவல்களை ஆவணமயப்படுத்தும் செயற்பாடும் இந்த மாநாட்டின் போது மேற்கொள்ளப்படவுள்ளது.

சட்டம் தொடர்பாக சமாதான நீதிவான்களுக்கு அறிவூட்டல்,பொறுப்புக்கூறத்தக்க கௌரவமான பதவி என்பதால் தகுதியானவர்களை நியமித்தல், வழமையான அடையாள அட்டைக்குப் பதிலாக சமாதான நீதிவான்கள் அடையாள அட்டைகளை விநியோகித்தல் தொடர்பாகவும் இந்த மாநாட்டில் ஆராயப்படவுள்ளது. (த-22)

# வடமாகாண கூட்டுறவுச் சங்கங்களின் அபிவிருத்திக்கு 40 மில்லியன் ரூபா நிதி

**கூட்டுறவு அமைச்சு வழங்கியுள்ளது**

யாழ்ப்பாணம், ஓக. 21

வடமாகாணத்தில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் அபிவிருத்திக்கென 40 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த நிதியைப் பயன்படுத்தி சங்கங்கள் பொருள் கொள்வனவை மேற்கொள்வதற்கு வடமாகாணப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

வடமாகாணத்தில் உள்ள 47 பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் குறைந்த வட்டியுடன் இந்த நிதி வழங்கப்படும். இந்த நிதியைப் பயன்படுத்தி அத்தியாவசியப் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பெரும்பாலான பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் போதிய நிதி வசதி இல்லாமல் அத்தியாவசியப் பொருள்களைக்கூடக் கொள்வனவு செய்யமுடியாமல் நெருக்கடி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.

இந்த நெருக்கடியில் இருந்து சங்கங்களை மீட்கவும் சங்கங்களின் எதிர்கால வியாபார நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தவும் கூட்டுறவு அமைச்சு இந்த நிதியை ஒதுக்கியுள்ளது.

இந்த நிதி மூலம் வடமாகாணக் கூட்டுறவுத் திணைக்களத்தின் நேரடிக் கண்காணிப்புடன் சங்கங்களுக்குப் பொருள்கள் கொள்வனவு செய்து வழங்கப்படவுள்ளன என கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

(த-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**HP 430** Core 2.1GHZ (231M) Processor
Ram 02GB DDR 3
320 GB HDD
DVD / RW+DL
Wifi/CR/BT/WC
14.1 "Bright"
796MB Graphics
Dos
58,000/=
2 Years Warranty

**HP 4530S** Core i3 2.1GHZ (231M) Processor
Ram 04GB DDR 3
320 GB HDD
DVD / RW+DL
Wifi/CR/BT/FP/WC
15.6 "Bright"
1696 MB Graphics
Win7 HP
69,000/=
2 Years Warranty

**ASUS MINI** Intel Atom 1.6GHZ (N455) Processor
Ram 01GB
250 GB HDD
DVD / RW (external)
Wifi/CR/BT/WC
10.1 "Bright"
250 MB Graphics
Win7 Starter
39,000/=
2 Years Warranty

# நல்லூர் மஹோற்சவத்தினை முன்னிட்டு

**HP G62-453TU** Core i5 2.67GHZ(M390)Processor
Ram 02GB DDR 3
500 GB HDD
DVD / RW+DL
Wifi/CR/BT/WC
15.6 "Bright"
762MB Graphics
Dos
75,500/=
2 Years Warranty

## Mitro PC SYSTEMS

T.P - 0779591134 175 / 3 KASTHURIYAR ROAD JAFFNA

**HP PAVILION G6** i5 2.30GHZ (M2410) Processor
Ram 04GB DDR3
500 GB HDD
DVD / RW + DL
Wifi/CR/BT/WC
15.6 "Bright"
1GB ATI 6470 Graphics
Win7 HP (64Bit)
85,500/=
2 Years Warranty

# மாபெரும் மலிவு விற்பனை

**Toshiba C600** Core2Duo2.67Ghz(P7570) Processor
Ram 02GB DDR 3
500 GB HDD
DVD / RW+DL
Wifi/CR/BT/WC
14.1 "Bright"
829MB Graphics
Dos
55,000/=
2 Years Warranty

**DELL VOSTRO 3450** Core i5 2.10Ghz(M2310) Processor
Ram 04GB DDR 3
320 GB HDD
DVD / RW+DL
Wifi/CR/BT/WC
14.1 "Bright"
1GB ATI Graphics
Win7 pro
120,000/=
2 Years Warranty

HP PROBOOK i3 2.53GHZ (380M) Processor
Ram 02GB DDR3
320 GB HDD
DVD / RW + DL
Wifi/CR/BT/WC
14.1 "Bright"
759MB Graphics
Win7 HP
80,000/=
2 Years Warranty

Intel Dual Core 3.0GHZ Processor
G41 Intel CHIPSET M/B
Ram 02GB DDR 3
500GB SATA HDD
15.6" LED Monitor
USB Optical Mouse
USB Keyboard
Branded ATX Casing
DVD Writer
37,500/=

Intel Dual Core 3.0GHZ Processor
G41 Intel CHIPSET M/B
Ram 02GB DDR 3
500GB SATA HDD
18.5" LCD Monitor
USB Optical Mouse
USB Keyboard
Branded ATX Casing
DVD Writer
39,000/=

Intel Core i3 3.06GHZ Processor
Intel H55 CHIPSET M/B
Ram 02GB DDR 3
500GB SATA HDD
18.5" LCD Monitor
USB Optical Mouse
USB Keyboard
Branded ATX Casing
DVD Writer
48,500/=

**T.P 021-222-4694 175/3 Kasthuriar Road Jaffna**

# கண்ணீர் அஞ்சலி



## திருமதி ராசலக்சுமி சுந்தரலிங்கம்
## (காரைநகர்)

எமது ஆருயிர்ச் சகோதரி திருமதி ராசலக்சுமி சுந்தரலிங்கம் 19.08.2011 வெள்ளிக்கிழமை இறைவனடி எய்திய துயரச் செய்தியை அறிந்து மிகவும் வேதனை அடைந்தோம். அவருடைய பிரிவை இழந்து துயரத்தில் ஆழ்ந்திருக்கும் சகோதரியின் குடும்பத்தாருக்கு எங்களுடைய ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவர்களுடைய துயரத்திலும் பங்கு கொள்ளுகிறோம். எமது சகோதரியின் ஆன்மா சாந்தியடைய வேண்டி இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சகோதரியின் பிரிவின் துயரத்தில் ஆழ்ந்திருக்கும்



மைத்துனர் செந்தில்நாதன்
சகோதரி மங்கையர்க்கரசி (ஞானம்)
பிள்ளைகள்
மதியழகன் (சிங்கப்பூர்),
மணிவண்ணன் கிரிஜா குடும்பத்தினர்.
கனடா.

மைத்துனர் கணேசன் (கணபாலா)
சகோதரி திலகவதி
பிள்ளைகள்
பாலசுப்பிரமணியம்,
ஐங்கரன் , திருக்குமரன்
குடும்பத்தினர்
திருமாறன் கஜவதனி
கனடா.

(சி/3203)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடும் வரட்சியால் ஊர்காவற்றுறையில் குடிதண்ணீருக்குப் பெரும் தட்டுப்பாடு

## குழாய் மூல விநியோகமும் போதியதாக இல்லை

ஊர்காவற்றுறை, ஒக.21

தற்பொழுது நிலவி வரும் வரட்சியான காலநிலையால் ஊர்காவற்றுறையில் குடிதண்ணீருக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவி வருகிறது.

ஊர்காவற்றுறையில் குடிதண்ணீர் தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு அல்லைப்பிட்டியில் இருந்து குழாய் மூலம் குடிதண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையால் இந்த நீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. ஊர்காவற்றுறை முகாம் வீதிப் பகுதியில் சில நீர் விநியோக குழாய்களில் அதிக அளவான குடும்பங்கள் குடிதண்ணீரைப் பெற்று வருகின்றன.

இதிலிருந்து வெளியேறும் நீர் குறைவாக இருப்பதால் ஒரு குடும்பத்துக்கு நாளொன்றுக்கு சராசரி இரண்டு குடம் நீரே பெற்றுக்கொள்ளக்கூடியதாக உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதனால் இந்தப் பகுதியில் உள்ள குடும்பங்கள் குடிதண்ணீரைப் பெறுவதில் பெரும் சிரமங்களை அனுபவித்து வருவதாகக் கூறப்படுகின்றது.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பெரிய குழாயை பொருத்துவதன் மூலம் அதிக அளவு நீரை வெளியேற்றுவதனூடாக அதிகளவு பாவனையாளரைக் கொண்ட குழாய்களில் இருந்து தேவையான அளவு குடிதண்ணீரைப் பெற நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது குறித்து உரிய தரப்புக்களுக்கு அறிவிக்கப்பட்டபோதும் இதுவரை உரிய நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை எனவும் அந்த மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இதனை விட தம்பாட்டி, மெலிசிமுனை, கரம்பன், சுருவில் பகுதிகளிலும் குடிதண்ணீருக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவி வருகிறது. இவற்றை நிவர்த்தி செய்யும் பொருட்டு ஊர்காவற்றுறைப் பிரதேச சபையால் பவுசர் மூலம் இந்தப் பிரதேசங்களுக்கு குடிதண்ணீர் வழங்கப்பட்டு வருகின்ற போதும் அது அந்தப் பகுதி மக்களின் குடிதண்ணீர் தேவையைப் பூர்த்தி செய்யக் கூடியதாக இல்லை எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பிரதேச சபையால் மண்குழி பகுதியில் உள்ள கிணறுகளில் இருந்தே பவுசர்களுக்கு குடிதண்ணீர் நிரப்பப்பட்டு வந்தது. தற்பொழுது அந்தக் கிணறுகளில் நீர் மட்டம் வெகுவாக குறைந்துள்ளதால் நாரந்தனைப் பகுதிகளில் உள்ள தனியாரின் கிணறுகளில் இருந்தே பவுசர்கள் நீரை நிரப்பி வருவதாக தெரிவிக்கப்படுகிறது. (த-127)

# 'காப்பெற்' வீதிகளுக்கு ஒழுங்குக் குறியீடுகள்

கொழுப்புதுறை, ஒக.21

யாழ்.மாநகரசபை எல்லைக்குள் அமைக்கப்பட்ட 'காப்பெற்' வீதிகளுக்கு வீதி ஒழுங்கு கோடுகள், பாதுகாப்பு கடப்புக் கோடுகள் என்பன வரையும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

பழைய பூங்காவீதி, கொழும்புத்துறை வீதி, ஸ்ரான்லி வீதி, கடற்கரை வீதி என்பவற்றின் இரு மருங்கும் வெள்ளைக் கோடுகளும் பாடசாலைகள், வைத்திய நிலையங்கள் அமைந்துள்ள பிரதான இடங்களில் பாதசாரிகள் கடவைக் கோடுகள் மஞ்சள் நிறத்திலும் வீதி அபிவிருத்தி அதிகார சபையால் அமைக்கப்பட்டு வருகின்றன. (த-135)

# யாழ்.மரியன்னை பேராலயத்தில் கத்தோலிக்க இளைஞர் தினம்

கொழும்புத்றுறை, ஒக.21

அனைத்துலக கத்தோலிக்க திருச் சபையின் 13 ஆவது உலக இளையோர் தினம் யாழ்.மாவட்டத்தில் கொண்டாடப்பட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை மாபெரும் இளையோர் சங்கம நிகழ்வு யாழ். பேராலயத்தில் நடைபெறவுள்ளது. இதில் யாழ்ப்பாணம், திருமலை, மட்டக்களப்பு, மன்னர் மறைமாவட்டங்களைச் சேர்ந்த இளைஞர் பிரதிநிதிகள் கலந்து கொள்ளவுள்ளனர்.

மாலை 4 மணிக்கு குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் இடம்பெறும் திருப்பலியைத் தொடர்ந்து புறப்படும் இளையோர் பேரணி பிரதான வீதி வழியாக யாழ். மரியன்னை பேராலயத்தைச் சென்றடையும்.


யாழ். மரியன்னை பேராலய வளாகத்தில் கலைநிகழ்வுகளும் 'விடியல் இசைக் குழுவினரின்' இன்னிசை நிகழ்வும் இடம் பெறும்.

இதேவேளை -

அனைத்துலக கத்தோலிக்க இளையோர் தின நிகழ்வுகள் ஸ்பெயின் நாட்டின் தலைநகர் மாட்ரிட்டில் இந்த மாதம் 18 ஆம் திகதி ஆரம்பமாகி இன்று ஞாயிற்றுக்கிழமை வரை நடைபெறுகின்றன.

இந்த நிகழ்வில் 10 லட்சத்துக்கும் மேற்பட்ட இளையோர் உலகெங்குமிருந்து கூடவுள்ளதாக யாழ். மறைமாவட்ட கத்தோலிக்க இளையோர் ஒன்றிய இயக்குநர் அருட்பணி ம.வி. இ.ரவிச்சந்திரன்அடிகள் தெரிவித்தார். (த-135)

## அபிவிருத்தி...



ஆரம்பம்: வலி.மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட பிரதேசத்தில் வீதி புனரமைப்பு பணிகள் துரித அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டன. வலி.மேற்கு பிரதேச சபை செயலாளர் சு.புத்திசிகாமணி தலைமையில் இடம்பெற்ற இதற்கான ஆரம்ப நிகழ்வில் வலி.கிழக்குப் பிரதேச செயலர் ம.பிரதீபன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு மங்கல விளக்கேற்றுகிறார். (த-302)

## கோரிக்கைகளை நிறைவேற்றக் கோரிக்கை

# போதனா வைத்தியசாலைத் தாதியர் நேற்று அடையாள வேலை நிறுத்தம்

யாழ்ப்பாணம்,ஒக.21

தாதிய உத்தியோகத்தர் ஒருவருக்கு வழங்கப்பட்ட இடமாற்றத்தை இரத்துச் செய்யவேண்டும் என்ற கோரிக்கை உட்பட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து யாழ். போதனா வைத்தியசாலையின் தாதிய உத்தியோகத்தர்கள் சுமார் 2 மணி நேரம் அடையாள வேலை நிறுத்தத்தை நேற்று சனிக்கிழமை மேற்கொண்டனர்.

கடந்த 8 ஆம்திகதி வைத்தியசாலையின் சத்திரசிகிச்சை நிபுணர் டாக்டர் ரவிராஜுக்கும் தாதிய உத்தியோகத்தர் சுரேஸ் நேசனுக்கும் இடையில் ஏற்பட்ட முரண்பாட்டை அடுத்து குறிப்பிட்ட தாதிய உத்தியோகத்தர் உடனடியாக வேறு பிரிவுக்கு மாற்றப்பட்டார்.

இதனைக் கண்டித்து யாழ். போதனா வைத்திசாலையின் தாதிய உத்தியோகத்தர்கள் ஒன்றிணைந்து இயல்பான பணிகள் எதுவும் பாதிப்படையாத வகையில் நேற்று இருமணிநேரம் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

இது தொடர்பாக யாழ். தாதிய நலன்புரி சங்கத்தின் உறுப்பினர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில்:

அரச தாதியர் சங்கம், பொது வைத்திய தாதியர் சங்கம், யாழ். தாதியர் நலன்புரி சங்கம் என்பன இணைந்து இந்த வேலை நிறுத்தத்தை ஏற்பாடு செய்துள்ளன.

யாழ்.போதனா வைத்திய சாலைக்கு 1000 தாதிய உத்தியோகத்தர்கள் தேவை உள்ள போதும் 320 தாதிய உத்தியோகத்தர்களே கடமையில் உள்ளோம்.

எனினும் எமது சேவையை வைத்தியசாலையின் மேலதிகாரிகள் உட்பட வைத்தியர்களும் உதாசீனம் செய்கின்றார்கள்.

தாதிய உத்தியோகத்தர்களுக்கான தங்குமிட வசதியோ [illegible] ஓய்வறைகளோ னத்தரிப்பிட வசதியோ ஆண்கள் பெண்களுக்கான தனியான அறையோ எதுவும் எமக்கு இல்லை.

சுமார் 18 மணித்தியாலங்கள் கடமையில் உள்ள தாதிய உத்தியோகத்தர்கள் பாதுகாப்பு உத்தியோகத்தர்களால்கூட மதிக்கப்படுவது இல்லை. இவர்களும் அடிக்கடி எம்முடன் முரண்பட்ட வண்ணமே உள்ளனர்.

இவற்றை எல்லாம் கருத்தில் கொண்டு இந்த அடையாள வேலை நிறுத்தத்தை மேற்கொண்டுள்ளோம். எமது கோரிக்கைகள் எதுவும் நிறைவேற்றப்படாவிட்டால் முழுநேர வேலை நிறுத்தத்தைத் தாய்ச் சங்கங்களுடன் தொடர்பு கொண்டு மேற்கொள்ளவுள்ளளோம் - என்றார்.

200 இற்கும் மேற்பட்ட தாதிய உத்தியோகத்தர்கள் இந்த வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டதுடன் தமது கோரிக்கைகளை வைத்திய சாலைப் பணிப்பாளரிடமும் கையளித்துள்ளனர். (த-313)

# அளவெட்டி தபாலகத்தின் கட்டடப் பணிகள் கிடப்பில்

## நிதி ஒதுக்கீடு செய்து 5 வருடங்கள்

அளவெட்டி, ஒக. 21

அளவெட்டி தபாலகத்துக்கான நிரந்தர கட்டடத்தை அமைக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு5வருடங்கள்கடந்துள்ள போதும் கட்டடப் பணிகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என விசனம் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த தபாலகத்தின் கட்டடப் பணிகளுக்காக ஆறு மில்லியன் ரூபா நிதியை அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

இதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு கடந்த 5 வருடங்களுக்கு முன்னர் நடைபெற்றது.

கட்டடம் கட்டுவதற்காக கட்டடத் திணைக்களத்துடன் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட நிலையில் இதுவரை எந்தவிதப் பணிகளும் ஆரம்பிக்கப்படவில்லை.

இதனால் அளவெட்டிப் பிரதேச மக்கள் சீரான தபால் சேவையைப் பெறுவதில் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

எனவே, இதனைச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்தில் எடுத்து தபாலகத்தின் கட்டடப் பணிகளை மேற்கொள்ளுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (த-36)

# பயணிப்போர் நெருக்கடியில்

யாழ்ப்பாணம், ஒக. 21

கே.கே.எஸ்.வீதி ஊடான மருதனார்மடம் வீதி மிகவும் சேதமடைந்துள்ளதால் வீதியால் பயணிக்கும் வாகன சாரதிகள் உட்பட பொதுமக்களும் பெரும் சிரமங்களைஎதிர்கொள்ள வேண்டியுள்ளதாக விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

கே.கே.எஸ் வீதியில் தற்போது வீதி அகலிப்புப் பணிகள் இடம் பெற்றுவருவதால் இந்த வீதியால் அதிகளவு உழவு இயந்திரங்கள், கனரக வாகனங்கள் சென்று வருகின்றன.

இதனால் இந்த வீதி மிகவும் சேதமடைந்து குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றது. அத்துடன் அடிக்கடி விபத்துக்களும் இடம் பெறுகின்றன. இந்த நிலையில் வீதிகளைப் புனரமைப்பது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்தில் எடுத்து உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-310)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**"வாழ்க்கையில் ஆன்மிகம்"**

ஸ்ரீஸ்ரீரவிசங்கர் குருஜி அவர்களின் பிரதம சீடர்களில் ஒருவரும் (ஒல்லாந்து நாட்டவர்) முருக பக்தருமான அலெக்ஸ்ஜி அவர்கள் வழங்கும்

சொற்பொழிவு, தியானம், ஆசீர்வாதம்



இடம்: நாவலர் மணி மண்டபம் (நல்லூர்)
நேரம்: பி.ப. 3.00 - 4.00 மணி
நாள்: 21.08.2011 ஞாயிற்றுக்கிழமை

**ஜெய் குரு தேவ்**

**வாழும் கலைப் பயிற்சி ஆரம்பம்**

மூச்சுப் பயிற்சி, பிரணாயாமம், சுதர்சனக்கிரியா, யோகா, தியானம்
இடம்: 132, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
நேரம்: மாலை 5 மணி
நாள்: 22.08.2011 திங்கட்கிழமை (அறிமுக உரை)
T.P:- 0777740593, 0770474757.

## நியமனம்

வடக்கு மாகாண கணக்காய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளராக க.மகாலிங்கம் கடந்த பதினைந் தாம் திகதி தொடக்கம் வடக்கு மாகாண ஆளுநரால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

இதுவரை காலமும் மாகாணக் கணக்காய்வுப் பணிப்பாளராகக் கடமையாற்றிய கே.சிவகுரு ஓய்வு பெற்றுச் சென்றதை அடுத்தே இவர் நியமனம் செய்யப்பட்டுள்ளார். (ம-288)

## ஒன்பதாவது பிறந்த நாள் வாழ்த்து



**கிருஸ்ணதாசன் - லதா**
தம்பதியரின் செல்வப் புதல்வி
**காதம்பரி**
தனது ஒன்பதாவது பிறந்த நாளை இன்று 21.08.2011இல் தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

இவரை அம்மா, அப்பா, அம்மம்மா, சித்திமார், சித்தப்பாமார், மாமாமார், மாமிமார், பெரியம்மாமார், பெரியப்பாமார், மச்சான், மச்சாள்மார், சகோதரர்கள், நண்பர்கள், உறவினர்கள் அனைவரும் பல்லாண்டு காலம் நீடூழி வாழ்க என வாழ்த்துகின்றனர்.

*கிருஸ்ணதாசன் குடும்பத்தினர்.*

குருசேஷத்திரம்,
கரணவாய் கிழக்கு,
கரவெட்டி.

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 15 - 09 - 1936 | 14 - 09 - 2006 |



**அமரர் சின்னப்பு இராமலிங்கம் (நெசல்ஸ்)**

ஆண்டுகள் ஐந்து போனாலும் ஆறாது நம் துயர்ம்
எம்மை அன்பால் வளர்த்து
அவனியில் உயர்த்தி வைத்தீர் அப்பா!
உங்கள் ஆத்மா சாந்தி பெற
வேலனை வேண்டி நிற்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

298, கோயில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
(7086)
குடும்பத்தினர்.

## உதவி வழங்கல்

பண்ணாகம் அம்பாள் கலைமன்றத்தினர் பண்ணாகத்திலுள்ள கல்வி கற்க வசதி வாய்ப்புக் குறைந்த மாணவர்களுக்கு வேண்டிய உதவிகளை செய்யவுள்ளனர்.

அம்பாள் கலைமன்ற சுவிஸ் கிளையினர் வழங்கும் நிதி மூலம் இந்த உதவிகள் வழங்கப்படவுள்ளன. (ம-28)

**காணி விற்பனைக்கு**

உறுதியின் பிரகாரம் வடமராச்சிப் பகுதி, பருத்தித்துறைக் கோயிற்பற்று, புலோலி கிழக்கு, மழவராய குறிச்சி இறை **"இலங்கையன் காட்டு வாசல்"** என்ற காணி (சுமார் **2 -1/2** பரப்பு) விற்பனைக்குண்டு.

தொடர்பு :
**071 8288061**


## வீடு விற்பனைக்கு / வாடகைக்கு

சுதுமலையில், யாழ்.நகர், பல்கலைக்கழகம் என்பவற்றுக்கு அண்மையாக இயற்கையான சூழலில் நன்னீர்(Fully Pipeline) Tiled bath room, Toilet சுற்றுமதில், மேல்மாடி வசதியுடனான 2 Hall 4அறை பலாமரம், தென்னைமரங்களுடனான நவீன வடிவமைப்புடன் அழகிய தோற்றமுடைய வீடு உடனடியாக ஆகக் கூடிய விலை தருவோருக்கு விற்பனைக்குண்டு.

இவ்வீடு நியாயமான விலை கிடைக்காத போது, அரச, அரசசார்பற்ற நிறுவனங்களுக்கோ, கௌரவ குடும்பத்துக்கோ, அல்லது Nursing Home அமைப்பதற்கோ நீடித்த கால வாடகைக்குக் கொடுக்கப்படும்.

T.P:0756779814, 0213001692.

## அபான்சுடன் இணையுங்கள்



**நேரடி விற்பனை பிரதிநிதிகள் – வணிகர் விற்பனை பிரதிநிதிகள் காட்சியறை விற்பனை பிரதிநிதிகள்**

(DIRECT/ DEALER /SHOWROOM SALES EXECUTIVES)

(கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்கள்)

நீங்கள் கடினமாகவும், திறனாகவும், சிறப்பாகவும் தொழிற் புரியக்கூடியவரா? உங்களது தொழில் மேம்பாட்டை சிறப்பாக ஏற்படுத்திக்கொள்வதற்கு நீங்கள் அபான்ஸ் நிறுவனத்தின் அபான்ஸ் ஒபிஸ் ஒட்டோமேஷன் நிறுவனத்துடன் இணைந்துக்கொள்ளுங்கள்

**நீங்கள்**

18-30 வயதிற்குற்பட்டவரா?
க.பொ.த (சா/த) அல்லது (உ/த) கொண்டவரா?
சிறந்த பேச்சுத்திறன் கொண்டவரா?
சமீபத்தில் பாடசாலை விடுகைப்பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம்.
இதேதுறையில் அனுபவம் மேலதிக தகைமையாக கருதப்படும்.

நேர்முகப்பரீட்சைகள் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 23ஆம் 24ஆம் திகதிகளில் காலை 10.00 மணிமுதல் மாலை 3.00 மணிவரை கிளிநொச்சி, A9 வீதியில் (மாவட்ட செயலகத்திற்கு முன்பாக) அபான்ஸ் காட்சியறையில் நடைபெறவுள்ளது. உங்களுடைய சுயவிபரக் கோவையுடன் வருகை தரவும். அல்லது சுயவிபரக்கோவையை கீழ்காணும் முகவரிக்கு அஞ்சலிடுங்கள்.

**HR Department**
Abans Office Automation (Pvt) Limited
No:498, Galle Road, Colombo 3.
Tel: 0112565251-60
hrd@abans.lk

**Abans**
Office Automation (Pvt) Ltd.

## German Swiss மொழிகள்



எம்மிடம் கடந்த A1 பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள், பலவருடமாக இயங்கிவரும் ***Institute*** ஏராளமான மாணவர்கள் சித்தியடைந்து ஜேர்மன் சென்றுள்ளார்கள். தமிழ் மொழி பெயர்ப்புடன் அடுத்த வகுப்பு **September** முதலாம் திகதி ஆரம்பம்

**10, Palaly Road, Jaffna. 0771604823**

## ஹீரோ, கென்டன் காட்சியறை



HERO CYCLES
KENTON

சிறியோர் முதல் பெரியோர் வரையானஅனைவரினதும்
சொகுசான சைக்கிள் சவாரிக்கு Hero, மவுண்டன், BMX சைக்கிள்
மற்றும் புதிய லேடீஸ் பைக் என்பனவற்றை எமது காட்சியறையில் உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளலாம்
சிறுவர்களின் மின்சார மீள்நிரப்புக் (RECHARCHABLE & REMODE) கார்களை மலிவு விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

பலவர்ணங்களில் புதிய லேடீஸ் சைக்கிள்



ஒரிஜினல் ... லேடீஸ் சைக்கிள்களும் ஆண்கள் சைக்கிள்களும் பெற்றுக்கொள்ளலாம்.

ஹீரோ, கென்டன் ...
இல.258, 260, மானிப்பாய் வீதி,
ஐந்துசந்தி, யாழ்ப்பாணம்.



தொ.பே.: 021 4921672

(49)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரீட்சைக் கடமை ஓர் தவம் உணர்ந்து செயற்படுவார்களா?

2006 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 12 ஆம் திகதி அந்த வருடத்துக்கான ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சைக்கான அனைத்து ஏற்பாடுகளும் முடிந்திருந்தன.

ஏ - 9 வீதியூடாக வினாத்தாள்கள் எடுத்தவரப்பட்டு நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவு பரீட்சை வினாத்தாள்கள் அந்தப் பிரதேச கடற்படை முகாம்களில் வைக்கப்பட்டிருந்தன.

ஓகஸ்ட் 11 ஆம் திகதி நள்ளிரவு 12மணி முதல் யாழ். மாவட்டத்துக்கு மட்டும் 24 மணித்தியால ஊரடங்கு அமுலுக்கு வந்தது. (அன்றைய தினம் மூடிய முகமாலை வாசல் போர்முடிந்த பின் தான் திறந்தது என்பது வேறு கதை).

12 ஆம் திகதி காலை யாழ்ப்பாணம், பிராந்தியப் பரீட்சை நிலையம் என்ன செய்வது என்று தெரியாது திணறியது. சில பரீட்சை நிலையங்களுக்கு மாணவர்கள் வந்துவிட்டார்கள். எல்லாம் குழம்பிய நிலை. யாழ். குடாநாட்டின் காலநிலையை பரீட்சைத் திணைக்களத்துக்கு விளக்கியபோது (அப்போது யாழ். பிராந்திய பரீட்சைகளுக்கென விசேடமாகப் பரீட்சைத் தொடர்பாளரென நியமனம் வழங்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது) பரீட்சை ஆணையாளரால் தேவையான விளக்கமான அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

"தற்போது யாழ்ப்பாணத்துக்கான பரீட்சை ஆணையாளர் நீங்கள்தான். பரீட்சையை நடத்த முடியுமா? இல்லையா? என்பதை நீங்களே முடிவெடுத்து தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுங்கள்; உங்கள் முடிவுகள் மாணவர்களின் நலன்களைப் பாதிக்காத வகையில் பார்க்கவும்" என்றார்.

பிராந்திய பரீட்சை நிலையத்தின் பொருத்தமான செயற்பாட்டால் யாழ். குடாநாட்டின் எந்த நிலையத்திலும் பரீட்சை நடைபெறவில்லை. ஆனால் வன்னி முழுவதும் வழமைபோல் பரீட்சை நடைபெற்றது. யாழ்ப்பாணத்துக்கான அந்த வருடப் பரீட்சை பின்பு விசேடமாக நடத்தப்பட்டது. பரீட்சைத் திணைக்களம் எவ்வளவு கவனமாக நடந்து கொண்டது என்பதற்கு நல்ல உதாரணம் அது.

ஆனால் 2009 ஆம் ஆண்டு வன்னி யுத்தம் முடிவுக்கு வந்தது. லட்சக் கணக்கான மக்கள் முகாம்களுக்குள் அடைக்கப்பட்டார்கள். அந்த வருடம் ஐந்தாம் ஆண்டு ஆயிரக்கணக்கான குழந்தைகள் உடுக்க உடையின்றி, சரியான உணவின்றி, எந்தவித அடிப்படை வசதிகளுமற்ற நிலையில் ஏதோ ஒருவகையில் ஒழுங்குபடுத்தப்பட்டு, தளபாடங்கள் இன்றி நிலத்தில் இருந்து பரீட்சைக்குத் தோற்றினார்கள்.

ஓர் அரச சார்பற்ற நிறுவனம் வழங்கிய ஒரு மட்டைதான் வைத்து எழுதுவதற்குப் பாவிக்கப்பட்டது. பரீட்சைத் திணைக்களத்தின் பிழையா? அல்லது இந்தப் பரீட்சையை நடத்த உதவிய, ஒத்துழைத்த கல்வி அதிகாரிகளின் சாதனையா? இது உரியவர்களுக்கு சமர்ப்பணம்.



5 ஆம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சைக்காக நடத்தப்படும் இலவசக் கருத்தரங்குகள், பயிற்சிக்கான பரீட்சைகள், விளக்கக் கூட்டங்கள், அநேக மாணவை பணம் சேர்ப்பதிலேயே கண்ணாக இருப்பதும், பரீட்சை முடிவுகள் வந்ததும், தமது கல்வி நிறுவனங்கள் தான் மாணவர்களின் சிறந்த பெறுபேற்றுக்குக் காரணமெனப் பத்திரிகைகளிலே விளம்பரங்கள் போடுவதும் எல்லோரும் அறிந்தது தான். இதில் பெற்றோர்களது பலவீனம் பெருமளவில் தங்கியுள்ளது என்பது தான் கவனிக்கவேண்டிய முக்கிய விடயம்.

பரீட்சை முடிந்து சில நிமிடங்களில் வினாத்தாள் கடைகளிலே விலைப்படுவதற்கு யாரைப் பொறுப்புக் கூறுவது? பரீட்சைக் கடமைகளுக்குச் செல்லும் அலுவலர்களே இதற்குக் காரணமாக இருக்கிறார்கள் என்பது வெளிப்படை.

வினாத்தாளைப் பெறுவதற்காகவே ஆசிரியர்கள் சிலர் கடமைகளுக்குச் செல்வதாகக் கிடைக்கும் முறைப்பாடுகளுக்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். தண்டிக்க வேண்டும். வினா விடை வியாபாரம் செய்யும் ஒரு கடை வியாபாரியில் விசாரணை தொடங்கினால் அடி, முடி அனைத்தும் கிடைக்கும்.

இந்த வருடம் இடம்பெற்றுள்ள உயர்தரத் தமிழ் வினாத்தாள் ஏற்கனவே வெளிவந்ததோ என்ற பத்திரிகைகளிலே காணும் செய்திகள், புதியவை அல்ல. சென்ற வருடமும் இவ்வாறான கதைகள் இருந்தன. தமிழ் வினாத்தாள் தயாரித்தல் தமிழ்ப் பாட வல்லுநர்களாலேயே நடைபெறும்.

அதுவும் யாழ்ப்பாணத்திலிருந்தும் பலர் இவ்விடயத்தில் மிகவும் நெருக்கமாக இருப்பர். எம் மாணவர்களில் விரல் காட்ட சந்தர்ப்பம் ஏற்படுவது எமது கல்விப் புலத்துக்கு நல்லதல்ல.

2006 ஆம் ஆண்டு யாழ். மாவட்டத்துக்கென விசேடமாக நடத்தப்பட்ட 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை நல்ல உதாரணம். இந்த வினாத்தாளில் வந்த வினாக்களில் 60 வீதமானவை ஏற்கனவே தனியார் கல்வி நிலையத்தில் வழங்கப்பட்ட பயிற்சி வினாத்தாளில் காணப் பட்டதாக யாழ். மாவட்டத்திலுள்ள உச்ச நிலை நிர்வாகிகள் இருவரால் பரீட்சைத் திணைக்களத்தின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது.

மேற்படி வினாத்தாள் யாழ். மாவட்டத்துக்கென தமிழ்மொழியில் மட்டும் தயாரிக்கப்பட்டது என்பதாலும் பரீட்சைத் திணைக்களத்தில் தமிழ் அலுவலர்களே நெருக்கமான தொடர்புள்ளவர்களாக இருந்தார்கள் என்பதாலும் அவர்கள் மேலேயே சந்தேகப்படக் காரணம் இருந்தது. பின்பு இந்த அலுவலர்கள் பரீட்சை வினாத்தாள் செயற்பாடுகளிலிருந்து எட்ட வைக்கப்பட்டார்கள் என்பதும் வரலாறு.

இந்த விசேட வினாத்தாள் விசேட விமானத்தில் (ஏ 9 மூடப்பட்டதால்) யாழ்ப்பாணம் கொண்டு வரப்படுவதற்கு முன்பே தனியார் கல்வி நிலையப் பயிற்சி வினாத்தாள் வெளிவந்திருந்தமையால் யாழ். பிராந்திய பரீட்சைப் பிரிவு தப்பியது.


உயர்தரப் பரீட்சையில் விஞ்ஞானப் பாட கட்டுரைப் பகுதி வினாத்தாள் (Structure paper) அன்றைய தினமே சில தனியார் கல்வி நிலையங்களில் வெளிவந்து விடுகிறதே? எவ்வாறு?

பரீட்சைக் கடமை என்பது ஒரு தவம் போன்றது. அர்ப்பணம், நேர்மை, விசுவாசம் என்பவற்றின் உண்மையான வெளிப்பாடு.

இதுவரை காலமும், மெழுகுவர்த்திகளாக உருகி, உண்ணாது, உறங்காது பட்டினி, துன்பம் வெளியில் கூற முடியாத கஷ்டங்களை அனுபவித்து, அந்தப் பரீட்சையின் முடிவு தான் தன் எதிர்கால விடிவுக்கு வழி என நம்பும் பெற்றோருக்கும், மாணவருக்குமாவது பரீட்சைக் கடமைகளில் நாம் உண்மையுள்ளவர்களாகவும், நேர்மையானவர்களாகவும் இருப்போமாக.

இல்லையேல் 5ஆம் ஆண்டுப் பரீட்சை, சாதாரணதர, உயர்தரப் பரீட்சைகள் கொழும்பில் நடத்தப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

**ஷாருமி**



# நல்லூர் கந்தன் மஹோற்சவம்

(கார்த்திகைத் திருவிழா - பதினெட்டாம் திருவிழா)

## நல்லை நகர் பெருமானே...

நல்லை நகர் வீதி தன்னில்
நல்லருளைத் தந்து நிதம்
வல் வினைகள் தீர்த்திடுவாய் - வடிவேலா

வேலைக் கையிலே எடுத்து
வீரமுடன் விளையாடிச்
சூரபன்மனை அழித்த - தூயவனே

ஆறுதலற்றலைவோருக்கு
ஆறுதலைத் தந்திடுவாய்
ஆறுதலைப் பெருமானே - ஆறுமுகா

சரவணப் பொய்கையிலே
தாமரை மலர்களின் மேற்
சற்குருவாய் அவதரித்த - சண்முகனே

பிரணவத்தின் உட்பொருளைப்
பிதாவுக் கெடுத்துரைத்துப்
பிரமன் செருக்கறுத்த - பெருமானே

சுட்டிப் பிள்ளையாக வந்து
சுட்ட பழம் அவ்வைக்கு
இட்டமுடன் தான் கொடுத்த - சிவபாலா

வள்ளி தெய்வானை தன்னை
வலமிட மாகக் கொண்டருளும்
நல்லை நகர் வாழுகின்ற - பெருமானே

கந்த பேரின்பம், கொக்குவில்.

## வினை தீர்க்கும் வேல் முருகா

நல்லூர்ப் பதிக்கந்தன் நலம் தருவான் - தீமை
வெல்லும் அருள் புரிந்து பலம் தருவான்
கல்லும் கசிந்துருக நிலம் வருவான் - தமிழ்
சொல்லும் தாயகத்தில் வளம் தருவான்

யாழில் மண்ணெங்கும் மழை பொழியும் - வயல்
சூழும் நிலமெங்கும் மடை வழியும்
வாழும் உயிர்களுக்கு நெல் விளையும் - கந்தன்
அருளும் பெருகி வர விழி நனையும்

தேரோடும் வீதியெங்கும் மயிலாடும் - உன்
வேலோடு சேவற்கொடி பண்பாடும்
வாழ்வோடு பல காலம் போராடும் - தமிழர்
விழியோடு தினமிங்கே நீரோடும்

வள்ளி தெய்வானையுடன் உனைக் கண்டேன் - மனம்
துள்ளி விளையாட கவி தந்தேன்
எழு மலை ஆளுகின்ற எழில் முருகா - எமை (ச்)
சூழும் வினை தீர்க்கும் வேல் முருகா

அறுபடை வீடுகொண்ட ஆறுமுகனே - தேவர்
துயர் கண்டு சூரனை வதைத்தவனே
கூறுமடியார்கள் வினை தீர்த்தவனே - திரு
நல்லூரில் கோயில் கொண்ட பெருமானே

கவி.முத்து மாதவன், பரந்தன்.

## நல்லை நாயகனே....

நல்லூரானே எல்லாரையும் வாழ வைப்பவனே
கல்மனதையும் கனிய வைப்பவனே கந்தா
நல்லோர்க்கு ஞான வரம் ஈய்பவனே
புல்லரையும் புரை தீர்ப்பவனே முருகா

சூரபத்மாவை போரில் சம்காரம் செய்தவனே பின்
ஆர அரவணைத்து அவனை சேவலும் மயிலுமாக்கியவனே
உன் வீர வேலால் வரும் வினை தீர்த்தெம்மை
வீரமுடன் எம்மண்ணில் வாழ வைப்பாயே

தெல்லியூர் தேவி

திருவிழாச் சிறப்புற பிரார்த்திப்போர்:

**R.G.Traders**
Navam's Building,
No.291, Stanly Road, Jaffna. 021 222 6185

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NIBM
BUILDING COMPETENCIES

# அரச கல்வி நிறுவனம் உங்களுக்கும் வாய்ப்புகளை வழங்குகிறது

க.பொ.த உயர்தர பரீட்சை எழுதும்
மாணவர்களுக்கான கற்கை நெறிகளுக்கு

**முன் பதிவுகள் ஆரம்பம்**

**22 - 08 - 2011 திங்கள் கிழமை**

**இலவசு முன் பதிவுகளுக்கு**

**077 071 6974**
**021 222 0360**
**021 222 0361**
**021 222 0362**

**தேசிய வியாபர முகாமை நிறுவனம்**

இல-40, கல்லூரி வீதி
(யாழ் இந்துக்கல்லூரி மைதானம் முன்பாக)
யாழ்ப்பாணம்

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1971ஆம் ஆண்டு பிறந்த, சதயம் 2ஆம் பாதம், கும்பராசி, மணமகளுக்கு வெளி நாட்டு, உள்நாட்டு மணமகனை எதிர்பார்க்கின்றோம்,
தொடர்பு: 0771275312

## வீடு விற்பனைக்கு

கைலாசபிள்ளையார் கோயில் சந்திக்கருகில் கோயில் வீதியில் 1¾ பரப்புக்காணியில் அமைந்துள்ள வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0776146434



# சேவை நலன் பாராட்டு

எமது பாடசாலையின் பழைய மாணவரும்
கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளராக இருந்து
கல்வித்துறைக்கு அளப்பரிய சேவையாற்றி இன்றுடன்
(21.08.2011) தனது சேவையிலிருந்து ஓய்வுபெறும்

உயர்திரு **தம்பிராசா குருகுலராசா**
(வலயக் கல்விப் பணிப்பாளர் - கிளிநொச்சி)
அவர்களின் தன்னிகரற்ற
சேவையைப் பாராட்டி அவரது
ஓய்வுகாலம் சிறப்புறவும் இறையருள்
பெருக இதய நெகிழ்வுடன்
வாழ்த்தி நிற்கின்றோம்

பாடசாலைச் சமூகம்,
கிளி/முருகானந்த மகா வித்தியாலயம்,
முரசுமோட்டை, பரந்தன்.



**த.குருகுலராசா** (வலயக் கல்விப் பணிப்பாளர், கிளிநொச்சி)

# நிறைவொடு நீடு வாழ்க

உள்ளமோ ஒளியை வீசும் உணர்வுகொள் செயல்கள் கூடும்
துள்ளுமின் இளமை நீளும் துடிப்புழைப்புறுதி பொங்கும்
வெள்ளமாம் அறிவும் குன்றாய் விளைந்துயர்ந்தாளும் நெஞ்சம்
எள்ளளவேனும் தீங்கே எண்ணிடா இனிய வாழ்வு


தோற்றமோ அறிஞர் போற்றத் துலங்கிடும் நடையில் வீரம்
ஆற்றிடும் பணிகளெல்லாம் அழகொளிர் பயன் விளைக்கும்
போற்றிடும் வகை ஜொலிக்கும் புன்னகை உலகை ஈர்க்கும்
சீற்றமோ சிறிதும் தோன்றாச் சீர்மனச் செம்மல் வாழ்க

அன்னை நூறாண்டின் மேலாய் அன்பினால் வாழ்தல் போலாம்
நன்னலம் பெருக்கி வாழ்ந்து நம்மவர் சிறக்கச் சூழ்ந்த
இன்னல்கள் துடைத்து இயேசு இறைமகன் பாதை தேர்ந்து
தன்னலம் மறந்த சேவை தனிலொளிர் குருவே வாழ்க

ஆண்டுகள் பலவாய் இன்பம் அகங்குளிர் மனித நேயம்
நீண்டிட நிறையக் கல்வி நேர்வழி நடந்த ராஜன்
பூண்டவெப் பணியும் வெல்லும் புகழ்மிகு புனிதம் நீள
வேண்டினோம் இறவா மெய்யோன் விருப்பதே நிறைவாய் வாழ்க

வாழ்த்தும் நெடுந்தீவு மகேஷ், அரியாலை செல்வா.

# ‘ஓய்வுபெற்றாலும் ஒளிரும் சுடர்மணி’



# த.குருகுலராசா

(வலயக் கல்விப் பணிப்பாளர், கிளிநொச்சி)

*ஓய்வுநாள் 20.08.2011*

**முல்லைத்தீவு கல்வி வலயத்தில்...**

- ★ கல்வி வளர்ச்சியின் உச்சியைக் கண்டவர்
- ★ கலை விளையாட்டில் சாதனை பதித்தோம்
- ★ சுனாமி எச்சங்களும் எழுந்தன முல்லையில்...
- ★ சமூகத்தில் சமூகமாய் இணைந்தன பாடசாலைகள்
- ★ ஏழைகட்கும் கல்விக்கதவு அகல விரிந்தது
- ★ இடமாற்றம் வந்தது போற்றியனுப்பினோம்

அறுபது அகவைகாணும் ஆண்டவரின் பிறப்பே
உறுபணி செய்த உத்தம கல்விமான் நீங்கள்
நறுந்தேனாய் மொழிபேசிய நம் குருகுலராசாவே
குறு நடையாய் நடந்து குழம்பிய வலயத்தை மீட்டவர் - நீங்கள்

முல்லை வலயத்தின் கல்வியின் உச்சி கண்டு
எல்லையிலா சாதனை படைத்ததை எப்படி மறப்பது
அல்லல் பல வந்தாலும் அடி பணியாது ஆங்கிலம் பேசி
நல்லன செய்தமையால் நம் வலயம் நிமிர்ந்ததன்று

சோராத நற் சொல் சாராத நல்ல நீதி
கோராத சுயநலம் வாராத முல்லை வலயத்துக்கினி
போரால் எம் வலயம் பொசிந்து விட்டதின்று
யாரால் மீட்க முடியும் மீட்டுப் பார்க்கின்றோம் பழைமையை

வண்ண வண்ண நல்லழகு வாய் நிறைந்த சிரிப்பழகு
கண்ணைக் கவரும் வசீகரம் கருத்துப் பொதிந்த பொட்டகம்
திண்ணமான கல்விச் சிந்தனை திரட்டித் தந்தீர்கள் வலயத்துக்கு
உண்ண உண்ண தெவிட்டவில்லை உண்டோம் உயர்ந்தோம் யாம்

குருகுலராசா என்ற தரும நற்பெயர் மூன்றும்
உருப்பட்ட மனிதராகி உருமாறிய தெய்வம் நீங்கள்
திருப்பெயருக்கேற்பவே அரும்பணிகள் ஆற்றினீர்கள்
இருப்புத்தான் அறுபதாச்சு இருந்தும் ஒளிரும் பணி

மனதிற்கேற்ப மனைவி மக்களும் அதற்கொப்பவே
தனத்துக்கு முன்னுரிமை வேண்டாம் தகுதியான மாட்சிமையுண்டு
இனத்தின் நல்ல தலைவரே இருக்கும் மீதி நாற்பதில்
கனம் பெற்று வாழ்வீர்கள் கடவுளும் உங்களை ஆசீப்பார்

கோட்டக் கல்விப் பணிப்பாளரும் அ[illegible]ருப்பு கல்விக்கோட்டம், புதுக்குடியிருப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோணாவில் வீட்டுத் திட்டப் பணியை விரைவில் ஆரம்பிக்க விசேட திட்டம்

கிளிநொச்சி, ஓக.21

கண்ணிவெடி காரணமாகப் பிற்போடப்பட்டிருந்த கோணாவில் 100 வீட்டுத் திட்டம் கண்ணிவெடி அகற்றப்பட்டதைத் தொடர்ந்து மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

தற்போழுது இந்த வீட்டுத் திட்டத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள காணி பெரிய இயந்திரங்கள் மூலம் துரிதமாகத் துப்புரவு செய்யப்படுகின்றது.

கிளிநொச்சி மாவட்டம் கரைச்சிப் பிரதேசத்தில் அறிவியல் நகரில் கடந்த சில மாதங்களுக்கு முன்பு ஆரம்பிக்கப்பட்ட 50 வீட்டுத் திட்டம் நிறைவடைந்ததைத் தொடர்ந்து கோணாவில் பகுதியில் 100 வீட்டுத் திட்டம் ஆரம்பிக்கப் படவிருந்தது.

இந்தத் திட்டத்துக்கான பயனாளிகளும் தெரிவு செய்யப்பட்டு அடிக்கல் நடுவதற்கான ஒழுங்குகளும் மேற்கொள்ளப் பட்டிருந்தன.

இந்தத் திட்டத்துக்கு ஒதுக்கப்பட்ட காணியில் கண்ணி வெடிகள் இருப்பதாகப் பயனாளிகள் தெரிவித்ததைத் தொடர்ந்து அடிக்கல் நடும் நிகழ்வுகள் பிற்போடப்பட்டிருந்தன.

இந்தப் பகுதியில் புதைக்கப்பட்டிருந்த கண்ணிவெடிகள் சம்பந்தப்பட்டவர்களால் அகற்றப்பட்டதைத் தொடர்ந்து மீண்டும் இந்த வீட்டுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இந்த வீட்டுத் திட்டத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ள காணி பெரிய இயந்திரங்கள் மூலம் துரிதமாகத் துப்புரவு செய்யப்பட்டு வருகின்றது.

இந்தத் திட்டத்துக்கான அடிக்கல் நடும் விழா அடுத்த மாதம் முற்பகுதியில் நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம-115)

## விலை வீழ்ச்சி

வவுனியா, ஓக.21

வவுனியாவில் வெங்காயத்தின் விலை கடந்த வருடங்களை விடக் குறைவடைந்துள்ளது.

தற்போது சின்ன வெங்காயம் 30 ரூபா முதல் 40 ரூபா வரை விற்கப்பட்டு வருகிறது. வன்னியின் பல இடங்களிலும் மக்கள் வெங்காயச் செய்கையில் ஈடுபட்டமையே இதற்குக் காரணம் ஆகும்.

கடந்த காலங்களில் இந்தப் பிரதேசத்தின் வெங்காயத் தேவை யாழ்ப்பாணத்தின் உற்பத்தியிலேயே தங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(க-422)

## ஆங்கில தினப் போட்டிகள்

கிளிநொச்சி, ஓக.21

கிளிநொச்சி உட்பட வடக்கு மாகாண மட்ட ஆங்கில தினப் போட்டிகள் செப்ரெம்பர் மாதம் வவுனியாவில் நடைபெறவுள்ளதாக வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தினர் அறிவித்துள்ளனர்.

இதன்படி உறுப்பமைய எழுதுதல், சொல்வதெழுதல், ஆக்க இலக்கியம் ஆகிய போட்டிகள் செப்ரெம்பர் 17 ஆம் திகதியும் ஏனைய போட்டிகள் செப்ரெம்பர் 22 ஆம் திகதி தொடக்கம் 25 ஆம் திகதி வரையும் நடைபெறவுள்ளன எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(க-405)

## பனைக்குப் பெருமை...



ஆர்வத்துடன் மக்கள்: வவுனியாவில் நடைபெற்ற விவசாயிகள் வாரத்தின் போது கண்காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த வீட்டு உபயோகத்துக்குத் தேவையான பனைசார் உற்பத்திப் பொருள்களை மக்கள் ஆர்வத்துடன் பார்வையிட்டுக் கொள்வனவு செய்கின்றனர். (421)

## சுதந்திரபுரத்தில் தற்காலிக வீடுகள்

முல்லைத்தீவு, ஓக.21

புதுக்குடியிருப்புப் பிரதேசத்திலுள்ள சுதந்திரபுரத்தில் மீள் குடியமர்ந்த மக்களின் வீட்டு வசதியைக் கருத்தில் கொண்டு 'போரூட்' நிறுவனம் 100 தற்காலிக வீடுகளை அமைத்துக் கொடுக்க முன்வந்துள்ளதாகவும் வீட்டுத் திட்டத்துக்கான பயனாளிகளும் ஏற்கனவே தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும் புதுக்குடியிருப்பு உதவி அரச அதிபர் ஜெயகாந் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் உள்ள பல கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் மக்கள் மீள்குடியமர்த்தப்பட்டு வருகிறார்கள். ஏனைய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியமர்த்துவதற்கான ஒழுங்குகள் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் சுதந்திரபுரம் கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள இருட்டுமடு என்னும் இடத்தில் மீள் குடியமர்த்தப்பட்ட 100 குடும்பங்களுக்குத் தற்காலிக வீடுகளை அமைத்துக் கொடுக்க முன்வந்துள்ள 'போரூட்' நிறுவனம் அதற்கான வேலைகளில் துரிதமாக ஈடுபட்டுள்ளது.

இந்த வீட்டுத் திட்டத்துக்கான பயனாளிகள் ஏற்கனவே தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். பருவமழை ஆரம்பமாக முன்பு இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டுப் பயனாளிகளுக்கு வழங்கப்பட விருப்பதாகப் புதுக்குடியிருப்பு உதவி அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

(க-115)

## சாதனை புரிந்த மாணவர்களுக்கு யோகபுரம் ம.வியில் கௌரவிப்பு



மல்லாவி, ஓக.21

முல்லைத்தீவு மாவட்டம் யோகபுரம் மகாவித்தியாலயத்தில் சாதனை புரிந்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வொன்று நடைபெற்றுள்ளது.

கடந்த ஐந்தாம் திகதி பாடசாலையின் பிரதான மண்டபத்தில் அதிபர் த.யோகானந்தராசா தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

கடந்த ஆண்டு நடைபெற்ற ஜி.சி.ஈ.சாதாரணதரப் பரீட்சையில் ஒன்பது பாடங்களில் அதிவிசேட சித்தி பெற்ற செல்வி மகாலிங்கம் அகத்தியா, தேசிய மட்டத் தமிழ்த் தினப் போட்டியில் கீழ்ப் பிரிவில் எழுத்தாக்கத்தில் முதலிடம் பெற்ற செல்வி பிரேமானந் எடின்சிகா, மாகாண மட்ட மேற்பிரிவுக்கான பேச்சுப் போட்டியில் மூன்றாமிடத்தைப் பெற்ற செல்வி லோகநாதன் யுகாசா, மாகாண மட்ட விளையாட்டுப் போட்டியொன்றில் இரண்டாவது இடத்தைப் பெற்ற செல்வன் சுபேந்திரன் ஜஜிநாத் ஆகிய மாணவர்களே சாதனையாளர்களாகக் கௌரவிக்கப்பட்டனர்.

விழாவுக்கு முன்பதாக மாணவர்களின் பேரிகை முழக்கத்துடன் சாதனையாளர்கள், பெற்றோர்கள், பிரதம விருந்தினர்கள், ஆசிரியர்கள் என அனைவரும் அழைத்து வரப்பட்டனர்.

வாழ்த்துப் பாவை கு. விஜயபாலா வழங்கினார். அதிபர், ஆசிரியர்கள், வலயக் கல்விப் பணிப்பாளர், பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆகியோர் சாதனையாளர்களுக்கு மாலை சூட்டியும், பதக்கம் சூட்டியும் கௌரவித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(க-425)

## மன்னார் தாழ்வுபாட்டில் மர்ம மனிதர்கள்; துரத்தியபோது கடற்கரையால் தப்பியோட்டம்

மன்னார், ஓக.21

மன்னார் தாழ்வுபாடு கிராமத்தில் மர்ம மனிதர்களைக் கண்ட மக்கள் அவர்களைத் துரத்திச் சென்றபோது மர்ம மனிதர்கள் தாழ்வுபாடு கடற்கரை வழியாக ஓடித் தப்பியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 16 ஆம் திகதி இரவு 9 மணியளவில் மூன்று மர்ம நபர்கள் உலாவித் திரிவதைப் பொதுமக்கள் கண்டுள்ளனர். உடனடியாக அவர்களைப் பிடிப்பதற்காகத் துரத்திச் சென்றனர். அந்த மர்ம மனிதர்கள் கடற்கரையை நோக்கி ஓடிச் சென்றனர். குறித்த கடற்கரைப் பகுதியில் கடற்படையினரது காவலரண் ஒன்றும் உள்ளது. இந்தக் காவலரணில் மின் குமிழ் ஒன்று ஒளிர்ந்து கொண்டிருந்தது. மர்ம நபர்கள் ஓடிச் சென்றவுடன் மின் குமிழ் அணைக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து தாழ்வுபாடு மற்றும் கீரிப் பகுதியிலுள்ள கடற்படையினரது முகாம்களிலுள்ள மின் குமிழ்களின் வெளிச்சமும் அணைக்கப்பட்டதாக மக்கள் தெரிவித்தனர். இதனால் மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

தாழ்வுபாடு கிராமத்திலுள்ள பொலிஸார் இந்தப் பிரச்சினையில் தலையிடாது இருந்ததாகவும் ஆனால் மன்னார் பொலிஸார் விரைந்து வந்து மக்களுக்குப் பாதுகாப்பு வழங்கியதாகவும் இங்குள்ளவர்கள் தெரிவித்தனர்.

பல நூற்றுக் கணக்கான மக்கள் குறித்த தினம் இரவு தாழ்வுபாடு கிராம வீதிகளில் நின்று கொண்டிருந்ததைக் காண முடிந்தது. ஆண்கள் மர்ம நபர்களைத் தேடித் திரிகின்றனர். ஆனால் இதுவரை எவரும் அகப்படவில்லை.

(க-601)

# ஆலயத்தால் பராமரிக்கப்படும் அரச காணியை சுவீகரிப்பதற்கு முயற்சி

## செல்வம் எம்.பிக்கு மேய்ப்புப் பணிச் சபை கடிதம்

மன்னார், ஓக.21

முசலிப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கொக்குப்படையான் மற்றும் சிலாவத்துறை ஆகிய பகுதிகளில் உள்ள புனித யாகப்பர் ஆலய மேய்ப்புப் பணிச் சபையால் பராமரிக்கப்படும் காணிகளை அபகரிப்பதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருவதாக மேய்ப்புப் பணிச்சபையினர் கூறியுள்ளனர்.

மேலும் ஆலய மேய்ப்புப் பணிச்சபையினர் இந்த விடயம் தொடர்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினருக்கு அவர்கள் எழுதிய கடிதத்தில்:

இந்தக் காணியானது 1999 ஆம் ஆண்டிலிருந்து எமது ஆலய சபையைச் சேர்ந்த மக்களாகிய எம்மால் பராமரிக்கப்பட்டு வருகின்றது.

இந்தக் காணியைப் பராமரித்துப் புனரமைப்பதற்கு நான்கு லட்சம் ரூபா செலவழித்துள்ளோம். அத்துடன் இந்தக் காணியானது கொக்குப்படையான் கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ளது.

இந்தக் காணி மட்டுமே எமது [?] கிராமத்தில் அமைந்துள்ள அரச [?] காணியாகவுள்ளது. அத்துடன் எமது அயற்கிராமமான சிலாவத்துறை, தம்பட்டமுசலி ஆகிய இரு கிராமங்களுக்கும் எங்களது கிராம எல்லைக்கு வெளியே உள்ள அரச காணியில் ஏறக்குறைய 100 ஏக்கர் காணி பகிர்ந்தளிக்கப்பட்ட போதும் எமக்கென, எமது கிராமத்துக்கென நாங்கள் பராமரித்து வருகின்ற 15 ஏக்கர் காணியைச் சட்ட விரோதமாக அபகரித்துக் கொள்வதற்கு முயற்சிகள் நடைபெறுகின்றன.

அத்தோடு இலங்கையின் [illegible] சட்டத்தின்படி [illegible] வீடமைப்பது தடைசெய்யப்பட்டுள்ளது. எமது கிராமத்தில் மேட்டுக் காணிகள் தற்போது இல்லை. எமது இளம் குடும்பங்கள் வீடு அமைப்பதற்கும், கலை, கலாசார மண்டபங்கள் அமைப்பதற்கும், கன்னியர் மடம் அமைப்பதற்கும் ஏனைய பல தேவைகளைப் பூர்த்தி செய்யும் நோக்குடனும் இந்தக் காணியைப் பராமரித்து வருகின்றோம்.

அத்தோடு தம்பட்ட முசலி கிராம சேவையாளர் பகுதியில் பின்புறமாக 300 ஏக்கருக்கு மேற்பட்ட அரச காணி காணப்படுகின்றது. எனவே அதனை விட்டு விட்டு எமது கிராமத்துக்குரிய 15 ஏக்கர் காணியை மட்டுமே சுவீகரிக்க முற்படுகின்றார்கள்.

ஏற்கனவே இந்தக் காணிக்குரிய சகல ஆவணங்களையும் எமது பிரதேச செயலகத்தில் ஒப்படைத்து அதற்குரிய நில அளவைப் பணம் செலுத்திப் பற்றுச் சீட்டும் பெற்றுள்ளோம்.

இந்தக் காணிக்குரிய எல்லை அடையாளக் கற்களும் நடப்பட்டுள்ளன. நாட்டில் ஏற்பட்ட இடப்பெயர்வுகளால் காணிக்கான உறுதியைப் பெறமுடியவில்லை.

எனவே எமது கிராமத்தையும், எதிர் காலச் சந்ததியினரின் நலனையும் கருத்தில் கொண்டு இந்தக் காணிக்குரிய ஆவணங்களை வழங்கி இதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளவும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

(க-601)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவை நலன் பாராட்டும் பிறந்த தின நல்வாழ்த்துக்களும்



## திருமதி ஜெகதீசன் சந்திரிகாதேவி

(சிரேஸ்ட பதவிநிலை உத்தியோகத்தர் - யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 36 வருடங்கள் அரும்பணியாற்றி தற்போது பல்கலைக்கழக நலச் சேவைகள் கிளையில் சிரேஷ்ட பதவிநிலை உத்தியோகத்தராக பதவி வகித்து 21.08.2011 இன்று ஓய்வுபெறும் எமது அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய திருமதி ஜெகதீசன் சந்திரிகாதேவி அவர்கள் தமது ஓய்வு காலத்தில் பல நன்மைகளும் பெற்று பல்லாண்டு காலம் சீரும் சிறப்புமாக வாழ எல்லாம் வல்ல பார்வதி சமேத பரமேஸ்வரனை வேண்டி வாழ்த்தி நிற்கும்

யாழ்.பல்கலைக்கழக நண்பர்கள்

01. யோ.ஜெயக்குமார்
02. திருமதி தே.தங்கவேல்
03. திருமதி ப.மகேந்திரன்
04. ஐ.கோ.சந்திரசேகரம்
05. நீ.மயில்வாகனம்
06. க.இரட்ணசபாபதி
07. அ.ம.கொண்ஸ்ரன்ரைன்
08. ப.பத்மரூபன்
09. திருமதி ம.ரங்கசாமி
10. செல்வி சி.புஸ்பா
11. க.பத்மநாதன்
12. ந.சிவசுப்பிரமணியம்
13. இ.ரவிக்குமார்
14. இ.கதிர்காமநாதன்

நலச்சேவைகள் கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.


# கொக்குவிலில் இரத்ததான முகாம்

யாழ்ப்பாணம்,ஓக.21

கொக்குவில் மேற்கு மணியர்பதி ஆலய இந்து இளைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் வருடந்தோறும் இடம்பெறும் இரத்ததான முகாம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு ஆலய கல்யாண மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஆலய மண்டபத்தில் இரத்ததானம் இடம்பெறும் என்று முன்னர் செய்தி வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-313)


## "0+" சிறுநீரகம் தேவை

சிறுநீரக பாதிப்புக்குள்ளான 45 வயதுடைய ஆண் ஒருவருக்கு "0+" சிறுநீரகம் தேவை. சிகிச்சை லண்டனில் நடைபெறும். சிறுநீரகம் கொடுத்துதவக் கூடியவர்கள் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு: 0750381553, 0777604667.

(6994)(38)



FREE SEMINAR in JAFFNA
29th August 2011
Technical College
Brown Road
Jaffna

## A/L மாணவர்களே!

British Qualified Engineer ஆவதற்கு அரிய சந்தர்ப்பம்

- A/L Maths/Bio மாணவர்கள் மூன்று மாத காலத்தில் City & Guilds (UK) பொறியியல் துறையில் Diploma தராதரத்தை பெறலாம்.
- U.K இல் அல்லது இங்கிருந்தவாறே நீங்கள் British Qualified பட்டதாரி ஆகலாம்.
- Apss International பிரமுகர்களையும் விரிவுரையாளர்களையும் அத்துடன் Coventry University (U.K.) (Auston Institute) பிரமுகர்களையும் சந்தித்து மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ளலாம்.

A/L மாணவர்கள், தொழில்நுட்ப கல்லூரி, பல்கலைக்கழக மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் கலந்து கொள்ளலாம்
முன்கூட்டியே ஆசனங்களை பதிவு செய்து கொள்ளவும்

Coventry University U.K. (Auston Institute) Mar/June 2012

- Telecommunication Eng.
- Electrical & Electronics Eng.
- Computer Engineering
- Civil Engineering
- Quantity Surveying

City & Guilds UK Dec 2011 New Classes

APSS International Networks (Pvt) Limited
APPROVED CENTRE NO: 844022

5, Harmers Avenue, Colombo 6. Tel: 011 2361587
Hotline: 0773867695 0772306642

மேலும் விபரங்களுக்கு
021-2241731
077-3867695
077-2306642




அன்னலிங்கம் உதயகுமார்


கந்தையா தர்மலிங்கம்


தம்பிராசா திருநாவுக்கரசு


ராமலிங்கம் கந்தசாமி


நவநீதம் ரூபதாஸ்


தர்மலிங்கம் கிருஸ்ணராசா


கந்தையா துரைராசா



தம்பு ரவீந்திரன்


தர்மலிங்கம் ஞானசேகரவேல்

## தங்கள் வாக்குகளால் எமக்கு மகத்தான வெற்றியைப் பெற்றுத் தந்த வலிகிழக்கு வாழ் தமிழ்த்தேசிய உணர்வாளர்களுக்கு நன்றிப் பூக்களைக் காணிக்கை ஆக்குகிறோம்

வலிகிழக்கு பிரதேச சபை - தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள்


கந்தையா நாகரத்தினம்


தம்பிப்பிள்ளை நித்தியானந்தன்


வைரமுத்து சுப்பிரமணியம்


கணபதிப்பிள்ளை துரைசிங்கம்


முருகுப்பிள்ளை பகீரதன்


ராஜா பிறேம்குமார்


சுந்தரம் செல்வரத்தினம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் வாழ்வில் காதலிலும் நாகரிகம்

இலக்கியக் காட்சி – 100



உலகத்தின் முதல் மொழி தமிழ்மொழி. முதலாவது நாகரிக இனம் தமிழ் இனம். தமிழினத்தின் காதல் வாழ்வும் நாகரிகம் வாய்ந்தது.

காதல் வாழ்வை இருபத்தைந்து அதிகாரங்களில் சொல்லும் திருவள்ளுவர் காமத்துப்பாலின் இரண்டாவது அதிகாரத்தில் 'குறிப்பு அறிதல்' என்றோர் அதிகாரத்தை வைத்துள்ளார்.

காதலுக்கு ஏற்ற வயதுடைய ஓர் ஆணும் ஒரு பெண்ணும் ஒருவரை ஒருவர் விரும்புவது இயல்பானதே!

பறவைகளில் அன்றிலும், புறாவும் விலங்குகளில் மானும் யானையும் குறிப்பறிந்தே இணைகின்றன.

ஆனால் நாகரிகத்தில் உயர்ந்து நின்ற தமிழ் இனத்தில் பதவியையும் பொருளையும் காட்டிப் பெற்றோரை மயக்கித் திருமணம் செய்தல், அடியாட்களைக் கொண்டு பெண்ணைக் கடத்தித் திருமணம் செய்தல், பெற்றோரே தமது வசதிக்காகப் பெண்ணை அச்சுறுத்தித் திருமணம் செய்தல் என்பன இடம் பெற்றுள்ளன.

குறிப்பறிந்து செய்யும் திருமணத்தை ஔவையார் ''காதலர் இருவர் கருத்தொருமித்து ஆதரவு பட்ட இன்பம்'' என்கிறார். குறுந்தொகைப் பாடல் ''அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே'' என்கிறது.

எதைக் கூறினாலும் தனித்துவம் தோன்றக் கூறும் திருவள்ளுவர் குறிப்பறிதலையும் தனித்துவம் தோன்றக் கூறுகிறார். ''நான் நோக்கும் காலை நிலன் நோக்கும் நோக்காக்கால் தான் நோக்கி மெல்ல நகும்'' என்றார்.

தலைவன் தலைவி பற்றிக் குறிப்பிடும் போது, அவள் தான் நோக்கும் போது நாணத்தால் நிலத்தை நோக்குவாள் என்றும் நோக்காத இடத்துத் தன்னை நோக்கிப் புன்முறுவல் செய்வாள் என்றும் கூறுகின்றார். அந்தப் புன்னகையே அவளுடைய குறிப்பை, சம்மதத்தை அவனுக்குத் தெரிவிக்கிறது. தலைவனும் தலைவியும் அன்புள்ளத்தால் இணைகிறார்கள்.

அன்புள்ளத்தால் இணைந்தவர்கள் நண்பர்களாகவே வாழ்கிறார்கள். திருவள்ளுவர் நட்பைப் பற்றிப் பதினேழு அதிகாரங்களில் அதாவது நூற்று எழுபது குறள்களில் கூறினார். நட்புக்கு அவ்வளவு சிறப்பிடம் கொடுத்த வள்ளுவர் கணவன் மனைவி உறவையும் நட்பு என்றே குறிப்பிடுகிறார்.

*''உடம்பொடு உயிரிடை என்ன மற்றன்ன*
*மடந்தையொடெம் முடை நட்பு''* என்கிறார்.

உடம்புக்கும் உயிருக்கும் உள்ளது போன்றது மடந்தைக்கும் எனக்கும் உள்ள நட்பு என்கிறான் கணவன். இங்கே கணவனும் மனைவியும் சமம். ஒருவர் பெரியவரும் இல்லை; மற்றவர் சிறியவரும் இல்லை. குறிப்பறிந்து திருமணம் செய்து கொண்டு வாழ்பவர்கள் வாழ்வு முழுவதும் குறிப்பறிந்து நடப்பார்கள்.

கணவனுக்கு வறுமை வந்தாலும் மனைவி வறுமையைத் தாங்கிக் கணவனைப் பேணிக் கொள்வாள். மனைவிக்கு நோய் வந்தாலும் மனைவியை இன்சொல்லால் மகிழ்வித்து நோயைத் தாங்கி மனைவிக்கு உதவியாக இருப்பான். இத்தகைய கணவன் மனைவிக்கு நட்பு என்ற சொல்லைப் பொருத்தமான சொல் என்று கண்டு கூறிய வள்ளுவர் சிந்தனையாளரே!

இந்த உலகில் காதலித்த எல்லோரும் சேர்ந்து வாழ்கிறார்களா? அவர்கள் விவாகரத்துப் பெற்றுக் கொள்வதில்லையா? என்று சிலர் கேட்கலாம். அவர்கள் காதல் என்ற போர்வையில் வாழ்பவர்களே அல்லாமல் காதலர்கள் அல்லர்.

''செம்புலப் பெயல் நீர் போல அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே'' என்று சிறப்பிக்கிறது சங்க இலக்கியம். வானிலிருந்த வந்த மழை நீரும் செம்மை வாய்ந்த நிலமும் ஒன்றாகச் சேர்ந்து தனித்துவம் பெறுவது போல எங்கோ பிறந்த தலைவனும் எங்கோ பிறந்த தலைவியும் அன்பால் ஒன்றாகித் தனித்துவம் பெறுகிறார்கள்.

காதலர் என்று பலர் உலகில் இருந்தாலும் சிலர் தான் காதலர்களாக வாழ்கிறார்கள் என்பதை வள்ளுவர் பெருமான் ''சிலர் காதலின் செவ்விதலைப்படுவர்'' என்கிறார். ''மலரினும் மெல்லியது காமம் சிலர் அதன் செவ்விதலைப்படுவார்'' என்கிறார்.

காதல் இன்பம் மலரினும் மென்மையானதாக இருக்கும் என்றும் இந்த உலகிற் சிலரே அந்த இன்பத்தை நுகர்வார்கள் என்றும் கூறுகின்றார்.

மென்மையான உள்ளம்- அன்புள்ளம்- தியாக உள்ளம் கொண்டவர்களே திருவள்ளுவர் சொல்லும் அந்தச் சிலர் ஆவார்.

குறிப்பறிதல் இன்றிப் பெற்றோர் நிர்பந்தத்துக்காகவோ வறுமையின் நிர்பந்தத்துக்காகவோ நிகழும் திருமணங்களில் மலரினும் மென்மையான காதலை எவ்வாறு காணமுடியும்?

புலவர் ம.பார்வதிநாதசிவம்

குறிப்பறிவதற்குக் கண்ணும் அது நோக்கும் நோக்கமும் இன்றியமையாதன. தலைவியின் கண்ணில் இரு நோக்கைக் கண்டான் தலைவன். ஒரு நோக்கு இந்தப் பேரழகு எனக்குக் கிடைக்குமா என்ற துன்பத்தைச் செய்தது. ஆனால் இரண்டாவது நோக்கு அவளுடைய சம்மதத்தை அன்பைப் புலப்படுத்தி இந்தப் பேரழகு உனக்கே சொந்தம் என்று புலப்படுத்தி துன்ப நோக்குக்கு மருந்தாக அமைந்தது.

குறிப்பறிதல் தலைவன் தலைவிக்குச் சிறப்பானது. ஆனால் எல்லோருக்கும் பொதுவானது. குறிப்பறிதலின் நுணுக்கம் பற்றியே திருவள்ளுவர் பொருட்பாலில் குறிப்பறிதல் என்று ஓர் அதிகாரத்தையும் காமத்துப் பாலில் குறிப்பறிதல் என்று ஓர் அதிகாரத்தையும் வைத்தார். பொருட்பாலில் வரும் குறிப்பறிதல் அரசனுக்கு உதவியாக உள்ளவர்கள் அரசனின் குறிப்பறிந்து நடப்பதைக் கூறும்.

குறிப்பறியும் இயல்பு அரசனுக்கு உதவியாவோர்க்கும் தலைவன்- தலைவிக்கும் மட்டும் இருந்தால் போதுமா? எல்லோருக்கும் வேண்டியதே!

பசித்து வருவோரின் குறிப்பறிந்து உணவு கொடுக்கும் குடும்பத்தவர், ஒருவரின் வறுமையைக் குறிப்பால் அறிந்து நீக்கும் உறவினர்கள், மக்கள் குறிப்பறிந்து நடக்கும் ஜனநாயகத் தலைவர்கள் எல்லோரும் போற்றுதற்குரியவரே. ✱

# வாடகை வீடு



சிறுகதை

''பிள்ளை ஏண்டி மண்ணை அள்ளிக் குப்பையோடு கொட்டிறாய்'' முற்றத்துக் குப்பை என்றால் மண்ணும் சேர்த்து வரத்தானே செய்யும். தேவியின் மூத்த மகள் அவள் வாய் திறக்கவில்லை. மனம் எண்ணியது.

''ஓம் .. ஓம் உனக்கென்ன என்ர கஸ்ரம் விளங்கப் போகுதோ? ''பொன்னம்மாப் பாட்டி பேசினாள் ''

''குசினிக்குள்ள என்னடி இப்படிப் புகையுது... கேட்டுக் கொண்டே இருக்கிறன். செவிடன் காதில் சங்கூதின மாதிரி ஒருவரும் பதில் சொல்லக் காணன்''

அவளுக்கு என்ன பெயின்ரடிச்சு வடிவா வைச்சிருந்தால் இப்படித்தான் குப்பை கொட்டுவாங்கள். வாடகைக்கு வீடு குடுக்கிறதும் போதும் நான் படும் பாடும் போதும்''

கீழ் வானில் விடியலின் வெளுப்புத் தொடங்கும் முன்னரே பொன்னம்மாப் பாட்டி தனது புலம்பலைத் தொடங்கி விடுவாள்.

''அடியேய் இன்னும் என்னடி நித்திரை விடியாததுகள்; இவ்வளவு பெண்டுகள் இருந்து கொண்டு விடிஞ்சு நடு மத்தியானமாப் போச்சு இன்னும் வீடும் கூட்டவில்லை முத்தமும் கூட்டிமுடியுதில்லை.''

அந்தச் சத்தத்தில் தேவி எழுந்து பற்பொடி எடுப்பதற்காக குசினிக் கதவை திறந்தாள். விடியா மூஞ்சியள்.. மூஞ்சி மொகரக் கட்டையொண்டும் கழுவாமல் குசினிக்குள் போகுதுகள்; எனக்கு இதுவும் வேணும் இன்னும் வேணும்; வாடகைக்காசும் ஒழுங்காயில்லை. வீட்டையும் வடிவா வைச்சிருக்கிறயில்லை.

அதைக் கேட்டதும் மனம் வேதனைப்பட்ட படி தேவி கிணற்றடிப் பக்கம் போனாள். ''அடுப்பில் பூனை படுக்குது இதுகள் என்ன செய்யுதுகள் பிரம்ம ராட்சதன் என்ர வீட்டுக்குள்ள குடி கொள்ளப் போறான்.''

''தேவி ... அடியேய் தேவி...'' தேவியின் மீது பாட்டியின் பாணங்கள் தாக்கின ''என்னம்மா?'' இவ்வளவு நேரம் என்ன செய்யுதுகள் உன்ர குட்டியள்; ஒரு வேலையும் இல்லை விடிஞ்சதும் தழுக்கி மினிக்கிக் கொண்டு போறாளவ பின்னேரமும் பொழுது பட்டாப் பிறகு வாறாளவை.

எனக்கெண்டால் இதுகளை பார்த்தால் பொட்டையள் மாதிரி தெரியவில்லை. உருப்படாததுகள்'' தேவியை மாத்திரமல்ல அவளின் பிள்ளைகளையும் பாட்டி ஏசினாள்.

''ஏன் அவன் பொடியனும் அப்படித்தான் எதையோ காதுக்குள்ள வைச்சுக் கொண்டு காச்சட்டையைப் போட்டா பரமசிவன் எண்ட நினைப்பு.''

தேவியும் அவள் பிள்ளைகளும் பாட்டியின் வீட்டில் வாடகைக்கு இருந்தாலும் வீட்டின் ஆட்சியும் அதிகாரமும் பாட்டியிடந்தான். பாட்டியின் வார்த்தைகளால் மனம் நொந்தாள் தேவி.

''அம்மா எங்கட நிலைமை அப்படி. காலம போனால் பின்னேரம் வீடுதிரும்புற வேலை. அதுகள் என்னம்மா செய்யும் எங்களை மனிதரும் சரி இயற்கையும் சரி சோதிக்குது..''

''நீ புள்ளையள சொன்ன உடன, இழுத்துக் கட்டிக் கொண்டு சண்டைக்கு வந்திடுவியே. ஆனாலும்

பேரம்பலம் சித்ரா,
கோண்டாவில் .

உனக்கு இப்பவே சொல்லிவைக்கிறன். இரவு ஆறரைக்குப் பிறகு கதவை பூட்டிப் போடுவன் ஓ... இதையும் அதுகளுக்குச் சொல்லி வை.

தேவி மனது தாளாமல் கலங்கிய கண்களுடன் மெதுவாகப் பின்புறம் சென்றாள் ''இறைவா எங்களை ஏன் சோதிக்கிறாய்''

தேவிக்கு மூன்று பெண்களும் ஒரு பையனும் கணவரைக் குண்டு கவர்ந்து சென்றுவிட்டது.

(20 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு இந்த வாரம் எப்படி.........

## 21.08.2011 முதல் 27.08.2011 வரை

தருபவர் - வித்யா

### மேடம்

ஆதாயகரமான பணவரவுகளைப் பெறலாம். நீண்ட நாள்களாகச் சந்திக்காத உறவினர்கள் சிலரைச் சந்திக்கலாம். கடன் மிகுதிகள் வசூலாகும். அலைச்சல், உண்டு. சேமிப்புக் கரையலாம். தர்ம, புண்ணிய காரியம் செய்வீர்கள். உத்தியோக ரீதியான விடயங்கள் சாதகமாக அமையும். நிலம், பூமி வாங்கப் போட்ட திட்டங்களில் முன்னேற்றம் உண்டு. தடைப்பட்ட கட்டடப் பணிகளை முடுக்கி விடுவீர்கள். பணிபுரிவோர் நிர்வாகத்தினரிடம் எதிர்பார்த்த சலுகைகள் கிட்டும். எந்த விடயத்திலும் துணிச்சலாக இறங்கும் வல்லமை அதிகரிக்கும். பொலிஸ் தொடர்பான விடயங்கள் அனுகூலமாக அமையும். சகோதரர்கள், பங்காளிகளுடன் ஏற்பட்ட பகை விலகி, பாசம் அதிகரிக்கும். பிள்ளைகள் வழியில் நல்ல செய்திகளைக் கேட்கலாம். பெண்கள், பொழுது போக்கு விடயங்கள், பயணங்கள் போன்றவற்றால் அனுகூலம் உண்டு.

### இடபம்

எந்த வேலையையும் தங்கு, தடையின்றிச் செய்து முடிப்பீர்கள். பெரிய மனிதர்கள் அல்லது உறவினர்கள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும். பணவரவுகளைப் பெறலாம். பொருள்கள் சேரும். சுப விரயங்கள் தொடர்ந்து கொண்டிருக்கும். எவ்வளவு தான் சிக்கனமாக இருந்தாலும், ஏதாவது ஒரு வழியில் செலவு உண்டாகும். பிள்ளைகளின் செயற்பாடுகளை நினைத்து சிலர் கவலை கொள்ளலாம். பயணங்கள் அதிகரிக்கும். புதிய வீடு கட்டவோ அல்லது இருக்கும் வீட்டை மாற்றி அமைக்கவோ மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. தாயார் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைத்துப் பெருமை அடைவீர்கள். எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். சந்தோஷ அனுபவம் உண்டு. விருந்தினர்கள் வருகையால் வீட்டுச் செலவுகள் அதிகரிக்கும். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள் வகையில் தொல்லைகளே அன்றி ஆதாயம் இல்லை. எதிர்பாராத திடீர் செலவுகளைச் சந்திக்கலாம். வீண் பழிகளை ஏற்கலாம்.

### மிதுனம்

சில விடயங்களை நினைத்து மனதைப் போட்டு குழப்பிக் கொள்வீர்கள். நண்பர்களுடன் கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம். தொழில் ரீதியான பயணங்கள் செல்லலாம். எதிர்பாராத சந்திப்பு நிகழும். மனதில் ஊக்கம், உற்சாகம் அதிகரிக்கும். எண்ணிய காரியங்கள் எண்ணம் போல நடக்கலாம். அடுத்த சில நாள்களுக்குப் பின்பு நடக்கும் என, நினைத்த காரியங்கள் இன்றே நடக்கலாம். உங்களின் ஊக்கம், உற்சாகத்தைக் குறைக்கும் சம்பவங்கள் அடிக்கடி நடக்கலாம். உடல் நலத்திலும் ஏதாவது பிரச்சினைகள் ஏற்பட்டு செலவுகளை உண்டாக்கலாம். கூடுதல் பொறுப்புகளால் போராட்டமான நிலைமையை எதிர்கொள்ளலாம். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள், சகோதரர்கள், பங்காளிகள் தொடர்பான விடயங்கள் அனுகூலமாக அமையும். அடிக்கடி கோபம் உண்டாகலாம். தடைபட்ட சில காரியங்கள் விறுவிறுப்பாக முடியும். நீண்ட நாள் உழைப்பு ஒன்றுக்கு பலன் கிட்டும். வசதி, வாய்ப்புகள் கூடும். பணப்புழக்கம் அதிகரிக்கும். ஆதாயகரமான பண வரவுகளைப் பெறலாம்.

### கடகம்

செலவு, அலைச்சல் அதிகரிக்கும். ஏதோ ஒரு வழியில் கணிசமான அளவுக்கு பணம் கரையும். மந்தம், மறதி, கவனக்குறைவு போன்றவற்றால் அவதிப்படலாம். பயணங்களில் தடை, தாமதங்கள் ஏற்படலாம். கலகலப்பான அனுபவங்களை எதிர்கொள்ளலாம். சில விடயங்களில் நினைத்தது ஒன்றாகவும், நடப்பது ஒன்றாகவும் அமையலாம். தொழில் துறையில் அபிவிருத்தி காணலாம். இரும்பு, இயந்திரங்கள் மூலமும், தொழிலாளர்களின் ஆதரவையும் சாதகமாகப் பயன்படுத்தி நல்ல லாபம் பெறலாம். சட்டம், நீதிமன்றம் தொடர்பான விடயங்களும் சாதகமாக அமையும். சகோதரர்கள், நண்பர்கள் வகையில் செலவுகள், சிரமங்களைச் சந்திக்கலாம். நண்பர்கள் சிலர் உதவிகரமாக இருப்பர். உத்தியோக ரீதியான விடயங்களில் எச்சரிக்கையாக நடந்து கொள்ள வேண்டும். அடுக்கடுக்காகப் பல வேலைகளைத் திட்டமிட்டுச் செய்வீர்கள். தேக ஆரோக்கியத்தில் சிறு குறைபாடு தோன்றலாம். ஊக்கம், உற்சாகம் கூடும். எதிர்பாராத பணவரவு உண்டு. அறிவாளிகளின் மனிதர்களின் உதவி கிடைக்கும்.

### சிங்கம்

திட்டமிட்ட சில வேலைகளை சிரமப்பட்டாவது முடிப்பீர்கள். பிரியமான உறவினர்கள், நண்பர்கள் சந்திப்பு நிகழும். பழகிய சிலர் மூலம் பணவரவுகளைப் பெறலாம். கூட்டு முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். எதிலும் பொறுமை, நிதானமாகவும், முன்யோசனையுடனும் செயற்பட வேண்டும். திட்டமிட்ட காரியங்களைச் செய்ய முடியாமல் தடை, தாமதங்களை எதிர்கொள்ளலாம். எதிர்பாராத தண்டச் செலவு களைச் சந்திக்கலாம். பிள்ளைகள் செயற்பாடு பெருமைப்பட வைக்கும். நீண்ட நாள் களாக வராமல் இழுத்தடித்த கடன் மிகுதிகள் வரலாம். தேக ஆரோக்கியக் குறைவுகள் நீங்கி, தெம்பு உற்சாகமாகச் செயற்படுவீர்கள். உறவினர்கள் உங்களைப் பார்த்துப் பொறாமைப்படும் வகையிலான நிகழ்ச்சிகள் நடக்கலாம். சகோதரர்கள், நண்பர்கள் வகையில் உதவிகள் கிடைக்கலாம். அவர்களால் அனுகூலம் பெறலாம். உத்தியோக ரீதியாக எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். தந்தை வழியில் நன்மை அடையலாம். எதிர்பாராத சம்பவங்கள் நடக்கும்.

### கன்னி

எதிர்பார்த்த அல்லது எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். உறவினர்கள் தொடர்பான சில வேலைகளுக்காக அலைய நேரிடலாம். தேக ஆரோக்கிய விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள். உடன் பிறப்புக்கள் உதவிகரமாக இருப்பர். குடும்பத்தினருடன் வெளியிடங்களுக்குச் செல்லும் சூழ்நிலை உருவாகும். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள் மூலம் ஆதாயம் பெறலாம். எதிர்பாராத தண்டச் செலவுகளால் திணறலாம். நீண்ட நாள்களாக சந்திக்காத உறவினர்கள் சிலரைச் சந்திக்கும் வாய்ப்பு கிடைக்கும். எதிர்பார்த்த நல்ல செய்திகள் வந்து சேரும். சகோதரிகளின் தேவைகளை நிறைவேற்றுதல், பெண் பிள்ளைகளுக்கு உதவி செய்வதற்காகக் கணிசமான பணத்தைச் செலவு செய்யலாம். சகோதரர்கள், பங்காளிகள், பொலிஸ், நிலம், பூமி தொடர்பான விடயங்கள் சாதகமாக அமையும். வேலை நெருக்கடிகள் அதிகரிக்கும். பொறுமை, நிதானம் அவசியம். நோய் உபாதைகளால் உற்சாகம் குறையலாம்.

### துலாம்

கலகலப்பான அனுபவங்களைப் பெறலாம். உடல் ரீதியான சிறு உபாதைகளால் அவதிகளுக்கு ஆள்படலாம். வெளியில் செல்லும்போது நண்பர் ஒருவரை எதிர்பாராமல் சந்திக்கலாம். காரிய வெற்றி உண்டு. உறவினர்களால் நன்மை அடையலாம். பணவரவுகளைப் பெறலாம். கடிதங்கள் மூலம் நல்ல செய்திகள் வந்து சேரலாம். தந்தை வழியில் எதிர்பாராத உதவிகள் கிடைக்கலாம். மருத்துவ சிகிச்சை பெற மேற்கொண்ட முயற்சிகளிலும் முன்னேற்றம் உண்டு. பெண்கள், பயணங்கள், பொழுதுபோக்கு விடயங்கள் போன்றவற்றால் சந்தோஷம் அடைவீர்கள். பழைய வாகனங்களை மாற்றி புதிய பொருள்கள் வாங்கப் போட்ட திட்டம் நிறைவேறும். நீண்ட நாள்களாக எதிர்பார்த்த நல்ல வாய்ப்புகள் தேடி வரலாம். சுபகாரிய விடயங்களில் முன்னேற்றம் காணலாம். ஊக்கம், உற்சாகம் கூடும். பிரியமானவர்கள் சந்திப்பு நிகழும். நட்பு வட்டம் விரிவடையும்.

### விருச்சிகம்

வழக்கத்துக்கு மாறாக கூடுதல் வேலைப் பளுவைச் சந்திக்கலாம். உங்களிடம் வாக்குக் கொடுத்தவர்கள் அதைக் காப்பாற்றாமல் இழுத்தடிக்கலாம். தொழில் ரீதியாக மேலதிகாரிகளின், முதலாளிகளின் விமர்சனங்களைச் சந்திக்கலாம். கடன் மிகுதிகள் வசூலாகும். குழப்பம், தடுமாற்றம் நேரும். பிள்ளைகள் வழியில் செலவுகள் ஏற்படலாம். தொழில் துறையில் அபிவிருத்தி காணலாம். போட்டிகள், எதிர்ப்புகளை வெற்றிகரமாகச் சமாளிப்பீர்கள். சட்டம், நீதிமன்றம் தொடர்பான விடயங்கள் சாதகமாக அமையும். பெண்கள், சகோதரிகள், தாயார் ஆகியோரின் வழியில் அனுகூலம் உண்டு. பிள்ளைகள் வழியில் எதிர்பாராத செலவுகள், சிரமங்கள் உண்டாகும். பெரிய மனிதர்களின் உதவி கிடைப்பது தள்ளிப் போகலாம். மற்றவர்களுக்காகப் பிணை கொடுப்பதைத் தவிர்க்க வேண்டும். உத்தியோக ரீதியான விடயங்களில் இடையூறுகள் ஏற்படலாம். நிர்வாகத்தினரிடம் எதிர்பார்த்த கோரிக்கைகள் நிறைவேறுவது தள்ளிப் போகலாம்.

### தனுசு

ஊக்கம், உற்சாகமாகவும், பரபரப்பாகவும் செயற்படுவீர்கள். தொழில் ரீதியாக வர வேண்டிய பணவரவுகள் வரலாம். பெண்களால் சந்தோஷமான அனுபவம் பெறலாம். ஆதாயமில்லாத அலைச்சல், உண்டு. வேலைப்பளு அதிகரிக்கும். வெறுப்பு, விரக்தி உண்டாகும். நேரம் காலம் பார்க்காமல் அதிக நேரம் உழைக்க நேரிடும். திட்டமிட்ட காரியங்களை குறிப்பிட்ட நேரத்துக்கு முடிக்க முடியாமல், தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். குறைகள், தவறுகள், தடுமாற்றங்கள் போன்றவற்றால் மன அமைதி பாதிக்கப்படலாம். குடும்பத்தில் அவ்வப்போது சிறு சலசலப்புகள் ஏற்பட்டுக் கொண்டே இருக்கும். மனைவி வழியில் திடீர் செலவுகள் நேரவும் வாய்ப்பு உண்டு. பொறுப்புகளாலும், தேவையற்ற அலைக் கழிப்புகளாலும் மன அமைதி பாதிக்கப்படலாம். மாற்று மதத்தினர் தொடர்பான விடயங்களிலும் பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள் உதவிகரமாக இருப்பர். குழப்பங்கள், தடுமாற்றங்களுக்கு ஆள்படலாம்.

### மகரம்

வீட்டுக்குத் தேவையான பொருள்கள் வாங்கவும், கடன் மிகுதிகள் செலுத்தவும் கணிசமான பணத்தைச் செலவு செய்யலாம். சோர்வு, சோம்பல் ஆள் கொள்ளும். வழக்கமான வேலைகளில் மாற்றங்கள் செய்யலாம். பணம் வரலாம். பொருள்கள் சேரலாம். வெளியூர்ப் பயணங்கள் செல்லலாம். அடுத்து நடைபெற உள்ள காரியங்களுக்காக முன்னேற்பாடுகளைச் செய்வீர்கள். நாள் முழுவதும் ஓய்வின்றி பரபரப்பாகச் செயற்படுவீர்கள். தாயார் உடல் நலன் தொடர்பான வகையில் எச்சரிக்கை அவசியம். ஆதாயமில்லாத அலைச்சல்களுக்கு ஆளாகலாம். பெருமைக்காக சில காரியங்களைச் செய்வீர்கள். கணவன், மனைவியர் சிறிய விடயங்களை பெரிதுபடுத்தி சண்டை போடுவதைத் தவிர்க்க வேண்டும். கூட்டுத்தொழில் செய்வோர், கூட்டாளிகளை அனுசரித்து செல்ல வேண்டும். ஆடம்பரச் செலவுகள் கூடும். உறவுகள் வழியில் சிறு மனக்கசப்பு உண்டாகலாம். உறவினர்கள் தொடர்பான காரியங் களுக்காக அலைய நேரிடலாம். கடன் மிகுதிகளைக் கண்டிப்புடன் கேட்டு வாங்குவீர்கள்.

### கும்பம்

மனதில் இனம் புரியாத சந்தோஷம் குடிகொள்ளும். அதே நேரத்தில், சிலருடன் தற்பெருமைப் பிரச்சினைகள், கருத்து மோதல்கள் உருவாகலாம். எதிர்பாராத உதவி கிடைக்கும். ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் செலவுகளைச் சந்திக்கலாம். திட்டமிட்ட சில வேலைகளைச் செய்ய முடியாமல் தடை, தாமதங்களை எதிர்கொள்ளலாம். வீண் பிடிவாதங்களால் மற்றவர்களின் அதிருப்திக்கு ஆளாகலாம். நேரம் காலம் பார்க்காமல் கூடுதல் நேரம் வேலை பார்க்கலாம். மற்றவர்களை நம்பி முக்கிய பொறுப்புகளை ஒப்படைக்க முடியாமல், அனைத்தையும் நீங்களே செய்ய வேண்டிய சூழ்நிலை உருவாகும். தைரியம், தன்னம்பிக்கை குறையும். பிள்ளைகளால் பிரச்சினைகளுக்கு ஆள்படலாம். உடன் பிறந்தவர்கள் ஏட்டிக்குப் போட்டியாகச் செயற்பட்டு எரிச்சல் உண்டாக்கலாம். பெண்கள் தொடர்பான விடயங்களில் கவனம் அவசியம்.

### மீனம்

தேவையற்ற செலவுகளைச் செய்ய நேரிடலாம். சிறிய வேலைகளுக்குப் பல முறை அலையலாம். உங்களைப் புரிந்து கொள்ளாமல் குடும்ப உறுப்பினர்கள் செயற்படுவதால் எரிச்சல் அடையலாம். எதிர்பாராத பணவரவுகளுக்கு வாய்ப்பு உண்டு. தம்பதியர் இடையே அன்னியோன்யம் அதிகரிக்கும். கையில் பணப்புழக்கம் அதிகரிக்கும். எந்த வேலையையும் தங்கு, தடையின்றி உடனுக்குடன் செய்து முடிப்பீர்கள். தந்தையுடன் ஏற்பட்ட மனஸ்தாபம் விலகிப் பாசம் அதிகரிக்கும். பயணங்கள் அதிகரிக்கும். வரவுக்கு மிஞ்சிய செலவுகள் ஏற்படலாம். உத்தியோகத்தர்கள் சக ஊழியர்களை அனுசரித்துச் செல்ல வேண்டும். எந்த விடயத்திலும் வீண் பிடிவாதங்களைத் தவிர்த்து, பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும். பெண்கள், தாய் வழி உறவுகள், சகோதரிகள் வழியில் [illegible] கிடைக்கும்.பல நாள்களாகப் பிற்போட்டு வந்த வெளியூர்ப் பயணங்கள் செல்லலாம். மாமன், மைத்துனர்கள் வழியில் தொல்லைகளே அன்றி, ஆதாயம் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடையின் சுயசரிதை



ஒரு ஊரில் நிலா என்ற சிறுமி வாழ்ந்து வந்தாள். அவளுடைய தந்தை அவளுடைய பிறந்தநாள் பரிசாக ஒரு குடை வாங்கிக் கொடுத்தார்.

அந்தக் குடைதான் நான். என்னை மிகவும் அன்பாகவும் பாதுகாப்பாகவும் அனைவருக்கும் உதவும் வகையில் என்னை வைத்திருந்தாள். நான் அவளுக்கு வெயில், மழைக் காலங்களில்உதவினேன். ஒரு முறை நான் உடைந்து விட்டேன். அந்தக் காலம் மழை என்பதால் மழை பெய்யத் தொடங்கியது.

அவளுடைய அப்பா உடைந்த என்னை திருத்தம் செய்து கொடுத்தார். பின்பு ஒரு நாள் அவள் பாடசாலை சுற்றுலாவின் போது அவள் என்னைநீர் வீழ்ச்சி பக்கமாகக் கொண்டு சென்றாள்.

நான் அவள் கையில் இருந்து தவறி நீர் வீழ்ச்சியில் விழுந்தேன்.


இப்போது கடலில் மிதந்துகொண்டிருக்கிறேன்.

சுதாகரன் நிலைக்சன்.





கௌ.கௌதமி, தரம்7ஏ, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.



சி.அகல்யா, தரம்10, யா/இந்து மகளிர் கல்லூரி.



ச.பபிதா, தரம்8ஏ, யாழ்.கோண்டாவில் இராமகிருஸ்ண ம.வி.

# பழமொழிகள்

★பழிக்குப் பழி
★இஞ்சி லாபம் மஞ்சலிலே
★கரணம் தப்பினால் மரணம்
★கொடிக்கு காய் கனமா
★சண்டிக் குதிரைக்கு நொண்டிச் சாரதி
★தடி எடுத்தவன் தண்டல் காரணா
★நெருப்பில்லாமல் புகையாது
★வாய் மதத்தால் வாழ்வு இழக்கும்
★பூ விற்ற காசு மணக்குமா
★ஊரோடு ஒத்துவாழ்

சு.சிரோன் கிசாந்,
புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்.



கி.சோபிதா, தரம் 8ஏ, யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி.

# நல்ல நண்பன்



நண்பனே!
உன்னைப் பற்றி என்னிடம்
பிழையாகவே
விமர்சிப்பவன்
இன்னுமொருவரிடம்
என்னைப்பற்றியும்
பிழையாகவே பேசுவான்
உன்னைப்பற்றி
நன்றாக
என்னிடம் எவன் சொல்கிறானோ
அவனே எனக்கும்
உன்போன்ற ஒரு
நல்ல நண்பன்

அ.சிரோன்கிசாந்,
புனித பத்திரிசியார் கல்லூரி.

# உண்மையான நட்பு



மகேஷ், ரமேஷ் இருவரும் நண்பர்கள். இருவருக்கும் படகு ஒட்டுவதில் ஆர்வம். கடலுக்குள் சென்று மீன்பிடித்தல் என்பது மிகவும் விருப்பம்.

ஒரு நாள் நண்பர்கள் இருவரும் கடலுக்குச் சென்றனர். சந்தோஷமாகப் பேசிக் கொண்டிருந்ததில் பொழுதுபோனது தெரியவில்லை.

திடீரென புயலொன்று உருவாகியது. நண்பர்கள் சென்ற படகு புயலில் சிக்கி மூழ்கியது. இருவரும் உயிருக்குப் போராடினார்கள்.

அதிர்ஷ்டவசமாக ஒரு பலகை அவர்கள் அருகே ஒதுங்கியது. இருவரும் அதைப் பிடித்து நீந்தத் தொடங்கினார்கள். ஆனால் பலகை மிகவும் சிறியதாக இருந்ததால் இருவராலும் அதைப் பற்றிக்கொள்ள முடியவில்லை.

''ரமேஷ், உனக்கோ வயதான அம்மாவும் தங்கையும் இருக்கிறார்கள் நீ பற்றிக்கொள்'' என்று மகேஷ் கூறினான்.

''மகேஷ்! எனக்காவது அம்மாவும் தங்கையும் தான். உனக்கோ திருமணமாகி விட்டது. நீ உயிர் பிழைத்தால் என் குடும்பத்தைக் காப்பாற்றலாம். ஆனால் நான் தப்பிச் சென்றால் உன் குடும்பத்தைக் காப்பாற்றுவது நமது சமுதாயச் சூழலில் முறையாகாது எனக் கூறி பலகையை மகேஷிடம் விட்டு நீரில் மூழ்கிப் போனான். உயிர் பிழைத்த ரமேஷின் குடும்பத்தை தன் குடும்பம் போல மகேஷ் ஆதரித்தான்.

நட்பு தியாகத்தின் புனிதம் கொண்டது,

ஆனந்தகுமார் அஜித்குமார்,9பி, யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்.

# விடை தெரியுமா? 121

## உங்களுக்கும் பரிசில்கள்

1. உலகின் மிகப் பழமையான நகரம் எது?
2. ஜெருசலேத் நகரில் முதல் கோயில் கட்டிய மன்னன் யார்?
3. மாலைதீவு ஜனாதிபதி யார்?
4. தற்போதைய புனர்வாழ்வு ஆணையாளர் யார்?
5. லிபியாவின் தலைநகர் எது?

## விடைகள் 119

1. மலேசியா
2. புளூட்டோ
3. 72 வருடங்கள்
4. ரூபா
5. டி.எஸ்.சேனநாயக்க


## வெற்றி பெற்றோர் விவரம்

★ சா.சபிதா, தரம்-8ஏ, கோண்டாவில் இராமகிருஷ்ணா மகா வித்தியாலயம்.
★ இ.சிந்துஜா, தரம்-8, மிருசுவில் றோ.க.த.பாடசாலை.
★ சி.லதாங்கி, தரம்-02, யா/துன்னாலை காசிநாதர் வித்தியாலயம்.
★ வி.பிரசாத், தரம்-8ஏ, ஆவரங்கால் நடராஜ இராமலிங்கம் வித்தியாலயம்.
★ சி.நிறோஜன், தரம்-6பி, நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்.

**விடை தெரியுமா?**
தெரிந்தால் 27.08.2011 இற்கு முன்னர் சரியான விடையெழுதும் 6 மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா 100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75 வீதமும் பரிசில்கள் நூல்களாக வழங்கப்படும்.

# உயிரினம் பற்றி அறியாதவை

★ விலங்குகளின் இரத்தப் பிரிவு - L,K,M,N
★ மிக நீண்ட ஆயுள் கொண்ட உயிரினம் - நீலத் திமிங்கிலம் (500 வருடங்கள்)
★ மிகவும் ஆதியான பறவை - ஆக்கியோப்ரெறிகன்
★ உலகின் மிகப்பெரிய பறவை-தீக்கோழி
★ உலகின் மிகச் சிறிய பறவை - ஹம்மிங் பேர்ட்ஸ்
★ மிகப் பெரிய முட்டையிடக் கூடிய பறவை - தீக்கோழி (முட்டை நீளம் - 20Cm)
★ மிகப் பெரிய ஈ - ரோபர் ஈ
★ மிக வேகமாக நீந்தக் கூடிய மீன்-டன்னி ($60kmh^{-1}$)
★ மிக வேகமாகச் செல்லும் பாம்பு-ஆபிரிக்கன்மாம்பா
★ இனிப்பின் சுவையை அறிய முடியாதது-பூனை
★ தலைகீழாக நடக்கும் விலங்கு-ஸ்லாத்
★ தலையைத் திருப்பாமல் பின்னால் வருவதை அறியும் பிராணி-ஒட்டகச்சிவிங்கி
★ மிக அதிகம் கொழுப்பு அடங்கிய பாலை சுரக்கும் விலங்கு-முயல்
★ குரைக்கத் தெரியாத நாய்வகை-டிங்கோ
★ வாழ்நாளில் ஒரேஒரு முட்டையிடும் பறவை-பென்குயின்
★ சுவாசிப்பதற்கு வாலாட்டும் பறவை-வாலாட்டிக் குருவி
★ முன்னும் பின்னும் பறக்கும் திறனுடைய பறவை-ஹம்மிங் போட்
★ தலையில்லாமல் 13 நாள்வரை வாழக்கூடிய உயிரினம்-கரப்பான்
★ கூடுகட்டி வாழும் பாம்பு-இராஜநாகம்
★ அண்ணாந்து பார்த்தவாறே மழைநீரை அருந்தும் பழக்கமுடைய பறவை-வான்கோழி



ப.ஆதிரிகா,
நீர்வேலி, தெற்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீயும் நானும்



வெற்று நிலமாய் என் இதயத் தோட்டம்
விதைத்து வைத்தார்கள் உன் உருவம்
சொந்தமாக்கி சுகம் பெற்று
மரமாய் நிழல்தர மதர்ப்பாய் மங்கையிவள்

நேசமும் காதலும் அசைந்தாட
ஆசையாய் ஓர் மலர்பூத்த
தோட்டமாய் வாழ்வு
அன்னிச்சை செயலாய் தொற்றிய
தொற்றுகள்
தொலைந்தது பாசமும் பசுமையும் அல்ல

மனித நேசமும் இங்கு ம(றை)றந்து போனது
உன் சந்தோஷ தருணங்கள் - என்னைச்
சல்லடை போடும் தோட்டாக்கள்
என்பதை புரியாமல் நீ!

பிறந்த ஊரை இழந்து
வளர்த்த உறவை இழந்து
கொண்ட உடமை இழந்தாலும்
உரிமையும் உணர்வையும்
இழக்க முடியாமல் நான்...

மேகலா,
சாவகச்சேரி.

## நீ ய தீ க ஆ

கனவுக் கோலங்களை
கடந்து செல்கின்றது
காலத்தின் கிடப்பு
கனதிகளை சுமந்து
சுமந்து வளைந்து
காலாறிப் போனது
மனதின் தவிப்பு
நீளும் சோகத்தில்
மீண்டு நினைவுகளும்
மாண்டு போகின்றது
அப்பட்டங்களை
ஆசுபடுத்தி
அம்மணங்கள்
ஆடை மாற்றிக்
கோள்கின்றன
அவலங்களை
அறுவடையாக்கி
சபலங்கள்
சாய்ந்து மீண்டும்
விதையாகிப் போகின்றன
எழுவதற்காய்....

க.நாகேஸ்வரா,
சண்டிலிப்பாய்.

## பூபாளம்



விடிந்து விட்டது என்கிறார்கள்
விழித்துப் பார்த்த போது
இப்போது - இன்னும்
கடும் இருட்டாகவே இருக்கிறது!

தூக்க மயக்கத்தில்தான்
என் கண்களுக்கு
ஊரே இருளடைந்து
கிடக்கிறது - என்று நினைத்து
கண்களைக் கசக்கியபின்
பார்த்தேன் இப்போதும்
என்னூர் இருண்டே கிடக்கிறது

விடியல் பற்றி
என் வழிகளுக்குத் தான்
விளங்கவில்லை
ஏன் - விடியலில்
பூபாளம் கேட்கவில்லை
என்று கேட்ட போது
பூபாளம் பாடிய பறவைகளெல்லாம்
விடியலுக்காக பலியாக்கப்பட்டதாக
சொன்னார்கள்
அப்போது எனக்கான
இருண்ட விடியல்
இரத்தக்கறையையும்
தன்மீது பூசிக் கொண்டது

வே.தமருகா ரொய்

## போரும் ஊரும் வாழ்வும்



பொட்டிழந்து பூவிழந்து
புன்னகை தொலைந்த
பூவையர்கள் இன்றுமிங்கு
வாட்டமாக!

தாயிழந்து தந்தை
சகோதரம் இழந்த
சேய்களது துயரங்கள்
தேக்கமாக!

பச்சிளம் பிள்ளைகளும் இளம்
பராயத்தினரையும்
பறிகொடுத்த பெற்றோர்கள்
ஏக்கமாக!

பாடுபட்டுத் தேடி வைத்த
பொருள் இழந்து
பாசமுடன் வளர்த்து வந்த
கால்நடை இழந்து
வீடு வாசல்
விளை நிலங்கள் தனை இழந்து
வாடுகின்ற தமிழர் நெஞ்சம்
வாட்டமாக!

கூடுவிட்டு கூடு வாழும்
கொடிய பரிதாப நிலை, சொந்த
வீடு நாடு வருவதற்கு
வழி பிறக்குமா?

சேனையூரான் மூதூர் கிழக்கு.

## நான் சாகமாட்டேன்...!



என்னை நீ
அடி
உதை
குத்து
கொல்லு
கொழுத்தியே விடு
ஆனால் நான்
மீண்டு வருவேன்
உனக்கு சாவு மணி அடிக்க
உன் ஜாலங்களையும்
தந்திரங்களையும்
தோலுரித்தெறிய
சாம்பரிலிருந்து உயிர்த்து
வரும்
பினிக்ஸ் பறவை போல
நான் இல்லாவிட்டாலும்
உருவம் மாறுபட்டாலும்
ஒருவன் வருவான்
என் வழியில்...

- புதுக்கவி.

## கெஞ்சிக் கொள்கிறேன் மிஞ்சிப் போகாதே

என்னைக் கொஞ்சம்
பேசவிடுங்கள்
இனியாவது விட்டுவிடுங்கள்

உயிரையே மையாக்கி
உருகி உருகி அழுகிறேன்
கேட்பார்தான் யாருமில்லை
பயிரை மேய்கிற வேலியை
பார்த்ததாய் சொல்கிறேன்
ஏற்பார்தான் யாருமில்லை

மனச்சாட்சிக் கூண்டில் என்றால்
பிணமாக வேணும் வந்து
சேரமுடிகிறது என்னால் ஆனால்...
நிஜச் சாட்சிக் கூண்டில்...?

கண்கள் எப்போதா
குத்திக் கிழிக்கப்பட்டு
நாக்கு அப்போதே
நறுக்கி எறியப்பட்டு
வார்த்தைகள் அவனுலகில் மட்டும்
வறுமைப்பாட்டுப் போகட்டுமென
மூர்க்கமாய் முடிவெடுத்து
வேரோடு பூட்டுப் போட்டு
தீர்த்து வைத்த போது
வேர்த்துப் போனதெனக்கு....!

அவன் வீட்டு வாசலுக்கு மட்டும்
என் வாசம் இல்லையென்றபோது
பேச்சற்றுப் போனதெனக்கு...!

அவனுலகில் மட்டும்
கண்ணோடு கண்டதை
கனவோடு மறைத்து வை என்றால்
பின் என்ன சேதி...?

உயிரோடு உணர்ந்தை
உள்ளேயே புதைத்துவை என்றால்
பிறகென்ன நீதி...?

காற்றிலலைகின்ற
கண்ணீர் குரல்களை
கலைத்துப் பிடித்து
வடித்தெடுத்து - அதன்
கனதியை வெளி உலகின்
நாற்று மேடையில்
நட்டுவிட நினைப்பதை
விட்டுவிடு என்றால்

கொட்டிப் போன
ரணங்களையெல்லாம்
கொத்தோடு மொட்டாக்கி
வெட்டிப் போன
மனங்களையெல்லாம்
கட்டுப்போட்டு சீராக்கி - மீண்டும்
ஒட்ட வைக்க முயல்வதை
ஒத்திவை என்றால்
ஒத்துபோவானா அவன்...?

அவனுலகில் மட்டும்
ஒரு பேனா முறிக்கப்பட்டால்
ஓராயிரம் பேனா எழும்
புதிர்தான் இன்னும்
புரிவதாகவே இல்லை...

அவனுலகில்
பேனா முனைகள்
பொப்பிவிடும் எழுத்துக்கள்
வெறும் மையால்
எழுதப்படவில்லை - அங்கே
உயிர்தான் மையாக
உருமாறிக் கொள்கிறது

வேண்டாம்!
விட்டுவிடுங்கள்!!
அவனுரிமையை பறிக்காதீர்கள்!!! - பின்
அந்த உயிர்மை எமையெல்லாம்
எரித்துவிடக் கூடும்...

அதனால்
என்னைக் கொஞ்சம்
பேசவிடுங்கள் இனியாவது...

- தமிழிச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரே மையத்தில் இருந்து பல குரல்கள்

ஞாயிறு காரம்

சந்திரசேகர ஆசாத்

ஒரே நேரத்தில் இருவர் உரத்த தொனியில் பேசிக் கொண்டால் எவர் சொல்வதையும் கேட்பவர்களால் விளங்கிக் கொள்ள முடிவதில்லை. இவ்வாறே ஒலி வாங்கியில் இரு ஒலிகள் எதிரெதிர் திசையில் மோதினால் வெறும் விசில் சத்தம் மட்டுமே வெளிவரும். இரு நபர்கள் பேசுவதால் எழும் குழப்பம் ஒரு சிறுவட்டத்துக்குள் அடங்கிவிடும். ஒலிபெருக்கி விசில் ஒலி ஒரு குறிப்பிட்ட சுற்றுவட்டத்துக்குள் அடங்கிவிடும். ஆனால் இலங்கையின் அரச தரப்பிலிருந்து வெளிவரும் பல குரல்கள் இலங்கை என்ற வட்டத்துக்கு வெளியேயும் பரவிக் குழப்பங்களை ஏற்படுத்துவது மட்டுமன்றி அவர்களின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண விரும்பாமையையும் வெளிப்படுத்தி வருகின் றன.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவோ தனது வார்த்தைகள் முழுமக்களின் நலன்களிலிருந்தும் தேச பக்தியின் உச்ச நிலையிலிருந்தும் வெளிப்படுபவையாகவும் அவை கேள்விகளுக்கு அப்பாற்பட்ட வேத வாக்குகள் என்பன போன்ற பாணியில் கருத்துக்களை வெளியிடுவார். அவரின் சகோதரரும் பாதுகாப்புச் செயலாருமான கோத்தபாய ராஜபக்ஷ எப்போதுமே ஓர் இராணுவப் பாணியில் கட்டளையிடும் போக்கில் கருத்துக்களை வெளியிடுவார். பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவோ தமிழ் மக்கள் மீது அக்கறை கொண்டவர் போலவும் அவர்களின் புனர்வாழ்வு நியாயபூர்வமான உரிமைகள் வழங்கப்படுவது தொடர்பாகக் கரிசனை கொண்டவராகவும் தன்னைக் காட்டிக் கொள்வார். பிரதமர் டி.எம். ஜெயரத்தினா, அமைச்சர்களான ஜி.எல்.பீரிஸ், நிமால் சிறிபாலடி சில்வா போன்றவர்கள் சந்தர்ப்பங்களைப் பொறுத்து இந்த மூவரில் ஒருவரையோ அல்லது மூவரையுமோ திருப்திப்படுத்தும் வகையில் துள்ளிக் குதித்து தங்கள் பதவிகளை உறுதி செய்து கொள்வர்.

### கேலிக்குள்ளாகும் மூவரின் கருத்துகள்

ஆனால் இந்த மூவரும் மக்கள் சுதந்திர முன்னணி அரசில் பிரதான பதவிகளை வகிப்பவர்கள் என்பதும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

எனினும் இவர்களின் குரல்கள் ஒன்றுடன் ஒன்று முரண்படும் வெவ்வேறு கருத்துக்களை வெளியிடுவதன் மூலம் தேசிய அளவிலும் சர்வதேச அளவிலும் குழப்பங்களை ஏற்படுத்தி வருகின்றன. பல ஊடகங்களின் கண்டனங்களுக்கும் கேலிக்கும் உட்படுகின்றன.

பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ ஒரு அரச அதிகாரி. இவர் ஓர் அரசியல்வாதியல்ல. ஆனால் இவர் தனது பாதுகாப்புத் தொடர்பான அதிகாரங்களுக்கு அப்பால் முக்கிய அரசியல் பிரச்சினைகள் தொடர்பாக அரசின் சார்பில் கருத்துக்களைச் சுயமாக வெளியிட்டுவருகிறார். இதுபற்றி இவர் கட்டுப்படுத்தப்படுவதோ அல்லது கண்டிக்கப்படுவதோ கிடையாது. இந்த நிலை இங்கு ஜனநாயகம் பாதுகாக்கப்படுகிறதா என்ற கேள்வியை எழுப்பி வருகிறது.

இவர் இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாக 'ஹெட் லைன் ருடே' தொலைக்காட்சிக்கு வழங்கிய பேட்டி இனப்பிரச்சினை தொடர்பான இலங்கை அரசின் நிலைப்பாடு பற்றியும் இந்தியா தொடர்பான இவர்களின் அணுகுமுறை என்ன என்பது தொடர்பாகவும் கேள்விகளை எழுப்பியுள்ளன. அதுமட்டுமன்றி இராஜதந்திர வழிமுறைகள் உதாசீனம் செய்யப்படுவதற்குக் காரணம் அகங்காரமா அல்லது அறிவீனமா என்ற கேள்வியையும் எழுப்பியுள்ளது.

போர் நிறைவுபெற்ற பின்பு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வெற்றி விழாவில் உரையாற்றிய போது 13 ஆவது திருத்தச் சட்டத்துடன் மேலதிகமாகவும் வழங்கப் போவதாகத் தெரிவித்திருந்தார். பின்பு அவர் தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் நேரடியாகப் பேசும் போது புலிகள் கேட்டதைக் கேட்க வேண்டாம் எனவும் தன்னிடம் நியாயமான தீர்வுத் திட்டம் இருப்பதாகவும் தெரிவித்தார். பின்பு அரசுக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்குமிடையே பேச்சுகள் இடம்பெறும் போதே பேச்சுகளுக்கு வெளியேதான் பொலிஸ், காணி அதிகாரங்களை வழங்கப் போவ தில்லை என்றார். அதேநேரம் இனப் பிரச்சினைத் தீர்வு தொடர்பாக முடிவெடுக்க நாடாளுமன்றத் தெரிவுக் குழு அமைக்கப்படும் எனவும் அதை அப்படியேதான் அமுல்படுத்தத் தயார் எனவும் தெரிவித்தார். அதுமட்டுமன்றி நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் நடவடிக்கைகளுக்குக் கால அவகாசம் குறிப்பிட முடியாது எனவும் தெரிவித்திருந்தார்.

### தமிழ் மக்களின் தெளிவு

இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக ஜனாதிபதியிடம் திட்டவட்டமான கொள்கை எதுவும் இல்லை என்பதையும் தமிழ் தேசியக் கூட்டமைப்புடனான பேச்சுகள், நாடாளுமன்றத் தெரிவுக் குழு போன் றவை காலத்தை இழுத்தடிக்கும் ஆயுதங்களாகப் பயன்படுத்தப்படுகின்றன என்பதையும் தமிழ் மக்கள் தெளிவாகவே புரிந்து வைத்துள்ளனர். இன்று இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் தொடர்பாகவும் இனப்பிரச்சினை தொடர்பாகவும் விடுக்கப்படும் அழுத்தங்களைச் சமாளிக்க மட்டுமே பேச்சுகள், நாடாளுமன்றத் தெரிவுக்குழு என்பன பயன்படுத்தப்படுகின்றன.

எப்படியிருப்பினும் ஒருபுறம் காலங்களை இழுத்தடித்துக் கொண்டு மறுபுறம் ஏற்கனவே மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களைக் கொஞ்சம் கொஞ்சமாகப் பறித்தும் தமிழ் மக்களின் நாடாளுமன்றப் பலத்தைக் குறைத்தும் சிங்களக் குடியேற்றங்கள் மூலம் தமிழர் வாழும் பிரதேசங்களின் ஆள்தொகை விகிதாசாரத்தை மாற்றியும் தமிழ் மக்களைப் பலவீனப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதுமட்டுமன்றி கொலைகள், ஆள்கடத்தல்கள், வெள்ளைவான் நடவடிக்கைகள், கிறிஸ் மனிதர்களின் பயங்கரங்கள் போன்றவை வலிந்து ஏற்படுத்தப்பட்டுப் பாதுகாப்பு என்ற பேரில் தமிழ், முஸ்லிம் மக்கள் வாழும் பிரதேசங்கள் அனைத்தும் இறுக்கமான இராணுவ வலைப்பின்னல்களுக்குள் கொண்டு வரப்படுகின்றன. இதன் மூலம் மக்கள் தமக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கு எதிராக ஜனநாயக வழியிலான போராட்டங்களைக்கூட நடத்த முடியாத இறுக்கம் ஏற்படுத்தப்படுகிறது.

### தமிழ், முஸ்லிம் மக்களை பலவீனப்படுத்தும் செயற்பாடு

இப்படியாகத் தமிழ், முஸ்லிம் மக்களை முழுமையாகப் பலவீனப்படுத்தி அவர்கள் எதிர்ப்புக் காட்ட முடியாத ஓர் இறுக்கமான நிலையை ஏற்படுத்தி இப்படியான ஒரு நிலையில் போலியான ஒரு தீர்வைத் தமிழ் மக்கள் மீது திணிப்பதே மஹிந்த ராஜபக்ஷவின் நோக்கம். ஆனால் மஹிந்த ராஜபக்ஷவோ எல்லோரும் ஏற்கும் ஒரு தீர்வையே தான் அமுல்படுத்தப் போவதாகக் கூறி தான் ஒரு நியாயமான தேசியத் தலைவர் போல் வேஷமிட்டு வருகிறார்.

**இது அரசின் ஒரு குரல்!**

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ எப்போதுமே தமிழ் மக்களின் அபிவிருத்தி, புனர்வாழ்வு தொடர்பாக அதீத அக்கறை கொண்டவராகத் தன்னைக் காட்டி வருபவர். உள்ளூராட்சித் தேர்தல்களில் தமிழ் மக்கள் வழங்கிய பேராதரவு குடிதண்ணீர் விநியோகத்துக்குத் தெருவிளக்குப் போடவும் வழங்கப்பட்ட ஆணை என்ற அற்புத விடயத்தைக் கண்டுபிடித்து வெளிப்படுத்திய பெருமை இவருக்கு உண்டு. எனினும் எப்போதுமே தமிழ் மக்கள் நலனில் அக்கறை கொண்டவராகத் தன்னைக் காட்டிக் கொள்வார். ஜனாதிபதி நாடாளுமன்ற தெரிவுக் குழு தீர்வுத் திட்டத்தை முன்வைப்பது தொடர்பாகக் காலக்கெடு விதிக்க முடியாது என்று அறிவித்தாலும்கூட பஸில் ஆறு மாதத்தில் திட்டம் முன் வைக்கப்படும் என்றுவிட்டார்.

**இது இரண்டாவது குரல்!**

இலங்கையின் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ ஓர் அரச உயர் அதிகாரியாக இருந்த போதிலும் இராணுவ மொழியிலேயே பேசிப் பழக்கப்பட்டவர். போரில் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் கொல்லப்பட்டமை தொடர்பாகச் சர்வதேசக் கண்டனங்கள் எழுந்தபோது போர் என்றால் மக்கள் இறப்பது தவிர்க்க முடியாதது என்ற உண்மையைத் துணிந்து வெளிப்படுத்தியவர். சரணடைய வெள்ளைக் கொடியுடன் வந்த புலி உறுப்பினர்களைக் கொல்லும்படி இவர்தான் கட்டளையிட்டார் என முன்னாள் இராணுவத் தளபதி சரத்பொன்சேகாவால் குற்றம் சாட்டப்பட்டதுமுண்டு.

> **இலங்கை அரசின் நிலைப்பாடு பற்றியும் இந்தியா தொடர்பான இவர்களின் அணுகுமுறை என்ன என்பது தொடர்பாகவும் கேள்விகளை எழுப்பியுள்ளன. அதுமட்டுமன்றி இராஜதந்திர வழிமுறைகள் உதாசீனம் செய்யப்படுவதற்குக் காரணம் அகங்காரமா அல்லது அறிவீனமா என்ற கேள்வியும் எழும்பியுள்ளது.**

இவர் அண்மையில் 'ஹெட் லைன் ருடே' தொலைக்காட்சிக்கு வழங்கிய பேட்டியில் விடுதலைப் புலிகள் அழிக்கப்பட்டுவிட்டனர் எனவும் இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக அரசியல் சட்டத்தில் திருத்தம் தேவையில்லை எனவும் இப்போது இருப்பதே போதுமானது எனவும் தெரிவித்திருந்தார். அதுமட்டுமன்றி போர்க் குற்றங்கள், இனப்பிரச்சினை தொடர்பாகத் தமிழக சட்ட சபையில் கொண்டு வரப்பட்ட தீர்மானம் தொடர்பாக செல்வி ஜெயலலிதா அரசியல் லாபத்தை நோக்கி அந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்ததாகத் தெரிவித்தார்.

### இந்தியாவுடன் நல்லுறவு கொண்டுள்ள மஹிந்த

மஹிந்த ராஜபக்ஷ காலவரையறை இன்றியும் பஸில் ராஜபக்ஷ 6 மாதத்திலும் நாடாளுமன்றத் தெரிவுக்குழு மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு எட்டப்படும் எனத் தெரிவித்த அதேவேளையில் இவர் இப்படியான ஓர் எதிர்மாறான கருத்தை வெளியிட்டுள்ளார்.

மேலும் தமிழக சட்டசபையின் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் மூலம் மத்திய அரசிடமே கோரிக்கை முன் வைக்கப்பட்டது. அதற்கேற்ப நடவடிக்கை எடுப்பதும் விடுவதும் மத்திய அரசின் முடிவைப் பொறுத்தது. அப்படி இலங்கை அரசுக்கு விரோதமான, முறையற்ற ஏதாவது அம்சங்கள் இருந்தால் அது தனது ஆட்சேபனையை இந்திய மத்திய அரசுக்கு தெரிவிக்க வேண்டும். ஆனால் கோத்தபாய நேரடியாகவே தமிழக முதல்வர் ஜெயலலிதாவை நேரடியாகச் சாடியதன் மூலம் இராஜதந்திர நடைமுறைகளுக்கு அப்பால் சென்று தன் அகங்காரத்தை வெளிப்படுத்தியுள்ளார். ஆனால் ஜனாதிபதி மஹிந்தவோ இந்தியாவுடன் நல்லுறவைப் பேணி வருவதுடன் மேற்குலக அழுத்தங்களைத் தணிக்க இந்தியாவையே நம்பியுள்ளார்.

**இது மூன்றாவது குரல்!**

ஆனால் இம் மூன்று குரல்களும் ஒன்றுக்கொன்று முரண்பாடாகவும் எதிரெதிராகவும் இருந்தபோதும் ஜனாதிபதியால் மற்ற இருவரும் தண்டிக்கப்படுவதுமில்லை; விளக்கம் கோரப்படுவதுமில்லை.

இப்படி ஒரே மையத்தில் இருந்து வெளிப்படும் குரல்கள் வெவ்வேறு விதமாக ஒலித்த போதிலும் இன ஒடுக்குமுறை என்ற ஒரே புள்ளியை நோக்கி நகர்பவை என்பது தெளிவான விடயம். இதைத் தமிழ் மக்கள் நன்றாகவே புரிந்து வைத்துள்ளனர். ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்கள் இலங்கையில் செயற்படுவதற்கு அனுமதிக்க சரியான தருணம் இது

இலங்கை வங்கியின் தற்போதைய தலைவரான கலாநிதி காமினி விக்கிரமசிங்க இந்த நாட்டின் தகவல் தொழில்நுட்பத் துறைக்கு ஆற்றிய முன்னோடிப் பணிகளால் ஒரு முக்கிய பிரமுகராக விளங்குகின்றார். 1983ஆம் ஆண்டில் அவர் அமைத்த இன்ஃபோமட்டிக்ஸ் நிறுவனம் கணினி மென்பொருள் அபிவிருத்தியில் முன்னணி வகிப்பதுடன், புதிய மற்றும் புரட்சிகரமான கணினி மென்பொருள்களைச் சர்வதேசச் சந்தைக்கு வழங்கி வருகிறது. அதே சமயத்தில், கலாநிதி காமினி விக்கிரமசிங்க தனியார் துறைக் கல்வியின் முன்னோடியாகவும் விளங்குகிறார் என்பது பலர் அறியாத விடயமாகும். புகழ்பெற்ற மான்செஸ்டர் மெட்ரபொலிட்டன் பல்கலைக்கழகத்துடன் இணைப்பை ஏற்படுத்திய அவர் 1990ஆம் ஆண்டில் Informatics Institute Of Technology (IIT) என்ற அமைப்பை நிறுவினார்.

ஆரம்பத்தில் மான்செஸ்டர் மெட்ரபொலிட்டன் பல்கலைக் கழகத்துடன் இணைந்து செயற்பட்ட IIT இப்பொழுது பிரிட்டனைச் சேர்ந்த வெஸ்ட்மின்ஸ்டர் பல்கலைக்கழகம், கீல் பல்கலைக்கழகம் ஆகிய புகழ்பெற்ற கல்வி அமைப்புக்களுடனும் தொடர்புகளை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கையை உயர் கல்விக்கான ஓர் கேந்திர ஸ்தானமாக்குவதற்கு உள்ள வாய்ப்புக்கள் பற்றியும் IIT யின் எதிர்காலத் திட்டங்கள் பற்றியும் கலாநிதி காமினி விக்கிரமசிங்க இந்தப் பேட்டியில் தனது கருத்துக்களைத் தெரிவிக்கிறார்.

**கேள்வி:** நீங்கள் கல்வித் துறையில் எவ்வாறு சம்பந்தப்படத் தொடங்கினீர்கள்?

**பதில்:** 1990ஆம் ஆண்டில், மாண்புமிகு லலித் அத்துலத்முதலி அவர்கள் கல்விக்குப் பொறுப்பான அமைச்சராக இருந்தபோதே IIT ஆரம்பிக்கப்பட்டது. அமைச்சர் எமக்கு ஆலோசகராக இருந்தார். அக்காலத்தில் தேசிய கல்வித் துறையானது முழுமையாக அரச கட்டுப்பாட்டில் இருந்தது. 80களின் பிற்பகுதியில் இடம்பெற்ற மக்கள் விடுதலை முன்னணிக் கிளர்ச்சியைத் தொடர்ந்து மாணவர்களிடையே பாரதூரமான அமைதியின்மை நிலவியதால் கல்வித் துறையில் தனியார் அமைப்புக்களையும் ஈடுபடுத்த வேண்டும் என்று கருதிய அமைச்சர் அதற்கான வழிகாட்டுதல்களை வழங்கினார். அவ் வேளையில் தனியார் வைத்தியக் கல்லூரி தொடர்பாகவும் பிரச்சினைகள் நிலவின. மாணவர்கள் தனியார் பல்கலைக் கழகப் பட்டம் ஒன்றைப் பெறுவதற்கு மிகப் பெருந்தொகையான பணச் செலவில் பிரிட்டனுக்கு அல்லது ஐக்கிய அமெரிக்காவுக்குச் செல்ல வேண்டியிருந்தது. சில வருடங்கள் இந்த நாட்டிலும் இறுதி வருடம் வெளிநாட்டிலும் பயின்று பட்டம் பெறக் கூடிய வாய்ப்பை சில உள்நாட்டுக் கல்வி நிலையங்கள் வழங்கத் தொடங்கின. இந்த வேளையிலேதான், முழுப் பட்டப் படிப்பையும் இலங்கையிலேயே மேற்கொண்டு, பிரிட்டிஷ் தகைமையைப் பெறக்கூடிய கல்வித் திட்டங்களை நாம் ஆரம்பித்தோம்.

**கேள்வி:** நீங்கள் உருவாக்கும் பட்டதாரிகளுக்கு தொழிற்றுறை எவ்விதமான வரவேற்பை அளிக்கிறது? அல்லது அவர்கள் உங்களது தகவல் தொழில்நுட்பக் கம்பனிகளால் மட்டுமா வேலைக்கு அமர்த்தப்படுகின்றனா்?

**பதில்:** IIT பட்டதாரிகள் தமது இறுதி முடிவுகளைப் பெறுவதற்கு முன்பே, அவா்களுக்குத் தொழில் வாய்ப்புக்கள் முன்வைக்கப்படுகின்றன. நம்பிக்கைதான் இதற்குக் காரணமென்று நான் நினைக்கிறேன். மற்றைய தகவல் தொழில்நுட்ப நிலையங்களிலிருந்து IIT வித்தியாசப்படுவது எப்படியெனில், கற்கை நெறியின் 3ஆவது ஆண்டில் நாம் தொழில் முன்னிலைப் பயிற்சியை வழங்குவதுதான். சகல IIT பட்டதாரிகளும் இறுதிப் பரீட்சைக்கு முன்பதாக ஒரு வருட காலத்துக்கு தொழில் முன்னிலைப் பயிற்சியைக் கட்டாயமாகப் பெற வேண்டும். பட்டதாரிகள் தன்னம்பிக்கையையும் தொழிலுக்குத் தேவையான திறமைகளையும் பெற்றுக்கொள்ள இது உதவுகின்றது.

**கேள்வி:** IIT எத்தகைய எதிர்காலத்தை நோக்கிச் செல்கிறது? தனியார் துறைக் கல்வியின் எதிர்காலம் என்ன?

**பதில்:** இது ஒரு பொருத்தமான கேள்வி. இலங்கையில் இப்பொழுது சுமார் 237,000 மாணவர்கள் க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றுகின்றனர். இவா்களில் 23,000 பேருக்கு மட்டுமே பல்கலைக்கழகங்களில் இடம் கிடைக்கிறது. மற்றவர்களின் நிலை என்ன? தற்போதைய உயர் கல்வி அமைச்சா் இந்த நிலைமையை மாற்றுவதற்கு ஏதாவது நடவடிக்கை எடுக்க முயற்சி செய்கிறார்.

இலங்கைக்கு வந்து செயற்பாடுகளை ஆரம்பிக்கும்படி வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களுக்கு அமைச்சர் வேண்டுகோள் விடுத்துள்ளார். புதிய வளாகங்களை ஆரம்பித்து உயர் கல்வித் துறையை விருத்தி செய்வதற்காக, தகவல் தொழில்நுட்பம் உள்ளிட்ட தனியார் கல்வி நிலையங்களுக்குக் காணி மற்றும் ஏனைய வசதிகளை வழங்குவதற்கும் அவர் முன் வந்துள்ளார்.

இந்தியா, பாகிஸ்தான் போன்ற அயல்நாடுளைச் சேர்ந்த மாணவர்கள் மட்டுமன்றி, மேற்கு நாடுகளைச் சேர்ந்த மாணவா்களும் தமது உயர் கல்விக்காக இலங்கை வளாகங்களைத் தெரிவு செய்வார்கள் என்று நான் நம்புகிறேன்.

**கேள்வி:** அதாவது, கல்வியை சந்தைப்படுத்த வேண்டுமென நீங்கள் கருதுகிறீர்கள். வெளிநாட்டில் இதனைப் பிரசாரம் செய்வதற்கு அரசாங்கத்தினால் உதவ முடியுமா?

**பதில்:** சர்வதேசத் தரத் திற்கு அமைவான கல்வி முறை, கற்கை நெறிகள், தகைமைகள் என்பவற்றை நாம் வகுத்துக்கொண்டால், உலகின் எப்பகுதியைச் சேர்ந்த மாணவர்களும் அவற்றைப் பயன்படுத்த முன்வருவார்கள். சர்வதேச வாகனச் சாரதி அனுமதிப்பத்திரம் போல. நாம் எமது வசதிகளையிட்டுப் பிரசாரம் செய்ய வேண்டும்.

**கேள்வி:** இதை எப்படிச் செய்வது? அரசாங்க தனியார் துறைகளின் கூட்டு முயற்சியா அல்லது வேறேதும் வழிமுறையா?

**பதில்:** இலங்கை அரசாங்கம், ஏற்றுமதி அபிவிருத்திச் சபை, கல்வி அமைச்சு என்பன இணைந்து செயற்பட வேண்டும். தற்போது சுகாதாரத் துறையில் செய்யப்படுவதைப் போல. இலங்கை இப்பொழுது பொருளாதார வளர்ச்சிப் பாதையில் அடியெடுத்து வைத்துள்ளது. சர்வதேச கல்வி மத்திய ஸ்தானம் ஒன்றாக இலங்கையை மாற்றுவதற்கு இது தகுந்த சூழ்நிலையாகும். ஆகவே, சிறந்த பல்கலைக்கழகங்கள் இங்கு வந்து செயற்பாடுகளை மேற்கொள்ள இடமளிக்கப்பட வேண்டும்.

**கேள்வி:** நீங்கள் இலங்கை வங்கியின் தலைவராக இருப்பதால், உங்கள் கூற்றுக்கள் அரசியல் நோக்கம் கொண்டவையெனக் கருதப்படலாம் அல்லவா?



இலங்கை வங்கியின் தலைவரும் ஐ.ஐ.ரியின் பணிப்பாளருமான கலாநிதி காமினி விக்கிரமசிங்க.

**பதில்:** இல்லை. இது ஓர் அரசியல் கூற்று அல்ல. இது அபிவிருத்திக்கான ஒரு பொருளாதார உண்மை. நாட்டின் நலனுக்காகத் தெரிவிக்கப்படும் கருத்து. பிரிட்டிஷ் கவுன்சில் உள்ளிட்ட பல்வேறு அமைப்புக்களினால் வருடா்ந்தம் நடத்தப்படும் கல்விக் கண்காட்சிகளைப் பாருங்கள். ஒவ்வொன்றிலும் சராசரியாக 40க்கு மேற்பட்ட பல்கலைக்கழகங்கள் பங்குபற்றுகின்றன. ஏன் அவை இங்கு வருகின்றன? ஏனெனில், பெருந்தொகைப் பணத்தைக் கட்டணமாகச் செலுத்தும் வெளிநாட்டு மாணவர்கள் அந்தப் பல்கலைக்கழகங்களுக்குத் தேவை. எனவே, இங்குள்ள மாணவர்களைக் கவர்வதற்காக புலமைப்பரிசில்கள், ஊக்குவிப்புச் சலுகைகள் போன்ற சந்தைப்படுத்தல் உத்திகளை அவை பயன்படுத்துகின்றன. நாமும் அதையே செய்ய வேண்டும். இலங்கை அதற்கான காலகட்டத்திற்கு வந்துவிட்டதென நான் நினைக்கிறேன். இதற்கான வாய்ப்பைத் தனியாரா் துறையினருக்கு வழங்கினால், அவர்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டு, பணியை நேர்த்தியாகச் செய்வார்கள். - என்றார்.

# "வீட்டுக்கு வீடு மனிதாபிமானம்" சி.ஐ.சி. துரித விவசாய அறிவுரை படை



சி.ஐ.சி. விவசாய வியாபாரத்தின் (C.I.C.Agri Businesses) மனிதாபிமானம் (Humanity) எனும் செயற்திட்டமானது கிராமிய வாழ்க்கைத்தரத்தினை உயர்த்துவதன் மூலம் தேசிய விவசாய அபிவிருத்திக்கான உறுதிமொழியை வழங்குகின்றது.

இச்செயற்திட்டத்தின் ஓர் அங்கமாகவே சி.ஐ.சி. துரித விவசாய அறிவுரை படை (C.I.C. Rapid Agriculture Advisory Force ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இப்படையில் சி.ஐ.சி. விவசாய வியாபாரத்தின் தலாவ, கிங்குராங்கொடை, பல்வேகர, வெலிகந்த, புணானை ஆகிய பண்ணைகளிலும் மற்றும் கந்தானை, நுவரெலியா, பேராதனை, லுணுவில, மாத்தளை போன்ற பல்வேறு பயிற்சி நிலையங்களிலும் விசேட பயிற்சிபெற்ற 10 உறுப்பினர்கள் அங்கத்துவம் வகிக்கின்றனர்.

இவர்கள் ஒரு வருடத்தினுள் இலங்கையின் சகல பகுதிகளிலும் தமது விரிவாக்க சேவையை வழங்குவதற்காக அதிநவீன தொழில்நுட்பத்துடன் கூடிய பேருந்துடன் விவசாயிகளை நாடிவந்து பயிர்ச்செய்கை மற்றும் கால்நடைவளர்ப்பு சம்பந்தமான பிரச்சினைகளுக்கு அறிவுரை வழங்குவதுடன், பொருத்தமான நவீன தொழில்நுட்ப உத்திகளை கையாள்வது தொடர்பான ஆலோசனை வகுப்புக்களையும் நடத்திவருகின்றனர்.

இந்தவகையில் இம்மாதம் இக்குழுவினர் யாழ்.நகரில் தமது சேவையினை விவசாயிகளிற்கு வழங்கிவருவதுடன் எதிர்வரும் மாதங்களில் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் தமது விவசாய நவீன தொழில்நுட்ப மற்றும் விரிவாக்க சேவையினைத் தொடரவுள்ளனர்.

# எயார்ரெல் நிறுவனம் வழங்கும் இலவச பாதுகாப்புச் செய்திச் சேவை

அனர்த்த முகாமைத்துவ அமைச்சுடன் இணைந்து முதன் முதலாக ஆரம்பிக்கப்படுகின்ற இத்தகைய ஒரு சேவை.

எயார்டெல்லின் அனைத்து வாடிக்கையாளர்களும் தற்போது அனைத்து பூகோளவியல் பாதகமான காலநிலைகள் மற்றும் இயற்கை அனர்த்தங்கள் தொடர்புபட்ட உடனடித் தகவல்களை இலவசமாகப் பெற்றுக் கொள்ள முடிகின்றது.

இந்தச் சேவையினைப் பெற்றுக் கொள்வதற்கு வாடிக்கையாளர்கள் தங்களது எயார்டெல் மொபைல் மூலமாக மிக இலகுவாக FSACT< இடைவெளி >SA என டைப்செய்து 7544 இற்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

இந்தியாவில் மிகப் பெரிய தொலைதொடர்பாடல்கள் நிறுவனமான பார்தி எயார்டெல்லின் ஒரு துணை நிறுவனமான பார்தி எயார்டெல் லங்கா நிறுவனம் பாதுகாப்புத் தொடர்பான தனது இலவசமான செய்தி உசார்படுத்தல் சேவையினை அண்மையில் ஆரம்பித்துள்ளது.

அனர்த்த முகாமைத்துவ அமைச்சுடன் இணைந்து ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்தச் சேவையின் மூலமாக அதனைப் பெற்றுக் கொள்வதற்காகப் பதிவு செய்து கொண்டுள்ள எயார்டெல்லின் அனைத்து வாடிக்கையாளர்களும் இலங்கையிலும், உலகின் இதர பகுதிகளிலும் பாதகமான காலநிலைப் போக்குகள் மற்றும் இயற்கை அனர்த்தங்கள் எனப் பாதுகாப்புத் தொடர்பில் ஏற்படக்கூடிய ஆபத்துக்கள் சம்பந்தமான உடனடி செய்தி உசார்படுத்தல்களைப் பெற்றுக்கொள்ள முடிகின்றது.

குறுஞ்செய்திச் சேவையினை (SMS) அடிப்படையாகக் கொண்டு இத்தகைய வகையில் முதன் முதலில் அறிமுகமாகின்ற இந்தச் சேவையினை எயார்டெல்லின் அனைத்து வாடிக்கையாளர்களும் தங்களது எயார்டெல் மொபைல் தொலை பேசியில் FSACT< இடைவெளி >SA என ரைப் செய்து 7544 இற்கு அனுப்பிவைப்பதன் மூலம் பெற்றுக்கொள்ள முடிகின்றது.

(த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாபவனத்தின் பெருவிழுது கலாகீர்த்தி சாந்தினி சிவநேசன்

கலைச்செல்வன் ஏரம்பு சுப்பையாவின் கடின உழைப்பால் ஈழத்தில் பெருவளர்ச்சி கண்ட பரதக் கலையை அவர் வழியில் இன்று வரை உயிர்ப்புடன் வளர்த்து வருபவர் அவரது மகள் சாந்தினி சிவநேசன். செவிக்கும் விழிக்கும் அளவிடற்கரிய இன்பம் தரும் இக்கலையானது தென்னகத்தின் மரபு வழி ஆடலாக உருப்பெற்று தமிழ்நாட்டில் எழுச்சியும் வளர்ச்சியும் கண்டு ஈழத்திலும் அறிமுகமானபோது அதனை உரிய வழிமுறையில் வளர்த்தவர்களுள் கலைச்செல்வன் ஏரம்பு சுப்பையா முதன்மையானவர். பொதுமக்களால் விரும்பப்படாத கலையாக இக்கலை இருந்த அந்தக் காலத்தில் தென்னிந்தியாவுக்குச் சென்று நடன மேதைகளிடம் வரன்முறையாக நடனக் கலையைக் கற்று நாடு திரும்பிய பின் இலங்கையின் முதலாவது நடன ஆசிரியராக அரச நியமனம் பெற்றார். அதன்பின் தனது வீட்டில் மண்டபமும் மேடையும் அமைத்து 'கலாபவனம' எனும் நிறுவனத்தைத் தொடங்கி அதன் ஊடாகப் பரதக் கலைக் கல்வியானது அனைவருக்கும் கிடைக்கும் வகை செய்தார். இவ்வாறு 1958இல் தனது தந்தையால் தொடங்கப்பட்ட கலாபவனத்தின் மரபு தவறாத பரதக்கலைப் பணியை இன்றுவரை செவ்வனே தொடர்ந்து வருபவர் சாந்தினி சிவநேசன்.



சாதனைக் கலைஞரைச் சந்திப்போம் சிந்திப்போம் 7

காலம் சென்ற சுப்பையா பூரணம் தம்பதியரின் மகளாக 03.01.1952 இல் கொக்குவில் எனும் ஊரில் இவர் பிறந்தார். ஈழத்தின் பரதக் கலை முன்னோடியான தனது தந்தையிடம் குழந்தைப் பருவத்திலிருந்தே பரதக் கலையைக் கற்கத் தொடங்கிய இவர் தந்தையால் இலங்கை முழுவதும் ஆற்றுகை செய்யப்பட்ட அனைத்து நடன நிகழ்வுகளிலும் முக்கிய நர்த்தகியாக விளங்கி கல்வியிலும் சிறந்து விளங்கினார். எஸ். நாராயணன், எஸ். பாலசிங்கம், எஸ்.கணபதிப்பிள்ளை, த.இராசலிங்கம், விஸ்வநாதஐயர் போன்றோரிடம் குரலிசையையும் கற்றுத் தனது பாடசாலைக் கல்வியை முடித்த பின் 1969இல் தென்னிந்தியா சென்று கேரளா குரு கோபனாத்திடமும் அடையார் பத்மஸ்ரீ கே.லக்ஷ்மனிடமும் மரபு வழியான நடனக் கலையைப் பயின்று தன்னை வளப்படுத்திக்கொண்டார். அத்துடன் தமிழகத்தின் பல பாகங்களிலும் நடன ஆற்றுகைகளை அவ்வூர்க் கலைஞர்களுடன் இணைந்து வழங்கி ஆற்றுகைத் துறைசார்ந்த அனுபவங்களையும் நிறைவாகப் பெற்று நாடு திரும்பினார்.

1978இல் மருதனார்மடம் இராமநாதன் மகளிர் கல்லூரியில் நடன ஆசிரியராக அரச நியமனம் பெற்று ஆசிரியப் பணிபுரிந்து அதன் பின் 1991ஆம் ஆண்டிலிருந்து கோப்பாய் அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் விரிவுரையாளராகப் பணியாற்றி வருகின்றார். அத்துடன் யாழ்.பல்கலைக்கழக நடனத் துறையில் வருகை விரிவுரையாளராகவும் பரீட்சகராகவும் கடமையாற்றிவரும் இவர் வட இலங்கைச் சங்கீத சபையின் நிர்வாக சபை உறுப்பினராகவும் பல ஆண்டுகளாகப் பணியாற்றி வருவதுடன் புலம்பெயர் நாடுகளுக்கும் சென்று கலைப்பணியாற்றி வருகின்றார்.

நுண்கலைகள் நிறுவனமயப்படுத்தப்பட்டு அவற்றின் தூய்மைகள் கேள்விக் குறியாக்கப்பட்டுக் கொண்டிருக்கப்படும் இந்தக் காலத்தில் இவரால் பேணப்பட்டு வரும் கலா பவனத்தின் ஊடான பரதக்கலைப் பண்பாடானது தற்காலத்தில் முக்கியத்துவம் பெற்று வருகின்றது. மரபு வழி தவறாத முறையில் நாட்டிய அமைப்புக்களை மேற்கொள்ளும் இவர் இதுவரையில் ஏராளமான புத்தாக்கங்களை மேற்கொண்டு சாதனை படைத்த ஒருவராகவும் காணப்படுகின்றார். இருபத்தைந்துக்கும் மேற்பட்ட நாட்டிய நாடகங்களை நெறியாள்கை செய்து மேடையேற்றிய இவரின் நாட்டிய அமைப்பில் யாழ்.நாடக அரங்கக் கல்லூரியால் 2003இல் மேடையேற்றப்பட்ட 'ஆர் கொலோ சதுரர்' என்னும் பிரமாண்டமான படைப்பானது ஈழத்தின் நாட்டிய நாடக வரலாற்றிலே பெரும் மாற்றத்தை ஏற்படுத்தி முக்கியத்துவம் பெற்று நிற்கின்றது.

சிறந்த நர்த்தகியாக ஈழத்தின் நடன அரங்குகளைச் சிறப்புச் செய்து வந்த இவர் தற்போது ஒப்பற்ற ஆசிரியராகவும் படைப்பாளியாகவும் திகழ்ந்து வருகின்றார். நடன அரங்கத்துக்குரிய முக்கியமான உருப்படிகளான பதவர்ணங்கள், தில்லானாக்கள், பதங்கள் போன்ற எண்ணற்ற உருப்படிகளைத் தனது நாட்டிய அமைப்புத் திறனால் சிறப்புச் செய்திருக்கும் இவர் நூற்றுக்கணக்கான கீர்த்தனைகளுக்கும் நடன அமைப்பை மேற்கொண்டுள்ளார். அத்துடன் இருநூறுக்கும் மேற்பட்ட கலாவித்தகர்களை உருவாக்கியிருக்கும் இவரது இருபத்தைந்துக்கும் அதிகமான மாணவர்கள் அரங்கேற்றம் கண்டுள்ளனர். ஈழத்தில் தற்போது நடனத்துறையின் முதுகலைஞர்களாக விளங்கும் அனைவரையும் உருவாக்கிய கொக்குவில் கலாபவனமானது இவரின் அயராத உழைப்பால் பல தசாப்தங்களைக் கடந்தும் தன் பணியைத் தொடர்ந்து வருகின்றது.

நாட்டியக் கலையைக் கற்று அந்தத் துறையில் ஆசிரியராகவோ ஆற்றுகையாளராகவோ விளங்கும் ஒருவர் தனது இசையறிவையும் மேம்படுத்திக்கொள்ள வேண்டும். ஏனெனில் ஆடற்கலைக்கு உறுதுணையாய் விளங்குவது இசையாகும். இவ்விசையானது பாடல்களாகவும் கருவியிசையாகவும் நடன அரங்குகளில் தேவைக்கேற்ப பயன்படுகின்றது. இசையை இரசித்துப் பாடலின் சுவையை அனுபவித்து நாட்டிய அமைப்புக்களை மேற்கொள்ளும் போதே நடன உருப்படிகள் நன்றாக அமைவதுடன் பார்ப்பவர்களையும் மகிழ்விக்கின்றன. அதேபோல் நடன அரங்குக்கான இசையாளரும் நடனக் கலைபற்றிய அறிவைக் கொண்டவராக இருந்தால் நாட்டிய நிகழ்வுகள் சிறப்பாக அமையும். இவ்வாறு இசையறிவு கொண்ட நடனவியலாளரும் நடன அறிவுகொண்ட இசையாளரும் இணைந்த நடன அரங்குகளே பரத நாட்டியக் கலையைப் பல்லாண்டு காலமாக வளர்த்து வந்துள்ளன. ஆனால் தற்காலத்தில் ஒலிப்பதிவுகளை ஒலிக்கவிட்டு அதன் துணையோடு நடன நிகழ்வுகளை வழங்கும் முறையானது யாழ்ப்பாணத்தில் முளைவிடத் தொடங்கியுள்ளது. குருவின் நேரடியான ஆசீர்வாதமும் இசையாளர்களின் நுட்பமான அனுசரணையும் மேடையில் கிடைக்கும் போதே ஒரு நர்த்தகரால் மரபு தவறாத ஆற்றுகையை வழங்க முடியும். இறுவட்டின் துணையுடன் ஆடும் போது கற்பனை வளம் தடைபட்டுப் போகும். ஆகவே பரதக் கலையின் உயிர்ப்பைப் பேண அனைத்து நடனவியலாளர்களும் முன்வர வேண்டும் என்று தனது கருத்துக்களை இவர் கூறுகின்றார். ✻

**வசாவிளான் தவமைந்தன்**

# மூலநோய்க்கு சிறந்தது வட்டத்துத்தி இலை

## மருதோன்றி

**வேறுபெயர்:** மருதாணி, அழவணம்
**தாவரவியற் பெயர்:** Lawsonia alba (லோசோனியா அல்பா)
**குடும்பம்:** Lythraceae (லித்ரேசியே)
**சிங்களப் பெயர்:** மருதோன்றி
**சமஸ்கிருதப்பெயர்:** குரவக, மெண்டி
**ஆங்கிலப்பெயர்:** Henna plant

மருதாணி மங்கலகரமான ஒரு தாவரமாகும். இதன் இலையை தேசிப்புளிவிட்டரைத்து நகங்களுக்குப் பூசி நிறமூட்டும் வழக்கம் பெண்களிடையே காணப்படுகின்றது. நகங்களில் மட்டுமன்றி உள்ளங்கை கால்களிலும் பூசுவர். இதனால் நகங்கள் அழகாக இருப்பதுடன் நகம் சம்பந்தமான நோய்களும் ஏற்படமாட்டாது. மருதாணியிடுதலைச் சிலர் சடங்காகவே செய்வதுண்டு. திருமணமான பெண்கள் மருதாணியிட்டு அது எவ்வளவு தூரம் சிவக்கிறதோ அந்தளவுக்குக் கணவனின் ஆசை தம்மீது இருக்கும் என்று கருதுவர்.



மருதோன்றி சிறு மரவகுப்புக்குரியது. தண்டு வெள்ளை கலந்த நரை நிறம், சற்று நார்த்தன்மையாக இருக்கும், முட்களுண்டு, கிளைகள் கொடிபோல வளைந்திருக்கும், தனி இலைகள் ஈட்டிவடிவானவை, எதிரான இலைகள் ஒழுங்கு பச்சைநிறம், பூக்கள் வெள்ளைநிறம், காண்கள் சிறியவை, உருண்டை வடிவானவை.

**நலம்தரும் தெய்வீக மூலிகைகள்**

இதன் இலை, பூ, விதை, பட்டை என்பன மருத்துவத்தில் பயன்படுகின்றன. முன் கூறியது போல இலையைத் தேசிப்புளிவிட்டரைத்துக் கைகால் எரிவு, நகப்புண், நகம் உடைதல் என்பவற்றுக்கும் பூசிவர அவைமாறும். இலைச்சாற்றை கருவேப்பிலைச் சாறு நல்லெண்ணெய் என்பவற்றுடன் சேர்த்துக் காய்ச்சித் தலைக்கு வைத்து வர முடியுதிர்தல், இளநரை என்பன குண மாகும்.

## வட்டத்துத்தி

**வேறுபெயர்:** துத்தி
**தாவரவியற்பெயர்:** Abutelon indicum (அபிற்றிலோன் இண்டிக்கம்)



**குடும்பம்:** Malvaceae (மல்வாசியே)
**சிங்களப் பெயர்:** அனோட
**சமஸ்கிருதப் பெயர்:** அதிபல
**ஆங்கிலப் பெயர்:** Country mallow

இது சிறு செடி. தனி இலைகள். வட்டமாகவும், நுனி சற்றுக் கூராகவும் இருக்கும். பூக்கள் மஞ்சள் நிறம், காய் வட்டமாகவும் பிளவுபட்டுமிருக்கும்.


இதன் இலை நெய்விட்டு வதக்கி உணவுடன் சேர்த்து உண்டு வர மூல நோய் குணமாகும். இலையை வாட்டி வீக்கம், புண்களில் கட்டிவர மாறும்.



Dr. சே.சிவசண்முகராஜா M.D (S),

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்சிலம்பம் - போட்டி இல: 176



அனுப்புபவர் பெயர்:.................................................

விலாசம்:.................................................

.................................................

கையொப்பம்:.................................................

### இடமிருந்து வலம்

1. மூச்சுவிடும் செயன்முறை
4. மரணத்தின் பின்னர் அமைதி அடையும் இடம்
7. பொருந்தும்
8. பகைவன்
9. பஞ்சு தரும் மரம்
10. கடன் இறுக்க முடியாத நிலைமை
12. நீர்த்தன்மை உடையவை
13. மன்மதன் மனம் கவர்ந்தவள்
14. இலாபம்
15. ஏழு நாள்கள் கொண்டது.
16. பணி
17. அன்பு/ நட்பு
18. விவசாயியின் ஆயுதம்
19. இனிப்புச் சுவை தருவது
20. எதிரி.

### மேலிருந்து கீழ்

1. என்று தணியும் இந்தத் தாகம்?
2. உடற்கட்டு
3. பக்க உணவு
4. மடம்
5. பெண்மணி
6. இந்துக்கள் படிப்பது
8. மெய்
11. வாதமிடுபவன்
14. உடற்றொகுதி
15. மணம்
16. பல சேர்ந்து உருவானது
17. முன்னாள் இந்தியப் பிரதமர்

### போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவான தாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து பேர்களுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200/=, ரூபா150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிஷ்ட சாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள், **சொற்சிலம்பம் போட்டி இல. 176** *நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்)லிமிடெட்,* இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், 31.08.2011 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப் படவேண்டும்.
7. சொற்சிலம்பம் போட்டி இல.176 இற்கான விடைகள் 04-09-2011 ஞாயிறு உதயனில் ஞாயிறு உதயனில் பிரசுரமாகும்.

★வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ **சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 174 இற்கான சரியான விடைகள் வருமாறு:**

### இடமிருந்து வலம்

(1) அப்பாவி (4) அமுது (7)ரதம் (8)கரு (9) தாமதம் (11) சதம். (12)திடம் (13)தம் (14) தருமதி. (16)பாகுபாடு (18)தரிசு (20) கப்பம். (22) கரும்பு (23)வீடு.

### மேலிருந்து கீழ்

(1) அந்தாதி (2)பாரதம். (5)முகதா. (6)துரும்பு (10) மடங்கு. (11) சம்மதம் (13) தரு (14) தடுப்பு (15) திரி (16) பாடு (17) பாகம். (19)கண்டு (21) பலி.

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 174 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல்மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு** — **க.எழில்வேந்தன்**
மே.பா. அ.சி. முருகேசு, சாரதா வீதி,
சங்கத்தானை, சாவகச்சேரி.

**2 ஆம் பரிசு** — **நேசராஜ் வித்தியாசாகர்,**
கிளி/ கிளிநொச்சி ம.வி. கிளிநொச்சி.

**3 ஆம் பரிசு** — **K. இரங்கநாதன்,**
பிரதான தபாலகம், யாழ்ப்பாணம்.

**4 ஆம் பரிசு** — **மூ.முத்துராஜா,**
திகிரி லேன், தும்பளை, பருத்தித்துறை.

**5 ஆம் பரிசு** — **சு.திருப்பரங்கிரிநாதன்,**
இமையாணன், உடுப்பிட்டி.

### பாராட்டுப் பெறுவோர்

**வி. அன்ரனிற்றா,**
இல.31, புது வீதி, 1 ஆம் ஒழுங்கை,
கொய்யாத்தோட்டம்.

**பா.பிரான்சிஸ்க்கா,**
மீசாலை கிழக்கு, மீசாலை.

**மயில்வாகனம் யாகினி,**
மந்துவில் வடக்கு, கொடிகாமம்.

பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.
யாழ். மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலிருந்து பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்பட்டோருக்கான பணப்பரிசில்கள் காசோலை மூலம் காலக்கிரமத்தில் அவர்களது விலாசத்துக்குப் பதிவுத் தபால்மூலம் அனுப்பிவைக்கப்படும்.

# வாடகை....

(13 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிள்ளைகளையும் தேவியையும் காப்பாற்றிக் கரை சேர்த்தவருக்கு தன்னைக் காப்பாற்ற முடியாமல் போய்விட்டது. போர் கலைத்த திசையெல்லாம் ஓடிக்குந்தியிருந்த வீடிழந்து, சொத்திழந்து, சொந்தமிழந்தபோதும் குடும்பத் தலைவனாய் நின்றவனின் பாதுகாப்பில் இடம்பெயர்ந்து இடம்பெயர்ந்து குருவிக் கூடு குலையாமல் வாழ அவன் துணை இருந்தது ஞாபகத்தில் நின்றது.

இப்போது எந்தப் பாதுகாப்பும் இல்லாமல் பிள்ளைகள் படிக்க வேண்டிய வயதில் கடையிலும், தனியார் நிறுவனங்களிலும் சிறு தொழில் புரிந்து வாழவேண்டிய நிலை "எங்களைத் தடம்புரள வைத்தது போரென்றால் இந்தப் பொன்னம்மா பாட்டியின் சொல் ஏனோ நாம் பிறந்தோம் என்ற வேதனையையும் வெறுப்பையும் விதைத்து நிற்கிறது.

தேவியின் மனம் அழுதது. இப்பவே ஆறு வீடு மாறியாச்சு. ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொரு பிரச்சினை. வீடு விற்கப்படும் அல்லது வீட்டின் உரிமையாளர்கள் வந்து விடுவார்கள். என்ன செய்யலாம் என நினைத்துக் கொண்டு வீடுதேடிச் சென்ற போதுதான் பொன்னம்மாப் பாட்டியை வழியில் தேவி சந்தித்தாள்.

"என்ன பிள்ளை தேவி சுகமாய் இருக்கிறியே. மனுசன் பிள்ளைகள் எல்லாம் என்ன செய்யினம்? "பிள்ளைகள் சுகமாய் இருக்கிறார்கள்?" அவரது.. இழப்பைச் சொல்ல முடியாமல் தேவி தவித்தபோது நெற்றியைப் பார்த்துவிட்டு வாயில் கைவைத்தாள் பாட்டி.

"உன்ர வீடும் உன்ர உபசரிப்பும் எனக்கு கண் முன் நிக்குது. கடவுளுக்குப் பொறுக்கவில்லை போல. இப்ப உன்ர இடத்துக்குப் போக ஏலாது தானே. எங்க பிள்ளை இருக்கிறாய்?" என்று கேட்டுத் தொடங்கியதுதான் பாட்டியின் வாடகை வீட்டுவாசம். வீடு வருமளவும் நன்றாகத்தான் இருந்தார். வந்தபின் தான் தெரிந்தது பாட்டி தனது சுயரூபத்தைக் காட்டும் விதம். தேவியும் பிள்ளைகளும் பாட்டியின் வீட்டில் வந்து ஒதுங்கினாலும் இழப்புக்கள் எல்லாவற்றையும் மறந்து ஏதோ தம்மால் முடிந்ததை உழைத்துப் பெற்று சுதந்திரமாக வாழத் துடித்தனர். குடியிருந்த வயற்காணி குலைந்து கணவரும் பிள்ளைகளுமாக அலைந்து அனைத்துச் சுதந்திரமும் சொத்துக்களும் இழந்து இறுதியில் கணவனும் இல்லையென்றாகி நடுத் தெருவுக்கு வந்தாலும் எல்லாவற்றையும் மறந்து புதிதாய் விரிந்து பூக்கத் துடிக்கும் தேவிக்கும் பிள்ளைகளுக்கும் அடைக்கலம் தந்தவள் பாட்டி. ஆனால் அவர்களின் வாழ்க்கையில் பட்ட துயரம் வெளிப்படாது மறைக்கப்படுவதைப் பாட்டி விரும்பாமல் நிற்பதாகவே தேவிக்குப் பட்டது.

தாமும் தமது வேலைகளும் என்ற நினைப்போடு பிள்ளைகளும் அவளும் எவரிடமும் சார்ந்திருக்கா நிலையில் பாட்டி அவர்களின் செய்கைகளில் குறைகண்டு ஏசத் தொடங்கினாள். தனக்குள்ளே அவர்களைக் கட்டிப் போடப் பாட்டி விரும்பினாள். தேவியால் அதனை ஏற்றுக்கொள்ள இயலவில்லை.

பாட்டியோ அல்லலுற்று அலைந்து திரிந்த தேவிக்கும் பிள்ளைகளுக்கும் ஆதரவு தந்தவள் தானே என் பதை அடையாளம் காட்டவே ஆசைப்பட்டாள். அது தனது வீடு தன் ஆதரவிலேயே அவர்கள் வாழ்கிறார்கள் என்ற பார்வையை வலிமைப்படுத்த எண்ணினாள். வாடகைக்கு வீடென்பதாய் அல்ல தேவிக்கும் பிள்ளைகளுக்குமான அகதிமுகாம் அது. அதனால் பாட்டி தேவியின் விடயங்கள் அனைத்திலும் தன்னை நுழைத்துக் கொண்டாள். தேவியோ தன் வீடு, தன் பிள்ளைகள், தமது வாழ்க்கை எனப் பழக்கப்பட்டவள் சுதந்திரமாக இருக்கப் பயிற்றப்பட்டவள் எத்தகைய அழுத்தங்களுக்கும் அடிமை நிலைக்கும் அடிபணிய அவளால் இயலவில்லை. இப்பொழுது சுதந்திரமாகக் குடியிருக்க ஏற்ற வேறொரு குடிசையை தேடி அலைகிறாள். ★

# ஆரோக்கியம் தரும் ஆலமரம்

ஆலமரம் விழுதுகள் விட்டு பல நூறு ஆண்டுகள் வாழும் தன்மை கொண்டது. மழை, வறட்சிகளால் அதிகம் பாதிக்கப்படாதது. நீண்ட நெடிய பல விழுதுகளைக் கொண்டு பரந்து விரிந்து பசுமையாகக் காணப்படும் மரம்தான் ஆலமரம். மரத்தின் கிளைகளைத் தாங்கி நிற்கவே விழுதுகள் தோன்றி அவை மண்ணில் ஊன்றுகின்றன. இன்றும் கிராமங்களில் சாலைகளிலும், குளக்கரைகளிலும், பொதுமக்கள் கூடும் இடங்களிலும் நிழல் தரும் மரமாகத் திகழ்கிறது. பண்டைய காலத்தில் மன்னர்கள் ஆலமரம், புங்கமரம் இவற்றை நட்டு வளர்த்தனர். அதன் பயனை பலநூறு ஆண்டுகளுக்குப் பின் நாம் இன்றும் அனுபவித்து வருகிறோம். ஆலமர நிழல் ஆரோக்கியத்துக்கு நல்லது. அரசமர நிழல் எவ்வாறு ஆரோக்கியத்தைத் தருகிறதோ அதேபோல் ஆலமர நிழலும் ஆரோக்கியத்திற்கு மிகவும் நல்லது.

இதனை இயக்கு ரோதம், காமரம், சோளி, தோல்மரம், பாமரம், பூதம், வடம், பானோக்கி என்ற பெயர்களில் அழைக்கின்றனர். இதன் இலை, பழம், பூ, விழுது, பால் அனைத்தும் மருத்துவக் குணம் வாய்ந்தவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்தியசுகத்தை நோக்கி... உதயன் வைத்தியமலர் 31

## மழை நீரை குடி தண்ணீராக்கிப் பயன்பெறுவோம்

எம் குடா நாட்டின் நீர்த் தேவை முழுமையாக நிலத்தடி நீரை நம்பியதாகவே இருக்கின்றது. எம் வீட்டுத் தேவைகளை விட விவசாயத் தேவைக்கும் நாம் நிலத்தடி நீரிலேயே தங்கியிருக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றோம். இந்த நிலத்தடி நீர் என்பது மழை நீரானது நிலத்தின் கீழ் காணப்படும் சிறு குகைகள், துளைகளில் சேகரிக்கப்படுவதாகும். நிலத்தடி நீரோ (Ground water) மேற்பரப்பு நீரோ (Surface water) எதுவாயினும் அதற்கு மூலமாக இருப்பது மழை நீரே. எம் நிலக்கட்டமைப்பின் தன்மையால் எம்மால் எந்த பெரிய மேற்பரப்பு நீர்தேக்கங்களையும் குடாநாட்டில் உருவாக்க முடியாதுள்ளது. இதனாலேயே நாம் முழுமையாக நிலத்தடி நீரை நம்பி இருக்க வேண்டிய கட்டாயம் உருவாகியுள்ளது.

அத்துடன் எமக்கு கிடைக்கும் இந்த நிலத்தடி நீரும் தூய்மையானதாக இல்லாமல் இருப்பதால் எமது எதிர்காலத் தேவைகளைப் பூர்த்தி செய்யப் போதுமானதாக இல்லாமல் இருப்பதாலும் அரசால் மேற்பரப்பு நீர் மூலமான பெரிய நீர் விநியோகத் திட்டமும் மழை நீர் சேகரிப்பு திட்டமும் அறிமுகப் படுத்தப் பட்டுள்ளன. ஆயினும் மழை நீர் திட்டம் சம்பந்தமான விழிப்புணர்வு குறைவாக உள்ளமையால் அந்த நீரை குடி தண்ணீராகப் பயன்படுத்துவதில் எம்மக்களுக்குள்ள ஐயப்பாட்டைத் தெளிவுபடுத்தும் முகமாகவுமே இக் கட்டுரையானது உங்களுக்குத் தரப்படுகின்றது.

நிலத்தடி நீரானது எடுக்கப்படும் வேகத்திலும் அளவிலும் மீள் நிரப்பலுக்கு உள்ளாக்கப்படல் வேண்டும். இல்லையேல் மேற்பரப்பு நீர் போன்றல்லாது வேகமாக உட்புகுகை (intrusion), மேல் எழுகை (up coming) மூலம் கடல் நீர் தொற்றுக்கு உள்ளாக நேரிடும். அதாவது வெறுமைப்படுத்தப்படும் இடைவெளி கடல் நீரால் நிரப்பப்படப் போகின்றது. இதனால் இருக்கும் மிகுதி நீரும் கடல்நீரால் தொற்றாக்கலுக்கு உள்ளாகப் போகின்றது. அதாவது உவராகப் போகின்றது.

இதற்கு முக்கிய காரணம் எம்மக்களின் முறையற்ற பாவனையும் குறைந்த மழை வீழ்ச்சியுமே ஆகும். முறையற்ற நீர்பாவனை எனக்குறிப்பிடக் காரணம் குடாநாட்டைப் பொறுத்தவரை அனேக வீடுகள் திறந்த கிணற்றையோ குழாய்க் கிணற்றையோ கொண்டுள்ளன. அவர்கள் அவற்றிலிருந்து நீரைப் பெற்றுக்கொள்ள எந்தவித கட்டணமும் செலுத்த தேவையில்லை. ஆகவே அவர்களுக்கு நீரை உறிஞ்ச எந்தவித கட்டுப்பாடும் இல்லை.

எனவே எம்மால் அதிகளவில் உறிஞ்சப்படும் இன் நிலத்தடி நீரானது பருவப் பெயர்ச்சி மழை மூலமே மீள்நிரப்பலுக்கு உள்ளாக்கப்படவேண்டும்.


குடாநாட்டின் மழை வீழ்ச்சி சராசரி வருடத்துக்கு 1200 mm ஆகவே உள்ளது. அம்மழை வீழ்ச்சியும் வருடத்தின் 2-3 மாதங்களுக்குள் வரையறுக்கப்பட்ட ஒன்றாகவுள்ளது. அத்துடன் இவ்வாறு வரையறுக்கப் பட்ட மாதத்துக்குள்ளும் 20-25 நாள்களே மழையானது முழுமையாகப் பொழிகின்றது.

அதிலும் 10-13% ஆனது வெள்ளமாக வடிந்து நேரடியாகக் கடலிலுள் கலந்து விடுகின்றது. 40-48% ஆனது ஆவியாதல் மூலம் மீண்டும் வளிமண்டலத்துக்கு விடப்படுகின்றது. 30-32 வீதமான மழை நீர் மட்டுமே நிலத்தடி நீரை மீள் நிரப்பப் பயன்படுத்தப் படுகின்றது. இதனை இங்கு விளக்கக் காரணம் குடாநாட்டின் நீர்த் தேவையை பூர்த்தி செய்ய எம் நிலத்தடி நீரானது போதுமானதாக இல்லாதுள்ளதைத் தெளிவு படுத்தவே. இதற்கு மேலதிக மாக நாம் நீரின் தரத்தையும் இங்கே முக்கியமாக கருத்தில் கொள்ள வேண்டும்.

மிகத்தூய்மையாக நிலத்தை வந்தடையும் மழை நீரானது நிலத்தடி நீராக சேமிக்கப்பட முதல் பல குணாதிசயங்களைக் கொள்கின்றது. இதற்கு முக்கிய காரணம் நீர் ஓர் சிறந்த கரைப்பானாக இருக்கின்றமையேயாகும். இதனால் நீரானது மேற்பரப்பில் காணப்படும் பலதரப்பட்ட மாசுக்கள், அயன்கள் (irons)என்பவற்றைக் கரைத்து செல்வதுடன் அது தங்கும் பாறைகளையும் சிறிதளவு கரைத்து அதன் இயல்புகளையும் கொள்கிறது. இதற்கு மேலதிகமாக அவை நிலத்தடியில் சேகரிக்கப்பட்டுள்ள இடத்திலும் தொற்றலுக்கும் உள்ளாகப்படுகின்றது. அதாவது மலசல கூடத்தொற்று, விவசாய இராயனப் பொருள்களின் தொற்று, கடல் நீருடன் கலத்தல் போன்றன.

அடுத்துவரும் வாரங்களில் நாம் மழை நீர் ஏன் குடி நீராகப் பயன்படுத்த நிலத்தடிநீரை விட சிறந்தது என்பதையும் அதன் இரசாயன, பௌதிக இயல்புகள் பற்றியும் சேமிப்பு பற்றியும் பார்ப்போம்.

(தொடரும்)



சு.சரவணன்
இரசாயனவியலாளர்,
தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை.

*உதயனின் இந்த வைத்திய மலர் யாழ்.போதனா வைத்தியசாலையின் நீரிழிவுச் சிகிச்சைப் பிரிவினால் தொகுத்து வழங்கப்படுகிறது. மலர் சம்பந்தமான உங்கள் அபிப்பிராயங்களையும் மருத்துவம் சம்பந்தமான உங்கள் சந்தேகங்களையும் - நித்திய சுகத்தை நோக்கி... நீரிழிவு சிகிச்சை நிலையம், போதனா வைத்திய சாலை,யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவையுங்கள். உங்கள் வினாக்களும் அதற்கான பதில்களும் இந்தப் பகுதியில் பிரசுரமாகும்.*

## மாபெரும் சுகாதார விழிப்புணர்வு நிகழ்வு

நல்லூர்க் கந்தன் திருவிழாவுக்கு வரும் பக்தர்களின் நலனைக் கருத்தில் கொண்டு நல்லூர் வடக்கு வீதியில் நடராஜா பரமேஸ்வரி கல்யாண மண்டபத்துக்கு அருகில் யாழ்.போதனா வைத்தியசாலை நீரிழிவுச் சிகிச்சை நிலையம், யாழ்.போதனா வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கத்துடன் இணைந்து கண்காட்சி ஒன்றை நடத்துகிறது. இதனைப் பார்வையிட்டு பயன்பெற்றுச் செல்லுமாறு கேட்டுக் கொள்கிறோம். திருவிழாக் காலங்களில் காலை 8 மணி முதல் இரவு 8 மணிவரை இந்த கண்காட்சி நடைபெறுகிறது.

40 வயது கடந்தவர்கள் அனைவரும் தமது குருதியமுக்கத்தை சோதித்துப் பார்த்துக் கொள்வது அவசியமானது. அதை நிறைவேற்றிக்கொள்ளவும் சுகாதார சம்பந்தமான விளக்கங்களை பெற்றுக் கொள்ளவும் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். இங்கு நடைபெறும் நிகழ்வுகள்

1.இலவசமாக குருதியமுக்க பரிசோதனையும், ஆலோசனையும் வழங்கப்படுகின்றது.

2.குறைந்த கட்டணத்தில் குருதி வெல்லப் பரிசோதனை செய்யப்படுகின்றது (50/=).

3. நீரிழிவு, உயர் குருதியமுக்கம் சம்பந்தமான நூல்கள், இறுவட்டுக்கள் கிடைக்கின்றன.

4.இதுவரை உதயன் பத்திரிகையில் '' நித்திய சுகத்தை நோக்கி'' என்ற பகுதியில் வெளிவந்த அனைத்து ஆக்கங்களும் தொகுத்து நூலாக வெளிவந்துள்ளது. அதனை இங்கே பெறலாம்.

5.காசநோய் தடுப்பு சம்பந்தமான விளக்கங்களும், புற்றுநோய் தடுப்பு சம்பந்தமான விளக்கங்களும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

6.புதிதாக கண்டறிப்படும் நோயாளர்கள் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்.

எனவே இந்த நிகழ்வுக்கு அனைவரும் ஒரு முறை வந்து பயன்பெற்றுச் செல்லுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*நீரிழிவு சிகிச்சை நிலையம்,
போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.*

ஊடக அனுசரணை
உதயன்

## விற்றமின் 'ஏ'

1. கொழுப்பில் கரையக்கூடிய விற்றமின். மனிதனில் ஈரலிலும் கொழுப்புக் கலங்களிலும் சேமிக்கப்படுகிறது. உடலுக்கு வேண்டிய பொழுது ஈரலிலிருந்து விடுவிக்கப்படும்.

2.விற்றமின் 'ஏ' பார்வைக் கலங்களான கோள்கலம், கூம்புக்கலம் ஆகியவற்றில் காணப்படுவதோடு இரவுப் பார்வைக்கும் வர்ணப் பார்வைக்கும் உதவுகிறது.

3.மனிதனில் விந்து உற்பத்திக்கு உதவுவதோடு கர்ப்பிணிப் பெண்களில் கருச்சிதைவையும் தடுகின்றது.

4.சிறுவர்களில் வளர்ச்சியைப் பேணுவதற்கு என்பு விருத்திக்கும் உதவுகிறது.

5.மேலணி இழையங்களின் பிரிகையடைத்தலுக்கும் சீதம் சுரப்பதற்கும் அத்தியாவசியமானது.

6.தோலில் ஏற்படும் வியாதிகளைத் தடுப்பதற்கு உதவுகிறது.

7.தாவர உணவுகள் விற்றமின் 'ஏ' இக்குரிய மூலப் பொருளை கொண்டுள்ளன. மஞ்சள், கடும்பச்சைக் காய்கறிகள், பழங்கள் ஆகியவற்றில் கூடுதலாக காணப்படுகிறது.

8.ஈரல், சிறுநீரகம், பட்டர், முட்டையின் மஞ்சள் கரு ஆகியவற்றில் கூடுதலாக விற்றமின் 'ஏ' காணப்படும்.

9.விற்றமின் 'ஏ' யின் தேவையான அளவுகள்.
பராயமடைந்தவர்கள்-750 kg /நாள்
கர்ப்பிணிகள் அல்லது பாலூட்டும் தாய்மார்-1800 kg - 2400 kg /நாள்

10 விற்றமின் 'ஏ' குறைபாட்டால் இரவு நேரங்களில் ஒளிச் செறிவு குறைவான இடங்களில் பார்க்க இயலாது. நீண்ட கால குறைபாட்டால் பார்வைக் கலங்கள் மீள முடியாதளவுக்கு குறைவு ஏற்படும்.

11.பெரிய அளவு குறைபாட்டால் கண்ணில் விழிவெண்படலத்தில் வரண்ட தன்மை ஏற்படும். இது விழியில் காயங்கள் ஏற்பட வழிவகுக்கும். இது வளர்ந்து வரும் மத்திய கோட்டு நாடுகளில் வாழும் சிறுவர்களில் அடிக்கடி ஏற்படும் பிரச்சினையாக உள்ளது. விற்றமின் 'ஏ' குறைபாட்டால் உலகளாவிய ரீதியில் வருடந்தோறும் 500,000இற்கு மேற்பட்ட சிறுவர்கள் பார்வையை இழக்கின்றனர்.

12.விற்றமின் 'ஏ' குறைபாட்டால் தோல் வியாதிகள் ஏற்படும்.


13.விற்றமின் 'ஏ' உள்ளெடுக்கும் அளவு 7.5mg/நாள் இற்கும் மேற்பட்டால் உடல் ஆரோக்கியத்துக்கு கெடுதல் ஏற்படும்.

அறிகுறிகள்: வரண்ட தோல், தோலில் கடியுணர்வு, ஈரலின் அளவு கூடுதலும், ஈரல் அழற்சியும்.

வி.ஜெயராஜா
மருத்துவபீட மாணவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரௌத்திரம்




விமர்சனம்

சென்னை சட்டக்கல்லூரி மாணவியான கதாநாயகி ஸ்ரேயாவுக்கும் கதாநாயகன் ஜீவாவுக்கும் இடையில் மலரும் காதலும், கமல் நடித்த சத்தியா படம் போல் சண்டைக் காட்சியுமாக ரௌத்திரம் படத்தின் கதை நகர்கிறது. ஸ்ரேயாவின் கல்லூரி தோழியிடம் சேட்டை புரிந்து விடுகிறான் அதே கல்லூரியில் படிக்கும் வில்லன் ஒருவன். இதனால் கோபம் கொண்ட ஸ்ரேயா கல்லூரி முதல்வரிடமும், பொலிஸ் உதவி ஆணையாளரான தனது தந்தையிடமும் முறைப்பாடு செய்கிறார். ஸ்ரேயாவின் நண்பியிடம் சேட்டை புரிந்தவன் இந்தப் படத்தில் வரும் பிரபல வில்லனான 'கௌசிக்கு' வேண்டப்பட்டவன் என்பதால் அவன் மீது நடவடிக்கை எடுக்க இருவரும் தயங்குகிறார்கள். காட்சி நகர்கிறது. ஜீவா பயணித்துக் கொண்டிருந்த ஒட்டோ விபத்துக்குள்ளாகிறது. ஒட்டோ விபத்துக்குள்ளானதற்கு சட்டக்கல்லூரி வில்லன் மற்றும் அவனது கூட்டத்தினர் காரணம் என்பதால் அவர்களை நடுரோட்டில் வைத்து அடிக்கிறான் ஜீவா.

ஜீவா அடிப்பதை அந்த வழியே வந்த ஸ்ரேயா பார்க்கிறாள். தனது தோழி மீது சேட்டை செய்தவனுக்கு அடிவிழுவதைப் பார்த்து சந்தோஷப்படுகிறாள். ஜீவாவின் கோபத்தைப் பார்த்து காதல் கொள்கிறாள் ஸ்ரேயா. நடு வீதியில் தாம் எல்லோர் முன்னேயும் அடிவாங்கி விட்டோமே என்ற ஆத்திரத்தில் ஜீவாவைப் பழிவாங்க நேரம் பார்த்திருக்கும் வில்லன்கள் - சிறையில் அடைபட்டுக் கிடக்கும் வில்லன் கௌரி வெளியே வரட்டும் என்று காத்திருக்கிறார்கள். சிறையில் இருந்து கௌரியும் வெளியே வருகிறான். ஒரு கட்டத்தில் கௌரியையும் அடித்துக் காயப்படுத்தி விடுகிறான் ஜீவா. கௌரி குழுவினரின் கொலை முயற்சி, ஜீவாவின் குடும்பம், காதல் அனைத்தும் ஜீவாவின் கோபத்துக்கு முன்பு என்ன ஆனது என்பதை விறுவிறுப்பாகப் படமாக்கி இருக்கிறார் இயக்குநர் கோகுல்.

இந்தப் படத்தின் ஆரம்பத்தில் இருந்து நகரும் காட்சிகளில் எல்லோரையும் அடித்துப் பந்தாடும் காட்சிகளில் ஜீவாவுக்கு ஒரு கீறல்கூட உடம்பில் விழாமல் இருப்பது அதிசயந்தான். இந்தக் காட்சிகள் கற்பனையில் வாழும் இளைஞர் கூட்டங்களுக்கு ரொனிக் மாதிரி அமைந்துவிடும் என்பது உண்மைதான்.

ஜீவா நடித்து வெளிவந்த படங்களில் கலகலப்புடன் பேசி நடித்துள்ளார். இந்தப் படத்தில் கலகலப்பாகப் பேசாத ஜீவாவைப் பார்த்திருக்கிறீர்கள். நாங்கள் தனியாக இருக்கும்போது கூட அவன் என்னைத் தொந்தரவு பண்ணியது இல்லை. காதலர் தினத்தில்கூட அவன் எனக்கு போனில் வாழ்த்து அனுப்பியதே இல்லை. என்னைத்தவிர வேறு எந்தப் பெண்ணையும் ஏறெடுத்துப் பார்க்கமாட்டான், அதுதான் என் ஜீவா எனத் தனது தோழிக்கு ஜீவா பற்றி பெருமையாகச் சொல்லும் காட்சியில் ஸ்ரேயா அழகோ தனி அழகு. தோழிக்காகத் தனது தந்தையிடம் கெஞ்சுவதும், முடியாமல் போக கோபத்தால் சீறுவதும் நன்றாகவே நடித்திருக்கிறார் ஸ்ரேயா. இந்தப் படத்தில் வரும் ஜீவா-ஸ்ரேயா காதல் காட்சிகள் பார்ப்பதற்கு சுவாரஸ்யமாக உள்ளன.

ஜீவாவின் பெற்றோர்களாக வரும் ஜெயப்பிரகாஷ், லட்சுமி ராமகிருஷ்ணன் ஆகியோர் நடிப்பில் வீட்டுக்குள் குடும்பத்தில் ஏற்படும் இன்ப, துன்பங்களில் இழையோடும் காட்சிகள் இந்தப் படத்தின் ஏனைய காட்சிகளில் இருந்து ஆறுதல் அடைய வைக்கின்றன. குடும்ப சம்பந்தப்பட்ட காட்சிகளில் கிடைக்கும் சுவாரஸ்யம் சண்டைக் காட்சிகளில் கிடைக்காமல் போய்விட்டது. இந்தப் படத்தின் இயக்குநர் கோகுலுக்கும், ஒளிப்பதிவாளர் என்.சண்முகசுந்தரத்துக்கும் முதல் படம் இது.

பிரகாஷ்ராஜின் சண்டை, வில்லன் கௌரியை அறிமுகப்படுத்தும் காட்சி, இரவில் நடக்கும் சண்டைக் காட்சிகள், ஸ்ரேயாவும், ஜீவாவும் பாலத்தில் நடந்துவரும் காட்சிகளை நம்பக்கூடிய விதத்தில் ஒளிப்பதிவு செய்திருப்பதில் திருப்தி ஏற்படுகிறது. இசையமைப்பாளர் பிரகாஷ் நிக்கிக்கும் இது முதல் படம். 'மாலை மங்கும் நேரம்' பாடல் காதுகளில் ரீங்காரமிடுகிறது.

இந்தப் படத்தில் வரும் கூடுதலான காட்சிகளில் வில்லன்களின் நடமாட்டம் காணப்படுவதால் இந்தப் படத்தின் கதையை ஒருபடி இறங்க வைத்துவிட்டது. பிறருக்குத் துன்பமெனில் 'ரௌத்திரம்' பழகுவதில் தவறில்லை என்ற மையக் கருத்தைக் கருவாக வைத்து உருவான கதை இந்தப் படத்தின் கதை என்பதில் வியப்பில்லை. ஆர்.பி.சௌத்ரி தயாரித்திருக்கும் இந்தப்படத்தில் ஜீவா, ஸ்ரேயா, கௌரி, சத்யன், ஜெயப்பிரகாஷ், பிரகாஷ்ராஜ், [illegible], லட்சுமி ராமகிருஷ்ணன், ஸ்ரீநாத் ஆகியோர் நடித்துள்ளனர்.

- குமார்.

# கோபுரமதனைக் கண்டு



## அன்னையும் அப்பனும் அகமகிழ்ந்தார்



ஆறுமுகன் மாமயில் மீதேறி
அண்ணனை வலம் வந்து பின்னே
பொறுமையாய் ஒன்று கேட்க
புன்னகை பூத்தான் கொம்பன்

மறுப்பில்லை தம்பி நானும் நின்
மாமயில் அமர்ந்த வாறே
உறுபிணி கவலை போக்கு மந்த
உயர் நல்லைக் கோபுரம் காண்பேம்

மறுவேதும் இன்றி தெற்கு வீதிதன்னில்
மாண்புறு கோபுரம் அமைத்தாரன்றோ?
ஆறுமுகன் பழனி ஆண்டியாகி யாங்கே
அக்கோபுரம் பின்னே நின்றான்

குறும்பு செய் பழனி ஆண்டவரின்
கோபமும் தீர வில்லை போலும்!
பொறுமையாய் இதனைக் கேட்டு
பூரித்தாள் உமையாள் நன்றாய்

இறுகவே தம் புத்திரரைத் தாயார்
இணைத்து நல் முத்தமிட்டு
மறுப்பின்றி ஈசனாரோடிணைந்து
புறப்பட்டார் நல்லை நல்லூர்
பூரித்தார் புதிய கோபுரமதனைக் கண்டு.

விகடகவி

# நல்லூரில் நவதள ராஜகோபுரம்





நல்லூர் கந்தசுவாமி கோயில் தெற்கு வீதியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள கோயில் திருப்புகழைப் பாடிய அருணகிரிநாதருக்கானதாகும். நேற்றுச் சனிக்கிழமை நல்லூர் கந்தசுவாமி கோயிலில் இருந்து அருணகிரிநாதர் இந்த ஆலயத்துக்கு எழுந்தருளினார். கடந்த 28 வருடங்களின் பின் ஷண்முகப் பெருமான் ஊர்ப் பார்வைக்குக் கிடைக்கக் கூடியதாக இந்த நேர்பார்வை அருணகிரிநாதரைச் செல்கிறது என்ற வகையில் இந்தப் புதிய ஆலயத்தின் அமைப்பு உள்ளது.

இதேவேளை, இன்று ஞாயிற்றுக்கிழமை காலை கும்பாபிஷேகம் செய்யப் படவுள்ள நல்லூர் தெற்கு வாயிலில் அமைக்கப்பட்டுள்ள நவதள, நவகலச கோபுரம் இலங்கையில் உள்ள மிகவும் அகலமான கோபுரமாகும். ஷண்முகனுக்கு நவ வீரர்கள் சகோதரர்கள். அதனால் இது நவதளம், நவகலசம் என்று அழைக்கப்படுகின்றது.

நல்லூர் கந்தசுவாமி கோயிலின் வடிவமைப்புக்கு உட்பட்ட கோபுரம் இதுவாகும். உண்மையில் இவ்வாறான கோபுரங்கள் எத்தனை அடி உயரம் என்று வரையறை செய்யப்படுவதில்லை. நல்லூர் கந்தசுவாமி கோயிலைப் பொறுத்தவரை முருகப்பெருமானின் பிரமாணத்துக்கமையவே அனைத்து வேலைகளும் இடம் பெறுவதேயன்றி வேறு யாரும் அது குறித்து நிர்ணயிப்பதில்லை எனக் கூறப்படுகின்றது.

கோபுரம் அழகின் பரிணாமத்துக்கு அமைய அதன் உயரம் உள்ளதேயன்றி உயரம் பார்த்து அது கட்டப்படவில்லை என்பதே உண்மையாகும். கோபுரத்தின் கட்டுமானப் பணிகள் கந்தசுவாமி கோயிலின் ஊழியர்களாலேயே மேற்கொள்ளப்பட்டன. யாழ்ப்பாணம், அராலியைச் சேர்ந்த வீரசிங்கம் ஸ்தபதியால் சிற்பவேலைகள் செய்யப்பட்டன. இந்தப் பணிகளில் தென்னிந்தியச் சிற்பிகள் எவரும் இடம்பெற வில்லை என்பது இங்கு நோக்கத்தக்க சிறப்பான விடயமாகும்.

வரையறைப்படுத்தப்படாத ஷண்முகப் பெருமானின் அனுக்கிரகப்படி உருவான இந்தக் கோபுரத்தின் மற்றும் ஒரு சிறப்பாக இதில் எழுபத்தி இரண்டு வாயில்கள் உள்ளன. கோபுரம் உயர்ந்துள்ளது என்று எவரும் கருதவேண்டியதில்லை. இங்கேயும் சரி இந்தியாவிலும் சரி இது போன்ற அமைப்புக்களில் கோபுரங் களைக் காணமுடியும்.

[illegible] யாழ்ப்பாணச் சிற்பிகளைக் கொண்டு உருவாக்கப்பட்ட இந்தக் [illegible] மக்களுக்குப் பெருமை சேர்க்கும் கோபுரம் என்ற எண்ணம் பெரும் பாலான மக்களின் கருத்தாக வெளிப்படுகின்றது.

- லக்ஸ்மன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இல்வாழ்க்கை சிறக்க அனுசரித்துப்போவது அவசியம்



பெண்களின் எதிர்காலம் என்பது வாழ்க்கைத் துணை சரியாக அமைவதிலேயே தங்கியுள்ளது. திருமணம் என்பது நிச்சயிக்கப்பட்

ஒன்று. இதில் காதலித்து திருமணம் புரிபவர்களும் உள்ளனர். முறைப்படி நிச்சயிக்கப்பட்டு மணம் செய்பவர்களும் உள்ளனர். இவ்வாறு வாழ்வில் இணைபவர்களது இல்லறவாழ்வு இனிமையாக இருப்பதும் சலிப்படைவதும் இருவரிலுமே தங்கியுள்ளது.

திருமணமான புதிதில் மனைவியின் குண இயல்புகளை புரிந்து கொண்டும் குறைகளை கூறாது பேசுவர். காலம் செல்லச் செல்ல சிறுகுறைகளும் பெரிதாகவே தெரியும். தூரத்துப் பச்சை கண்ணுக்கு குளிர்ச்சி என்பது போல கிட்ட இருப்பதை ரசிக்கமாட்டார்கள்.

உங்களுக்கு பிடித்த சில விடயங்கள் மனைவிக்கு பிடிக்காமல் இருக்கலாம். அதைவிட உங்களுக்குப் பிடித்த விடயங்கள் கூட மனைவிக்கு பிடித்திருக்கலாம் என்பதை ஏன் உணர மறுக்கிறார்கள்? பெரும்பாலான ஆண்கள் மனைவியை எந்தக் காரணமுமின்றி வெறுப்பார்கள். அவளது திருப்தியான செயலிலும் ஏதாவது குறை கூறுவர். திருமணமான புதிதில் பிடிக்காத விடயங்கள் கூடக் குறையாகத் தெரியமாட்டாது. நாளடைவில் வெறுப்பு ஏற்படும். அந்த வெறுப்பு அவளது நிறைவான குணங்களையும் மறைத்துவிடும். இதனால் தான் ஆண்கள் தடுமாறுகின்றனர். பெண்களிடம் குறைகள் உண்டு என்று கூறுகிறார்களே தவிர தனது மனைவியிடம் உள்ள பிடித்த குணங்களை வியந்து பேசுவதில்லை.

ஓரிரு உங்களுக்கு பிடிக்காத சில விடயங்களை வைத்து உங்கள் இனிய வாழ்வை வீணடிக்காது அவளிடம் உள்ள நல்ல குணங்களை பார்த்து திருப்தியடையுங்கள். மனைவியைப் பிடிக்கவில்லை என்று நினைத்து இன்னொருதியை மணந்தாலும் அவளிடமும் நிறைய பிடிக்காத விடயங்கள் உண்டு. என்பதை மறவாதீர்கள்.

எல்லா பெண்களிடம் நிறைய நல்ல குணங்கள் இருக்கவே செய்கின்றன. இதில் யாரும் விதிவிலக்கல்ல. பெண்கள் முதுகொலும்பு போன்றவர்கள். வளைந்து கொடுத்துக்கொண்டிருக்கும் அதை சரி செய்ய நினைத்தால் அது உடைந்து போய் விடும். அதே போலவே பெண்களின் நிலை.

நாம் பழகும் நண்பர், ஆசிரியர், பொறுப்பாளர் ஆகியோரிடம் அவர்களுக்கு ஏற்ப அவர்களது செயற்பாடுகளை புரிந்து கொள்கிறோமே தவிர அவர்களை மாற்ற முயல்வதில்லை. இதுபோலவே பெண்களுக்கு என்று தனிப்பட்ட போக்குகள் உள்ளன. ஆண்களின் நிலையிலிருந்து பார்த்தால் அந்த குணங்கள் கோபத்தை ஏற்படுத்துவதாக இருக்கலாம். எதற்கெடுத்தாலும் அழுவது, முகத்தைச் சுழிப்பது எவ்வளவுதான் கொடுத்தாலும் திருப்தி அடைவதில்லை. இப்படியான குணங்கள் இல்லாத பெண்கள் மிகக் குறைவு. இதுதான் பெண்களின் சுபாவம் என்பதை ஆண்கள் நாம் உளரீதியாக ஏற்று அவர்களை அனுசரித்துக் கொள்ள வேண்டும்.

எனவே ஒவ்வொரு ஆணும் இல்லறம் இனிக்க வேண்டும் என நினைத்தால் பெண்களிடம் உள்ள இயல்பான குண இயல்புகளை மாற்றியமைக்க முடியும்.

-கோபி, வட்டூர்.

# என் அன்னை



என் உயிரே அம்மா நீயே!
எனைப் பெற்றெடுத்த தாயே
ஐயிரண்டு மாதங்கள் எனை
கருவினிலே சுமந்தாயே!

மெய்யிலே பல சோர்வுகள் கண்டாலும்
உள்ளமதில் உவகையுடன்
பாசத்தை அள்ளித் தந்தாயே!
உதிரத்தைப் பாலாக்கி - உன்
உயிரைத் தந்து காத்தாயே!
என்ன தவம் செய்தேன் -நீ
என் அன்னையாக...? இன்னும்
என்ன தவம் செய்யவேண்டும்...?
என் இறுதி மூச்சு வரை உன்
அன்பு நிலைக்க......?

ந. கலையரசி
துனவி.

# உலகம் வாழ்த்த வாழ்ந்திடு பெண்ணே!



'பெண்கள்'' நாட்டின் கண்கள் என்ற உணர்வுடைய இந்த இருபத்தோராம் நூற்றாண்டில் பெண்களின் புகழ் வானையும் தாண்டிச் செல்கிறது எனலாம். எந்தத் துறையை எடுத்து நோக்கினாலும் பெண்களே முன்னிலையில் உள்ளார்கள். இன்றைய காலப் பெண்களின் சாதனைகள் அளப் பெரியவை. விண்வெளிக்கு முதல் மங்கையாகச் சென்றாள் ''வலன்டினா'', முதல் பெண் நீதியரசரானார் இலங்கையின் ''ஷிராணி பண்டாரநாயக்க'. கனேடிய பாராளுமன்ற உறுப்பினராக ''ராதிகா சிற்சபேசன்'' என்றவகையில் பெண்கள் முன்னே செல்லாத துறைகளே இல்லை.

இவையெல்லாம் ஒருபுறம் இருக்க மறுபுறம் நோக்குவோமாயின்; இன்றைய இளம் பெண்களில் பெரும்பாலானவர்கள் செயற்கரிய செயல்களில் ஈடுபட்டாலும், குன்று குழிகளால் நிலாவிலே களங்கம் இருப்பது போல சில பெண்களால் பெண் சமூகமே- சீரழிகின்றது எனக் கூறப்படுகின்றது.

தமிழர் கலாசாரம் மிக்கவர்கள். அதிலும் பெண்கள் அதனை கட்டிக்காக்க வேண்டியவர்கள். ஆனால் இன்றைய பெண்கள் நாகரீகம் என்ற பெயரில் தமது கலாசாரத்தையே நாசம் செய்கின்றனர். அழகாக சேலைகட்டி, பொட்டும் பூவும் வைக்கும் காலம் போய், எண்பது வயது கிழவியும் அணிகிறாள் குட்டைப் பாவாடை. காதோரம் சிமிக்கி இருக்கும் காலமில்லை இன்றைய காலம். ஏதோ ஒரு கறுப்பு பட்டினைக் காதோரம் அணைத்துக் கொண்டு கொஞ்சிக்குலாவிக் கொண்டு வீதியோரம் அலைகிறார்கள். இதுவா நாகரீகம்?

பெண் என்பவள் ஒரு பூவைப்போல ஒரு முறை கசக்கி எறிந்தால் அழகிழந்து போய்விவாள்.பெண்ணே விழித்திடு! நாம் சாதிப்பதற்கு இன்னும் பல வழிகளுண்டு நீயே முயன்றிடு, வாழ்வில் தினமும் உயர்ந்திடு. கல்வி கற்கும் காலத்தில் காதல் என்னும் வலையில் மாட்டிச் சிக்கிச் சீரழிந்து போகாதே! போதும் இனி சீரழிவுகள்; இன்றிலிருந்து ஒரு நம்பிக்கை எடு உன் உள்ளத்தில் எந்த உலகம் உன்னை பார்த்து ஏளனம் செய்ததோ அதே உலகம் உன்னை வாயார வாழ்த்தும் படியாய் வாழ்.

அபிராமி

# இறைவனால் படைக்கப்பட்ட அழகே பெண்களுக்கு ஆபத்தாக மாறலாம்



பெண்களே நீங்கள் அழகானவர்கள்தான். அதற்காக ஆபத்தை எதிர்நோக்குபவர்களாக மாறாதீர்கள். ரோஜா அழகு தான் அதிலும் முட்கள் உண்டு. அவை பாதுகாப்புக்காக இறைவனால் படைக்கப்பட்டவை. முட்செடி என்பதற்காக பூவைப் பறிக்காமலோ அதன் அழகை இரசிக்காமலோ யாரும் விடுவதில்லை. எல்லோருக்கும் ரோஜா என்றால் பிரியம். அதேபோல்தான் சில பெண்கள் அழகானவர்களாக இருப்பதால் ஆபத்துக்கள் அவர்களை நெருங்குகின்றன.

பெண்களின் அழகைப் புகழாத கவிஞர்களே இல்லை. உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரை அழகை வர்ணிப்பவர்களுக்கு மத்தியில் குடும்பத்திலும் சமூகத்திலும் பெண்களே பெண்களை இழிவுபடுத்திக் கூறுவோரே அதிகமாக உள்ளனர். அது பழக்க தோசமாக மாறிவிட்டது. பெண்ணுக்கு பெருமை சேர்ப்பது அவளது நற்பண்புகளே அதனை சிலர் குறை கூறியே வருகின்றனர். பெண்கள் பொறாமை பிடித்தவர்கள் எனவும் கோள் சொல்பவர்கள் எனவும் விமர்சிக்கும் அளவுக்கு சில பெண்களின் இயல்பு திரிபுபட்டு இருக்கின்றது.

மற்றவர்களை பற்றிக்குறை கூறுவதால் உங்களுக்கு என்ன நன்மை உண்டு என்பதை சிந்தித்து பாருங்கள். உங்களை மற்றவர்கள் குறைகூறினால் உங்கள் மனம் என்ன பாடுபடும் என்பதைப்போல மற்றவர்களையும் புரிந்து நடந்து கொள்ளக் கற்றுக் கொள்ளுங்கள். உங்களில் நல்ல பண்புகள் இயல்பாகவே வரும் விட்டுக்கொடுத்து நடந்து பாருங்கள் மற்றவர்களை உற்சாகப்படுத்தி தட்டிக் கொடுங்கள் உங்களுக்குள் ஒரு புத்துணர்வும் மகிழ்ச்சியும் பிறக்கும் உங் கள் அழகும் மிளிரும். உங்களை மற்றவர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்பதைவிட மற்றவர்களை நீங்கள் எவ்வாறு புரிந்து கொள்கிறீர்கள் என்பதே அவசியமான ஒன்றாகும்.

பெண் என்பவள் மென்மையானவள்தான் ஆனால் அதனை மெருகூட்டுவது உங்கள் கைகளிலே தங்கியுள்ளது என்பதை ஒவ்வொரு பெண்ணும் புரிந்து செயற்படுவதால் மனதில் மகிழ்ச்சியும் குடும்பத்தில் சந்தோசமும் மிளிரும்.

நிலானி

திலகத்துக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புவோர்
''திலகம்'',
உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள் .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இன்று (21.08.2011) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் இராஜகோபுர கும்பாபிஷேகம் சிறப்புற எல்லாம் வல்ல கலியுக வரதன் நல்லூர்க் கந்தனைப் பிரார்த்திக்கின்றோம்.

Eswaran Traders,
Eswaran Transport Service,
Eswaran Express Passengers Service,
Eswaran Courier Service.

...ம் வீதி, கொழும்பு - 11, 0112433889

**ஈஸ்வரன் ரேடர்ஸ்**

69, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2813



## மணிவிழா நாயகனை மனதார வாழ்த்துகின்றோம்

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களின் கல்வி உயர்ச்சிக்காகத் தன்னை அர்ப்பணித்து நல்லாசிரியனாக அதிபராக, கொத்தணி அதிபராக, கோட்டக்கல்வி அதிகாரியாக வலயக் கல்விப் பணிப்பாளராக அரும்பணிபுரிந்த ஆளுமை மிக்க கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர்

**உயர்திரு. தம்பிராசா குருகுலராசா**

அவர்களின் நற்சேவையை பாராட்டுவதுடன் அவர் தம் குடும்பத்தினருடன் நோய் நொடியின்றி நீடூழி காலம் வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலைச் சமூகம்
கிளி/உமையாள்புரம் அ.த.க.பாடசாலை.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



துளிராய்: 24.10.1966

விதையாய்: 22.07.2011

அமரர்
**கந்தசாமி கருணானந்தன்**
(கருணா)



அன்பாலே எமை அரவணைத்து
பண்பாக வாழ வழிசெய்த அப்பாவே!
தினமும் உங்கள் முகம் காணாது
இங்கு தவிக்கும் எங்களைப் பிரிந்து
விண்ணுலகம் சென்றாலும்
எம் இதயத்தில் என்றும் இருப்பீர்கள் ஓர் தெய்வமாக...!

இன்று (21.08.2011) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

குடும்பத்தினர்

ஆசிரிய மணி ஆறுமுகம் வீதி,
சுன்னாகம் மேற்கு,
சுன்னாகம்.

சகோதரன் கருணாகரன்
30 Stouared Larve,
92100 Voulodnevldillan Court
*France:* 33660333921, 441130010423

### ஆங்கில வகுப்புகள்

ஓய்வு பெற்ற ஆங்கில ஆசிரியரினால் பின்வரும் வகுப்புகள் நடத்தப்படும்.
* ஆரம்பத்திலிருந்து A/L வரை * Dec.2011 O/L மீட்டலுடன் Paper Class * Spoken English வெளிநாடு போக இருப்பவர்கள், மாணவர்கள், உத்தியோகத்தர்கள் வீட்டுக்கும் வர முடியும். 33, பலாலி வீதி, யாழ்ப்பாணம். 0212227801

### கார் விற்பனைக்கு

TOYOTA PRIUS - HYBRID, மொடல் அண்மையில் இறக்குமதி செய்யப்பட்ட KO xxxx தொடர் இலக்கம் கொண்ட நவீன வசதிகள் கொண்ட கார் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 0717831852

### வர்த்தகப் பெருமக்களே... வியாபாரத்தை பதிவு செய்தல்

பெறுமதிமிக்க உங்கள் வியாபார நிறுவனங்களை இலகுவாகப் பதிவு செய்து, அதற்குரிய கௌரவத்தையும் உத்தரவாதத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.
VTL மெனேஜ்மென்ட் 0729994777,
கொழும்பு - 3 0117902938

### Financial Sponsor For Student Visa any Country

VTL Management (PVT) Ltd
Colombo - 3
தொடர்புகளுக்கு: 0729994777, 0117902938

### Personal / Group Classes

* O/L Maths, IT
* A/L Maths, IT
* Professional IT Courses With Practical Instruction

TP. 0750391874

### காணி விற்பனைக்கு

கொக்குவில் கிழக்கு, கோயில் வீதியில் 3 ½ பரப்புக்காணி பங்குக் கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு :- 0777111400

### விற்பனைக்கு

சொக்கட்டான் பந்தல் மணவறைகள், கதிரைகள் போன்ற பந்தலுக்குரிய பொருள்கள் விற்பனைக்கு உண்டு.
(7018)
தொடர்பு: 0777179778

### காணி விற்பனைக்கு

உடுப்பிட்டி பெண்கள் பாடசாலைக்குப் பின்னால் உள்ள 4 1/4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. பாடசாலைக்கு இரு மருங்கிலும் யாழ். வீதியில் இந்தக் காணிக்குச் செல்வதற்கான வழிகள் உண்டு.
தொடர்பு: 0777714912

### கார் விற்பனைக்கு

Toyota IST-K E.XXXX தொடர் இலக்கம் தன்னியக்க குளிரூட்டி கொண்ட நவீன வசதிகள் கொண்ட கார் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 0774894018

### வீடு வாடகைக்குத் தேவை

மானிப்பாய் நகர்ப் பகுதியில் மூன்றுபேர் அடங்கிய குடும்பத்துக்கு வாகனத் தரிப்பிட வசதி கொண்ட வீடு வாடகைக்குத் தேவை.
தொடர்பு: 0770367125, 0716962869

### காணி விற்பனைக்கு

நாவற்குழி உணவுக் களஞ்சியத்துக்கு முன்னால் உள்ள 6 ஏக்கர் காணி விற் பனைக்கு உண்டு.
0772897881.

### வீடு வாடகைக்கு

உப்புமடப் பிள்ளையார் வீதி, K,K,S வீதி, கோண்டாவில் மேற்கு, கோண்டாவிலில் (யாழ்ப்பாணத்திலிருந்து 4K.m) இரு மாடிக் கட்டடம் நவீன முறையில் அமைக்கப்பட்டது. 8 அறைகள் இணைந்த குளியலறை மற்றும் 8 வாகனம் நிறுத்தக்கூடிய தரிப்பிட வசதி கொண்ட வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு:0114854556,
:0770443306,
:0112472275.
(6653)



# STUDY MEDICINE

முதலாவது கற்கை அணி ஜூலை 25 பயணமானது!

அகில உலகிலும், இலங்கையிலும் Medical Council மற்றும் General Medical Council (UK), ECFMG-USA & WHO மூலம் அங்கீகரிக்கப்பட்ட பட்டப்படிப்பு.

**BELARUS**
Eastern Europe
Bordering Poland, Russia, Latvia, Lithuania & One Day Travel Time To Germany By Train

MD Degree - 6 வருடங்கள்
முழுப் பயிற்சி நெறிக்கான கட்டணம் : 24,000 USD*
கோடை விடுமுறை நாட்களில் மாணவர்கள் இங்கிலாந்து, ஜேர்மன், மற்றும் ஏனைய மேற்கத்தேய நாடுகளுக்கு பயணிக்கலாம். பாடநெறி முதிர்வில் அமெரிக்கா, அவுஸ்திரேலியா, இங்கிலாந்து போன்ற நாடுகளுக்கு நேரடியாக குடியேறும் வாய்ப்பு. ஐரோப்பிய ஒன்றியம்/Schengen நாடுகளிலுள்ள மருத்துவ பல்கலைக்கழகங்களுக்கு மாற்றம் செய்து கொள்ள முடியும்.
ஆரம்பம் : செப்டம்பர்/அக்டோபர்

**NEPAL**
South Asia

MD Degree - 4 1/2 வருடங்கள்
முழுப் பயிற்சி நெறிக்கான கட்டணம் : 55,000 USD*
BDS (Bachelor of Dental Surgeon) - 4 வருடங்கள்
முழுப் பயிற்சி நெறிக்கான கட்டணம் : 25,000 USD*
ஆரம்பம் : நவம்பர்

**PHILIPPINES**
South-East Asia

MD Degree - 5 1/2 வருடங்கள்
முழுப் பயிற்சி நெறிக்கான கட்டணம் : 25,000 USD*
ஆரம்பம் : நவம்பர்

4ம் ஆண்டு முதல் மாணவர்கள் ஐரோப்பா மற்றும் இலங்கையில் உள்ள அரசாங்க வைத்தியசாலைகளில் மருத்துவப் பயிற்சிகளை மேற்கொள்ள முடியும்.
விசேடமான PhD பயிற்சிகள் வேண்டிய துறையில் உண்டு.

- பாடநெறி முற்று முழுவதும் ஆங்கிலத்திலேயே கற்பிக்கப்படும்.*
- புகழ்பெற்ற கடன் அட்டைகளுக்கு 0% வட்டியில்லா கடன்.*
- படிப்பு சம்பந்தமான விசேட வங்கிக் கடன்.*
- பாடநெறிக்கான கட்டணம் தவணை முறையில் செலுத்தக்கூடிய வசதிகள் Semester அடிப்படையில்.*

வெளிநாட்டு மருத்துவக்கல்லூரிகளில் மருத்துவத்துறை மாணவர்களுக்கான அனுமதிகளைப் பெற்றுக்கொடுக்கும், உள்நாட்டில் 15 வருடத்திற்கும் அதிகமான அனுபவத்தினைக் கொண்டுள்ள நம்பிக்கையான பங்காளிகளான எம்முடன் இணைந்துக் கொள்ளுங்கள். மாவட்ட மற்றும் பாடசாலை ரீதியாக கடந்த கால மற்றும் தற்போதைய மாணவர்களது விபரங்களை நீங்கள் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

1000ற்கும் அதிகமான மருத்துவத்துறை மாணவர்களின் அனுமதிகளைப் பிரத்தனமாகக் கொண்ட வித்தியாசாலை.
Contact Director-International medical student placements on : 0773 017 883

LEADER IN MEDICAL EDUCATION
PATHE ACADEMY
The People's Academy...
People's academy for Tertiary and Higher Education
*Conditions apply
Overseas Student Placement Department
111- 1/2, Maya Avenue, Kirulapone, Colombo- 06 Tel: 0773 017 883, 0772017101 011-2502012
www.patheacademy.org

## பதவி வெற்றிடம்

யாழ்.நகரில் இயங்கி வரும் DSI பாதணிகளின் காட்சியறைக்கு (Show Room) விற்பனையாளர்கள் தேவை. விண்ணப்பிக்க விரும்புவோர் எதிர்வரும் 27.08.2011 இற்கு முன்பாக தங்களின் சுயவிவரக் கோவையை கீழ்க் காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**சுப்ப சூஸ்**
154, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

## பதவி வெற்றிடம் (Vacancies)

மத்திய வங்கியில் நிதிக் கம்பனிச் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட

**Trade Finance And Investments Ltd**

வடமாகாணத்தில் தனது 2 ஆவது கிளையை கிளிநொச்சியில் ஆரம்பிக்கவுள்ளது. இதற்கு பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### கிளை முகாமையாளர் - ஆண் (Branch Manager - Male)

**தகைமை :**
வணிக அல்லது முகாமைத்துவப் பட்டதாரி மேலதிக தகைமையாக 3-5 வருட வங்கித்துறை அனுபவம் விரும்பத்தக்கது.
வயது: 25-40

### சந்தைப்படுத்தல் உதவியாளர் (ஆண்/பெண்) (Marketing Assistant (Male/Female)

**தகைமை:**
உ/த கணக்கியல் துறையில் கற்றிருத்தல் விரும்பத்தக்கது.
வயது: 18 க்கு மேல்

குறிப்பு: கிளிநொச்சி விண்ணப்பதாரருக்கு திறமை அடிப்படையில் முன்னுரிமை வழங்கப்படும்.
உங்களின் முழுமையான சுயவிவரத்தை 01.09.2011 இற்கு முன் கிடைக்கத்தக்கதாக கீழ்வரும் விலாசத்துக்கு அனுப்பி வைக்கவும்/நேரில் சமர்ப்பிக்கவும்.

**Trade Finance And Investments Ltd**
No.74, Kannathiddy Road, Jaffna.
T.P: 021 222 1898

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த U.K.பிரஜா உரிமை உடைய 8ம் இடத்தில் சூரி, செவ்வாய் ஒன்றாக அமைந்த 60 கிரகபாவம் உடைய குறுகிய காலத்தில் விவாகரத்து பெற்ற 36 வயதுடைய நற்குணமுள்ள மணமகனுக்கு பெற்றோர் நற்குணமுள்ள படித்த அழகிய மணமகளை எதிர்பார்க்கின்றார்கள். முழு விவரங்களுட னும் படத்துடனும் தொடர்பு கொள்ளவும்.

e-mail jenaganaa@yahoo.com

## வீடு விற்பனைக்கு

இல.64, மருதடி வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணத்திலுள்ள பரப்பு 1.05 குளி கொண்ட காணியில் அமைந்த வீடு உடன் விற்பனைக்கு.
(5 அறை, Kitchen, Attach Bath Room)

தொடர்பு-
பஸ்ரி மாஸ்ரர் (0776028888, 0777246583)

## வீடு விற்பனைக்கு

இல. 95, இராஜ வீதி திருநெல்வேலியில் அமைந்துள்ள இரண்டு வீடுகள் விற்பனைக்கு, 5 படுக்கை அறைகள் நவீன வசதிகளுடன் அமைந்த 5 குளியல் அறைகள், விசாலமான Hall என்பவற்றுடன் கூடிய மாடி வீடும்,
2 படுக்கை அறையும், 2 குளியல் அறையும் சகல வசதிகளுடனும் நவீன முறையில் அமைக்கப்பட்ட ஒரு வீடும் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:0779178264,
0212230548

## வீடு வாடகைக்கு உண்டு

இராமலிங்கம் வீதி, பூங்கனிச் சோலைக் கருகில் மீள்புனரமைக்கப்பட்ட 7 அறை கள், 2 குளியலறைகள், 1 சமையலறை, விசால மான வரவேற்புக்கூடம் என்பன அமைந்த 4 பக்கமும் சுற்றுமதில் கொண்ட நவீன வடிவிலமைந்த வீடு வாடகைக் குண்டு.
**(அரச, அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு மட்டும்)**
தொடர்புகளுக்கு
0777207260,0750406396

## ஆள் தேவை

கொழும்பு வெள்ளவத்தையில் நிரந்தரமாக வசிக்கும் ஒரு இளம் தமிழ் குடும் பத்துக்கு வீட்டு வேலை செய்ய குறிப்பாக சமையல் தெரிந்த ஒரு பெண் பிள்ளை தேவை. நமது குடும்ப அங்கத்தவர்போல் நன்கு கவ னிக்கப்படும். உணவு, தங்குமிடவசதி, நல்ல சம்பளம் கொடுக் கப்படும். தொடர்பு:- 071-5350914,0773470788 [சதீஸ்]

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்ப 1978 பூசம் 4ம் பாதம் செவ்வாய் குற்றமற்ற நற்குணமுள்ள டாக்டர் (MBBS) தொழில் புரியும் மணமகனுக்கு பொருத் தமான மணமகள் தேவை

தொடர்பு: 0214912552, 0776744651

## வீடு வாடகைக்குத் தேவை

கலட்டி, நாச்சிமார் கோயிலடிப் பகுதி களில் ஒரு வருடத்துக்கு வீடு வாட கைக்கு உடனடியாகத் தேவை
தொடர்பு: 021 222 8782,
0773151289

# வாசனா சம்பத சீட்டிழுப்பு முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஒக.21

தேசிய லொத்தர் சபையின் வாசனா சம்பத 882 ஆம் இலக்க அதிஷ்டலாபச் சீட்டிழுப்பில் 'N' என்ற ஆங்கில எழுத் தும் 12/13/15/18 ஆகிய இலக்கங்களும் '5' போனஸ் இலக்கமாகவும் தெரிவு செய் யப்பட்டுள்ளன.

இதில் சுப்பர் பரிசு எதுவும் வெல்லப் படவில்லை.

நான்கு இலக்கங்களை மட்டும் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் ஒருவருக்கு முதலாம் பரிசாக பத்து லட் சம் ரூபாவும்,

மூன்று இலக்கங்களையும் போனஸ் இலக்கத்தையும் கொண்ட சீட்டுக்களை மட்டும் வைத்திருக்கும் நான்கு பேருக்கு இரண்டாம் பரிசாக தலா ஒரு லட்சம் ரூபாவும்

மூன்று இலக்கங்களை மட்டும் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 326 பேருக்கு மூன்றாம் பரிசாக தலா இரண்டாயிரம் ரூபாவும்

இரண்டு இலக்கங்களை மட்டும் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 16242 பேருக்கு நான்காம் பரிசாக தலா நூறு ரூபாவும்

ஒரு இலக்கத்தை மட்டும் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 221786 பேருக்கு ஐந்தாம் பரிசாக தலா இருபது ரூபாவும்

"N" என்ற ஆங்கில எழுத்தை மட் டும் கொண்ட சீட்டுக்களை வைத்திருக் கும் 33948 பேருக்கு ஆறாம் பரிசாக தலா இருபது ரூபாவும் கிடைக்கப் பெற்றுள் ளன. (313)

## உயிரூட்டுகின்றோம்



பழுதான தொழில்சார் மின்சார உபகரணங்களைத் திருத்திக்கொள் ளவும், புதிய உபகரணங்களையும் உதிரிப்பாகங்களையும் கொள்வனவு செய்யவும், எங்களது ஸ்தாபனத்தை நாடுங்கள்.
உத்தரவாதங்கள் எங்களது நிலையத்திலேயே, உடனே செய்து கொடுக்கப்படும்.
(கொம்பனிக்கு அனுப்பி செய்வதில்லை)
செயின்சோ, ஜெனறேட்டர், மரவேலை இயந்திரம், மின் உபகரணங்கள், வோசிங் மெசின்,மின்சார கேத்தல்கள், றயிஸ் குக்கர் போன்றவற்றின் உதிரிப்பாகங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
**GREEN HOUSE TRADING COMPANY (PVT) LTD.**
இல. 05, கருவப்புலம் ஒழுங்கை, ஆடியபாதம் வீதி, கொக்குவில் கிழக்கு. (திருநெல்வேலி). 021 2226459.
(நல்லூர் பிரதேச செயலகத்திற்கு அருகில்)

# கிளை திறப்பு

தென்மராட்சி,ஒக.21

எல்.பி. பினான்ஸ் கம்பனியில் சாவ கச்சேரி கிளை கடந்த வியாழக் கிழமை கம்பனியின் முகாமைத்துவப் பணிப்பாளர் சுமித் ஆதிகெட்டியினால் திறந்து வைக்கப் பட்டது.

சாவகச்சேரி பிர தான வீதியில் அமைக்கப்பட் டுள்ள இந்தக்கிளை திறப்பு விழாவில் கம்பனியின் பணிப் பாளர்களான நிரோ சன் உடகே, மார்க் பெரேரா உட்படப் பலர்கலந்துகொண் டனர்.

(ம-207)

## STUDY IN UK

இன்றே விரையுங்கள்

நீங்கள் O/L, A/L சித்தியடைந்துள்ளீரா? வேலை வாய்ப்புக்காக உயர்கல்விக்காக காத்திருக்கின்றீர்களா?
'இன்றே விரையுங்கள்'

★ G.C.E. O/L, A/L தகைமையுடன் UK யில் உயர்கல்வியைச் சிறப்பான முறையில் தொடரலாம்.
★ IELTS கற்கைநெறி வகுப்புகளும் ஆலோசனைகளுக்கும் நாடுங்கள்.
★ குடும்பத்துடன் பயணிக்கக்கூடிய ஏற்பாடு.
★ இத்தாலி, ஜேர்மனி, கனடா போன்ற நாடுகளுக்கான Work Permit, Visiting Visa என்பவற்றை உரிய முறையில் பெற்றுக்கொள்ளலாம்.
★ மிகக் குறுகிய காலத்தில் Sponsor, Visa பெற்றுத் தரப் படும்.
★ Course Fees/ Sponsor தரமான முறையில் மேற் கொள்ளப்படும்.

அழையுங்கள்:
PS Consulting (pvt) LTD,
Station Road, Kondavil West,
Kondavil, Jaffna.
T.P: 0778328290, 0755766786

## பெண் பணியாளர் தேவை

பருத்தித்துறையில் வசிக்கும் வயோதிபப் பெண் ஒருவரை முழுநேரமா கவோ, பகுதி நேரமாகவோ பராமரிப் பதற்கு பெண் ஒருவர் தேவை. சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.
தொடர்பு:0212264724,
:0213007447.
(7071)

## கோழிக் குஞ்சு விநியோகம்

ஒரு கிழமை, 2 கிழமை, 3 கிழமை, 1 மாதம் நிரம்பிய ஊர்க்குஞ்சுகள் 20.08.2011 இலும் ஒரு நாள் சிவப்பு NEL FORM பேட்டுக் குஞ்சு 28.09.2011 இலும் விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்யவும்.
விவரங்களுக்கு : S.கிருஷ்ணகுமார்,
விதானை வளவு,
மானிப்பாய். 0772338084

## CARவிற்பனைக்கு

300 - XXXX தொடரிலக்கமுடைய வெள்ளை நிற NISSAN CAR விற்பனைக்கு/வாடகைக்கு உண்டு.
T.P:0772673858
(7033)

## விற்பனைக்கு

புத்தம் புதிய Nikon L110 கமரா, Lexar 2GB Memory card என்பன விற்பனைக் குண்டுதொடர்பு:- 2727750

## தேவை

எமது நிறுவனத்துக்கு கணக்காளர் தேவைப் படுவதனால் தகுதியானவர்கள் சுய விவரக் கோவையை எமது முகவரிக்கு அனுப்பி வைக்கவும். PC SYSTEMS, யாழ். வீதி, மானிப்பாய்.
email- aravin 03 @ yahoo.com.

## விற்பனைக்கு

தெகிவளையில் No 20, 2nd Lane இல் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள City Tower Apartment இல் வீடுகள் விற்பனைக்குண்டு. இப்போது முன் பதிவு செய்து விசேட விலைக் கழிவைப் பெற்றுக்கொள்ளுங்கள்.
Foresights
மேலதிக விபரங்களுக்கு
0777368764

## வீடு- காணி விற்பனைக்கு

சாவகச்சேரியில் வீடு, காணி விற்பனைக்கு உண்டு. தற்போது இயங்கும் நீதிமன்றத் துக்கு முன்னால் உள்ளது. 10 பரப்புக் காணியும் வீடும், (4அறைகள்), 10 பரப்பு வெற்றுக் காணியும் விற்பனைக்கு உண்டு, பிரித்தும் கொடுக்கப்படும்.
மொத்தம் 20 பரப்பு வீடும், காணியும் வாங்குபவர்களுக்கு விலைச் சலுகை உண்டு.
முதலீட்டாளர்களுக்குப் பொருத்தமான இடம்.
தொடர்பு: 0773526211

## கடை விற்பனைக்கு

யாழ்.மணிக்கூட்டுக் கோபுர வீதியில், ஞானம்ஸ் ஹோட்டேலுக்கு அருகில் 900 சதுர அடி உள்ள புதிதாகக் கட்டப்பட்ட கடை மேலுக்கும் ஒரு தொகுதி கட்டக்கூடிய வசதியுடன் விற்ப னைக் குண்டு.
தொடர்புக்கு: 0777749174

## காணி உடன் விற்பனைக்குண்டு

கைதடி நுணாவிலில் 307-308 Km இற்கு இடையில் A9 வீதியில் இருந்து 100 m தூரத்தில் 30 பரப்புக் காணி உடனடியாக விற்பனைக்கு உண்டு.
(சக்கடத்தார் வளவின் ஒரு பகுதி)
தொடர்பு: 0215008944,
:0779779175.
(7072)

## கண்ணீர் அஞ்சலி



சண்டிலிப்பாய் தேனிப்புளியடியைப் பிறப்பிடமாகவும் பொன்னையா வீதி ஆனைக் கோட்டையையும் கனடாவையும் வதிவிடமாகக் கொண்ட

**திருமதி சிவராஜா லிங்கேஸ்வரி**

அவர்களின் திடீர் மறைவுச் செய்தி கேட்டு துயரடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்திடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மானிப்பாய் வீதி,
அறுகால் மடம். (சி/3205)

கீத்தா ரேடர்
ஸ்தாபனத்தினர்.

## ஆங்கிலம் கற்பது இலகுவானது.



நீங்கள் எந்த நிலையிலிருந்தாலும் ,மூன்று மாதங்களில் உங்களை கே.யு வின் விசேட கற்பித்தல் முறையால் ஆங்கிலம் பேச வைக்க முடியும் என்பதை அறிவீர்களா ?
தனிப்பட்ட/குழு வகுப்புக்கள்*** அடிப்படையிலிருந்து ஆங்கிலம்
தனிப்பட்ட கவனிப்பில்,அலுப்புத்தராத சுவாரசியமான சர்வதேச கற்பித்தல் முறையில் உங்கள் நிலைக்கேற்ப ,நவீன மல்டிமீடியா மற்றும் செயன்முறைகள் மூலம் (உங்களுக்கு முன்னைய ஆங்கில வகுப்புக்களில் ஏற்பட்ட துன்பநிலை இல்லாமல்) கற்கலாம் என்றால்.....நீங்கள் தயாரா ? Local and UK Certificates for Each Level
14 வயதிலிருந்து 60 வயது வரை அனைவர்க்கும்
IELTS Coaching and Authorized Registration Centre
i-Spoken English | IELTS | ESOL-A1-B2
திருமணமாகி யுகே செல்வோருக்கான ஆங்கில வகுப்பும் பரீட்சையும்.
Visit our Web Site for further info : www.kugroup.info
இலவச நேரடி கலந்துரையாடலும் நெறிப்படுத்தலும் தற்போது வழங்கப்படுகிறது சந்திக்கும் நேர ஒதிக்கீட்டுக்கு அழையுங்கள்.
0777302882/0213208342 பிரதிவாரம் புதிய பிரிவுகள் ஆரம்பம்
**Knowledge Universe**
School of International English
City & Guilds
இல 75,கோவில் வீதி,யாழ்ப்பாணம்.(லாவா வைத்தியசாலை மேல்மாடி)

## VACANCY

மருத்துவ விற்பனைப் பிரதிநிதி
(Medical Representative)
[யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார்]

EURO ASIAN PHRMA
No. 464, Thimbirigasyaya Road,
Colombo- 05. T.P.: 0773497442

## கார் விற்பனைக்கு


Mitsubishi Lancer GLX, Brand New 2007, KF xxxx, autogear, Low milage, full option, Silver Colour, Good Condition கொண்ட கார் விற்பனைக்குண்டு.
தொடர்பு- 0789595691

## விற்பனைக்கு

தெகிவளையில் Galle Road இற்கு மிக அருகாமையில் அமைதியானதும், பாதுகாப்பானதும் ஆன சூழலில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள Apartment இல் 3B/R, 2 B/R, 1B/R வீடுகள் 44 இலட்சத்திலிருந்து விற்பனைக்குண்டு. முன் பதிவுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
Foresights
மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்க
0777763148

## நன்றி நவில்கின்றோம்

### அமரர் இராசையா பஞ்சலிங்கம்



தோற்றம் 08 . 09 . 1946
மறைவு 18 . 07 . 2011

எமது குடும்பத் தலைவரின் மரணச் செய்தி கேட்டுத் தொலைபேசி மூலமாகவும் தபால் மூலமாகவும் நேரடியாகவும் எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலி துண்டுப்பிரசுரங்களை வெளியிட்டோருக்கும் அன்னாரின் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டோருக்கும் குறிப்பறிந்து தேவைகளை நிறைவேற்றியோருக்கும் அத்துடன் அந்தியேட்டி, சபிண்டீகரண நிகழ்வில் கலந்து கொண்டோருக்கும் இதயபூர்வமான நன்றி கூறுவதுடன், தவறுதலாகத் தனிப்பட்ட அழைப்புக்கள் கிடைக்கப் பெறாதவர்களிடம் அமரரின் சார்பிலும் அவர் குடும்பத்தார் சார்பிலும் மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறோம்.

ஸ்ரீகிருஷ்ணா இல்லம்,
பூதராயர் கோயில்
ஒழுங்கை,
பருத்தித்துறை, 0771864883

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## திருமதி சிவராஜா லிங்கேஸ்வரி

சண்டிலிப்பாய், தேனிப்புளியடியைப் பிறப்பிடமாகவும், ஆனைக்கோட்டை, பொன்னையா வீதியையும், கனடாவையும் வசிப்பிடமாகக் கொண்டவருமான திருமதி சிவராஜா லிங்கேஸ்வரி 19.08.2011 வெள்ளிக்கிழமை ஆனைக் கோட்டை, பொன்னையா வீதியிலுள்ள அவரது இல்லத்தில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களாகிய வேலுப்பிள்ளை - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான செல்லையா - சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சிவராஜாவின் (இளைப்பாறிய உத்தியோகத்தர், மதுவரித் திணைக்களம்) அன்பு மனைவியும் இராசலிங்கம் (ஹற்றன்), குணரத்தினம், காலஞ்சென்ற சொர்ணலிங்கம் மற்றும் பத்மநாதன் (கனடா), செல்வராணி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் மாலதி (ஆசிரியை, ஆனைக்கோட்டை உயரப்புலம் அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன் பாடசாலை), ஜெயசீலன் (கனடா), சியாமளா (கனடா), மஞ்சுளா (கனடா), ஜெயதேவன் (லண்டன்), கீத்தா, ஜெயந்தி (கனடா), ஜெயரங்கன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயும் சுதாயினி (கனடா), காலஞ்சென்ற தயாபரன் மற்றும் தேவதாசன் (கனடா), முரளீதரன் (கீத்தா ரேடர், மானிப்பாய் வீதி ஆறுகால் மடம்), சுமிதா (லண்டன்), சுலக்சனா (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியும் யதுனன் (கனடா), ஜனனி (கனடா), திவ்யா (கனடா), தினேஸ் (கனடா), ஆரோன் (கனடா), சாரா (கனடா), அக்ஷா (கனடா), லாதுஷன் (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.08.2011) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

பொன்னையா வீதி,
ஆனைக்கோட்டை.

(சி/3204)

# மரண அறிவித்தல்



## V.S.மரியநாயகம்
(சம்மாட்டியார்)

முல்லைத்தீவு, மணற்குடியிருப்பைப் பிறப்பிடமாகவும் இந்தியா செய்யாறை வசிப்பிடமாகவும் கொண்ட V.S.மரியநாயகம் 09.08.2011 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுவானிப்பிள்ளை - லூர்த்தம்மா தம்பதியரின் அன்பு மகனும் மத்தியாஸ் - இராக்கினி அம்மாள் தம்பதியரின் அன்பு மருமகனும் மேரி செல்வநாயகியின் அன்புக் கணவரும் பேரின்பநாயகம் (இன்பம்,றொனி-லண்டன்), பேரின்பநாயகி (றொபின் - நெதர்லாந்து), பேரின்பராஜன் (ராஜன், றோய் - லண்டன்), பேரின்பராக்கினி (றொக்சி- லண்டன்), பேரின்பரமணி (றொபேந்திரா - இந்தியா), பேரின்பதீபன் (றொபின்சன்- லண்டன்), பேரின்பறமணன் (றொபேர்ட் - சுவிஸ்), பேரின்பசுகந்தி (றொக்ஸ் - இந்தியா), பேரின்பசுமதி (றொபின்கலா- இந்தியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிவராசா (நெதர்லாந்து), விஜயகாந்த் (லண்டன்), கலிஸ்ரன் (இந்தியா), அக்னேஸ்அம்மா (லண்டன்), யூட்மேரிஅஞ்சலா (லண்டன்) ஆகியோரின் அருமை மாமனும் ஆரோக்கியம் (இலங்கை), காலஞ்சென்றவர்களான மார்த்தம்மா, ஜெயம், இராணி, அமலதாஸ் மற்றும் செபமாலை (இலங்கை), ஆரோக்கியநாதர் (இலங்கை) அருளானந்தன் (பிரான்ஸ்), அமலநாயகி (இந்தியா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான சூசைப்பிள்ளை, ஜோசப் மற்றும் யேசுபாலன் (இலங்கை), லீனதாஸ் (பிரான்ஸ்), மரியராணி (இந்தியா), மரியகொரற்ரி (இலங்கை), லூட்ஸ்மேரி (சாந்தி- பிரான்ஸ்), காலஞ்சென்றவர்களான ஆரோக்கியநாதர், சிங்கராசா, அன்னம்மா, மேரிஜெசிந்தா மற்றும் மரிய கொலஸ்ரிக்கா (இலங்கை), அன்னமேரி (இலங்கை), இராணி (இலங்கை) ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற அருளானந்தம் மற்றும் சூசைப்பிள்ளை, பாக்கியநாதர், வரதராஜன் (யோகன்) ஆகியோரின் சகலனும் இனித்தா, பவித்தா, றொனியா (லண்டன்), ஸ்ரீராம், சிவராம் (நெதர்லாந்து), ஜாய்சன் (இந்தியா) ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 24.08.2011 புதன்கிழமை அன்று காலை இந்தியா செய்யாறில் உள்ள மாதா கோயிலில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, நண்பகல் ஆலய வளவில் உள்ள சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## சமய சந்நிதிகளில்

உடுப்பிட்டி காட்டுத் தோட்டம் ஞான வைரவர் ஆலய அபிஷேகத்திருவிழா நாளை திங்கட்கிழமை தொடக்கம் எதிர்வரும் 31 ஆம் திகதி புதன்கிழமை வரை நடைபெறவுள்ளது. இறுதி நாளன்று கும்பாபிஷேக தின திருவிழாவும் நடைபெறும். திருவிழாக் கால பூசைகளை சிவஸ்ரீ ஜெயசந்திரக் குருக்கள் நடத்தவுள்ளார்.

(ம)

***

கைதடி, ஓக.21

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீவல்லிபுர நாதர் தேவஸ்தானத்தில் கிருஸ்ணஜெயந்தி விழா நாளை திங்கட்கிழமை இரவு கொண்டாடப்பட இருக்கின்றது.

நள்ளிரவு 12 மணிக்கு கண்ணன் பிறப்பு நிகழ்வும் நாளை செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு உறியடி திருவிழாவும் இடம்பெறவுள்ளது.

(ம-288)

**நல்லூர் திருவிழாக்கால விசேட சலுகைகள்**

★பெண்களுக்காக★

Rebonding 2000/= மேல், Relaxing 1500/= மேல், Facial Normal 500/=, Fruit facial 750/=, Gold facial 1000/= இந்தச் சலுகை 27.08.2011 வரை மட்டுமே. மேலும் Rebonding, Relaxing one day class 1500/= 25.08.2011 அன்று மு.பகல் 10 மணிக்கு. விசேட ஒரு நாள் Cake பயிற்சி வகுப்பு 23.08.2011 1500/=. Rich cake, Cupcake, Blackforest, Date cake Special இன்னும் பல. தொடர்புகளுக்கும் முன் பதிவுகளுக்கும் தொடர்பு: 0719095284

58, கச்சேரி நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்.

# மரண அறிவித்தல்



## சங்கரப்பிள்ளை பாலசுப்பிரமணியம்
(இளைப்பாறிய அதிகாரி, புகையிரத நிலையம்)

சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை பாலசுப்பிரமணியம் 19.08.2011 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் சிவகாமிப்பிள்ளையின் அன்புக் கணவரும் பாலதேவி, Dr.சுமணதேவி, சிவபாலன் ஆகியோரின் பாசமிக்க தந்தையும் விவேகானந்தன், தனபாலசிங்கம், கீதா ஆகியோரின் அன்பு மாமனும் தாரணி, அஷ்வினி, நியோமி, கஜன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.08.2011) திங்கட்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொட்டுப்பனை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மாகியப்பிட்டி,
சண்டிலிப்பாய்

(7092)

தகவல்:
மனைவி, மக்கள்.


# Vacancies

## Northern Central Hospitals ( Pvt ) Ltd, Jaffna

Northern Central Hospitals, the first world class hospital in Northern Sri Lanka invite applications for the following positions from candidates with suitable qualifications and experience.

**General**
- Security Officers
- Pharmacists
- IT Systems Administrator
- Medical Records Officer
- Catering Officers
- Finance Officer
- Accounting Officer
- Inventory Officer
- House-Keeping Staff
- Physiotherapist

**Nursing**
- Matron
- Staff Nurse
- Specialty Nurse
- Ward Nurse
- Nursing Assistant
- Attendants

**Customer Care**
- Billing and Admissions
- Receptionist
- Telephonist

**Technicians**
- Medical Laboratory Technicians
- Radiographers
- Operation Theatre Technicians
- Biomedical Maintenance ( Electronics ) Technicians
- Mechanical / Electrical ( General ) Maintenance Officer

Prospective candidates are required to send their Bio-data with a covering letter and a recent passport size photograph to the undersigned on or before 15th September 2011 by e-mail or post to:

Chief Operating Officer
Northern Central Hospitals ( Pvt ) Ltd ( Colombo Office )
529/19, K.Cyril C Perera Mw.,Colombo – 13
e-mail: career@nchjaffna.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தானங்களில் சிறந்தது அன்னதானம்



கார்த்திகைத் திருவிழா நாளில்
நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி
மணிமண்டபத்தில்

சிறப்பு அன்னதானம்

நண்பகல் : 12 மணி.

வழங்குபவர்கள்:
புதிய நதியா நகைமாடம்,
103, 73 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 2223261, 021 2228397.

---

## STUDY IN UK, CANADA, USA, New Zealand CYPRUS, POLAND & GERMANY

- UK → பல்கலைக்கழகத்தில் குறைந்த கட்டணம் + 20 Hrs. PT + Paid Internship
- USA → கட்டணம் ஆகக்கூடியது 2 லட்சம் மட்டுமே. IELTS -5.0
- CANADA → IELTS, Sponsor தேவையில்லை, No age limit, Work Permit Available
- POLAND → பகுதி நேர தொழில் வாய்ப்பு, விசா கிடைத்த பின்பு Tuition fee செலுத்த வேண்டும்.
- GERMANY → பகுதி நேர தொழில் வாய்ப்பு + PR + With / Without IELTS
- CYPRUS → பகுதி நேர தொழில் வாய்ப்பு, விசா கிடைத்த பின்பு Tuition fee செலுத்த வேண்டும்.

Next Intake: Oct.2011

UKRAINE - Aerospace, Aeronautical Eng, MBBS, Nursing, Tele communication, Bio Medical Science at lower cost + 1 Year Free Accommodation

பஸ்னா - 0778 438403

READ International
E-mail: read.int@gmail.com
No:201-1/1A, Galle Road, Dehiwala ( Opposite to The Finance/HNB)

---

யாழ். வண்ணை

## ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்

## ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி உற்சவம்

22.08.2011 (திங்கட்கிழமை)

கண்ணன் அடியார்களே!

உலகோர் உய்ய பகவத்கீதையை அருளியவனும் ஆபத்பாந்தவனும் அநாதரட்சகனுமாகிய ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவின் ஜெயந்தி தினத்தை முன்னிட்டு,

நிகழும் மங்களகரமான கர வருஷம் ஆவணித் திங்கள் 5 ஆம் நாள் (22.08.2011) திங்கட்கிழமை மாலை 4 மணிமுதல் ஸ்ரீ வேணுகோபால சுவாமிக்கு அஷ்டோத்தர (108) கலச சங்காபிஷேகமும் தொடர்ந்து விசேட தீபாராதனை வழிபாடுகளுடன் சகஸ்ரநாம அர்ச்சனையும் நடைபெறும்.

* இரவு 9 மணிக்கு பஜனை (சிறி கதிர்காமமுருகன் பஜனைக்குழுவினர்)
* இரவு 10.30 மணிக்கு ஸ்ரீ கிருஷ்ணன் தூது - தெய்வீக இசைப் பேருரை நிகழ்த்துபவர் - " கான கதா வாரதி " பிரம்மஸ்ரீ வை. நித்தியானந்த சர்மா
* அணி செய் கலைஞர்கள் : வயலின் - வித்துவான் திரு. K. பத்மநாதன்,
  ஆர்மோனியம் - வித்துவான் திரு. K.சத்தியன்,
  மிருதங்கம் - வித்துவான் திரு. T. இராஜன்
* நள்ளிரவு 12 மணிக்கு ஸ்ரீ கிருஷ்ணனின் ஜனனபூஜை மற்றும் தாலாட்டு நிகழ்வுகளைத் தொடர்ந்து சுவாமி வசந்த மண்டபத்துக்கு எழுந்தருளுவார். வசந்த மண்டபத்தில் ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி காயம் அடியார்களுக்கு வழங்கப்படும்.

### உறியடி உற்சவம்

ஆவணித் திங்கள் 6 ஆம் நாள் 23.08.2011 செவ்வாய்க்கிழமை மாலை 5.30 மணிக்கு வசந்த மண்டபத்தில் எழுந்தருளியிருக்கும் சுவாமிக்கு விசேட பூஜை வழிபாடுகள் நடைபெறும். தொடர்ந்து சுவாமி வெளிவீதி உலா வந்து அடியார்களுக்கு அருட்காட்சி வழங்கி உறியடி உற்சவம் நடைபெறும்.

அடியார்கள் இப்புனித நாளில் தேவஸ்தானத்துக்கு வந்து விழா நிகழ்வுகளில் கலந்து கண்ணபிரான் திருவருள் பெற்றுய்யும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

08.09.2011 வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு புதிதாக நிர்மாணிக்கப்பட்டு உள்ள வசந்த மண்டப மஹாகும்பாபிஷேகம் நடைபெறும்.

ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்,
வண்ணை, யாழ்ப்பாணம்.

ஆதீன மஹாசபை,
தொ.பே. எண். 021 222 2476

---

வாழ்வின் சகல சௌபாக்கியங்களும் தரும்

## சோ.கூ.றே.மணிமேர்க்கஸ் பெட்டகம்

கடன்தொல்லை, கல்வியில் முன்னேற்றமின்மை, வேலையின்மையும் பணக்கஷ்டமும், திருமணத் தடை, கொடிய நோய் களின் அவஸ்தை போன்ற வாழ்வின் மிக முக்கிய 5 பிரச்சினைகளுக்கு ஒரே தீர்வு.

மனை, கடை, மற்றும் சகல வியாபார ஸ்தாபனங்களிலும் வைக்க உன்னத பலன் கிடைக்கும்.

விலை ரூபா 5100.00 மட்டும்.

எமது வாடிக்கையாளர்கள் தங்கள் வாழ்வில் ஏற்பட்ட மாற்றங்களுக்காகவும் வெற்றிகளுக்காகவும் எமக்கு நன்றி தெரிவித்து வருகின்றனர். அச்சான்றுகளை நாம் ஆதாரபூர்வமாகப் பதிவு செய்து வருகின்றோம். அதேபோல் உங்கள் வாழ்விலும் ஏற்பட்ட மாற்றங்களை எமக்குத் தெரியப்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

உங்கள் இருப்பிடங்களுக்குத் தருவிப்பதற்கு அழையுங்கள்.
077 1399950.

---

## வீடு விற்பனைக்கு

இல.35, பொன்னையா வீதி (உப தபாற் கந்தோர் வீதி), ஆனைக்கோட்டையில் 2 பரப்புக் காணியில், கட்டிய குறை நிலையில் மாடி வீடு விற்பனைக்குண்டு.
(தபாற் பெட்டி லேனில் இருந்து 100m தூரத்தில்)
தொடர்பு: 0774527671

---




## நல்லூரான் வாயிலில் வெளிநாட்டுக் கல்விவாய்ப்பு

## Spot Admission

வெளிநாட்டுப் பிரதிநிதியுடனான சந்திப்பு
ஓகஸ்ட் 23–25 (முன்பதிவு அவசியம்)

அனைவருக்கும் கட்டுபடியான
UK, Australia, USA, Canada & New Zealand
பட்டக் கல்வி



10க்கும் மேற்பட்ட பல்கலைக்கழகங்கள்
100க்கும் அதிகமான கற்கைநெறிகள்
மிகக் குறைந்த செலவு, IELTS அவசியமில்லை
விசா கெடுபிடி எதுவுமில்லை (ஒரு மாதத்தில் பயணம்)
குடியுரிமை வாய்ப்புக்கள்
முற்றிலும் சட்டபூர்வமான, உத்தரவாதமான வழிமுறைகள்

The University of Nottingham, MONASH University Sunway campus, the University of Greenwich, INTI Laureate International Universities, MAHSA, HELP University College, SUNWAY UNIVERSITY, SEGi University College, LINTON University College, TARCollege, StudyMalaysia

## சிகரம் விசேட காட்சியறை

நல்லூர் ஆலய முன்றல் (யாழ்கோ பால்சாலைக்கு அருகில்)

கல்வி வழிகாட்டல் பிரிவு - சிகரம் ஊடக இல்லம்
இல.221, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்
தொ.பே.: 021 300 80 60

MEDIA

---

# மலேசியா

## தமிழ் பேசும் பெண்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு

மலேசியாவில் உள்ள
தமிழ் VIP வீடுகளுக்கு
தமிழ் பேசும் பணிப் பெண்கள் தேவை

| | |
|---|---|
| மாதாந்த சம்பளம் | RM 850 |
| இலங்கைப் பெறுமதிக்கு | ரூபா. 28,000 |

* கடவுச்சீட்டு (Passport) - இலவசம்
* மெடிக்கல் (Medical) - இலவசம்
* இன்சூரன்ஸ் (Insurance) - இலவசம்
* விமான டிக்கட் (Air Ticket) - இலவசம்
* தங்குமிடவசதி (Accomodation) - இலவசம்
* உணவு (Food) - இலவசம்
* 2 வருட கால ஒப்பந்தம் (2 Years Contract)

பாஸ்போட் இல்லாதவர்கள் உரிய ஆவணங்கள் கொடுத்தால் இலவசமாக பாஸ்போட் செய்து தரலாம். முற்றும் இலவசம்

Labour Licence No. 2516

GOODLINE MANPOWER SERVICES
38/3, (3rd Floor), Symonds Road, Maradana, Colombo-10.
Tel : 011 3091521 Hotline : 077 3179592

---

## மரண அறிவித்தல்

## கணபதிப்பிள்ளை மலரகீதன்

(மலையன்)



அச்சுவேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட மலரகீதன் 19.08.2011 வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - செல்லம்மா தம்பதியரின் அன்புப் புத்திரனும் கொக்குவிலைச் சேர்ந்த காலஞ்சென்ற நடேசன் மற்றும் கனகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் பாஸ்கரியின் அன்புக் கணவரும் மயூரி, பவித்திரன், கஸ்தூரி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற செல்லக்கண்டு (மணி), மற்றும் வடிவாம்பிகை, பாலச்சந்திரன் (ஜேர்மனி), தவரஞ்சிதம் (கனடா), காலஞ்சென்ற யோகராஜா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஐயாத்துரை (ஜேர்மனி), காலஞ்சென்ற நவரட்ணம் மற்றும் வசந்தாதேவி (ஜேர்மனி), விஸ்வலிங்கம் (கனடா), பாஸ்கரன் (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும் ரமேஸ் (ஜேர்மனி), கோஜனா, மிதுனா, யாழினா (கனடா) ஆகியோரின் மாமனாரும் ஜெயச்சந்திரன், சிவச்சந்திரன், விஜிதா (ஜேர்மனி) ஆகியோரின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரிகைகள் இன்று (21.08.2011) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு அச்சுவேலி வடக்கிலுள்ள அவரின் சகோதரியின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வல்லை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி.

தகவல்: மனைவி,
பிள்ளைகள், திருமதி வடிவாம்பிகை,
நவரட்ணம் (சகோதரி)

---

## கடன் பெற்றோர் மற்றும் பொறுப்பாளி (பிணை நின்றோர்) களுக்கான அறிவித்தல்

### மெர்கன்டைல் கிறடிட் லிமிட்டட்

(தற்போது கலைப்பிலுள்ளது)
கொழும்பு மாவட்ட நீதிமன்ற வழக்கு இலக்கம்: 176/CO

**உங்கள் காணிகளின் ஈடு, நீதிமன்ற சுவீகரிப்பு மற்றும் ஏனைய பொறுப்புக்களிலிருந்து மீள்வதற்கான இறுதித்திகதி**

மெர்கன்டைல் கிறடிட் லிமிட் நிறுவனத்தில் காணிகள்/ஆதனங்களை ஈடாக அல்லது பொறுப்பு வைத்துக்கடன் வசதிகளைப் பெற்றுக் கொண்டோர் அவற்றை இதுவரை மீட்காதிருந்தால் எதிர்வரும் 2011 செப்டெம்பர் மாதம் 30ஆம் திகதிக்கு முன் பின்வரும் முகவரியில் கம்பனிக்கலைப்பாளரைத் தொடர்பு கொண்டு தமது கடன்கள் ஏதும் மீதி இருப்பின் அவற்றை செலுத்தி தங்கள் காணிகளின் ஈடு. பொறுப்பு மற்றும் நீதிமன்ற சுவீகரிப்பு என்பவற்றில் இருந்து விடுகை பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

மேற்படி தினத்திற்கு முன் மீட்கப்படாத ஈடு. பொறுப்பு மற்றும் நீதிமன்ற சுவீகரிப்பு என்பவை பின்னர் எக்காலத்திலும் மீட்கப்படாது போகலாம்.

கம்பனிகலைப்பாளர்
மெர்கன்டைல் கிறடிட் லிமிட்டட்
Liquidators,
Mercantile Credit Limited,
(Under Liquidation),
C/o SJMS Associates,
No. 30 - 2/1, Galle Road, Colombo 06.
TP : 011 2553179

### யூனியன் றஸ்ட் அன்ட் இன்வெஸ்ட்மென்ட் லிமிட்டட்

(தற்போது கலைப்பிலுள்ளது)
கொழும்பு மாவட்ட நீதிமன்ற வழக்கு இலக்கம்: 23/CO

**உங்கள் காணிகளின் ஈடு, நீதிமன்ற சுவீகரிப்பு மற்றும் ஏனைய பொறுப்புக்களிலிருந்து மீள்வதற்கான இறுதித்திகதி**

யூனியன் றஸ்ட் அன்ட் இன்வெஸ்ட்மென்ட் லிமிட்டட் நிறுவனத்தில் காணிகள்/ஆதனங்களை ஈடாக அல்லது பொறுப்பு வைத்துக்கடன் வசதிகளைப் பெற்றுக்கொண்டோர் அவற்றை இதுவரை மீட்காதிருந்தால் எதிர்வரும் 2011 செப்டெம்பர் மாதம் 30ஆம் திகதிக்கு முன் பின்வரும் முகவரியில் கம்பனிக்கலைப்பாளரைத் தொடர்பு கொண்டு தமது கடன்கள் ஏதும் மீதி இருப்பின் அவற்றை செலுத்தி தங்கள் காணிகளின் ஈடு. பொறுப்பு மற்றும் நீதிமன்ற சுவீகரிப்பு என்பவற்றில் இருந்து விடுகை பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

மேற்படி தினத்திற்கு முன் மீட்கப்படாத ஈடு. பொறுப்பு மற்றும் நீதிமன்ற சுவீகரிப்பு என்பவை பின்னர் எக்காலத்திலும் மீட்கப்படாது போகலாம்.

கம்பனிகலைப்பாளர்
யூனியன் றஸ்ட் அன்ட் இன்வெஸ்ட்மென்ட் லிமிட்டட்
Liquidators,
Union Trust & Investments Limited,
(Under Liquidation),
C/o SJMS Associates,
No. 30 - 2/1, Galle Road, Colombo 06.
TP : 011 2508874, 0112508814

### ஹோம் பினான்ஸ் லிமிட்டட்

(தற்போது கலைப்பிலுள்ளது)
கொழும்பு மாவட்ட நீதிமன்ற வழக்கு இலக்கம்: 91/CO

**உங்கள் காணிகளின் ஈடு, நீதிமன்ற சுவீகரிப்பு மற்றும் ஏனைய பொறுப்புக்களிலிருந்து மீள்வதற்கான இறுதித்திகதி**

ஹோம் பினான்ஸ் லிமிட்டட் நிறுவனத்தில் காணிகள்/ஆதனங்களை ஈடாக அல்லது பொறுப்பு வைத்துக்கடன் வசதிகளைப் பெற்றுக் கொண்டோர் அவற்றை இதுவரை மீட்காதிருந்தால் எதிர்வரும் 2011 செப்டெம்பர் மாதம் 30ஆம் திகதிக்கு முன் பின்வரும் முகவரியில் கம்பனிக்கலைப்பாளரைத் தொடர்பு கொண்டு தமது கடன்கள் ஏதும் மீதி இருப்பின் அவற்றை செலுத்தி தங்கள் காணிகளின் ஈடு. பொறுப்பு மற்றும் நீதிமன்ற சுவீகரிப்பு என்பவற்றில் இருந்து விடுகை பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

மேற்படி தினத்திற்கு முன் மீட்கப்படாத ஈடு. பொறுப்பு மற்றும் நீதிமன்ற சுவீகரிப்பு என்பவை பின்னர் எக்காலத்திலும் மீட்கப்படாது போகலாம்.

கம்பனிகலைப்பாளர்
ஹோம் பினான்ஸ் லிமிட்டட்
Liquidators,
Home Finance Limited,
(Under Liquidation),
C/o SJMS Associates,
No. 30 - 2/1, Galle Road, Colombo 06.
TP : 011 2508874, 0112508814

SJMS

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டு வீரர்களை பதிவு செய்ய அறிவுறுத்து


யாழ்ப்பாணம், ஓக.21

யாழ். மாவட்டத்தில் கிரிக்கெட் சங்கத்தில் அங்கம் வகிக்கும் விளையாட்டுக் கழகங்களின் வீரர்களைப் பதிவு செய்து கொள்ளுமாறு யாழ்.மாவட்ட கிரிக்கெட் சங்கம் அறிவித்துள்ளது.

நாவலர் வீதியில் அமைந்துள்ள கிரிக்கெட் அக்கடமியில் கடந்த 13 ஆம் திகதி இடம்பெற்ற செயற்குழுக்கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

இதில் எதிர்வரும் 31.08.2011 திகதிக்கு முன்னர் வீரர்களை பதிவுசெய்து கொள்ளுமாறும் அனைத்து கழகங்களின் செயலர்களுக்கு சுற்று நிருபம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்தப் பதிவுகளின் படியே பிரிவுகளுக்கான போட்டிகள் நடைபெறவுள்ள தாகவும் அங்கத்துவம் பெற்ற அணிகள் பங்கு கொள்ளமுடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-23)



இலங்கை துடுப்பாட்ட சங்கத்தால் 15 வயது பிரிவு யாழ். மாவட்ட கிரிக்கெட் அணியை தெரிவுசெய்வதற்கான பயிற்சிமுகாம் அண்மையில் சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது. வீரர் ஒருவர் பந்து வீசுகிறார். வடமாகாண கிரிக்கெட் பயிற்றுநர் ரவிந்திர புஸ்பகுமார் யாழ். மாவட்ட கிரிக்கெட் பயிற்றுநர் லக்சித பெரேரா ஆகியோர் அருகில் உள்ளனர். (ம-23)

# சீனியர் இன்ர லீக் உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம்,ஓக.21

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தால் 2011 ஆம் ஆண்டுக்கான சீனியர் இன்ர லீக் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டம் ஒன்று இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணியளவில் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் கிளிநொச்சி உதைபந்தாட்ட தெரிவு லீக் அணியை எதிர்த்து யாழ். லீக் தெரிவு அணி மோதவுள்ளது என்று கிளிநொச்சி உதைபந்தாட்ட லீக் தலைவர் ஜோய் பியசீலன் தெரிவித்துள்ளார். (ம-23)



மட்டுவில் தெற்கு வளர்மதி சனசமூக நிலையத்தில் 46 ஆவது ஆண்டு நிறைவையொட்டி யாழ்.மாவட்ட ரீதியில் இடம்பெற்ற செற்அப் முறையிலான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் சிறந்த இளம் வீரராகத் தெரிவு செய்யப்பட்ட ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழக அணியைச் சேர்ந்த ஜெனகனுக்கு மட்டுவில் மத்தி மட்டுவில் நுணாவில் கிராம சேவையாளர் க.வாமதேவன் விருது வழங்குகிறார். (ம-23)

# கோலூன்றிப் பாய்தல் உபகரணம் வழங்கல்

வலி. வடக்கு, ஓக.21

வடமாகாண கல்வித் திணைக்களத்தால் கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு கோலூன்றிப் பாய்தலுக்கான சுமார் ஒன்றரை லட்சம் ரூபா பெறுமதியான கோல் வழங்கப்பட்டுள்ளது.

வடமாகாண ஆளுநரின் பணிப்புரைக்கு அமைவாக பாடசாலை மட்டத்தில் விளையாட்டுத் துறையை அபிவிருத்தி செய்யும் செயற்றிட்டத்தின் கீழ் இதனை வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் மற்றும் உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆகியோர் வழங்கியுள்ளனர்.

அண்மையில் வடமாகாண கல்வி அமைச்சால் நடத்தப்பட்ட மெய்வன்மைப் போட்டியின் கோலூன்றிப் பாய்தலில் 19வயதுப்பிரிவில்முதல்தடவையாக ஆண்கள் பிரிவில் ஜீ.அனோஜன் முதலாம் இடத்தையும் பெண்கள் பிரிவில் பத்மசந்தியா 3ஆம் இடத்தை யும் பெற்றுள்ளனர்.

இந்த நிலையில் கோலூன்றிப் பாய்தலுக்கான கோல் வழங்கப்பட்டுள்ளது. (ம-86)

# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஓக.21

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அதிபர் அமரர் பி.எஸ். குமாரசாமி ஞாபகார்த்தமாக யாழ்ப்பாணம் ஸ்ரான்லி விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட கிரிக்கெட் விளையாட்டுக் கழகங் களுக்கு இடையே நடத்தும் இருபதுக்கு இருபது கிரிக்கெட் போட்டியில் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள ஆட்டங்களில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் மோதவுள்ள அணிகள் விவரம் வருமாறு :

**காலை 8.30 மணி**

கொக்குவில் மத்திய சனசமூகநிலைய விளையாட்டுக் கழகம் எதிர் யாழ்ப்பாணம் ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழகம்

**முற்பகல் 11 மணி**

மானிப்பாய் பரிஸ் விளையாட்டுக் கழகம் எதிர் யாழ்ப்பாணம் ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம்.

**பிற்பகல் 4 மணி**

யாழ்ப்பாணம் பற்றீசியன்ஸ் விளை யாட்டுக்கழகம்எதிர்வண்ணார்பண்ணைகாமாட்சி அம்பாள் விளையாட்டுக்கழகம். (ம-86)

# வடமாகாண தடகளப்போட்டி; வெற்றி பெற்ற 19 வயதுப் பிரிவுப் பெண்கள்

வலி.வடக்கு,ஓக.21

வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்கம் மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்திய 19 வயதுப் பிரிவு பெண்களுக்கான தடகளப்போட்டிகளில் முதல் நான்கு இடங்களைப் பெற்றவர்களின் விவரம் வெளியாகியுள்ளது.

அடுத்த மாதம் நடைபெறவுள்ள அகில இலங்கைத் தேசிய மட்டப்போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ள வீரர்களின் விவரம் வருமாறு:

**100 மீற்றர்** - ஆர்.ஜக்சனா (அளவெட்டி அருணோதயக் கல்லூரி), வி.டிலக்ஷனா (முல்லைத்தீவு மல்லாவி மத்திய கல்லூரி), ஜெ.எம்.ரஜிற்றா (வவுனியா தெற்கு றம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயம்), எஸ்.கீர்த்தனா (பருத்தித்துறை மெடிஸ்த மகளிர் உயர்தரப் பாடசாலை).

**200 மீற்றர்** - தே.லீசாயினி ( வவுனியா தெற்கு சைவப்பிரகாச மகளிர் கல்லூரி), வி.டிலக்சனா ( முல்லைத்தீவு மல்லாவி மத்திய கல்லூரி), கே.மதனப்பிரியா (முல்லைத்தீவு வித்தியானந்தாக் கல்லூரி), எஸ். தனுபா (மன்னார் அடம்பன் மகா வித்தியாலயம்).

**400 மீற்றர்** - கே. லீதாயினி (வவுனியா தெற்கு சைவப்பிரகாச மகளிர் கல்லூரி), வி.டிலக்சனா (முல்லைத்தீவு மல்லாவி மத்திய கல்லூரி), எ.திரேசில்டா பிகிறாடோ (மன்னார் சென்.லூசியா மகா வித்தியாலயம்), பி.சுகந்தினி (யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி).

**800 மீற்றர்** - எஸ். லக்ஸ்சலா (மருதனார் மடம் இராமநாதன் கல்லூரி ), ஜீ.மேரிறனிதா ( மன்னார் சென்.சேவியர் மகளிர் கல்லூரி), எஸ். தீபா (கிளிநொச்சி இராமநாத புரம் மகாவித்தியாலயம்), ரி.சந்தான லோகினி (வவுனியா வடக்கு பூம்புகார் கண்ணகி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை).

**1500 மீற்றர்**- ஆர்.சாலினி (வவுனியா வடக்கு சுந்தரபுரம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை), பி.விமலாதேவி (கிளிநொச்சி பாரதி வித்தியாலயம்), எஸ்.தீபா (கிளிநொச்சி தர்மபுரம் மகா வித்தியாலயம்), ஜீ.மேரிறனிதா( மன்னார் சென்.சேவியர் மகளிர் கல்லூரி).

**5000 மீற்றர்**- ஜீ.மேரிறணிதா (மன்னார் சென்.சேவியர் மகளிர் கல்லூரி), பி.விமலாதேவி (கிளிநொச்சி பாரதி வித்தியாலயம்), ஆர் . சாரங்கா (முல்லைத்தீவு வித்தியானந்தாக் கல்லூரி), எஸ்.தீபா (கிளிநொச்சி தர்மபுரம் மகாவித்தியாலயம்).

**110 மீற்றர் தடை தாண்டல்**- எ.ஜெயரஞ்சினி (சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி), எஸ்.சுதர்சினி (வவுனியா வடக்கு பூம்புகார் கண்ணகி அம்மன் தமிழ்க் கலவன் பாடசாலை), ஜீ.ரிஷிகா (தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி), எ.திரேசில்டா பிகிறாடோ (மன்னார் சென். லூசியா மகாவித்தியாலயம்).

**400 மீற்றர் தடை தாண்டல்**-கே.லெகாயினி (வவுனியா தெற்கு சைவப்பிரகாச மகளிர் கல்லூரி), எ.திரேசில்டா பிகிறாடோ (மன்னார் சென்.லூசியா மகாவித்தியாலயம்), எஸ். சுதர்சினி (வவுனியா வடக்கு பூம்புகார் கண்ணகி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை), எம்.ஜெயவதனா (முல்லைத்தீவு சிலாவத்தை தமிழ்க் கலவன் மகாவித்தியாலயம்).

**உயரம் பாய்தல்**- எஸ். கிஷாந்தினி (தென்மராட்சி சாவகச்சேரி றிபேக் கல்லூரி), எம். கமலினி (உடுவில் மகளிர் கல்லூரி), எம்.கே.ஹம்சும் நிஷா (வவுனியா தெற்கு அல் இக்பால் மகாவித்தியாலயம்), எஸ். வாசுகி (வவுனியா தெற்கு றம்பைக் குளம் மகளிர் மகாவித்தியாலயம்).

**நீளம் பாய்தல்** - எஸ். தனுபா ( மன்னார் அடம்பன் மகாவித்தியாலயம்), ஆர்.ஜக்சனா அளவெட்டி அருணோதயக் கல்லூரி), ஆர்.அகல்யா (சாவகச்சேரி இந்துக்கல்லூரி), பி.சுகன்ஜா (முல்லைத்தீவு துணுக்காய் கற்சிலைமடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை).

**முப்பாய்ச்சல்** - எ.பவித்திரா (அளவெட்டி அருணோதயக் கல்லூரி), எஸ்.ஜெயரஞ்சினி (சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி), கே.பிரியதர்சினி(மன்னார் சென்.சேவியர் மகளிர் கல்லூரி), வி.தனுசிகா ( மன்னார் அல்மினா மகாவித்தியாலயம்).

**கோலூன்றிப் பாய்தல்** - எ.பவித்திரா (அளவெட்டி அருணோதயக் கல்லூரி), ஆர்.ஜக்சனா (அளவெட்டி அருணோதயக் கல்லூரி), கே.பத்மசந்தியா ( கொக்குவில் இந்துக் கல்லூரி).

**குண்டெறிதல்** - எஸ்.கீர்த்திகா (தெல்லிப்பழை யூனியன் கல்லூரி), ஜெ.சர்மிலா (மானிப்பாய் மகளிர் கல்லூரி), வி.தாமரா ( வவுனியா தெற்கு றம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயம்), எஸ். சுதர்சனா (முல்லைத் தீவு குமுழமுனை மகாவித்தியாலயம்).

**தட்டெறிதல்** - ரி.பானுசா (வடமராட்சி பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடாசலை), எஸ். சுதர்சனா (முல்லைத்தீவு குமுழமுனை மகா வித்தியாலயம்), எஸ்.கீர்த்திகா (தெல்லிப் பழை யூனியன் கல்லூரி), எஸ். நிரோஜினி ( வவுனியா தெற்கு கந்தபுரம் வாணி வித்தியாலயம்).

**ஈட்டி எறிதல்** - எஸ். ஜானகி வடமராட்சி பருத்தித்துறை மெதடிஸ்த மகளிர் உயர் தரப் பாடசாலை), பி.மாதங்கி (கிளிநொச்சி இந்துக் கல்லூரி), எஸ். டென்சிகா (வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி), கே. புவிதா (தென்மராட்சி மிருசுவில் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை).

**4x100 மீற்றர் அஞ்சல் ஓட்டம்**- வடமராட்சி பருத்தித்துறை மெதடிஸ்த மகளிர் உயர்தரப் பாடசாலை, அளவெட்டி அருணோதயக் கல்லூரி, மன்னார் சென். சேவியர் மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.

**4x400 மீற்றர் அஞ்சல் ஓட்டம்**- உடுவில் மகளிர் கல்லூரி, அளவெட்டி அருணோதயக் கல்லூரி , முல்லைத்தீவு வித்தியானந்தாக் கல்லூரி, மன்னார் முருங்கன் மகாவித்தியாலயம். (எ-86)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வென்றது ஆஸி.

# சொந்த மண்ணில் தொடரை இழந்தது இலங்கை


இலங்கை அணிக்கும் ஆஸ்திரேலிய அணிக்கும் இடையில் கொழும்பு ஆர்.பிரேமதாஸ மைதானத்தில் நேற்று இடம்பெற்ற நான்காவது ஒரு நாள் ஆட்டத்தில் இலங்கை அணி 5 விக்கெட்டுக்களால் தோல்வியடைந்தது. நேற்றைய ஆட்டத்தில் தோல்வியடைந்ததன் மூலம் ஆஸ்திரேலிய அணியுடனான ஒரு நாள் தொடரை இலங்கை அணி 3-1 என்ற கணக்கில் இழந்துள்ளது.

இலங்கைக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள ஆஸ்திரேலிய அணி இரண்டு 'ரி-20' ஆட்டங்கள், 5 ஒரு நாள் ஆட்டங்கள், 3 டெஸ்ட் ஆட்டங்களில் விளையாடி வருகின்றது. இதில் இரண்டு 'ரி-20' ஆட்டங்களிலும் இலங்கை அணி வெற்றி பெற்றது. தொடர்ந்து இடம்பெற்ற ஒரு நாள் ஆட்டங்களில் முதலிரண்டு ஆட்டங்களை ஆஸ்திரேலிய அணியும், மூன்றாவது ஆட்டத்தை இலங்கை அணியும் கைப்பற்றியிருந்தன. இந்த நிலையில் வென்றாக வேண்டிய கட்டாயத்தில் நேற்று களம் புகுந்த இலங்கை அணி துடுப்பாட்டத்தில் சொதப்பியதால் ஆஸி அணியிடம் அடிவாங்கியது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடுவதாக தீர்மானித்தது. அதன்படி களமிறங்கிய இலங்கை அணி வீரர்கள் ஆரம்பம் முதலே ஆஸியின் பந்து வீச்சை சமாளிக்க முடியாமல் திணறினர். ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான தரங்க 8 ஓட்டங்களுடனும், டில்ஷான் 12 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்து வெளியேறினர். 6.2 பந்து வீச்சுக்களில் 24 ஓட்டங்களுக்கு இலங்கை அணி 2 விக்கெட்டுக்களை இழந்திருந்தது.



அப்படி என்னதான் செய்கிறார்கள்....?
பார்க்கிறார் மத்தியூஸ்.



லீயின் கையுக்குள் மஹேலவின் பந்து....




என்னமோ நடக்குது... எதுவுமே புரியல...
சங்கக்கார.

இதன் பின்னர் ஜோடி சேர்ந்த சங்கக்கார - மஹேல இருவரும் நிதானமாகத் துடுப்பெடுத்தாடினர். மூன்றாவது விக்கெட்டுக்காக 71 ஓட்டங்களை இருவரும் பகிர்ந்த நிலையில் சங்கக்கார ஆட்டமிழந்தார். 56 பந்துகளில் ஒரு பவுண்டரியுடன் 31 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் டொஹேட்டியின் பந்து வீச்சில் ஆட்டமிழந்து வெளியேறினார். சங்காவின் ஆட்டமிழப்புடன் இலங்கையின் சரிவு ஆரம்பமானது.

தொடர்ந்து வந்த சாமர சில்வா ஓட்டமெதனையும் பெறாமலும் மத்தியூஸ் 6 ஓட்டங்கள், குலசேகர 7 ஓட்டங்கள், எரங்க ஒரு ஓட்டத்துடனும் ஆட்டமிழந்தனர். மறு முனையில் தனித்து நின்று போராடிய மஹேல அரைச்சதம் பூர்த்தி செய்தார். 102 பந்துகளில் 4 பவுண்டரிகளுடன் 53 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் மஹேல ஆட்டமிழக்க இலங்கையின் ஆட்டம் முடிவுக்கு வந்தது. இலங்கை அணி 38.4 பந்து வீச்சுக்களில் 132 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. இலங்கை சார்பில் மூன்று வீரர்கள் ஓட்டமெதனையும் பெறாது ஆட்டமிழந்தனர்.




நானும் சளைத்தவன் அல்ல...
மலிங்க.

பந்து வீச்சில் ஆஸி சார்பில் லீ 6.4 ஓவர்கள் பந்து வீசி 15 ஓட்டங்கள் கொடுத்து 4 விக்கெட்டுக்களை கைப்பற்றினார். மறுமுனையில் டொஹேட்டி 10 ஓவர்கள் பந்து வீசி 28 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு இலகுவான இலக்கை விரட்டி ஆரம்பித்த ஆஸி ஆரம்பத்திலேயே தடுமாறியது. 6.1 பந்து வீச்சுக்களில் 26 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் வொட்ஸனின் விக்கெட்டை மலிங்க வீழ்த்தினார். அதே ஓவரின் இறுதி பந்தில் பொன்டிங்கை ஓட்டமெதனையும் பெறாத நிலையில் பவிலியனுக்கு அனுப்பினார். அதனைத் தொடர்ந்து இணைந்த ஷோன் மார்ஷ் - அணித்தலைவர் மைக்கல் கிளார்க் இருவரும் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடினர். இலங்கையின் பந்து வீச்சில் ஆஸ்திரேலிய அணி அதிரடியாட்டத்தை ஆடமுடியாமல் திணறியது. மெதுவாகவே ஓட்டங்களைப் பெற்றனர். இறுதியில் மார்ஷின் சிறப்பான ஆட்டத்தின் மூலம் வெற்றியை நெருங்கியது. மார்ஷ் அரைச்சதம் அடித்து அசத்தினார். 80 பந்துகளில் 11 பவுண்டரிகள், ஒரு சிக்ஸருடன் 70 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் மார்ஷ் ஆட்டமிழந்தார்.

26.1 பந்து வீச்சுக்களில் 123 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் மார்ஷின் விக்கெட்டை நேற்றைய ஆட்டத்தில் அறிமுகமாகிய பிரசன்ன கைப்பற்றினார். அந்த ஓவரின் அடுத்த பந்து வீச்சிலேயே ஹஸியை 'டக் அவுட்டாக்கினார்'. அதே ஓவரின் இறுதிப் பந்தில் டேவிட் ஹஸியையும் ஆட்டமிழக்கச் செய்தார். தொடர்ச்சியான விக்கெட் இழப்புக்களால் ஆஸி அணி திணறியது. இருப்பினும் அடுத்த ஓவரை மலிங்க வீச அணித்தலைவர் கிளார்க் பவுண்டரிக்கு விளாசி அணியை வெற்றி பெறச் செய்தார்.

இறுதியில் ஆஸி அணி 28 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 133 ஓட்டங்களைப் பெற்றது. மைக்கல் கிளார்க் ஆட்டமிழக்காமல் 60 பந்துகளில் 5 பவுண்டரிகளுடன் 38 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் மலிங்க 7 ஓவர்கள் பந்து வீசி 2 ஓட்டமற்ற ஓவர்கள் அடங்கலாக 18 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினார். பிரசன்ன 6 ஓவர்கள் பந்து வீசி ஒரு ஓட்டமற்ற ஓவர் அடங்கலாக 32 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். ஆட்ட நாயகனாக டொஹேட்டி தெரிவானார். ஐந்தாவதும் இறுதியுமான ஒரு நாள் ஆட்டம் இதே மைதானத்தில் நாளை பகலிரவு ஆட்டமாக நடைபெறவுள்ளது. (15)

## இந்தியா: அடிமேல் அடிவாங்குகிறது

இங்கிலாந்து அணிக்கும் இந்திய அணிக்கும் இடையிலான நான்காவது டெஸ்ட் ஆட்டத்தின் 3ஆம் நாள் முடிவில் இந்திய அணி 99 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களை இழந்து பலோன் நிலையை எதிர்நோக்கியுள்ளது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. அந்த அணி 591 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுக்களை இழந்த நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது.

அந்த அணி சார்பில் இயன்பெல் 23 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் அடங்கலாக 235 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். பீற்றர்சன் 27 பவுண்டரிகள் அடங்கலாக 175 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டமிழந்தார்.

இந்திய அணி சார்பில் ஸ்ரீசாந் 3 விக்கெட்டுக்களையும் ரெய்னா 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடத் தொடங்கிய இந்திய அணி ஆரம்பம் முதலே விக்கெட்டுக்களை இழந்தது. சேவாக் 8, லக்ஸ்மன் 2, டெண்டுல்கர் 23, ரெய்னா 0, இஷாந் சர்மா 1 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

டிராவிட் 57 ஓட்டங்களுடனும் டோனி 5 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் களத்தில் உள்ளனர். பந்துவீச்சில் சுவான் 3 விக்கெட்டுக்களையும் அன்டர்சன், புரோட் தலா ஒரு விக்கெட்டினையும் கைப்பற்றினர். இன்று ஆட்டத்தின் நான்காம் நாளாகும்.

## இறுதியாட்டம் இன்று

அராலி நிலாவொளி விளையாட்டுக் கழகம் நடத்திய கரப்பந்தாட்டச் சுற்றுத் தொடரின் இறுதியாட்டம் இன்று பி.ப. 4 மணிக்கு அராலி முருக மூர்த்தி வித்தியாசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இன்றைய இறுதி ஆட்டத்தில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சங்கானை யூத் விளையாட்டுக் கழகம் மோதவுள் ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி. மேற்குப் பிரதேச சபை உறுப்பினர் தர்மலிங்கம், நடனேந்திரம் கலந்துகொள்ளவுள்ளனர். (15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி உமையம்மை சிவபாதசுந்தரம்
(ஓய்வுபெற்ற மருந்தாளர்)



கொடிகாமம், எருவனைப் பிறப்பிடமாகவும், குரும்ப சிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட உமையம்மைசிவபாத சுந்தரம் நேற்று (20.08.2011) சனிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பண்டிதர் முருகேசு-வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ் சென்ற செல்லத்துரை மற்றும் மனோன்மணியின் அன்பு மருமகளும், சிவபாதசுந்தரத்தின் அன்பு மனைவியும், ரமேஸ், ராதிகா ஆகியோரின் அன்புத் தாயும், சுரேஸ், மோகனா ஆகியோரின் அன்பு மாமியும், ஆனந்தசிவம், கதிர்காமநாதன், மயில் வாகனம், காலஞ்சென்ற சிவதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும், ரகாணன், ரவீனன், பிருந்தன், பரதன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 23.08.2011 செவ்வாய்க்கிழமை கல்கிஸ்ஸ மகிந்த மலர்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப் பட்டு பி.ப 2 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று தக னம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

36 1/3, ஈ.எஸ்.பெர்னாந்து மாவத்தை, கொழும்பு- 07.

தகவல்:
சிவபாதசுந்தரம்(கணவர்),
ஆனந்தசிவம்(சகோதரன்).

## திருமதி மார்க்கண்டு ஜெயதேவி (தேவி)



கரம்பொன் தெற்கு, ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் கரம்பொன் மேற்கு, ஊர்காவற்றுறையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மார்க்கண்டு ஜெயதேவி நேற்று (20.08.2011) சனிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசா-பராசக்தி தம்பதியரின் அன்பு மகளும் மார்க்கண்டு (சதீஸ் தேநீரகம், ஊர்காவற்றுறை) அவர்களின் அன்பு மனைவியும், தர்சினி, சதீஸன், சர்மினி (ஆசிரியை, யா/ ஊர்.றோ.க.தமிழ் ஆண்கள் பாடசாலை) ஆகியோரின் அன்புத் தாயாரும் டிலக்ஷியின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரது பூதவுடல் இன்று (21.08.2011) ஞாயிற்றுக் கிழமை மு.ப. 10.00 மணிக்கு தகனக் கிரியைக்காக ஊருண்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கரம்பொன் மேற்கு,
ஊர்காவற்றுறை.

தகவல்:
இ.மார்க்கண்டு (கணவர்)




### களஞ்சியப் பாவனைக்குவீடு வாடகைக்குத் தேவை
சாவகச்சேரி நகரை (நுணாவில்) அண்டிய பகுதியில் வீடு வாடகைக்குத் தேவை. A-9 வீதி யில் விரும்பத்தக்கது.
தொ.பே: 077 4371539.

### கணக்காளர் தேவை
HNDA தகைமையுடைய, கணினித் துறையில் முன்னனுபவம் உள்ள கணக்காளர் உடன் தேவை.

தொடர்பு-
அற்புதா றேடிங் கம்பனி
198, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

### கணினி பழுது பார்த்தல்
உங்கள் வீடுகள், அலுவலகங்களில் உள்ள கணினிகள் பழுதடைந்துள்ளதா? கவலை வேண்டாம் நேரடியாக வந்து திருத்திக் கொடுக்கப்படும்.
தொடர்பு-PREM- 0773302853

### வீடு விற்பனைக்கு
சுன்னாகத்துக்கும் மல்லாகத்துக்கும் இடையில் கே.கே.எஸ் வீதியில் [சுன்னாகம் சந்தையில் இருந்து 1km தூரத்துக்குள்] சகல வசதிகளும் கொண்ட 5 பரப்புக்காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு- 0713899890

### வீடு விற்பனைக்கு
பலாலி வீதி, திருநெல்வேலியில் 2 பரப்புக் காணியில் அமைந்த சகல வசதிகளுடன் கூடிய வீடு விற்ப னைக்கு உண்டு.
தொடர்பு : 0777 567382.

### வாடகைக்கு
யாழ். பிறவுண் வீதியில் உள்ள சகல வசதிகளுடனும் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. 24.08.2011 அன்று தொடர்பு கொள்ளவும். தொடர்பு: 071 6274916.

### நல்லூர் உற்சவத்தை முன்னிட்டு
## மாபெரும் மலிவு விற்பனை
(இலுப்பையடிச் சந்திக்கும் ஆனைப்பந்திச் சந்திக்குமிடையில்)

| | | |
|---|---|---|
| ✱ இரும்புக் கட்டில் | 6000/- | 4250/- |
| ✱ கணினி மேசை | 6000/- | 4250/- |
| ✱ கணினிக் கதிரை (alpha) | 6500/- | 5250/- |
| ✱ Steel அலுமாரி | 13500/- | 11250/- |
| ✱ சாப்பாட்டு மேசை | 16500/- | 13050/- |
| ✱ குசன் செற்றி | 27,000/- | 22,000/- |
| ✱ மெத்தைகள் (Arpico) | | |

தொடர்புகளுக்கு: 0773583879, 021 222 7892

# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் ஆசிரியை
செல்வி மாலதி சிவராசா
அவர்களின் பாசமிகு தாய்
**திருமதி சிவராசா லிங்கேஸ்வரி**
அவர்களின் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**ஆசிரியர் கழகம்,**
யா/ உயரப்புலம் மெதடிஸ் மிஷன் த.க பாடசாலை,
ஆனைக்கோட்டை.

## தென்மராட்சி மேற்கு
## பல.நோ.கூ.சங்கம் (வ-து) கைதடி
### விண்ணப்பம் கோரல்
### பயிற்சி கிளை முகாமையாளர்

மேற்படி பதவிக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது.

தகைமைகள்: கூட்டுறவுப் பணியாளர் சாதாரண தர பத்திரம்/ க.பொ.த. சாதாரணதரத்தில் 02 அமர்வுகளுக்கு மேற்படாமல் எண்கணிதம்/ வர்த்தக எண்கணிதம்/ தூய கணிதம், சிங்களம்/ தமிழ் மொழி என்பனவற்றை உள்ளடக்கியதாக ஆறு (06) பாடங்கள் சித்தி.

வயதெல்லை: 18-45 வயதுக்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பிக்கும் முறை:
மேற்படி பதவிக்கான விண்ணப்பத்தை சங்கத் தலைமைக் காரியாலயத்தில் பெற்று பூரணப்படுத்தப்பட்ட சான்றிதழ்களின் பிரதிகளுடன் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "பயிற்சிக் கிளைமுகாமையாளர் பதவிக்கான விண்ணப்பம்" எனக்குறிப்பிட்டு பொதுமுகாமையாளர், தென்மராட்சி மேற்கு, பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், கைதடி எனும் முகவரிக்கு 31.08.2011 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக நேரிலோ அல்லது பதிவுத் தபாலிலோ அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

21.08.2011 பொதுமுகாமையாளர்.

# கோபுர தரிசனம் கோடி புண்ணியம்



## நல்லூர் கந்தசுவாமி ஆலய
அதிகம்பீர ஸ்வர்ண கலாபன நூதன நவதள
## ஸ்ரீ ஷண்முக இராஜகோபுரம்
ஸ்ரீ ஷண்முகப் பெருமான்
ஸ்வர்ணவாசல் தரிசனம்
## நவகலசாபிஷேகம்.
21.08.2011 ஞாயிற்றுக்கிழமை கார்த்திகை
உற்சவதினம் காலை 6.00 மணிமுதல்
நல்லூர்க் கந்தனின் அருளைப் பெற அடியார்களை
சானுகா வருக! வருக! என வரவேற்கின்றது.
அனைத்துக் கலியாணத் தெரிவுகளுக்கும்
சானுகா ஜுவல்ஸ்,
அனைத்து நகைகளும் கரட் மீற்றரில் பரிசோதித்து வழங்கப்படும்.

பக்தி பூர்வமான அனுசரணை:
## சானுகா ஜுவல்ஸ்
64 D, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 2224687.

### உடனடி விற்பனைக்கு
Sony-DVD Recorder, Camera(12mp), Camcoder with hard drive, Car mp3 (CD) player, Dell Laptop & MSI Netbook உடனடி விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு- 0776985158, 0213216366

### வேலையாள்கள் தேவை
கணினி அறிவு, ஆங்கில அறிவுடைய இருபாலரும் தேவை.
**திருமுருகன் கொம்நெற்,**
259, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

### வீட்டுப் பணிப் பெண் தேவை
40-50 வயதுக்குட்பட்ட தங்கி நின்று பணி செய்யக்கூடிய வீட்டுப் பணிப்பெண் தேவை. கவர்ச்சியான சம்பளம் மற்றும் 3 நேர உணவும் வழங்கப்படும்
தொடர்பு-0777554528

### காணி விற்பனைக்கு
பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு (பிள்ளையார் கோயில் அருகில்) 1½, 2½ பரப்புககாணிகள் வீட்டுடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு- 0755772252

### வேலையாள் தேவை
ஐஸ்கிறீம் வானில் சேல்ஸ் செய்வதற்கு 20-40 வயதுக்குட்பட்ட வேலையாள் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். தொடர்பு: 0779225603

## விற்பனைக்குண்டு
252-xxx இலக்கமுடைய கயஸ் வானும், ஹங் ரக மோட்டார் சைக்கிளும் விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு-
0779577974, 0773610702

### கார் விற்பனைக்கு
நல்ல நிலையில் உள்ள வெள்ளை நிற Nissan Sunny (13-xxxx, 1500 CC) கார் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு : 071 8561715.

### மணமகன் தேவை
கௌரவ N.R.C கிறிஸ்தவ குடும்பத்தைச் சேர்ந்த 1968 ஆம் ஆண்டு பிறந்த பிரபல பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியைக்குப் பெற்றோர் தகுந்த மணமகனை எதிர்பார்க்கின்றனர்.
தொ.பே: 0213008112

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புத்தூரில் முன்பள்ளி சிறார்களின் விளையாட்டு விழா

புத்தூர் மேற்கு விடிவெள்ளி முன்பள்ளி சிறார்களின் விளையாட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெறவுள்ளது. தோப்பு அருளந்தி வித்தியாலய ஆசிரியர் செ.சிவனேசன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக புத்தூர் இந்து ஆரம்ப பாடசாலை அதிபர் இ.கோகுலராகவன் கலந்துகொள்ளவுள்ளார்.

## புதிய உறுப்பினர்கள்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கூடாது என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளனர். ஆளுநர் ஒரு முன்னாள் இராணுவ அதிகாரி. அவர் அவ்வாறே அந்தப் பாணியில் தான் சிந்தித்து நிர்வாகம் நடத்த முயல்வார்.

உள்ளூராட்சி சபைகளுக்கு தெரிவாகியுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மக்கள் பிரதிநிதிகள் சுதந்திரமாக மக்களது தேவைகளை உணர்ந்து சேவை செய்வதற்கான சூழல் அவசியமானது.

எந்தவிதமான நெருக்கடிகளும் இல்லாமல் சேவை செய்வதற்கு அரசும் அமைச்சர்களும், குறிப்பாக ஆளுநரும் ஒத்துழைக்க வேண்டும் எனக் கேட்கிறேன்.

**அரச தரப்பால் நெருக்கடி**

மக்களுக்குச் சேவை செய்ய முடியாத வகையில் நெருக்கடிகள், தடைகள் போன்றவை அரச தரப்பால் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன என்பதை அறிவோம்.

மக்களுக்கு அதிகமான தேவைகள் நிறைவேற்றிக் கொடுக்கப்பட வேண்டியுள்ளன. எனவே மக்களுக்கான அபிவிருத்திப் பணிகளை உங்களால் இயன்றவரை ஆற்ற முன்வர வேண்டும்.

தமிழ் மக்கள் தமது உரிமைகளைப் பெறுவதற்காக கடந்த காலத்தில் கொடுத்த விலை அதிகமானது. ஆனால் இன்னமும் அவர்கள் அந்த உரிமைகளைப் பெறவில்லை.

**அரசின் காலடியில் சிலர்**

எமக்குரிய சக்தி எமது மக்கள் தான். நாம் ஒன்றாக - பலமாக இருந்தால் தான் எம்மால் குறைந்த பட்சம் உரத்துக் குரல் கொடுக்க முடியும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பலமான கட்சியாக மாற்றவேண்டிய தேவை தெரிவாகியுள்ள உங்களிடம் இருக்கிறது.

தமிழ் மக்களில் இன்னும் ஒரு சில கோடரிக் காம்புகள் உள்ளன. அரசு போடும் பிச்சைக்காக-எலும்புத் துண்டுக்காக அதன் காலடியில் உள்ள போக்கு உள்ளது. அவர்கள் எம்மை [illegible]க்க முயலுகின்றனர். இவ்வாறான சோதனைகளுக்கு மத்தியில் எமது இலட்சியத்துக்காகப் பயணிக்க வேண்டியுள்ளது.

கடந்த உள்ளூராட்சி தேர்தலின் போது எமது மக்கள் இரத்தினச் சுருக்கமாக தெளிவாக தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளனர்.

**பழிவாங்கும் நடவடிக்கையில் அரசு முனைப்பு**

அரச கட்சிக்கு வாக்களிக்காத அரச உத்தியோகத்தர்கள் இடமாற்றம் செய்யப்படுகின்றனர். துன்பப்படுத்தப்படுகிறார்கள். எந்த ஒரு ஜனநாயக நாட்டிலும் நடைபெறாத அக் கிரமங்கள், அநியாயங்கள் இங்கு அரங்கேறி வருகின்றன.

தேர்தலில் யாரும் வெல்லலாம், தோற்கலாம். அதற்காக இந்த அரசு தமிழ் மக்களைப் பழிவாங்க நடவடிக்கை எடுத்துள்ளது.

இராணுவ அடக்குமுறைக்குள் நாம் இருந்துகொண்டு ஜனநாயகரீதியாக எழுதுவது, பேசுவது எல்லாம் கஷ்டமான காரியம். அவசர கால சட்டத்திலிருந்துகொண்டு தான் நாம் கடந்த தேர்தலைச் சந்தித்தோம்.

அந்தத் தேர்தலில் வாக்களித்து மக்கள் தெளிவான செய்தியை வெளிப்படுத்திய பின்னரும் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு குறித்துப் பேச முன்வருவதற்கு அரசு லாயக்கில்லாமல் உள்ளது. அரசு தொடர்ந்தும் இரண்டாம் தரப் பிரஜைகளாக அடிமைகள் போல தமிழ் மக்களை நடத்த விரும்புகிறது.

எனினும் எமது மக்களுக்கு நிரந்தர அரசியல் தீர்வு கிடைக்கும். அதற்கான பிரகாசமும் ஒளிக்கீற்றும் சர்வதேச சூழலில் நிலவுகிறது-என்றார்

**நிகழ்வில் மாவை**

இந்த நிகழ்வில் மாவை சேனாதிராசா உரையாற்றுகையில்:

அரசு வடக்கு, கிழக்கு என இரண்டாகப் பிரித்தாலும் கடந்த உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் மூலம் வடக்கு, கிழக்கு மக்கள் ஒருதாய் வயிற்று மக்கள் என நிரூபித்துள்ளனர். இரண்டு மாகாண மக்களும் ஒரே இலட்சியத்துக்காக பயணிக்கின்றனர் - என்றார்.

இந்த நிகழ்வின்போது நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் த.சித்தார்த்தன், இமாம், சந்திரநேரு சந்திரகாந்தன் மற்றும் தமிழர் விடுதலை கூட்டணி சார்பாக சங்கையா ஆகியோர் உரை நிகழ்த்தினர். (ஒ-14)

## வடக்கு, கிழக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, சுரேஷ் பிரேமச்சந்திரன், ஈ.சரவணபவன், எஸ். சிறிதரன், செல்வம் அடைக்கலநாதன், அ.விநாயகமூர்த்தி, எம்.ஏ.சுமந்திரன், சிவசக்தி ஆனந்தன், வினோ னோதராதலிங்கம் ஆகியோரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான துரைரட்ணசிங்கம், இமாம், சந்திரநேரு, சித்தார்த்தன் மற்றும் பேராசிரியர் சிற்றம்பலம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீல ஸ்ரீஞானசம்பந்தபரமாச்சார்ய சுவாமிகள், தென்னிந்திய திருச்சபை குருமுதல்வர் வணபிதா. டேனியல் தியாகராசா, மௌலவி மஹ்முத் ஆகியோர் ஆசிஉரை வழங்கினர்.

மங்கள விளக்கேற்றலுடன் தமிழ்த் தாய் வாழ்த்துப்பாட, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றிய 23 உள்ளூராட்சி சபைகளின் பிரதிநிதிகள் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டனர்.

விழா நிகழ்வுகளை யாழ். மாநகர சபை முன்னாள் ஆணையாளரும் தமிழரசுக் கட்சியின் இணைச்செயலாளருமான சி.வீ.கே. சிவஞானம் தொகுத்து வழங்கினார். (ஒ-2-14-86-426)

## புலிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
திறனுடன் இயங்குகிறது என்று அறிக்கை கூறுகின்றது.

புலிகள் அமைப்பு அழிக்கப்பட்டு விட்டபோதும் அதனைத் தொடர்ந்தும் தடைசெய்யப்பட்ட வெளிநாட்டுப் பயங்கரவாதிகள் பட்டியலிலேயே இந்த அறிக்கை சேர்த்திருக்கிறது.

போர் முடிந்த பின்னர் நாட்டை விட்டுத் தப்பி வெளியேறிய புலிகள் சிலர் இந்தியாவில் அந்த அமைப்பை மீட்டுருவாக்கம் செய்வதில் அக்கறை காட்டிச் செயற்பட்டு வருகின்றனர் என்றும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

''வட அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளிலும் ஆஸ்திரேலியாவிலும் உள்ளூரிலும் உள்ள புலி அனுதாபிகளிடமும் புலிகள் தொடர்ந்தும் நிதி வசூலித்து வருகிறார்கள். தனது ஆயுதக் கொள்வனவு, தொடர்பாடல், நிதி சேகரிப்பு மற்றும் விநியோகங்களுக்கு புலம்பெயர் நாடுகளில் உள்ள தமிழ் அமைப்புக்களைப் புலிகள் பயன்படுத்தி வருகின்றனர்'' என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் மேற்கொள்ளப்பட்டு தோல்வியில் முடிந்த ரயில் பாதை தகர்ப்புத் தாக்குதல் விடுதலைப் புலிகள் சந்தேக நபர்களாலேயே மேற்கொள்ளப்பட்டது என்றும் குற்றஞ் சாட்டுகிறது அறிக்கை.

2010 வரவு - செலவுத் திட்டத்தில் இலங்கை அரசு பாதுகாப்புக்கு என ஒதுக்கிய பெரும் தொகை நிதியில் கணிசமான பகுதி, வெளிநாடுகளில் உள்ள புலிகளின் செயற்பாடுகளைக் கண்காணிப்பதற்கே செலவிடப்படுகின்றது என்பதை அமெரிக்கா தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இது தொடர்பான கண்காணிப்பு முகவர்களுக்கும் வங்கிகளின் அதிகாரிகளுக்கும் தேவையான பயிற்சிகளை அமெரிக்கா வழங்கி உள்ளதாகவும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

## மீன்பிடிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
யில் இதற்கான அறிவுறுத்தல் எழுத்தில் அறிவிக்கப்பட்டிருப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

கரையோர மற்றும் கடல் பிராந்தியங்களில் கடற்படையினரின் ரோந்து நடவடிக்கைகள் அதிகரிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், இந்த 'பாஸ்' நடைமுறை தங்களை பாதிக்கும் என்று மீனவர்கள் அஞ்சுகின்றனர்.

2009 ஆம் ஆண்டு பிற்பகுதியில் குடாக்கடல் பகுதியில் நீக்கப்பட்டிருந்த 'பாஸ்' நடைமுறை சமீபத்திலேயே தீவகப் பகுதிகளில் நீக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

அவ்வாறு 'பாஸ்' நடைமுறை நீக்கப்பட்டதாக அறிவித்து முழுதாக இரண்டு மாதங்களில் மறுபடியும் 'பாஸ்' சம்பந்தமாகப் பேசப்படுவது மக்கள் மத்தியில் சலசலப்பை உருவாக்கியுள்ளது. (ஒ-160)


## மரண அறிவித்தல்கள்

### வல்லிபுரம் பாஸ்கரன்



கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் பாஸ் கரன் (சிவாஜி) நேற்றுமுன்தினம் (19.08. 2011) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் மற்றும் நவமணிதேவி தம்பதியரின் அன்பு மகனும் காந்திமதிநாதன், வதனகோபாலன் (நோர்வே), இந்திராணி, ரஞ்சினிதேவி, கௌரி (கனடா), ரவீந்திரன், ரதிதேவி, வனஜலோஜினி (சுவிஸ்) ஆகியோரின் சகோதரரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.08.2011) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக [illegible]ாய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*''பொன்மணி வாசா''*
*கரணவாய் கிழக்கு,*
*கரவெட்டி.*

*தகவல்:*
**குடும்பத்தினர்.**

### சின்னராசா சின்ராசா



சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும், தேவாலய வீதி, மல்லாகத்தைவசிப்பிடமாகவும்கொண்ட ''ராசா டீசல் என்ஜினியேர்ஸ்'' உரிமையாளரும் வாகன திருத்துநருமான சின்னராசா சின்ராசா (ராசா) கடந்த 18.08.2011 வியாழக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னராசா மற்றும் பூமணி தம்பதியரின் அன்பு மகனும், பற்றிக் செல்வம்- ராதினி தம்பதியரின் மருமகனும், ஹம்சவதனியின் அன்புக் கணவரும் ஜனார்த்தனி (யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை - தரம் 10), பிரியங்கன் (யாழ். இந்துக் கல்லூரி - தரம் 8), திவ்வியப்பிரியா (உடுவில் மகளிர் கல்லூரி-தரம் 6), தனலக்ஷன் (உடுவில் மகளிர் கல்லூரி, ஆரம்பப் பிரிவு), லோஷன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவநாதன் (வாகனத்திருத்துநர், சுன்னாகம்), திருமதி வேணன் சிவறஞ்சினி, திருமதி கண்ணன் சிவராணி (பாதுகாவலர், உடுவில் மகளிர் கல்லூரி), றஞ்சிதா ஆகியோரின் அன்புச் சகோதரனும் பற்றிக், திருமதி சியாதரன் வாசுகி (ஆஸ்திரேலியா), பாபுஜி ஸ்ரீமதி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் தேவாலயவீதி, மல்லாகத்தில் உள்ள அவரது இல்லத்தில் இருந்து இன்று (21.08.2011) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் தகனக்கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தேவாலய வீதி,*
*மல்லாகம்.*

*தகவல்:*
**குடும்பத்தினர்.**

## விற்பனைக்கு

இல.89, வைமன் றோட், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் உள்ள வீடு விற்பதற்கு உள்ளது [illegible] பாலசுப்பிரமணியம் ஆகிய நான் அறியத்தருகின்றேன்.
தொடர்புகளுக்கு:
தொ.பே.: 0750976470

## மணி விழா வாழ்த்து

நான்கு தசாப்த கால ஆசிரிய சேவையில் இருந்து
இன்று (21.08.2011) ஞாயிற்றுக்கிழமை
அகவை அறுபதில் ஓய்வுபெறும்

**கனகரத்தினம் சந்திரரத்தினம்**

Spl.Trd.Tech, SLTS-1
(ஆசிரியர், யா/ கனகரத்தினம் ம.ம.வி)

அவர்களின் சேவையைப் பாராட்டி அவர் நோய் நொடியின்றி சீரும் சிறப்புமாக வாழ எல்லாம் வல்ல நல்லூர்க் கந்தனைப் பிரார்த்திக்கின்றோம்.

**என்றும் அன்புடன் ஆசிரிய நண்பர்கள்:**
திரு. இராசா அரசகுல சூரியன், திரு. சின்னையா துரைராசா
திரு. பஞ்சநாதன் சுதர்சன்

## அந்தியேட்டி, வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 23.07.2011
சனிக்கிழமை
சிவபதமடைந்த எமது
குடும்ப ஒளி விளக்கு
திருமதி
**கனகரத்தினம் இலட்சுமி**

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் நேற்று (20.08.2011) சனிக்கிழமை காலை 9 மணியளவில் வேலணை சாட்டி புனித தீர்த்தக் கரையில் நடைபெற்றது. ஆத்மசாந்திக்கிரியை நிகழ்வு இன்று (21.08.2011) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

25, மூத்தவிநாயகர் கோயில்,
1ஆம் ஒழுங்கை, கச்சேரி நல்லூர் றோட்,
யாழ்ப்பாணம்.

**குடும்பத்தினர்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சக்தி எவ்.எம். நல்லூரில்

யாழ்ப்பாணம், ஓக. 21

நல்லூர் கந்தசுவாமி கோவில் திருவிழாவை முன்னிட்டு சக்தி எவ்.எம். கலையகம் தற்காலிகமாக நல்லூர்ப் பகுதியில் இன்று ஞாயிறு முதல் 7 நாள்கள் வரை இயங்கவுள்ளது.

நல்லூர் பகுதியிலிருந்து அனைத்து நிகழ்ச்சிகளுமே ஒலிபரப்பப்படும் அதேசமயம் திருவிழா நிகழ்ச்சிகளும் நேரடியாக ஒலிபரப்பப்படவுள்ளன. இவற்றுடன் நிகழ்ச்சிகள் எவ்வாறு கலையகத்தில் தயாரிக்கப்பட்டு ஒலிபரப்பப்படுகின்றன என்பது தொடர்பாகவும் மக்களுக்கு சக்தி எவ்.எம். கலையகத்தினர் காட்சிப் படுத்தலுடன் விளக்கம் அளிப்பர். (ஓ-323)

## நள்ளிரவில் வீடு புகுந்த ஆசாமி தப்பினான்

நெல்லியடி, ஓக. 21

வடமராட்சி, சக்கோட்டைப் பகுதியில் உள்ள வீட்டில் நேற்று முன்தினம் நள்ளிரவு 12.30 மணியளவில் முகமூடி அணிந்த நபர் ஒருவர் கத்தியுடன் புகுந்ததைக் கண்ட வீட்டார் கூக்குரலிட்டனர். அதை அடுத்து அந்த ஆசாமி தப்பி ஓடினான். அயல் வீட்டுக்காரர்கள் ஒன்று சேர்ந்து கலைத்துப் பிடிக்க முயன்ற போதும் அவன் சிக்கவில்லை. அவன் ஓடி மறைந்து விட்டான்.

இந்தச் சம்பவம் தொடர்பாக அந்தப் பகுதி மக்கள் பொலிஸிலும் அருகிலுள்ள இராணுவத்திடமும் முறைப்பாடு செய்துள்ளனர்.

கடந்த சில நாள்களாக யாழ்ப்பாணத்திலும் சில பகுதிகளில் மர்மநபர் கத்தியால் குத்தி விட்டு தப்பி ஓடுவதாக வதந்திகள் மக்கள் மத்தியில் கட்டவிழ்த்து விடப்பட்ட போதும் எங்கும் எந்தவிதமான அசம்பாவிதமும் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத் தக்கது. (ஓ-323)


### 50% விலைக்கழிவு




USB, SD, FM ரேடியோ - 4200/=
CD, கசட், FM ரேடியோ - 2800/=
DVD றெக்கோட் பிளேயர் - 4500/=
மேலும் பல பொருள்கள் குறைந்த விலையில்

NEW SONY ELECTRONICS
இல. 220, 2 ஆம் குறுக்குத் தெரு, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். Hot Line: 0774531955

### Galaxy Cabs
Call us 021-3201201
35/= Per Km.

### வீடு விற்பனைக்கு
பருத்தித்துறை, முதலாம் குறுக்குத் தெருவில் கடையுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு. (மீன் சந்தை முன்பாக)
தொடர்புகளுக்கு: 0213219108, 0715473489

### ஜேர்மன் மொழி
German, Deutsch மொழியை 3 மாதகாலப் பகுதியில் படித்து சான்றிதழுக்கான ஒழுங்குகள் செய்து கொடுக் கப்படும். திங்கள், புதன், வெள்ளி ஆகிய தினங்களில் 9.00 மணி தொடக்கம் 11 மணிவரை.
விக்னா கல்வி நிலையம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
22.08.2011 அன்று இலவச வகுப்பு இடம்பெறும்.
தொடர்பு: 0775890625, 0771183227

### Physics Class
For English Tamil Medium
★ Personal and Group Classes
★ Hand Books free
Contanct T.P: 0774287373

### வீடு விற்பனைக்கு
மானிப்பாய் வீதி, ஓட்டுமடச் சந்தியில் இருந்து யாழ். நோக்கி 50 மீற்றர் தொலைவில் 3 பரப்புக் காணியில் 6 அறைகள் கொண்ட சகல வசதிகளுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.
விலை: 130, இலட்சம், தரகர் தேவையில்லை, தொடர்பு: 0750697420

### உள்நாட்டு வெளிநாட்டு துரித கடிதங்கள் பொதிகள் பரிமாற்ற சேவை
Our Agents DHL aramex SriLankan Cargo ups

மஹாராஜா Food நிறுவனத்தினர் யாழ் நகரில்...!

உங்கள் வெளிநாட்டில் உள்ள உறவுகளுக்கு பொருள்களையும் ஆவணங்களையும் குறைந்த செலவில் பாதுகாப்பாகவும் விரைவாகவும் உத்தரவாதத்துடனும் அனுப்பி உறவை வலுப்படுத்த நம்பிக்கையுடன் நாடவேண்டிய இடம்.



உங்கள் வெளிநாட்டு உள்நாட்டு உறவுகள் அனுப்பும் பொதிகளை எமது யாழ். கிளையில் பெற்றுக்கொள்ளலாம்.

G.T.V Enterprises (Pvt) Ltd.
ஜீ.ரீ.வி என்ரபிறைஸஸ் (பிறைவேற்) லிமிட்.

11Kg இந்த அதிகமான பொதிகளிற்கு விசேட கட்டண சலுகை

உள்நாட்டிற்கான பொதிகள், கடிதங்கள் நாட்டின் எப்பாகத்திலும் விநியோகிக்கப்படும்.

யாழ்ப்பாணம்: #225, Kasthuriyar Road, Jaffna. T.P: 0212224338.
#272, K.K.S. Road, Jaffna. T.P:0212224825.
கொழும்பு: #18/3,Dr.E.A Cooray Mawatha, Wellawatte. T.P: 0112360926, 0112259849.

### ரூபா 50,000/-க்கு
மேல் மாத வருமானம் பெற இன்றே முதலீடு செய்யுங்கள்.

ஐஸ் கிறீம் இயந்திரம்



கூல்பார், ஸ்நெக் பார், ஹோட்டல், பாடசாலை, கென்டீன், பேக்கரி, பார்மசி, சுப்பர் மார்க்கட், குரோசரி போன்ற விற்பனை நிலையங்களுக்கு உகந்தது.
• ஒரே இயந்திரத்தில் மூன்று வெவ்வேறு வகையான ஐஸ்கிறீம் வகைகளை விற்பனை செய்யலாம். சோயா / வெனிலா / சொக்கலேட்
• சுயமாகவே தயாரிக்கும் திறன்.
• இலவச பயிற்சி
• உத்தரவாதத்துடன் / விற்பனையின் பின் சேவை
BRAND NEW
WINRICH INTERNATIONAL (PVT) LTD
(MEMBER OF PLUSS INT.)
No.18, Ground Floor, Lucky Plaza, St. Anthony's Mawatha, Kollupitiya, Colombo 03.
Hotlines: 077 391 8870, 077 1066902

### RanHomes
யாழ்ப்பாணத்தில் கட்டட நிர்மாண திட்டங்களில்
## தொழில் வெற்றிடங்கள்
விற்பனை நிறைவேற்றுனர்கள், கொள்வனவு அலுவலர்கள், தொழில்நுட்ப அலுவலர்கள், அளவு அளவையாளர்கள், தச்சுத்தொழில் செய்வோர், குழாய் பொருத்துனர்கள், கள மேற்பார்வையாளர்கள், ஆட்டோகட் வடிவமைப்பாளர்கள், துப்புரவு செய்பவர்கள் மற்றும் ஏனைய உதவிப் பணியாளர்கள் (ஆண்/பெண் இருபாலாரும்)
'ரன் ஹோம்ஸ்' உங்களை எதிர்பார்க்கின்றது.
வெற்றிகரமான அணியில் சேர்ந்துகொள்ளுங்கள்
ரன் ஹோம்ஸ் இலங்கையில் வீட்டு நிர்மாணத் தொழிலில் அங்கீகரிக்கப்பட்ட ஒரு முன்னணி நிறுவனமாகும். நுண்கலை நுணுக்கங்களுடன் வடிவமைக்கப்பட்டு உயர்தரத் தகுதியுடன் நிர்மாணிக்கப்படும் இல்லங்களை விரும்பும் வாடிக்கையாளர்களின் தேவைகளைப் பூர்த்திசெய்வதில் அக்கறையுள்ளவர்கள் நாம்.

*The company invites the above professionals with sound intellect -profound inspiration and innovative.*
* With a good command of Tamil and fair knowledge of English.
* With or without experience. (Previous experience will be an added advantage ).
* School leavers are encouraged to apply.

*A competitive remuneration package including sales commission along with a challenging work environment is on offer for the right candidates.*

RanHomes (Pvt.) Ltd.
No: 841, Hospital Road, Chundukuli, Jaffna
Tel: 021 222 0400, Email: haron@ranhomes.com
Web: www.ranhomes.com

### உடன் பேக்கரி ஆரம்பிப்பவர்களுக்கு
எங்களிடம் காஸ்ஸில் இயங்கக்கூடிய 30 பாண்கள் ஒரு தடவையில் வெதுப்பும் இயந்திரம் 1, மா குழைக்கும் இயந்திரம் 16 LTR -1 பாண் வெட்டும் இயந்திரம் 1,மற்றும் வெதுப்பகத்துக்குரிய அனைத்துத் தளபாடங்களும் விற்பனைக்கு உண்டு
தொடர்புகளுக்கு: 0770871284, 0774743527

### வேலை வாய்ப்பு
பெயின்டிங், ஸ்கிறீன் பிறிண்டிங் அனுபவம் உள்ளவர்கள், பழக விருப்புபவர்கள் (பெண்கள்) 21.08.2011, 22.08.2011 காலை 9.00 மணி முதல் 5.00 மணி வரை நேரில் சமுகம் தரவும்.
மதி கலர்ஸ் பிறண்டேர்ஸ்
15/2, முருகேசர் லேன், நல்லூர். தொ.இல: 0777222524

### Deutsch, Dutch, French, Italian
கொழும்பு விவேகானந்தா அக்கடமியின் யாழ். கிளையில் தற்பொழுது ஜேர்மன் எம்பஸி பரீட்சைக்கான Deutsch மற்றும் நெதர்லாந்து Dutch, Italian, French வகுப்புக்களும் நடைபெறுகின்றன.
குறிப்பு- ஜேர்மன் மொழி Deutsch புதிய வகுப்புக்கள் இவ்வாரம் ஆரம்பமாகின்றன.
Vivekananda Academy
(Centre For International Language Studies)
No.3, 2nd Lane, Palaly Road, Jaffna.
(அப்பலோ ஆஸ்பத்திரிக்கு எதிரில்)
அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரேயொரு வெளிநாட்டு மொழிக்கல்வி நிறுவனம்.
GOV.Reg.No W/A 76795 T.P : 0774842464, 0213216928, 0779927117

### ENGLISH, SINHALA CLASSES
IELTS, Spoken English வகுப்புக்கள்
வெளிநாடுகளுக்கு செல்வோருக்கான ஆங்கில (IELTS) வகுப்புக்கள் இலகு முறையில், கூடிய புள்ளிகள் பெற புதிய பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளன.
சிங்கள வகுப்புக்கள்
பேச, எழுத, வாசிக்க தமிழ் விளக்கத்துடன் புதிய பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளன. ஆர்வமுள்ள அனைவரும் இணைந்து கொள்ளலாம்.
அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களால் கற்பிக்கப்படும்
NORTH LEAD EDUCATIONAL CENTER
328, Stanly Road, Jaffna. (ஆரியகுளம் சந்திக்கு அருகில்)
Tel : 222 4459, 0772533390, Fax : 222 4460.

### COMPUTER CLASSES
CERTIFICATE IN INTERNET TECHNOLOGY
*Software & Video Dawnloding, Chatting, Web & E-Mail Address Creating, Face Book, Skype, Messanger, Video Call, Net Call* என்பன ஆரம்பத்தில் இருந்து கற்பிக்கப்படும்.
Ms Office, DTP, Hardware, Programming, Accounting Packages, Graphic Designing, Web Designing, Kids Program போன்ற புதிய பிரிவுகளும் ஆரம்பமாகவுள்ளன (பூரண தமிழ் மொழி விளக்கத்துடன் கற்பிக்கப்படும் ஆர்வம் உள்ளோர் அனைவரும் இணைந்து கொள்ளலாம்)
NORTH LEAD EDUCATIONAL CENTER
No.328, Stanly Raod, Jaffna (ஆரியகுளம் சந்திக்கு அருகில்)
Tel: 222 4459, 0772533390, Fax: 222 4460

### DHL
உள்நாடு,வெளிநாடுகளில் உள்ள உறவுகளுக்கான துரித கடிதங்கள் பொதிகள் சேவை
வடமாகாணத்தில் அங்கீகாரம் பெற்ற ஒரே முகவர்
London Rs750 CANADA, U.S.A, FRANCE, DENMARK, GERMANY, ITALY, NORWAY, SWISS Rs900
10 Kg மேற்பட்ட பொதிகளுக்கு விசேட விலைக்கழிவு
220 இற்கு மேற்பட்ட நாடுகளுக்கு ஆகாய கடல் மார்க்கமாக உங்கள் உறவுகளுக்கு கடிதங்கள், அன்பளிப்புபொருட்கள், DVD, VCD போன்ற பொருட்களை மிகவிரைவாகவும் பாதுகாப்பாகவும் அனுப்பிட நாடுங்கள்
வடமாகாணத்தில் DHL வலைப்பின்னலுடன் முதல் முதலாக திருமுருகன் கொம் நெற் இணைக்கப்பட்டுள்ளது. DHL Online Tracking
TCN Express, 28,Nelsan place,Colombo-06.
Customer service No.021 222 7835
குறிப்பு
DHL கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. போலி முகவர்களுக்கு கூடுதலான கட்டணத்தைச் செலுத்தி ஏமாற்றமடையாதீர்கள்.
குவாலிவை அன்னிய நாட்டுச் செலவாணி முறையிலோ செலுத்தி பற்றுச் சீட்டைப் பெற்றுக்கொள்ளலாம்.
உங்கள் பொதிகளை செலுத்தி உங்களுக்கான DHL Tracking Number களை பெற்றுக்கொள்ளலாம்.
திருமுருகன் கொம்நெற்
இல.259,கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். இல.18,பிரதான வீதி,நெல்லியடி. இல.5,திருநகர் பிரதான வீதி,கிளிநொச்சி. இல.46, ஆடியபாதம் வீதி,திருநெல்வேலி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 21.08.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.




# ஏழைகளின் ஆப்பிள் பப்பாளி

வருடம் முழுவதும் கிடைக்கக்கூடிய விலை குறைவான பழம் ஏழைகளின் ஆப்பிள் என்று பப்பாளி அழைக்கப்படுகிறது.

பப்பாளி மரம் பூக்க ஐந்து ஆண்டுகளாகும். இதிலே ஆண்மரம், பெண்மரம் என உள்ளன. ஆண்மரம் பூத்தும் பலன் ஏதும் இல்லை. பெண் மரம் பூத்தால் தான் அது காயாகி கனியாகும். பப்பாளி மரத்தின் இலை, காய், பழம், பால் எல்லாமே மருத்துவ பயன்கள் உடையது.

இதன் பயன்கள் மிக மிக அதிகம். மிக மலிவான விலையில் கிடைக்கும் மிக சத்துவாய்ந்த இந்த கனியானது தன் தகுதிக்கேற்ற இட ஒதுக்கீட்டைப் பெறவில்லை என்பது தான் சோகம். பப்பாளி பல மருத்துவ குணங்களைக் கொண்டது. அவற்றில் ஒரு சில ...

பப்பாளிபழத்தில் உள்ள சர்க்கரை இரத்தத்தில் நேரடியாகக் கலப்பதில்லை. எனவே நீரிழிவு நோய் உள்ளவர்களுக்கு கூட மருத்துவர்களால் பரிந்துரைக்கப்படுகிறது.

மருத்துவர்களுக்கு சவாலான வியாதிகளில் புற்றுநோயும் ஒன்று. இதற்கு சாதாரண பப்பாளி இலைச் சாற்றில் எதிர்ப்பு மருந்து இருப்பது தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. பப்பாளியிலுள்ள விதவிதமான என்சைம்களின் சேர்க்கை, புற்றுநோயைக் குணப்படுத்த வல்லன.

பொதுவாக குழந்தைகளுக்கும் இந்த பப்பாளிப்பழத்தைக் கொடுத்தால், உடல் வளர்ச்சிக்கு உதவுவதுடன் பல், எலும்பு என்பன வலுவடையவும் உதவும். குழந்தை பெற்ற பெண்கள் பப்பாளி சாப்பிட்டால் பால் நன்றாக சுரக்குமாம்.

அடிக்கடி பப்பாளிப் பழத்தை உண்டு வருபவர்கள் எவ்வகை நோய்க்கும் ஆளாக நேரிடாது. எந்த வகையான தொற்று நோய் பரவினாலும், அது இவர்களை தாக்காது.

பப்பாளி பழத்தில் இயற்கையாகவே விஷக் கிருமிகளை கொல்லும் ஒரு வகை சத்து இருப்பதால் பப்பாளி பழத்தை சாப்பிடுபவர்களின் ரத்தத்தில் நோய் கிருமிகள் தங்கி நோயை உண்டு பண்ண வாய்ப்பில்லை.

பப்பாளி பழத்தை சரும பராமரிப்புக்கும் பயன்படுத்தலாம். வறண்ட மேல் தோலை அகற்றி, புதிய தோலை உருவாக்குகிற அற்புத சக்தி பப்பாளிக்கு உண்டு.

பப்பாளி பழத்தை முகத்தில் மெதுவாகப்பூசி, நன்றாக மசாஜ் செய்யுங்கள். பிறகு மிதமான சுடுநீரில் கழுவுங்கள். முகம் பளிச் என்று பிரகாசிக்கும்.


பல் சம்மந்தமான குறைபாட்டுக்கும், சிறு நீர்ப்பையில் உண்டாகும் கல்லை கரைக்கவும் பப்பாளி சாப்பிட்டால் போதும்.

பப்பாளியின் இலைகளும் வேர்களும் சிறுநீர் பெருக்கியாகவும், பழமானது மூலநோய்க்கும் உகந்ததாகவும் பயன்படுத்தப்படுகிறது. நரம்புகள் பலப் படவும் பித்தத்தைப் போக்கி இதயத்திற்கு வலுசேர்க்கிறது. தேள் கொட்டினால் அவ்விடத்தில் இதன் விதையை அரைத்துப் பூசினால் விஷம் முறிந்துவிடும்.

பப்பாளி இலையை கசக்கிச் சாறுபிழிந்து அதை தினமும் படர்தாமரையின் மேல் தடவி சிறிது நேரம் வைத்திருந்து கழுவி வர படர்தாமரை குணமாகும். பப்பாளியை தினமும் சேர்த்துக் கொண்டால் நோயின்றி வாழ உதவும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வாழ்க்கையில் அனைத்து விடயங்களையும் தேடிப்பார்க்கும் நான், பஜாஜ் மோட்டார் சைக்கிளொன்றை கொள்வனவு செய்தது, அதன் புதிய வடிவத்திற்கேற்ப சிறந்த செயற்பாட்டையும் கொண்டிருப்பதனாலேயே ஆகும்.

...நான் எனது பஜாஜ் மோட்டார் சைக்கிளுக்கு அசல் பஜாஜ் உதிரிப்பாகங்களை மாத்திரமே பொருத்தியது, தரமான உற்பத்தியொன்றை அதே தரத்துடன் பேணி, அதிக நாள்கள் நீடித்துழைக்க வேண்டும் என்பதற்கேயாகும்.

அசல் உற்பத்தியின் அசல் பெறுமதியை பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

உங்களின் பஜாஜ் மோட்டார் சைக்கிளுக்கு
பஜாஜ் அசல் உதிரிப்பாகங்களை
மாத்திரே பொருத்திக் கொள்ளுங்கள்

பஜாஜ் அசல் உதிரிப்பாகங்கள் பொறுப்புடனும் நம்பிக்கையுடனும்...

tradlanka

நாடு பூராகவும் உள்ள எமது அங்கீகரிக்கப்பட்ட உதிரிப்பாகங்கள் விற்பனை முகவர்களிடமிருந்தும் நிறுவனத்தின் விற்பனை மத்திய நிலையத்திலிருந்தும் பெற்றுக் கொள்ள முடியும்.

விலை: ரூபா 5/- இலிருந்து
மேற்குறிப்பிடப்பட்ட விலை முன்னறிவிப்பின்றி மாறுபடலாம்.

DPMC டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்
நிறுவன பதிவு இலக்கம்: PB270
75, ஹைட் பார்க் கோர்னர், கொழும்பு 02. தொலைபேசி 011 4700600


# உடல் எடையை கூட்டவும், குறைக்கவும் திராட்சை பழம்



திராட்சைப்பழம் என்றால் விரும்பாதவர்கள் எவருமே இருக்க முடியாது.

இந்த திராட்சைப் பழத்தில் எத்தனை மகத்துவம் உள்ளது என்பதை எவருமே உணர்ந்து கொள்வதில்லை.


கறுப்புத் திராட்சை, பச்சைத் திராட்சை, பன்னீர்த் திராட்சை, காஷ்மீர்த் திராட்சை, ஆங்கூர் திராட்சை, காபூல் திராட்சை, விதையில்லா திராட்சை என்று பல தரப்பட்ட வகையில் திராட்சை உண்டு.

இந்தப் பழங்களை உலரவைத்து எடுக்கப்படும் உலர்ந்த திராட்சையை கிசுமுசுப் பழம் என்பார்கள்.

உடல் எடை அதிகரித்துக் காணப்படுபவர்களுக்கும் உடல் எடை குறைந்து காணப்படுபவர்களுக்கும் திராட்சை ஒரு மருந்தாகத்தான் இருக்கிறது.

உலர்ந்த திராட்சையில் சாதாரண திராட்சை விட 5 மடங்கு அதிக சீனிச் சத்து உள்ளது. தொடர்ந்து உலர்ந்த திராட்சை சாப்பிட்டு வந்தால் உடல் எடை அதிகரிக்கும்.

அதே திராட்சை உடல் எடையைக் குறைக்கவும் உதவுகிறது. அதாவது, கருப்பு திராட்சை பழச்சாறு 200 மில்லியை தினமும் 2 வேலை குடித்து வந்தால் அதிகப்படியான கொழுப்புச் சத்து குறைந்து விடும்.




சேமிப்புக்களுக்கு மிகக் கூடுதலான வட்டி வீதம் 7% p.a.

நிபந்தனைகள் கிடையாது!

Fitch Rating = BB+(lka) RAM Rating = BBB-P3

சேமிக்கும் வேளையில் வெல்லுங்கள்!
1,000,000 வரை வெல்லுங்கள்
ரூ.10,000 வீதம் 100 வெற்றியாளர்கள்
மாபெரும் சீட்டிழுப்பு 2011 டிசெம்பர் 31

யூனியன் வங்கி
ஔබේ දියුණුවේ බැංකුව

Tel: (011) 2374100 www.unionb.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்று, இரண்டு, மூன்று அல்ல, அபாவில் அடங்கியிருப்பது 9 மூலிகைகள்

ஒன்பதாம் இலக்கம் இலக்க வரிசையில் இறுதியாக இருந்த போதும், உங்களுக்கு கருமை நிறக் கூந்தலை வழங்கி இளமையைப் பெற்றுத் தருவதில் முதலிடத்தில் இருக்கிறது. ஆம், அபா ஹெர்பல் ப்ளெக் ஹெனா தயாரிக்கப்பட்டிருப்பது ஒன்பது மூலிகைகளினால் ஆகும்.

முன்னைய காலத்தில் அழகுக்கலை செயற்பாடுகளின் போது உபயோகிக்கப்பட்ட மருத்துவ குணமுள்ள ஒன்பது இயற்கை மூலிகைகளைக் கொண்டே அபா ஹெர்பல் ப்ளெக் ஹெனா தயாரிக்கப்பட்டுள்ளது. மிகச் சிறந்த மருத்துவ குணமுள்ள ஒன்பது மூலிகைகள் மூலம் தயாரிக்கப்பட்டுள்ள அபா, கூந்தலின் இயற்கைத் தன்மையைப் பாதுகாத்து, கூந்தலுக்கு கருமை நிறத்தையும் இயற்கைப் பளபளப்பையும் பெற்றுத் தரும் ஒரு ஹெர்பல் ப்ளெக் ஹெனா வகையாகும்.

அபா தயாரிக்கப்பட்டிருப்பது,
1. வல்லாறை
2. சீயக்காய்
3. கற்றாளை
4. வெந்தயம்
5. கரிசலாங்கண்ணி
6. நெல்லி
7. வேப்பிலை
8. செவ்வரத்தை பூ
9. ஜடமன்ஸி

போன்ற ஆயுர்வேத மூலகைகளின் கலவையினால் ஆகும்.

அபா ஒரு இயற்கைத் தயாரிப்பாகும். இப்போது நாம் குறித்த மூலிகைகளில் அடங்கியுள்ள குண நலன்களைப் பார்ப்போம்.

| | | |
|---|---|---|
| வல்லாறை | - | கூந்தலின் வளர்ச்சிக்கு உதவுகிறது. |
| சீயக்காய் | - | கூந்தலை சுத்தப்படுத்துவதுடன் பளபளப்பான தோற்றத்தைப் பெற்றுத் தருகிறது. |
| கற்றாளை | - | கூந்தல் வறட்சியடைவதைக் கட்டுப்படுத்தி, கூந்தலுக்கு மென்மையைப் பெற்றுத் தருகிறது. |
| வெந்தயம் | - | கூந்தலின் இயற்கைத் தன்மையைப் பாதுகாப்பதுடன் கூந்தலுக்கு போஷணையை வழங்குகிறது. |
| கரிசலாங்கண்ணி | - | கூந்தலுக்கு மேலும் பொலிவைப் பெற்றுத் தருகிறது. |
| நெல்லி | - | கூந்தலின் கருமை நிறத்தை அதிகரித்து, ஆரோக்கியமான தோற்றத்தைப் பெற்றுத் தருகிறது. |
| வேப்பிலை | - | தலையில் ஏற்படக் கூடிய பொடுகு போன்றவற்றுக்கு எதிராக தொழிற்படுகின்றது. |
| சீயக்காய் | - | கூந்தலை சுத்தமாக்குவதுடன், சிறந்த ஒரு தோற்றத்தைப் பெற்றுத் தருகிறது. |
| செவ்வரத்தை பூ | - | கூந்தலுக்கு பளபளப்பு மற்றும் மென்மையான தோற்றத்தைத் தருகிறது. |
| ஜடமன்ஸி | - | கூந்தல் நரைப்பதைத் தாமதப்படுத்துகின்றது. |

முன்னைய காலம் முதல் கூந்தல் அழகைப் பராமரிப்பதற்காக உபயோகிக்கப்பட்ட இயற்கை மூலிகைள் ஒன்பதைக் கொண்ட கலவையினால் தயாரிக்கப்பட்டுள்ள அபா ஹெர்பல் ப்ளெக் ஹெனா மிகச் சிறந்த ஒரு தயாரிப்பாகும்.



பிரபல அழகுக்கலை நிபுணர்
பிரேமசிறி ஹேவாவசம்



இன்று பெண்களின் வாழ்க்கை முறை வெகுவாக மாறிவிட்டது. அநேகமான பெண்கள் தொழில் புரிகின்றனர். ஆண்களுக்கு நிகராக சமூக விடயங்களிலும் ஈடுபடுகின்றனர். குடும்பத்திலும் பெண்களின் பங்கு அளப்பரியது. இதன் காரணமாக பெண்கள் அநேகமான உடல், உள ரீதியான பிரச்சினைகளை சந்திக்கின்றனர். அவற்றுள் இள வயதிலேயே கூந்தல் நரைத்தல் முக்கியமானதாகும். சரியான நேரத்தில் உணவு உட்கொள்ளாமை, போதுமான போஷணை இல்லாமை, ஓய்வின்மை, தூக்கமின்மை, அதிக யோசனை, மன அழுத்தம் என்பவற்றோடு தூசி, சூடு போன்ற காரணிகளும் கூந்தல் இள வயதில் நரைப்பதற்கு ஏதுவாகின்றன. கருமை நிறக் கூந்தல் இளமைத் தோற்றத்திற்கு மிக முக்கியமானது. எனவே இந்த நிலைமை பெண்களது தன்னம்பிக்கையைக் குறைப்பதோடு அவர்களுக்கு மன அழுத்தத்தையும் ஏற்படுத்துகின்றது. இவையனைத்துக்கும் சிறந்த ஒரு இயற்கைத் தீர்வு- அபா ஹெர்பல் ப்ளெக் ஹெனா, கொட்ரிஜ் நிறுவனத்திடமிருந்து.

கொட்ரிஜ் நிறுவனம் நுகர்வோரின் நலனில் என்றும் அக்கறை கொண்டுள்ளது. "கொட்ரிஜ்" நீண்ட காலமாக நுகர்வோரின் நன்மதிப்பையும், நம்பிக்கையையும் பெற்றுள்ள ஒரு வர்த்தக நாமமாகும். கொட்ரிஜ் நிறுவனத் தயாரிப்பான அபா ஹெர்பல் ப்ளெக் ஹெனா இலங்கை அரசின் சுகாதாரத்துறையின் அங்கீகாரத்தைப் பெற்றது. நவீன தொழினுட்பங்கள் கொண்டு செய்யப்பட்ட ஆய்வுகூட பரிசோதனைகள் மூலம் தரத்தன்மை உறுதி செய்யப்பட்டு, உங்கள் கரம் சேரும் அபா ஹெர்பல் ப்ளெக் ஹெனா அனைத்து வகையிலும் நம்பத் தகுந்தது. இந்த தயாரிப்பின் மீது நம்பிக்கைக் கொள்வதற்கு இவற்றை விடவும் வேறு காரணங்கள் தேவையில்லை என்றே நான் நினைக்கிறேன்.

அழகுக்கலை துறையில் பல வருட அனுபவத்தைக் கொண்டுள்ள நான், எனது வாடிக்கையாளர்களுக்கு கூந்தலுக்கான வர்ணத்தைத் தெரிவு செய்யும் போது, எப்போதும் அபா ஹெர்பல் ப்ளெக் ஹெனாவினை மட்டுமே பரிந்துரை செய்கிறேன். ஏனெனில், அது இயற்கையான உற்பத்தி என்பதை நான் அறிந்துள்ளமையினாலேயே ஆகும்.




*இலங்கை அரசின் சுகாதாரத்துறையின் அங்கீகாரம் பெற்றது (CR 015024)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03109
02/011

# நோய் எதிர்ப்பு சக்தி கொண்டது ஆப்பிள்



பொதுவாக உடல் நலம் பாதிக்கப்பட்டவர்களை பார்க்க செல்லும்போது, ஆப்பிள் கொடுப்பது வழக்கம். அந்த அளவுக்கு ஆப்பிளில் நோய் எதிர்ப்பு சக்தியும், ஊட்டச் சத்தும் நிறைந்திருக்கின்றன.

ஆப்பிள் குறித்து மேற்கொள்ளப்பட்ட புதிய ஆராய்ச்சியில் தினமும் ஒரு ஆப்பிள் சாப்பிடுவது, நோயில் இருந்து பாதுகாப்பு அளிப்பதுடன் நீண்ட ஆயுளை அளிக்கும் என்பது தெரிய வந்துள்ளது. சீனாவை சேர்ந்த ஹாங்காங் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் மேற்கொண்ட ஆராய்ச்சியின் வெளிப்பாடு இது.

ஆப்பிளில் உள்ள ஆண்டி ஆக்சிடன்ட்ஸ், சாராசரியாக மனித ஆயுளை 10 சதவீதம் அதிகரிப்பதை உறுதிப்படுத்தி உள்ளனர். பழங்களை, குறிப்பாக ஆப்பிளை தேடிச்செல்லும் வண்டுகள் உள்ளிட்ட பூச்சிகளிடம் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் அவற்றின் உடலில் ஆண்டி ஆக்சிடன்ட்ஸ் அளவு அதிகமாக இருப்பதன் மூலமும் இது உறுதியாகி உள்ளதும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

ஆப்பிளில் உள்ள பாலிபெனால் என்ற அதிக சக்தி வாய்ந்த ஆண்டி ஆக்சிடென்ட், உடலில் உள்ள நோய்க் கிருமிகளை பெருமளவில் அழிக்கிறது. இதனால் நோயில் இருந்து பாதுகாப்பு கிடைக்கிறது. காய்கறி மற்றும் பழங்களை அதிக அளவில் எடுத்துக் கொள்வதால் ஆரோக்கியத்துடன் உடல் பருமன் குறைவது உள்ளிட்ட பல்வேறு நன்மைகள் கிடைப்பதை ஏராளமான ஆய்வுகள் வலியுறுத்தி வருகின்றன. அதன் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட இந்த ஆய்வும் அதையே வலியுறுத்தி உள்ளது.

தக்காளி, ஆப்பிள் உள்ளிட்ட பழங்களில் உடலுக்கு நோய் எதிர்ப்பு சக்தி அளிக்கும் ஆண்டி ஆக்சிடன்ட்ஸ் அதிக அளவு உள்ளது. அவற்றில் பாலிபெனால் என்ற அதிக சக்தி வாய்ந்த ஆண்டி ஆக்சிடென்ட், நோயில் இருந்து பாதுகாப்பு அளிப்பதுடன் ஆயுளையும் அதிகரிக்கிறது. இது ஆப்பிளில் மிக அதிக அளவில் உள்ளது. இவை நோய் எதிர்ப்பு சக்தியை அளித்து உடல் மற்றும் மூளைச் செல்களின் செயல்பாட்டையும் தூண்டுகிறது.

ஒரு விதை விடாது அள்ளிச் செல்லுங்கள்




- சேற்றில் உழைப்பதற்காகவே தயாரிக்கப்பட்ட அகலத்தில் தடித்ததும், அளவில் பருமனானதுமான இறபர் ட்ராக்
- அதிகூடிய அசுர பலம் 65 கொண்டது
- பிரவுன்ஸின் 06 மாத உத்தரவாதத்துடன், விற்பனைக்குப் பிந்திய விஷேட சேவை
- ஒரு நாளுக்கு 06 ஏக்கருக்கு அதிகமான அளவில் அறுக்கக்கூடிய தன்மை
- இலகுவாகப் பெறக்கூடிய உதிரிப்பாகங்கள்
- உலகப் பிரசித்திபெற்ற "லோவல்" நிறுவனத்தின் சிறப்புமிகு தொழில்நுட்பம்

ரூ. 1,799,900/-




TAFE CRUZER 7504

- சேற்று நிலங்களில் செலுத்தக்கூடிய 4 வீல் டிரைவ் அமைப்பு
- அதிகூடிய அசுர பலம் 75 கொண்டது
- பிரவுன்ஸின் 06 மாத உத்தரவாதத்துடன், விற்பனைக்குப் பிந்திய விஷேட சேவை
- இலகுவாகப் பெறக்கூடிய உதிரிப்பாகங்கள்
- உலகப் பிரசித்திபெற்ற "டெ.்.பே" நிறுவனத்தின் சிறப்புமிகு தொழில்நுட்பம்

ரூ. 5,200,000/-

135 வருட காலமாக உலகெங்கும் வாழும் விவசாயப் பெருமக்களின் நம்பிக்கையை வென்ற பிரவுன் நிறுவனம், இலங்கையில் வாழும் விவசாயப் பெருமக்களுக்கு, கல், மண், தூசுகள் சேராத அதி சுத்தமான அறுவடையை உடனேயே பெற்றுத் தரும் உலகின் சிறப்பிடம்பெற்ற டெ.்.பே மற்றும் லோவல் தொழில்நுட்பத்தில் உருவான கம்பைன் ஹாவெஸ்டர்களை அறிமுகப்படுத்துவதுடன், அவற்றை வியத்தகு விலைகளில் வழங்குகிறது.

Browns Agriculture

மேலதிக விபரங்களுக்கு

நிஷ்ஷங்க - வடக்கு/வடமத்திய : 077 3457986
உத்திப - கிழக்கு பிரதேசம் : 077 3457987
இந்திக - வடமேல்/மத்திய : 077 3457983
சந்துன் - தெற்கு/ஊவா : 077 3457982


BROWNS GROUP BG ESTD 1875

Browns

பிரவுன் குருப் பிஎல்சீ, 481, டி.பி. ஜயா மாவத்தை, கொழும்பு 10. தொலைபேசி: (011) 2697111

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்வரோக நிவாரணி எலுமிச்சை



எலுமிச்சம் பழத்தை ஒரு சர்வரோக நிவாரணி என்று சொல்லலாம். அந்தளவுக்கு நோய்கள் வராமல் தடுத்து உடல் நலத்தை காத்துக் கொள்ள என்னென்ன பொருள்கள் அவசியம் தேவையோ, அவை அனைத்தும் இந்த பழத்தில் இருக்கின்றன.

இரத்தக் கொதிப்பைத் தடுப்பதில் எலுமிச்சம் பழம் மிக முக்கிய பங்காற்றுகிறது. கெட்ட ரத்தத்தை தூய்மைப் படுத்துவதற்கு எலுமிச்சம் பழத்தை விட மேலான ஒன்று கிடையாது. முக்கிய சத்தான விட்டமின் சி எலுமிச்சம் பழத்தில் நிறைய இருக்கிறது. எலுமிச்சையில் இருக்கும் சிட்ரிக் அமிலம் கிருமிகளை அழிக்கும் தன்மை கொண்டது. அதனால் தொற்று நோய் கிருமிகளின் தாக்குதலில் இருந்து உடலை கண்போல பாதுகாக்கிறது.

எலுமிச்சம் பழ ரசத்தை சாப்பிட்டால் மண்ணீரல் வீக்கம் பிரச்சினையில் இருந்து விடுபடலாம்.

எலுமிச்சம் பழத்தின் சாற்றை தேன் கலந்து சாப்பிடுவது ஒரு சத்து மிக்க பானம் ஆகும்.

உடலுக்கு வேண்டிய உயிரூட்டத்தையும், ஒளியையும் எலுமிச்சம் பழத்தின் மூலம் மனிதர்கள் பெற இயலும்.

இத்தனை நன்மை செய்யக் கூடிய எலுமிச்சம் பழத்துக்கு மலத்தைக் கட்டடுப் படுத்தக் கூடிய குணமும் உண்டு. ஆனாலும் தேன் சேர்த்து உண்டு வந்தால் மலக் கட்டு நீங்கிவிடும்.

அளவுக்கு மீறி வயிற்றுப் போக்கு ஏற்பட்டால் எலுமிச்சை பழச்சாற்றை அரைடம்ளர் நீரில் கலந்து கொடுத்தால் உடனடியாக வயிற்றுப் போக்கு நின்றுவிடும்.

கடுமையான வேலை பளுவினால் ஏற்படும் களைப்பைபோக்குவதற்குஎலுமிச்சை பழச் சாற்றைக் குடித்தால் உடனே களைப்பு போய் விடும்.

உங்கள் சொகுசு வீட்டை குறைந்த விலையில் நிர்மாணித்துக் கொள்ளுங்கள்

முதலில் ரூபா 20,000 (இருபதாயிரத்தை) செலுத்தி பதிவு செய்தபின்

1 லட்சம் செலுத்தி உங்கள் ஜாதகத்தின் சுப நேரப்படி அடிக்கல் நாட்டி மிகுதிப்பணத்தை இலகு கொடுப்பனவு முறை மூலம் செலுத்துங்கள்

95 வருடங்கள் மற்றும் 4 தலைமுறைகளாக நம்பிக்கை மிகுந்த சேவை

VAJIRA HOUSE

வாரந்தோறும் புதிய கட்டிடமாதிரிகள் வெளியிடப்படுகின்றன.




வாரந்தோறும் புதிய கட்டிடமாதிரிகள் வெளியிடப்படுகின்றன.

Ruban: 0716 500800 2580332 / 2580333 / 2584627 / 2508256
No.04, Vajira Road, Bambalapitiya. www.vajirahouse.net Skype ID: Vajira.Col4

லொறி, டிபர், ட்ரக் வாகனங்களுக்கு

லீசிங் சுமை குறைக்கப்பட்டுள்ளது







பதிவு செய்யப்பட்ட அல்லது பதிவு செய்யப்படாத லொறி, டிபர், ட்ரக் கனரக வாகனங்களை மிக இலகுவான முறையில் குறைந்த வட்டியில் லீசிங் அடிப்படையில் பெற்றுக் கொள்ள சென்ட்ரல் பினான்ஸ் நிறுவனத்திற்கு வாருங்கள்.

CF

சென்ட்ரல் பினான்ஸ் கம்பனி பிஎல்சி

A+ (lka)

உடன் தொடர்புகளுக்கு 0112315215

கொழும்பு (011) 2300555 கண்டி (081) 2227000 அல்லது அருகிலுள்ள சென்ட்ரல் பினான்ஸ் கிளை அலுவலகத்திற்கு வாருங்கள். www.cf.lk & www.cfautomart.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மகத்துவம் நிறைந்த மங்குஸ்தான்



இந்த மங்குஸ்தான் பழம் மலேசியா, மியான்மர், இந்தோனேசியா, தாய்லாந்து ஆகிய நாடுகளில் அதிகம் விளைகிறது.

தென்னிந்தியாவில் மலைப் பகுதியில் தோட்டப் பயிராக இதனை வளர்க்கின்றனர். தென் அமெரிக்க நாடுகள், பிலிபைன்ஸ் ஆகிய நாடுகளிலும் கிடைக்கிறது. மங்குஸ்தான் பழம் மலைப் பகுதிகளில் விளையக் கூடியவை.

இது மாதுளம் பழத்தைப் போன்ற தோற்றத்தில் இருக்கும். இந்தப்பழத்தின் தோல் பகுதி தடிமனாக இருக்கும். இப்பழத்தின் தோல் பகுதியை உடைத்தால் மூன்று அல்லது நான்கு சுளைகள் இருக்கும். சுளைகள் இளஞ்சிவப்பு, வெள்ளை நிறத்தில் இருக்கும்.

இதற்கு சூலம்புளி என்ற பெயரும் உண்டு இதை தென்கிழக்கு ஆசியநாடுகளில் பழங்காலத்தில் தோல், பற்களின் ஈறு நோய்களுக்கும், பல்வலி, தொற்றுநோய் கிருமிகளையும் காளான்களையும் அழிக்க பயன்படுத்தினர்.

அதே போல் காயங்கள், நாட்பட்ட புண்கள், காய்ச்சல், இரத்தம் கலந்த வயிற்று போக்கு, உடல் மற்றும் மன சோர்வு, மன அழுத்தம், கவலை போன்றவற்றுக்கு குணமாக்க பயன் படுத்தி வந்தனர்.

வீக்கம் குறைக்கவும், புற்று நோய் எதிர்ப்பு சக்தி, வயதாவதை நிதானப்படுத்தவும், தோல்களின் சுருக்கத்தை குறைக்கவும், பாக்டீரியா வைரஸுக்கு எதிர்ப்பாகவும் பயன்படுகிறது.

சீதபேதி இரத்தக் கழிச்சல் உள்ளவர்களுக்கு மங்குஸ்தான் பழத்தின் மேல் தோலை சுட்டு அல்லது பச்சையாக அரைத்து அதனுடன் தேன் கலந்து சாப்பிட்டு வந்தால் சீதபேதி உடனே குணமாகும்.

உடல் சூட்டைத் தணித்து தேகத்தை சமநிலையில் வைத்திருக்கும். வயிற்றுவலியைக் குணப்படுத்தும் தன்மை இதற்கு உண்டு.

சிலர் தலைவலி, கழுத்து வலி என அவதிக்குள்ளாவார்கள் மங்குஸ்தான் பழம் சாப்பிட்டு வந்தால் கண் எரிச்சல் நீங்கி, கண் நரம்புகள் புத்துணர்வு பெறும்.

வாய் துர்நாற்றம் நீங்க, வயிற்றில் புண் இருந்தால் வாயில் புண் ஏற்படும். இதனால் வாய் துர்நாற்றம் வீசும். உண்ணும் உணவுப் பொருள்கள் பல் இடுக்குகளில் தங்கி விடுகின்றன. இதனால் உண்டாகும் கிருமிகளால் வாய் துர்நாற்றம் வீச ஆரம்பிக்கும்.

மங்குஸ்தான் பழத்தை நன்கு சுவைத்து சாப்பிட்டு, அல்லது அதன் தோலை காயவைத்து பொடி செய்து தேன்கலந்து சாப்பிட்டு வந்தால் வாய் துர்நாற்றம் நீங்கும்.

பெண்களுக்கு மாதவிலக்கு காலங்களில் ஏற்படும் அதிக இரத்தப் போக்கை குறைக்க மங்குஸ்தான் பழம் உதவுகிறது.

கிடைக்கும் காலங்களில் மங்குஸ்தான் பழத்தை வாங்கி சாப்பிடுவது நல்லது. அல்லது மங்குஸ்தான் பழத்தின் தோலை காய வைத்து பொடிசெய்து பாலில் கலந்து மங்குஸ்தான் தேநீர் குடிக்கலாம்.

சிறுநீர் நன்கு வெளியேறினால் தான் உடலில் தங்கியுள்ள தேவையற்ற அசுத்த நீர் வெளியேறும். சிறுநீர் நன்கு வெளியேற மங்குஸ்தான் பழம் சிறந்த மருந்தாகும்.

HERO HONDA




இன்றைய வெற்றியாளர் நீங்களா?

இலங்கையில் அதிகம் விற்பனையாகும் ஹீரோ ஹொன்டா Pleasure ஸ்கூட்டர் ஒன்றை கொள்வனவு செய்து நீங்களும் தினசரி "ஸ்கூட்டர் கேஷ் பெக் (Scooter cash back)"* பரிசுக் குலுக்கலில் இணைந்திடுங்கள். அதிர்ஷ்டசாலி வாடிக்கையாளரின் கைகளில் ஸ்கூட்டரின் விலையான ரூ.141,900 ஆன முழுத்தொகை மீண்டும். நீங்கள் செய்ய வேண்டியது ஸ்கூட்டரை கொள்வவு செய்யும்போதே கிடைக்கும் கூப்பனை நிரப்பி 011-2698150 ற்கு தொலை நகல் மூலம் அனுப்புவது மட்டுமே.

தினசரி பரிசுக்குலுக்கல்கள் நடைபெறுவதால் வாய்ப்புகள் அதிகம்.
கொள்வனவு செய்த தினத்திலேயே தொலை நகலை அனுப்புங்கள்.
011-2698150

- தினசரி குலுக்கல் அன்றைய தினத்தில் கிடைக்கப்பெறும் கூப்பன்களுக்கு மட்டுமே.
- வெற்றியாளர்களின் விபரம் வாராந்தம் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படும்.
- மேலதிக விபரங்களுக்கு ஸ்டெ.ஃபர்ட் மோட்டர்ஸ் ஐ (Stafford Motors) அல்லது நாடளாவிய முகவர்களை தொடர்புகொள்ளவும்.

* நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

தினசரி வெற்றியாளர்களை அறிந்துகொள்ள காலை 10 மணி முதல் மதியம் 1 மணி வரை "இசைச் சமர்" கேளுங்கள்.

WP/GT/3376

இச்சலுகை ஒகஸ்ட் 15 முதல் ஒக்டோபர் 31 வரை செல்லுபடியாகும்.

இறக்குமதி செய்து விநியோகிக்கும் இலங்கையின் அங்கீகரிக்கப்பட்ட ஏக முகவர்கள்.

M

வரை/ ஸ்டெ.ஃபர்ட் மோட்டர் கம்பனி.

பிரதான அலுவலகம் 718/7, மருதானை வீதி, கொழும்பு 10.
மோட்டார் சைக்கிள் தொகுதி: 161, கொழும்பு வீதி, இரத்தினபிட்டிய.

# மல்லிகையும் மருத்துவக் குணம் கொண்டது



மல்லிகை என்றால் மயங்காதவர்கள் எவருமே இருக்க முடியாது. இவ்வாறான இந்த மல்லிகையும் மருத்துவக் குணத்தைத் தன்னகத்தே கொண்டுள்ளது என்பது வியக்கத்தக்கதுதான்.

சிலருக்கு வயிற்றில் கொக்கிப் புழு, நாடாப் புழு போன்றவைகள் உருவாகும். இதற்காக பெரிதாக கவலைப்பட வேண்டாம்.

மல்லிகைப் பூக்கள் சிலவற்றை தண்ணீரில் போட்டு கொதிக்க வைத்து, அதனை வடிகட்டி அருந்தி வந்தால் போதும், குடற்புழுக்கள் தானாக வெளியேறிவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பறவைகள் பலவிதம் ஒவ்வொன்றும் ஒருவிதம்










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீங்கள் அறிவீர்களா?

உங்கள் வீரியக் குறைவு மற்றும் உத்வேகமின்மை காரணமாக உங்கள் துணைவருக்கு வேதனையும் விரக்தி ஏற்படக்கூடும் என்பதை...

## கவலைப்படுகிறீர்களா?

வயதாகி விட்டதால் வீரியம் குறைந்து, விவாக வாழ்க்கையை இனிதே அனுபவிக்க முடியாமல் தவிக்கிறீர்களா?

## அடிமையாகிவிட்டீர்களா?

சரியான தகவல்களை அறியாமல் வெவ்வேறு மாத்திரைகளுக்கு அடிமையாகி, தீய விளைவுகளுக்கு ஆளானவர்களில் நீங்களும் ஒருவரா?

**எதற்கும் அடிமையாகாமல் எவ்வித பக்க விளைவுகளும் இல்லாமல் இல்லற வாழ்வை இன்பகரமாக அனுபவிக்க ட்ரைபுல் மாத்திரைகளைப் பாவியுங்கள்**




TRI BULL
TABLETS

தினமும் இரு மாத்திரைகள் 3-4 வாரங்களுக்கு எடுங்கள்.
ஆண்-பெண் இருபாலாருக்கும் உகந்தது.

மேலதிக விபரங்களுக்கு 077 3943113

www.alaris.lk

**உத்வேகமான தாம்பத்திய உறவுக்கு...**

---

## நிலையான வைப்புகளுக்கு மிகக் கூடுதலான வட்டி வீதங்கள்

01 ஆண்டு

# 9.5%+

*AER 9.5%

யூனியன் வங்கி

தலைமை அலுவலகம்: 15ஏ, அல்பிரட் பிளேஸ், கொழும்பு 03. Tel: (011) 2374100 www.unionb.com

---

இலங்கையின் முதல்தர

# 1

## பெயின்ட்

# Nippolac®




லீட்டர்
ரூ. 675/- முதல்

சர்வதேச தர நிர்ணயங்களுக்கு அமைய நம் நாட்டில்
தயாரிக்கப்படும் முதல்தர பெயின்ட்

## எமக்கு ஏற்ற – எமக்கேயான விலையில்

நாடு பூராகவும் சகல விநியோகஸ்தர்களிடமும்

ARTBOX

SILICONE COATINGS (PVT) LTD.


**சிலிகோன் கோடிங்ஸ் (பிறைவட்) லிமிடட்.**

நிப்போலக் டவர்ஸ் : இல. 69A, புத்கமுவ வீதி, ராஜகிரிய.
தொலைபேசி: 011-4356900-8 தகல் : 011-4356909

மாத்தறை அலுவலகம்: இல. 67, குமாரதாச மாவத்தை, மாத்தறை.
தொலைபேசி: 041-4933530-8 தகல: 041-4933539
www.nippolacpaints.com

MGMT. SYS.
RvAC 155

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கொய்யாப்பழமும் சிறந்ததுதான்

விலை மலிவான, ஆனால் சத்து நிறைந்த பழங்களில் கொய்யாவும் ஒன்று. இந்தப் பழத்தின் தோல் சுலபமாக பழுதடைந்து, தொற்றுகள் பாதிக்கக்கூடியது. அதனால் கொய்யாப்பழத்தை நன்கு கழுவிய பிறகே சாப்பிட வேண்டும். விதையுள்ள, சிவந்த கொய்யாப்பழம் ஆரோக்கியத்துக்கு நல்லது. கொய்யாப்பழத்தை நறுக்கி வைக்கும்போது அது நிறம் மாறினால்தான் அது நல்ல பழம்!

இதில் விட்டமின் ஏ, பி யும் குறைந்த அளவில் தான் உள் ளன.

ஆனால் வைட்டமின் 'சி', ஆரஞ்சுப் பழத்தை விட கொய் யாவில் மூன்று மடங்கு அதிகமாக இருக்கிறது.

பசியே எடுக்காதவர்கள் உணவு சாப்பிடுவதற்கு முன்பு நன்கு பழுத்த கொய்யாப்பழம் ஒன்று சாப்பிட்டால் நன்கு பசி எடுக்கும்.

கொய்யாவினால் என்னென்ன நன்மைகள்?

அடிக்கடி விக்கல் வந்து சிரமப்படு பவர்கள் சாப்பிட்டால் நல்ல குணம் காணலாம்.

நீரிழிவைக் கட்டுப்படுத்தும் சக்தியும் இதற்கு உள்ளது.

இதை நாள்தோறும் சாப்பிட்டு வந்தால் மலச்சிக்கல் தலை காட்டாது.

தோல் புண்களால் அவதிப்படும் குழந்தைகள் இதைச் சாப்பிட்டால் உடனே பலன் தெரியும்.

கொய்யா ஜாம் பொதுவாகக் கடைகளில் கிடைக்காத ஒன்று. கொய்யாப் பழத்தை துண்டு துண்டாக நறுக்கி வேக வைத்து மசித்துக் கொள்ளவும். மசித்த கொய்யாவின் சம அளவுக்கு சர்க்கரை எடுத்துக்கொள்ளவும். பின் இரண்



டையும் சேர்த்துக் கலந்து அடுப்பில் வைத்து கைவிடாமல் கிளறிக் கொண்டே இருக்கவும். விழுதுப் பதம் வந்தவுடன் கீழே இறக்கிப் பதப்படுத்தி வைத்துக் கொள்ளலாம்.

கொய்யாப் பழங்கள் சிலவற்றின் உட்சதை மஞ்சள் கலந்த வெள்ளை நிறத்திலும், சில வற்றின் உட்சதைகள் றோஸ் நிறத்திலும் காணப் படும்.

நாயகர்களின் நாயகன்
ரூ. 99,000/- வுக்கு
சென்றல் பினான்ஸ் மூலம்*




விசேட லீசிங் வசதிகளையும் பெற்றுக்கொள்ளலாம்

- 25 குதிரை வலு கொண்ட சக்தி மிக்க டீசல் எஞ்ஜின்
- விலை ரூபா 855,000/- (அனைத்து வரிகள் அடங்கலாக)
- சுமக்கக்கூடிய மொத்த எடை 850 கி.கி
- ஒரு வருட / 40,000 கி.மீ உத்தரவாதம்*

CF
சென்றல் பினான்ஸ் கம்பனி பிஎல்சீ
நேரடி தொலைபேசி இல. 011 2315315
*நிபந்தனைகளும் அடங்கும்

டீசல்

அயிடியல் வாகனம் - CF லீசிங் சக்தி - வெற்றிக்கு வழி

Mahindra MAXXIMO
Mahindra Rise.

அயிடியல் மோட்டர்ஸ் தனியார் நிறுவனம்
..., காலி வீதி, கொழும்பு 3
IDEAL Motors
011 7755555

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org